# முன்னுரை

புகழ் அனைத்தும் எல்லாவற்றையும் படைத்துப் பரிபாலனம் செய்யும் அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும்!

ஸலாதும், ஸலாமும் எங்கள் தலைவர், அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார் மற்றும் சங்கைமிகு ஸஹாபாக்கள் மீதும் உண்டாகட்டுமாக!

“**மார்க்கத்தில் கட்டாயமாக கற்கப்பட வேண்டிய கல்வியை தேடிக்கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் பெருங் கடமையாகும்**” என்பதாக எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

தன்னையும், தன் குடும்பத்தையும் கொடூரமான நரக வேதனையிலிருந்து பாதுகாப்பதானது பருவமடைந்த ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றேயாக வேண்டிய கல்வியை கற்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனேனில் “மார்க்க கடமைகளை சரிவர அறிந்து அதனை நிறைவேற்றாமலும், மார்க்கத்தில் தடைவிதிக்கப்பட்டவைகளை அறிந்து அவைகளை தவிர்ந்து கொள்ளாமலும் ஒருவர் தக்வாவுள்ளவராக” ஆக முடியாது.

நம் மீது விதிக்கப்பட்டுள்ள கடமைகளையும், நமக்கு விலக்கப்பட்டுள்ள ஹறாம்களையும் அறிந்து கொள்ள ஒரே வழி கற்றுத் தேர்ந்த அறிஞர்களிடம் சென்று இஸ்லாமிய கல்வி ஞானம் பெறுவதேயாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு, ஜம்இய்யதுல் மஷாரிஉல் ஹைரிய்யஹ் அல்-இஸ்லாமிய்யஹ்விலே இருக்கும் இஸ்லாமிய பாடங்கள், மற்றும் ஆய்வுகளுக்கான குழு இது தொடர்பான பல நூல்களை ஆய்வு செய்த போது அவைகள் பூரணமான இஸ்லாமிய தகவல்களை கொண்டதாகவும், சரியான தகவல்களை கொண்டதாகவும் காணப்படாததால். சிறார்களின்

வினைத்திறனுக்கேற்ப வாசிக்கவும், புரிந்து கொள்ளவும் இலகுவானதான நூற்களை தயாரித்தலில் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுப்பட்டனர். அதன் பிரதிபலனாக அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என்ற அற்புதமான நூலை தயாரித்து வெளியிட்டுள்ளனர். இனிமையான சொற்களைக் கொண்டும், புரிந்துகொள்ள இலகுவான வாக்கிய அமைப்பைக் கொண்டும் உருவாக்கப்பட்ட இந்த நூற்களை ஒரு பிள்ளை முறையாக கற்கும் போது அப்பிள்ளை இஸ்லாமிய மார்க்கத்தில் அறிந்திருக்கு வேண்டிய கடமைகளை, நற்குணங்களை அறிந்த ஒரு பிள்ளையாக ஆகிவிடும்.

ஐந்து பாகங்களைக் கொண்ட இந் நூலில் ஒவ்வொரு பாகமும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற்பிரிவானது **இஸ்லாமியக் கோட்பாடுகளை விபரிப்பதாகவும்**, இரண்டாம் பகுதி **இஸ்லாமிய வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் முறைகளை விபரிப்பதாகவும்**, மூன்றாவது பிரிவு **இஸ்லாம் கற்றுத் தரும் நற்குணங்களை விபரிப்பதாகவும்** அமைந்துள்ளது.

அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ் என பெயரிடப்பட்ட இந்நூல் தங்களது பிள்ளைகள் இவ்வுலகிலும், மறு உலகிலும் வெற்றிபெற வழிவகுக்குமெனவும், தங்களது பிள்ளைகள் நேர்த்தியான நல்லொழுக்கமிக்க சமூகத்தைக் கட்டியெழுப்ப உதவி செய்யுமெனவும் நம்புகிறோம்.

# அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யஹ்

## பாகம் - 05

# فَصْلُ الْعَقَائِدِ

# இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்

# العَقِيْدَةُ الْحَقَّةُ

# தூய கொள்கை

قَالَ تَعَالَىٰ: ﴿يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ ﴿١٠٢﴾

( سورة ءال عمران )

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்: விளக்கம்:**

**"ஈமான் கொண்டோரே! அல்லாஹ் ஏவிய அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதோடு இன்னும் அவன் தடுத்த அனைத்து விடயங்களையும் தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் மரணிக்கும் வரை அல்லாஹ்வையும், அவனது தூதரையும் முறையாக நம்பிய உண்மை முஸ்லிமாக இஸ்லாத்தின் மீது நிலைத்திருங்கள்."**

**(அத்தியாயம்: ஆலு இம்ரான்)**

**اَلدِّيْنُ الْإِسْلَامِيُّ:** الدِّيْنُ الْإِسْلَامِيُّ هُوَ الدِّيْنُ الْحَقُّ الذي تُؤَيِّدُهُ الْعُقولُ السَّلِيمَةُ، الْمُنَاسِبُ لِكُلِّ زَمَانٍ وَهُوَ دِينُ جَمِيعِ الْأَنبياءِ مِنْ أَوَّلِهِمْ ءادَمَ إِلَى ءاخِرِهِمْ محمّدٍ صلى اللهُ عَلَيْهِمْ أَجمعِيْنَ وَسَلَّمَ.

இஸ்லாம் என்பது உண்மையான மார்க்கமாகும். அதையே சீரான புத்திகளும் உறுதிப்படுத்துகின்றன. மேலும் அந்த மார்க்கம் எல்லா காலங்களுக்கும் தோதுவானதாகும்.

மேலும் இது, ஆரம்பத் தூதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொடக்கம் இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் வரையிலான அனைத்து நபிமார்களினதும் மார்க்கமாகும்.

الّذيْنَ أَرْسَلَهُمُ اللهُ لِهِدايةِ النّاسِ إِلَى الْخَيْرِ وَالصّلاحِ وَإِرْشَادِهِمْ إِلَى تَقوَى اللهِ تَعالى وَالتّمَسُّكِ بِهذَا الدِّيْنِ إِلَى ءاخِرِ الْعُمرِ.

அல்லாஹ் நபிமார்களை அவன் கடமையாக்கிய விடயங்களை ஏற்று நடப்பதற்கும், ஹறாமாக்கிய விடயங்களை தவிர்ந்து நடப்பதற்கும், மக்களை நன்நெறிப்படுத்துவதற்கும் இன்னும் இந்த புனித இஸ்லாம் மார்க்கத்தினை வாழ்நாள் முழுவதும் பற்றிப்பிடித்து மக்களை நலவின் பக்கம் நேர்வழிப் படுத்துவதற்காகவும் அனுப்பியுள்ளான்.

**التّقْوَى**: تَقْوَى اللهِ تَكُوْنُ بِأَدَاءِ مَا افْتَرَضَ اللهُ تَعَالَى وَاجْتِنَابِ مَا حَرّمَ فَمَنْ فَعَلَ ذلِكَ يَكُوْنُ تَقِيًّا.

**“தக்வா” (தக்வல்லாஹ்) என்பது**: அல்லாஹ் எந்த விடயங்களை கடமையாக்கியுள்ளானோ அவைகளை நிறைவேற்றுவதும், எவைகளை தடுத்துள்ளானோ அவைகளை தவிர்ந்து கொள்வதுமாகும். எனவே எவர் இதனை செய்வாரோ அவர் “தக்வாதாரியாவார்.”

وَأَوّلُ هذِهِ الْوَاجِبَاتِ مَعْرِفَةُ اللهِ تَعَالَى وَمَعْرِفَةُ رَسُوْلِهِ مُحَمّدٍ صَلّى اللهُ عَلَيْهِ وَسَلّمَ مَعَ التّصْدِيْقِ بِذلِكَ.

அல்லாஹ் கடமையாக்கிய விடயங்களில் முதன்மையானது அல்லாஹ்வையும், அவனது தூதர் முஹம்மத் ﷺ அவர்களையும் முறையாக அறிந்து உண்மைப்படுத்துவதாகும்.

**النُّطْقُ بِالشَّهَادَتَيْنِ:** لَا يَكُوْنُ الْإِيْمَانُ مَقْبُوْلًا بِدُوْنِ النُّطْقِ بِالشَّهَادَتَيْنِ بِالنِّسْبَةِ لِلْكَافِرِ إِذَا أَرَادَ الدُّخُوْلَ فِي الْإِسْلَامِ.

**இரண்டு "ஷஹாதஹ்" கலிமாக்களை மொழிதல்:-** இரண்டு கலிமாக்களையும் மொழிந்தால் மாத்திரமே ஈமான் எற்றுக் கொள்ளப்படும். இது இஸ்லாத்தில் நுழைய நாடும் ஒரு காபிருக்குரிய சட்டமாகும்.

أَمَّا الْمُسْلِمُ فَيَجِبُ أَنْ يَنْطِقَ بِالشَّهَادَتَيْنِ فِي كُلِّ صَلَاةٍ لِصِحَّةِ الصَّلَاةِ.

ஒரு முஸ்லிம் அவனின் தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுதவற்காக ஒவ்வொரு தொழுகையிலும் இரு **"ஷஹாதஹ்"** கலிமாக்களையும் மொழிவது கட்டாயமாகும்.

**وَالشَّهَادَتَانِ هُمَا:** أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.

இரு **"ஷஹாதஹ்"** கலிமாக்களாவன:

**"அஷ்ஹது அன் லா இலாஹ இல்லழ்ழாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூலுழ்ழாஹி ஸல்லழ்ழாஹு அலைஹி வஸல்லம்"** என்பதாகும்.

**مَعْنَى الشَّهَادَتَيْنِ: وَمَعْنَى شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ:** أَعْتَرِفُ بِلِسَانِي وَأَعْتَقِدُ بِقَلْبِي أَنْ لَا مَعْبُوْدَ بِحَقٍّ إِلَّا اللهُ فَقَطْ.

**"அஷ்ஹது அன் லா இலாஹ இல்லழ்ழாஹு" என்பதன் பொருள்:-** உண்மையில் வணங்கி வழிபடத்தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை அதாவது **"நான் எனது பணிவின் உச்சகட்டத்தை செலுத்த அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாரும்**

**வணங்க தகுதிபெறவே மாட்டார்கள்"** என நாவினால் மொழிந்து உள்ளத்தினால் உறுதி கொள்கிறேன் என்பதாகும்.

**وَمَعْنَى شَهَادَةِ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ:** أَعْتَرِفُ بِلِسَانِي وَأُذْعِنُ بِقَلْبِي أَنَّ سَيِّدَنَا مُحَمَّدَ بنَ عَبْدِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مُرْسَلٌ مِنْ عِنْدِ اللهِ إِلَى كَافَّةِ الْعَالَمِيْنَ مِنْ إِنْسٍ وَجِنٍّ صَادِقٌ فِي كُلِّ مَا يُبَلِّغُهُ عَنِ اللهِ تَعَالَى لِيُؤْمِنُوْا بِشَرِيْعَتِهِ.

**"வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் றஸூலுழ்ழாஹி ஸல்லழ்ழாஹு அலைஹி வஸல்லம்" என்பதன் பொருள்:** நிச்சயமாக எங்கள் தலைவர் முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் ﷺ அவர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட **"ஷரீஅத்தை"** நம்பிக்கை கொள்வதற்காக வேண்டி மனித வர்க்கத்தினருக்கும், ஜின் வர்க்கத்தினருக்கும் தூதராக அனுப்பபட்டவர்கள். மேலும் அழ்ழாஹ்வினால் அறிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் எத்திவைப்பதில் உண்மையானவர்கள் என என் உள்ளத்தினால் உறுதிகொண்டு நாவினால் ஏற்றுக்கொள்கிறேன் என்பதாகும்.

**الْمُرَادُ بِالشَّهَادَتَيْنِ:** وَالْمُرَادُ بِالشَّهَادَتَيْنِ نَفْيُ الْأُلُوْهِيَّةِ عَمَّا سِوَى اللهِ وَإِثْبَاتُهَا للهِ تَعَالَى مَعَ الْإِقْرَارِ بِرِسَالَةِ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.

**இரண்டு ஷஹாதாக்களின் நோக்கம்:** இல்லாமையில் இருந்து படைக்கும் தன்மை அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் கிடையாதென உறுதிகொள்ளலும், எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் தூதர் என்பதையும் ஏற்றுக் கொள்ளலுமாகும்.

**قَالَ تَعَالَى:** ﴿وَمَن لَّمْ يُؤْمِنۢ بِٱللَّهِ وَرَسُولِهِۦ فَإِنَّآ أَعْتَدْنَا لِلْكَٰفِرِينَ سَعِيرًا﴾

(سورة الفتح)

அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :

விளக்கம் :

“யார் மரணிக்கும் வரை அழ்ழாஹ்வை ஈமான் கொள்வதுடன், அவனது தூதரையும் ஈமான் கொள்ளவில்லையோ அவன் காபிராவான். அவனது குப்ருக்கு கூலியாக கியாமத் நாளில் நரகம் தயார் செய்யப்பட்டுள்ளது.”

(அத்தியாயம் : அல்-பத்ஹு)

أسئلة

1- اذكر ءاية من القرءان فيها الأمر بالثبات على الإسلام.

2- ما هو دين كل الأنبياء؟

3- لم أرسل الله الأنبياء؟

4- ما معنى التقوى؟ وما هو أول الواجبات؟

5- ما معنى أشهد أن لا إله إلا الله؟

6- ما معنى أشهد أن محمدا رسول الله؟

7- ما المراد بالشهادتين؟

8- اذكر ءاية من القرءان تدل على وجوب الإيمان بالله ورسوله.

## مَنْ هُوَ الْمُكَلَّفُ ؟

## "முகல்லப்f" என்பவர் யார்?

الْمُكَلَّفُ شَرْعًا هُوَ الْبَالِغُ الْعَاقِلُ الّذِي بَلَغَتْهُ دَعْوَةُ الْإِسْلَامِ.

பருவமடைந்த, புத்தியுள்ள, இஸ்லாமிய அடிப்படை பிரச்சாரமாகிய **"வணங்கி வழிப்படத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள்"** என்ற பிரச்சாரத்தை எத்திய ஒவ்வொருவரும் முகல்லபfாவார்கள்.

**وَالْبُلُوْغُ يَكُوْنُ:** بِبُلُوْغِ خَمْسَ عَشْرَةَ سَنَةً قَمَرِيَّةً أَوْ غَيْرِ ذٰلِكَ.

**பருவம் அடைதல் என்பது:** பிறை கணக்கின் படி பதினைந்து வயதை அடைந்து கொள்வதின் மூலமோ அல்லது இது அல்லாத வேறு முறை மூலமோ ஏற்படலாம்.

**وَأَمَّا الْعَاقِلُ:** فَهُوَ الّذِي لَمْ يَذْهَبْ عَقْلُهُ.

**"ஆகில்"** எனப்படுபவர் புத்தி நீங்காதவர்.

**وَيُشْتَرَطُ بُلُوْغُهُ دَعْوَةَ الْإِسْلَامِ:** يَعْنِي أَنَّهُ إِنْ كَانَ الْبُلُوْغُ وَالْعَقْلُ فِي شَخْصٍ يَصِيْرُ مُكَلَّفًا بِمُجَرَّدِ أَنْ يَبْلُغَهُ أَصْلُ الدَّعْوَةِ الْإِسْلَامِيَّةِ، أَي أَنْ يَبْلُغَهُ أَنَّهُ لَا إِلٰهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ فَمَنْ كَانَ بَلَغَهُ الْإِسْلَامُ فَهٰذَا هُوَ الْمُكَلَّفُ الّذِي هُوَ مُلْزَمٌ بِأَنْ يُسْلِمَ وَيَعْمَلَ بِشَرِيْعَةِ الْإِسْلَامِ وَأَنْ يُؤَدِّيَ الْوَاجِبَاتِ كُلَّهَا وَيَجْتَنِبَ الْمُحَرَّمَاتِ كُلَّهَا.

இஸ்லாமிய அடிப்படை பிரச்சாரத்தை அவர் அடைந்திருப்பது நிபந்தனையிடப்படும்.

அதாவது பருவம், புத்தி இவை இரண்டும் ஒரு மனிதனிடம் காணப்பட்டு இஸ்லாமிய அடிப்படை பிரச்சாரத்தை அவர் எத்துவதின் மூலம் முகல்லபாக மாறிவிடுவான். அதாவது لا إله إلا الله محمد رسول الله **“வணங்கி வழிப்படத் தகுதியானவன் அழ்ழாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள்”** என்பது அவனை எத்துவதாகும். எனவே யாரை இஸ்லாமிய அடிப்படை த.ஃ.வஹ் எத்துகின்றதோ அவர் **முகல்லப்**[f] எனப்படுவார். அவர் இஸ்லாத்தை ஏற்று இஸ்லாமிய **“ஷரீஅத்தின்”** அடிப்படையில் அமல் செய்வது அவசியமாகும். இன்னும் அவர் கடமையான விடயங்களை நிறைவேற்றி, தடை செய்யப்பட்ட அனைத்து விடயங்களையும் தவிர்ந் து நடப்பது அவசியமாகும்.

وَيُفْهَمُ مِنْ ذَلِكَ أَنَّ الطِّفْلَ الصَّغِيْرَ لَيْسَ عَلَيْهِ مَسْؤُوْلِيَّةٌ فِي الآخِرَةِ حَتَّى يَبْلُغَ وَكَذَلِكَ الْمَجْنُوْنَ فِي حَالِ جُنُوْنِهِ وَكَذَلِكَ الَّذِيْ عَاشَ بَالِغًا وَلَمْ تَبْلُغْهُ دَعْوَةُ الْإِسْلَامِ.

இதிலிருந்து விளங்கப்படுவது யாதெனில் **“நிச்சயமாக பருவத்தை அடையாத குழந்தை, பைத்தியம் ஏற்பட்ட நிலையில் இருக்கும் பைத்தியகாரர், பருவத்தை அடைந்த நிலையில் இஸ்லாமிய அடிப்படை பிரச்சாரம் எத்தாதவர்”** ஆகியோர்கள் மீது நாளை மறுமையில் கேள்வி கணக்கு கிடையாது.

قَالَ تَعَالَى: ﴿وَمَا كُنَّا مُعَذِّبِينَ حَتَّىٰ نَبْعَثَ رَسُولًا ۝١٥﴾

( سورة الإسراء )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“உலகில் எந்தவொரு நபியினதும் அழைப்புப் பிரச்சாரத்தின் அடிப்படையை எத்தாத எவரையும் அல்லாஹ் மறுமையில் வேதனை செய்யமாட்டான்.”**

**(அத்தியாயம் : அல்-இஸ்ராஉ வசனம் 15)**

وَقَالَ رَسُوْلُ اللهِ صَلّى اللهُ عَلَيْهِ وَسَلّمَ:

رُفِعَ الْقَلَمُ عَنْ ثَلَاثَةٍ: عَنِ النّائِمِ حَتّى يَسْتَيْقِظَ وَعَنِ الصّبِيِّ حَتّى يَحْتَلِمَ وَعَنِ الْمَجْنُوْنِ حَتّى يَعْقِلَ

– رَوَاهُ أَبُوْ دَاودَ –

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கன் கூறினார்கள்: “மூன்று நபர்களை விட்டும் கலம் உயர்த்தப்பட்டுவிட்டது. அதாவது பின்வருவோரின் குற்றங்கள் பதியப்படுவதில்லை. தூங்கிக்கொண்டிருப்பவர் விழித்தெழும்பும் வரை, சிறுவன் பருவத்தை அடையும் வரை, ஒரு பைத்தியகாரர் புத்தி தெளியும் வரை.”**

**(அறிவித்தவர் : இமாம் அபூ தாவூத் றஹிமஹுல்லாஹ்)**

**فائدة:**

كَانَ رَسُوْلُ اللهِ صَلى اللهُ عَلَيْهِ وَسَلّمَ يَدْعُوْ الْعَرَبَ الْمُشْرِكِيْنَ فِي مَوْسِمِ الْحَجِّ حِيْنَ يَجْتَمِعُوْنَ مِنْ نَوَاحٍ شَتّى إِلَى الْإِسْلَامِ، وَيُسْمِعُهُم الشّهَادَتَيْنِ: أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلّا اللهُ وَأَشْهَدُ أَنّ مُحَمّدًا رَسُوْلُ اللهِ صَلّى اللهُ عَلَيْهِ وَسَلّمَ.

முஹம்மத் ﷺ அவர்கள் ஹஜ்ஜுடைய காலத்தில் பல பிரதேசங்களில் இருந்து ஒன்று சேரக்கூடிய முஷ்ரிகான அறபிகளை இஸ்லாத்தின் பால் அழைப்பவர்களாகவும்

அவர்களுக்கு "أشهد أن لا إله إلا الله وأشهد أن محمدا رسول الله صلى الله عليه وسلم" என்ற இரு ஷஹாதாக்களையும் அவர்களுக்கு செவிமடுக்கச் செய்பவராகவும் இருந்தார்கள்.

وَكَانَ مُشْرِكُوْ الْعَرَبِ يَحُجُّوْنَ إِلَى الْكَعْبَةِ تَقْلِيْدًا لِأَجْدَادِهِم الْمُسْلِمِيْنَ.

முஷ்ரிகீன்களான அறபிகள், அவர்களின் முஸ்லிமான பாட்டனார்களை பின்பற்றி க.்.பஹ்வினை ஹஜ் செய்பவர்களாக காணப்பட்டார்கள்.

**أسئلة**

**1**- من هو المكلف شرعا؟ وبم هو ملزم؟

**2**- بم يكون البلوغ؟ ومن هو العاقل؟

**3**- من عاش بالغا ولم تبلغه دعوة الإسلام هل يكون مكلفا؟

وما الدليل على ذلك؟

**4**- ما الدليل على أن الطفل الصغير ليس مكلفا؟

## اللهُ تَعَالَى خَالِقُ الْعَالَم

## உலகத்தைப் படைத்தவன் அழ்ழாஹ்

قَالَ تَعَالَىٰ: ﴿أَفِي ٱللَّهِ شَكٌّ ﴿١٠﴾﴾

(سورة إبراهيم )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“அழ்ழாஹ் உள்ளான் என்ற விடயத்தில் எவ்வித சந்தேகமும் ஏற்பட முடியாது.”**

**(அத்தியாயம் : இப்றாஹீம்)**

إِنّ أَوّلَ وَاجِبٍ عَلَى الْمُكَلّفِ هُوَ مَعْرِفَةُ اللهِ تَعَالَى فَهُوَ الْخَالِقُ لِجَمِيعِ الْمَوْجُوْدَاتِ الْمُدَبِّرُ لِهذِهِ الْكَائِنَاتِ لِأَنّنَا إِذَا تَأَمّلْنَا جَمِيعَ الصّنَائِعِ وَتَفَكّرْنَا فِيْهَا تَفَكُّرًا سَلِيْمًا عَلِمْنَا أَنّ لَهَا صَانِعًا خَلَقَهَا.

ஒரு **“முகல்லபின்”** மீது கடமையான முதலாவது விடயம் அழ்ழாஹ்வைப் பற்றி அறிவதாகும்.

அதாவது அழ்ழாஹ்தான் அனைத்து படைப்புக்களையும் படைத்தவன், படைக்கப்பட்ட அனைத்தையும் அவனே நிர்ணயித்தான் (ஏற்பாடு செய்தான்). ஏனெனில் “நாங்கள் இப்படைப்புக்களை சரியாக சிந்தித்து பார்த்தால் இவைகளை படைத்த ஒருவன் உள்ளான்” என்பதை விளங்க முடியும்.

الدَّلِيْلُ الْعَقْلِيُّ عَلَى وُجُوْدِ اللهِ تَعَالَى:

அழ்ழாஹ் உள்ளான் என்பதற்கு பகுத்தறிவு ரீதியான ஆதாரம்

نُدْرِكُ بِالْعَقْلِ السَّلِيْمِ أَنَّ الْكِتَابَةَ لَا بُدَّ لَهَا مِنْ كَاتِبٍ وَالضَّرْبَ لا بُدَّ لَهُ مِنْ ضَارِبٍ وَالْبِنَاءَ لَا بُدَّ لَهُ مِنْ بَانٍ فَإِذًا هٰذَا الْعَالَمُ بِمَا فِيْهِ مِنْ مَخْلُوْقَاتٍ لَا بُدَّ لَهُ مِنْ خَالِقٍ حَيٍّ مُرِيْدٍ عَالِمٍ قَدِيْرٍ وَهُوَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى الَّذِيْ لَا يُشْبِهُ شَيْئًا مِنْ مَخْلُوْقَاتِهِ وَلَا يُشَابِهُهُ شَيْءٌ لِأَنَّهُ لَا يَصِحُّ فِي الْعَقْلِ وُجُوْدُ فِعْلٍ مَا بِدُوْنِ فَاعِلٍ.

எழுதப்பட்ட ஒன்றிருந்தால் அதை எழுதியவர் இருந்தாக வேண்டும். கட்டிடம் ஒன்றிருந்தால் அதைக் கட்டியவர் இருந்தாக வேண்டும் என்றே சீரான பகுத்தறிவு முடிவு செய்கிறது. ஆகவே இவ்வுலகம், அதில் படைக்கப்பட்டவைகள் அனைத்தையும் மரணமில்லாத, நாடக்கூடிய, யாவற்றையும் அறிந்த, வல்லமையுள்ள, படைப்பாளன் படைத்துள்ளான் என நம் பகுத்தறிவு தீர்மானிக்கிறது. ஏனெனில் ஒரு செயல் அதனை செய்யக்கூடியவனின் உதவியின்றி உண்டாகும் என்பதை சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளமாட்டாது.

அவன் தான் அழ்ழாஹ் தஆலா ஆவான். அவன் தனது படைப்புக்களில் எதற்கும் ஒப்பாகவும் மாட்டான், எந்த ஒரு படைப்பும் அவனுக்கு ஒப்பாகவும் மாட்டாது.

செய்பவனின்றி ஒரு செயல் நடைபெறுவதை சீரான பகுத்தறிவு ஒரு போதும் ஏற்றுகொள்ளமாட்டாது.

وَلَا يَصِحُّ أَنْ يَكُوْنَ ذٰلِكَ الْفَاعِلُ طَبِيْعَةً لِأَنَّ الطَّبِيْعَةَ لَا إِرَادَةَ لَهَا فَكَيْفَ تَخْلُقُ؟

மேலும் இவ்வுலகை படைத்தவன் இயற்கையாக இருக்க முடியாது. ஏனெனில் இயற்கைக்கு நாட்டம் என்பது கிடையாது. அது எவ்வாறு படைக்க முடியும்.?

وَلَا يَصِحُّ أَيْضًا أَنْ يَكُوْنَ الشَّيْءُ خَالِقًا لِنَفْسِهِ.

மேலும் ஒரு பொருள் தன்னைத்தானே படைக்கக்கூடிய ஒன்றாக இருப்பதும் சாத்தியமாகாது.

وَكَذلِكَ لَا يَصِحُّ أَنْ يَخْلُقَ الشَّيءُ مِثْلَه أيْ مُشَابِهَهُ.

மேலும் ஒரு வஸ்து அதைப் போன்ற ஒன்றை அதாவது அதற்கு ஒப்பான ஒன்றை படைப்பதும் சாத்தியமற்றதாகும்.

فَالطِّفْلُ مَثَلًا يُوْلَدُ صَغِيْرًا، لَا يَتَكَلَّمُ وَلَا يَمْشِي ثُمَّ يَتَطَوَّرُ فَيَبْدَأُ بِالْكَلَامِ وَالْمَشْيِ شَيْئًا فَشَيْئًا ثُمَّ يَنْمُوْ فَيَصِيْرُ شَابًّا ثُمَّ كَهْلًا ثُمَّ هَرِمًا ثُمَّ يَمُوْتُ فَمَنِ الَّذِيْ طَوَّرَهُ وَغَيَّرَهُ مِنْ حَالٍ إِلَى حَالٍ ؟ اللهُ عَزَّ وَجَلَّ هُوَ الَّذِيْ خَلَقَهُ وَطَوَّرَهُ وَغَيَّرَهُ ثُمَّ أَمَاتَهُ ثُمَّ الْإِنْسَانُ لَوْ فَكَّرَ بِعَقْلِهِ لَعَلِمَ: أَنَّ كُلَّ مُتَغَيِّرٍ لَا بُدَّ لَهُ مِنْ مُغَيِّرٍ وَالْعَالَمُ مُتَغَيِّرٌ فَإِذًا العَالَمُ لَا بُدَّ لَهُ مِنْ مُغَيِّرٍ.

உதாரணமாக: ஒரு குழந்தை பிறக்கின்றது. அப்பிள்ளை நடப்பதுமில்லை, பேசுவதுமில்லை பின்பு படிப்படியாக கொஞ்சம் கொஞ்சமாக பேச, நடக்க ஆரம்பிக்கின்றது. பின்பு வாலிபனாகவும், முப்பது வயதைத் தாண்டியவனாகவும், வயோதிபனாகவும் மாறி பின்பு மரணிக்கின்றது. எனவே அதனை ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடையச் செய்தது யார்? அழ்ழாஹ் தஆலா தான். அவன் தான் மனிதனை படைத்து மாற்றங்களுக்கு உள்ளாக்கி, பின்பு மரணிக்கச் செய்கிறான்.

பின்பு மனிதன் அவனின் பகுத்தறிவைக் கொண்டு சிந்தித்தால் நிச்சயமாக மாற்றமடையக்கூடிய ஒவ்வொன்றுக்கும் அதனை மாற்றக்கூடிய ஒருவன் இருப்பது அவசியம் என்பதை உணர்ந்து கொள்வான். உலகம் மாற்றமடையக்கூடியது. எனவே அந்த உலகத்தை மாற்றக் கூடிய ஒருவன் இருப்பது அவசியமாகும் என்பதையும் அறிந்து கொள்வான்.

**قِصَّةُ رَجُلٍ يُنْكِرُ وُجُوْدَ اللهِ:** يُرْوَى أَنَّ رَجُلًا مِنْ مُنْكِرِي وُجُوْدِ اللهِ أَتَى إِلَى أَحَدِ الْخُلَفَاءِ وَقَالَ لَهُ: إِنَّ عُلَمَاءَ عَصْرِكَ يَقُوْلُوْنَ: إِنَّ لِهذَا الْكَوْنِ صَانِعًا، وَأَنَا مُسْتَعِدٌّ أَنْ أُثْبِتَ لَهُمْ أَنَّ هذَا الْكَوْنَ لَا صَانِعَ لَهُ.

## அழ்ழாஹ் உள்ளான் என்பதை மறுத்த ஒருவரின் சம்பவம்

அழ்ழாஹ் உள்ளான் என்பதை மறுக்கும் ஒருவன் ஒரு கலீபாவிடத்தில் வந்து அவரிடம் கூறினான்:

இந்த உலகத்திற்கு ஒரு படைப்பாளன் உள்ளான் என்பதாக உங்களின் காலத்தில் உள்ள அறிஞர்கள் கூறுகின்றார்கள். நான் இவ்வுலகிற்கு படைப்பாளன் இல்லை என்பதை நிரூபிக்கத் தயாராக உள்ளேன் என்று கூறினான்.

فَبَعَثَ الْخَلِيْفَةُ إِلَى عَالِمٍ كَبِيْرٍ يُعْلِمُهُ بِالْخَبَرِ وَيَأْمُرُهُ بِالْحُضُوْرِ، وَتَعَمَّدَ الْعَالِمُ أَنْ يَتَأَخَّرَ قَلِيْلًا عَنِ الْوَقْتِ، ثُمَّ حَضَرَ، فَاسْتَقْبَلَهُ الْخَلِيْفَةُ وَأَجْلَسَهُ فِي صَدْرِ الْمَجْلِسِ، وَكَانَ قَدِ اجْتَمَعَ الْعُلَمَاءُ وَكِبَارُ النَّاسِ، فَقَالَ الرَّجُلُ: لِمَ تَأَخَّرْتَ فِي مَجِيْئِكَ ؟ فَقَالَ الْعَالِمُ: قَدْ حَصَلَ لِي أَمْرٌ عَجِيْبٌ، فَتَأَخَّرْتُ، وَذلِكَ أَنَّ بَيْتِي وَرَاءَ نَهْرِ دِجْلَةَ، فَجِئْتُ لِأَعْبُرَ النَّهْرَ فَلَمْ أَجِدْ سِوَى سَفِيْنَةٍ عَتِيْقَةٍ، قَدْ تَكَسَّرَتْ أَلْوَاحُهَا الْخَشَبِيَّةُ، وَلَمَّا وَقَعَ نَظَرِي عَلَيْهَا تَحَرَّكَتِ الْأَلْوَاحُ وَاجْتَمَعَتْ، وَاتَّصَلَ بَعْضُهَا بِبَعْضٍ وَصَارَتْ سَفِيْنَةً صَالِحَةً لِلسَّيْرِ بِلَا مُبَاشَرَةِ نَجَّارٍ وَلَا عَمَلِ عَامِلٍ، فَقَعَدْتُ عَلَيْهَا وَعَبَرْتُ النَّهْرَ، وَجِئْتُ إِلَى هَذَا الْمَكَانِ.

கலீபா அவர்கள் ஒருவரை அனுப்பி பெரிய அறிஞர் ஒருவரை அழைத்துவருமாறு கூறி அனுப்பிவைத்தார். அந்த அறிஞர் வேணுமென்றே சற்று தாமதித்து அங்கே வந்தார். கலீபா அவர்கள், அவரை முன்னோக்கி சபையின் முன்பகுதியில் உட்கார வைத்தார்கள். அந்த சபையில் அறிஞர்களும் பெரியார்களும் காணப்பட்டார்கள்.

அந்த நாத்திகன் ஏன் தாமதித்து வந்தீர்கள்? என்று அறிஞரிடம் கேட்டான். அதற்கு அந்த அறிஞர், ஒரு ஆச்சரியமான நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அதனால் தான் தாமதித்து வந்தேன் என்று,

அந்நிகழ்வைக் கூறினார்கள். :- எனது வீடு ‘‘திஜ்லஹ்’’ என்ற ஆற்றுக்கு பின்னால் உள்ளது. நான் அந்த ஆற்றை கடந்து வர வந்தேன். அங்கு ஒரு பழைய கப்பலை தவிர வேறு எதையும் நான் பெற்றுக் கொள்ளவில்லை. அதன் பலகைகள் உடைந்து காணப்பட்டது. எனது பார்வை, உடைந்த பலகைகளின் மீது விழுந்து போது அவைகள் தானாகவே ஒன்று சேர ஆரம்பித்து சிலது சிலதுடன் இணைந்து கொண்டது.

அந்தக் கப்பல் வேலையாட்களோ, தச்சனோ இன்றி பிரயாணம் செய்வதற்கு பொருத்தமான ஒரு கப்பலாக மாறியது. அதில் நான் உட்கார்ந்து ஆற்றை கடந்து இந்த இடத்திற்கு வந்தேன் என்று கூறினார்.

فَقَالَ الرَّجُلُ: اسْمَعُوْا أَيُّهَا النَّاسُ مَا يَقُوْلُ عَالِمُكُمْ فَهَلْ سَمِعْتُمْ كَلَامًا أَكْذَبَ مِنْ هذَا ؟ كَيْفَ تُوْجَدُ السَّفِيْنَةُ بِدُوْنِ أَنْ يَصْنَعَهَا نَجَّارٌ؟ هذَا كَذِبٌ مَحْضٌ.

**அதற்கு அந்த மனிதன் கூறினான்:** மனிதர்களே! உங்கள் அறிஞர் கூறுவதை செவிமடுங்கள். இதை விட பொய்யான பேச்சை வேறு எங்கும் செவியுற்றுள்ளீர்களா? **‘‘ஒரு உடைந்த கப்பல் அதனை சரி செய்யும் தச்சன் இல்லாமல் தானாக ஒன்று சேர்ந்து கொண்டது’’** எனக் கூறுகிறாரே இது ஒரு தெளிவான பொய் என்று கூறினான்.

فَقَالَ الْعَالِمُ: أَيُّهَا الْكَافِرُ، إِذَا لَمْ يُعْقَلْ أَنْ تُوْجَدَ سَفِيْنَةٌ بِلَا صَانِعٍ وَلَا نَجَّارٍ فَكَيْفَ تَقُوْلُ بِوُجُوْدِ الْعَالَمِ بِدُوْنِ صَانِعٍ سَكَتَ الرَّجُلُ وَلَزِمَتْهُ الْحُجَّةُ وَعَاقَبَهُ الْخَلِيْفَةُ لِسُوْءِ اعْتِقَادِهِ.

**அதற்கு அந்த அறிஞர்:** அல்லாஹ்வை நிராகரித்தவனே! ஒரு தச்சன் இல்லாமல் ஒரு கப்பல் உண்டாகுவதை உன் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது எனின் இந்த உலகை உருவாக்கிய ஒருவன் இல்லாமல் உலகம் இருப்பதாக நீ எவ்வாறு கூறுவாய்? என்று கேட்டவுடன் அந்த மனிதன் மௌனித்து விட்டான்.

ஆதாரம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. அவனின் மோசமான கோட்பாட்டிற்காக கலீபா அவனை தண்டித்தார்.

أسئلة

**1**- ما الدليل من القرءان على وجود الله تعالى؟

**2**- ما الدليل العقلي على وجود الله؟

**3**- لم لا يصح أن يكون الفاعل طبيعة؟

பாடம் : 4 الدرس –4

تَوْحِيْدُ اللهِ تَعَالى

## அழ்ழாஹ் இணையின்றித் தனித்தவன் என்று நம்பிக்கை கொள்ளுதல்

قَالَ تَعَالَى: ﴿لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ﴿١١﴾﴾

( سورة الشورى )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம்**

**“எவ்விதத்திலும் அவனைப் போல எதுவுமே இல்லை”**

**(அத்தியாயம் : அஷ்ஷூறா)**

أَيْ أَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالى لَا يُشْبِهُ الْمَخْلُوْقَاتِ.

அழ்ழாஹ் தஆலா படைப்புக்களுக்கு ஒப்பாக மாட்டான்.

وَرَدَ أَنَّ الْيَهُوْدَ أَتَوْا إِلَى النَّبِيِّ صَلى اللهُ عَلَيهِ وَسَلَّمَ فَقَالُوْا: يَا مُحَمَّدُ صِفْ لَنَا رَبَّكَ الَّذي تَعْبُدُه، فَنَزَلَتْ.

யஹூதிகள் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடம் வந்து **“முஹம்மதே! நீர் வணங்குகின்ற உமது றப்பைப் பற்றி எங்களுக்கு அறியத் தாருங்கள்”** என்று கூற அழ்ழாஹ் சூறதுல் இஹ்லாஸை அருளினான்.

﴿قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ۝١﴾

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களே நீங்கள் கூறுவீராக! அல்லாஹ் இணையின்றி தனித்தவன். அவனுக்கு எந்தவொரு இணையும் இல்லை.

﴿ٱللَّهُ ٱلصَّمَدُ ۝٢﴾

அனைத்து படைப்புகளும் அல்லாஹ்வின் உதவியின் பால் தேவைகாண்கின்றன. அவன் எந்தப் படைப்பின் பக்கமும் தேவைகாணமாட்டான்.

﴿لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ۝٣﴾

அவனிலிருந்து எதுவும் பிரியவுமில்லை. அவன் வேறொன்றிலிருந்து பிரிந்தவனுமில்லை.

﴿وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ۝٤﴾

நிச்சயமாக அவனுக்கு ஒப்புவமைகள் இல்லை.

فَقَالَ رَسُوْلُ اللهِ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: **هٰذِهِ صِفَةُ رَبِّيْ عَزَّ وَجَلَّ.**

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் **“இது தான் எனது றப்பாகிய அல்லாஹ்வின் தன்மை”** என்று கூறினார்கள்.

وَقَدْ كَانَ سُؤَالُ الْيَهُوْدِ هذَا تَعَنُّتًا وَاسْتِهْزَاءً وَلَيْس طَلَبًا لِلْعِلْمِ.

யஹூதிகள் கேட்ட வினா பரிகசிப்பதற்காகவும், மனமுரணிற்காகவுமே இருந்தது. அறிவைத் தேடும் நோக்கில் இருக்கவில்லை.

وَهذَا يَدُلُّ عَلَى أَنَّ اللهَ تَعَالَى مَوْصُوْفٌ بِصِفَاتٍ، وَكَمَا أَنَّهُ عَزَّ وَجَلَّ لَا يُشْبِهُ الْمَخْلُوْقَاتِ وَكَذلِكَ صِفَاتُه لَا تُشْبِهُ صِفَاتِ الْمَخْلُوْقَاتِ فَهُوَ تَعَالَى مَوْصُوْفٌ بِكُلِّ كَمَالٍ يَلِيْقُ بِهِ مُنَزَّهٌ عَنْ كُلِّ نَقْصٍ فِي حَقِّهِ.

எனவே இது, அழ்ழாஹ் அவனுக்கு தகுதியான தன்மைகளை உடையவன் என்பதை அறிவிக்கின்றது.

அழ்ழாஹ் படைப்புக்களுக்கு ஒப்பாகவும் மாட்டான், அவனின் தன்மைகளும் படைப்புகளின் தன்மைகளுக்கு ஒப்பாகவும் மாட்டாது. அழ்ழாஹ் அவனுக்கு தகுதியான அனைத்து தன்மைகளை உடையவன். மேலும் குறைகள் அனைத்தை விட்டும் தூய்மையானவன்.

**قَالَ تَعَالَى: ﴿وَلِلَّهِ ٱلْمَثَلُ ٱلْأَعْلَىٰ ۝٦٠﴾** أي الْوَصْفُ الَّذِي لَا يُشْبِهُ وَصْفَ غَيْرِهِ فَكُلُّ مَا سِوَى اللهِ مَخْلُوْقٌ (وَهُوَ جُمْلَةُ الْعَالَمِ)

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்: “எதற்கும் ஒப்பில்லாத தன்மைகள் அழ்ழாஹ்விற்கே உள்ளன.”** அழ்ழாஹ்வைத் தவிர உள்ள அனைத்தும் படைக்கப்பட்டவைகளாகும்.

أَمَّا اللهُ تَعَالَى فَهُوَ وَحْدَهُ الْأَزَلِيُّ الَّذِيْ لَا ابْتِدَاءَ لَهُ وَكَذلِكَ صِفَاتُه أَزَلِيَّةٌ لَا ابْتِدَاءَ لَهَا وَصِفَاتُ غَيْرِهِ مَخْلُوْقَةٌ تَتَحَوَّلُ مِنْ حَالٍ إِلَى حَالٍ أَمَّا اللهُ تَعَالَى فَلَا يَطْرَأُ عَلَيْهِ تَحَوُّلٌ وَلَا تَغَيُّرٌ فَهُوَ تَعَالَى يُغَيِّرُ وَلَا يَتَغَيَّرُ وَيُطَوِّرُ وَلَا يَتَطَوَّرُ.

அழ்ழாஹ் மாத்திரமே ஆரம்பமில்லாதவனாவான்; அவனின் தன்மைகளும் ஆரம்பமில்லாதவைகளாகும். அழ்ழாஹ் அல்லாதவர்களின் தன்மைகள் படைக்கப்பட்டவைகளாகவும், ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாறக்கூடியவைகளாவும் காணப்படுகின்றன.

அழ்ழாஹ் தஆலாவின் தன்மைகளில் மாற்றமோ, திருப்பமோ ஏற்படமாட்டாது.

அழ்ழாஹ் தஆலா தான் படைப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்துபவன், அவனோ மாற்றமடையமாட்டான். அவன் தான் படைப்புகளை வளர்ச்சி அடையச் செய்பவன். அவனோ ஒரு நிலையிலிருந்து இன்னோரு நிலைக்கு வளர்ச்சியடைய மாட்டான்.

وَيُسَاعِدُ النَّظَرُ إِلَى الْعِبَارَاتِ التَّالِيَةِ فِي فَهْمِ هَذَا الْمَوْضُوْعِ الَّذِيْ هُوَ مِنْ مَوَاضِيْعِ التَّوْحِيْدِ:

**இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு சார்ந்த விடயங்களில் ஒன்றாகிய இதனை விளங்குவதற்கு பின்வரும் வசனங்களை உற்றுநோக்குவது அவசியமாகும்.**

| | |
|---|---|
| الْمَخْلُوْقَاتُ كُلُّهَا لَهَا بِدَايَةٌ، اللهُ خَلَقَهَا.<br>அனைத்துப் படைப்புகளுக்கும் ஆரம்பம் உண்டு அதனை அழ்ழாஹ்வே படைத்தான். | اللهُ أَزَلِيٌّ لَا بِدَايَةَ لَهُ.<br>அழ்ழாஹ்விற்கு ஆரம்பமில்லை |
| الْمَخْلُوْقَاتُ كُلُّهَا يَجُوْزُ عَلَيْهَا أَنْ تَفْنَى مِنْ حَيْثُ الْعَقْلُ.<br>பகுத்தறிவின் பிரகாரம் அனைத்துப் படைப்புக்களும் அழிவது சாத்தியமானதாகும். | اللهُ أَبَدِيٌّ لَا نِهَايَةَ لَهُ.<br>அழ்ழாஹ் முடிவில்லாதவன். |
| صِفَاتُ الْمَخْلُوْقَاتِ مَخْلُوْقَةٌ لَهَا بِدَايَةٌ وَيَجُوْزُ عَلَيْهَا الْفَنَاءُ.<br>படைப்புகளின் தன்மைகள் படைக்கப் பட்டவைகளாகும். அதற்கு ஆரம்பம் உண்டு. அவைகள் அழியக்கூடியவைகளாகும். | صِفَاتُ اللهِ أَزَلِيَّةٌ لَا بِدَايَةَ لَهَا، صِفَاتُ اللهِ أَبَدِيَّةٌ لَاتَفْنَى.<br>அழ்ழாஹ்வின் தன்மைகள் ஆரம்பமில்லாதவைகள். அழ்ழாஹ்வின் தன்மைகள் முடிவுமில்லாதவைகள். |

| | |
|---|---|
| صِفَاتُ الْمَخْلُوْقَاتِ تَتَغَيَّرُ وَتَتَحَوَّلُ وَتَتَبَدَّلُ وَتَتَطَوَّرُ مِنْ حَالٍ إِلَى حَالٍ لِأَنَّ اللهَ خَلَقَهَا.<br>படைப்புகளின் தன்மைகள் ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாற்றம் பெறும். ஏனெனில் அவற்றை அழ்ழாஹ் படைத்தான். | صِفَاتُ اللهِ لَا تَتَغَيَّرُ وَلَا تَتَحَوَّلُ وَلَا تَتَبَدَّلُ وَلَا تَتَطَوَّرُ لِأَنَّ ذٰلِكَ مِنْ صِفَاتِ الْمَخْلُوْقَاتِ.<br>அழ்ழாஹ்வின் தன்மைகள் மாற்றமடையவோ, நிலைமாறவோ, வளர்ச்சியடையவோ மாட்டாது, ஏனெனில் இவை படைப்புகளின் தன்மைகளாகும். |
| الْمَخْلُوْقَاتُ لَا تَخْلُقُ ضُرًّا وَلَا نَفْعًا وَلَاتَخْلُقُ شَيْئًا مِنَ الْأَفْعَالِ، فَمَنْ قَطَّعَ تُفَّاحَةً لَا يَسْتَطِيْعُ أَنْ يُعِيْدَهَا كَمَا كَانَتْ.<br>படைப்புகள் எந்தத் தீங்கையோ, பிரயோசனத்தையோ செயலையோ படைக்கமாட்டாது. ஒருவர் ஒரு அப்பிள் பழத்தை வெட்டினால் அதை ஆரம்பத்தில் இருந்ததைப் போன்று மாற்றுவதற்கு சக்தி பெறமாட்டார். | اللهُ خَالِقُ الْعَالَمِ وَمَا فِيْهِ، خَالِقُ الضُّرِّ وَالنَّفْعِ، خَالِقُ أَفْعَالِ الْعِبَادِ، وَرَازِقُهُمْ.<br>அழ்ழாஹ் இவ்வுலகத்தையும் இவ்வுலகில் உள்ளவைகளையும் படைத்தான். தீங்கு, பிரயோசனம், அடியார்களின் செயல்பாடுகள் போன்றவைகளையும் படைத்தான்; அழ்ழாஹ் இவைகளுக்கு றிஸ்க் அளிப்பவன். |
| الْمَخْلُوْقَاتُ ذَوُوْ أَشْكَالٍ مُتَعَدِّدَةٍ وَأَلْوَانٍ مُخْتَلِفَةٍ. حَتَّى الثَّمَرُ مِنْ جِنْسٍ وَاحِدٍ فِيْهِ الْحَامِضُ وَفِيْهِ الْحُلْوُ.<br>படைப்புகள் பல அமைப்புகளையும், பல நிறங்களையும் கொண்டவைகளாகும். ஒரே இனத்தைச் சேர்ந்த கனிகளில் சிலது புளிப்பாகவும் சிலது இனிப்பாகவும் இருக்கும். | اللهُ وَاحِدٌ لَا شَرِيْكَ لَهُ، وَاحِدٌ فِي ذَاتِهِ وَصِفَاتِهِ وَأَفْعَالِهِ.<br>அழ்ழாஹ் இணையின்றித் தனித்தவன்; அவனது யதார்த்தம், தன்மைகள், செயல்கள், அனைத்திலும் இணையின்றித் தனித்தவன். |

| | |
|---|---|
| الْمَخْلُوْقَاتُ لَهَا أَحْجَامٌ وَلَهَا أَمْكِنَةٌ تَسْتَقِرُّ فِيْهَا.<br>படைப்புக்களுக்கு உடல் தன்மைகளும், அவைகள் தரிபடுவதற்கு இடங்களும் உள்ளன. | اللهُ لَيْسَ جِسْمًا، لَيْسَ لَهُ حَجْمٌ، لَيْسَ لَهُ مَكَانٌ.<br>அழ்ழாஹ் சடத்தன்மை கொண்டவனல்ல, அவனுக்கு அளவோ, இடமோ கிடையாது. |
| الْمَخْلُوْقَاتُ تَحْتَاجُ إِلَى مَنْ خَلَقَهَا، تَحْتَاجُ إِلَى اللهِ.<br>படைப்பினங்கள் அவற்றை படைத்தவனின்பால் தேவைகாணும். (அழ்ழாஹ்வின்பால் தேவைகாணும்.) | اللهُ لَا يَحْتَاجُ لِلْمَخْلُوْقَاتِ.<br>அழ்ழாஹ் படைப்பினங்களின்பால் தேவைகாணமாட்டான். |
| الْمَخْلُوْقَاتُ لَا تَسْتَحِقُّ أَنْ تُعْبَدَ، لِأَنَّهَا عَاجِزَةٌ وَمُحْتَاجَةٌ لِمَنْ خَلَقَهَا.<br>படைப்புக்கள் வணங்கப்படுவதற்குத் தகுதி பெறமாட்டாது. ஏனெனில் அவைகள் இயலாதவைகளும், படைப்பாளனின்பால் தேவைகாணக் கூடியவைகளுமாகும். | اللهُ وَحْدَهُ يَسْتَحِقُّ أَنْ يُعْبَدَ لَا إِلَهَ إِلَّا هُوَ.<br>அழ்ழாஹ் மாத்திரமே வணங்கி வழிபடத் தகுதியானவன். |

قَالَ الْإِمَامُ الْجُنَيْدُ رَحِمَهُ اللهُ: **التَّوْحِيْدُ إِفْرَادُ الْقَدِيْمِ** ( أي الأزليّ ) **مِنَ الْمُحْدَثِ** ( أي المخلوقِ )

**இமாம் ஜுனைத்** رضي الله عنه **அவர்கள் கூறினார்கள்: "தவ்ஹீத் என்பது ஆரம்பமும், முடிவும் இல்லாத தன்மையுடைய அழ்ழாஹ்வுக்கு படைப்புக்களின் எத்தன்மையையும் பயன்படுத்தாமல் அவை அனைத்தை விட்டும் அழ்ழாஹ்வை வேறுபடுத்தி நம்பிக்கை கொள்வதே தவ்ஹீத் என்பதாகும்."**

## أسئلة

1- اذكر ءاية فيها تنزيه الله عن مشابهة المخلوقات.

2- ما معنى الآية: ليس كمثله شيء؟

3- ما سبب نزول سورة الإخلاص؟

4- ما معنى الآية: ولله المثل الأعلى؟

5- ماذا يقال عن جملة العالم؟

6- ماذا قال الإمام الجنيد رحمه الله في التوحيد؟

பாடம் : 5 الدرس : 5

## صِفَاتُ اللهِ تَعَالَى

## அல்லாஹ்வின் தன்மைகள்

ذَكَرَ الْعُلَمَاءُ أَنَّهُ يَجِبُ عَلَى كُلِّ مُكَلَّفٍ مَعْرِفَةُ ثَلَاثَ عَشْرَةَ صِفَةً للهِ تَعَالَى، وَهِيَ:

மார்க்க அறிஞர்கள் கூறியுள்ளார்கள்: அல்லாஹ்விற்குரிய பதிமூன்று தன்மைகளையும் அறிவது அனைத்து முகல்லபு[f]களின் மீதும் கடமையாகும்.

**அவையாவன:**

الْوُجُوْدُ وَالْوَحْدَانِيَّةُ وَالْقِدَمُ وَالْبَقَاءُ وَالْقِيَامُ بِالنَّفْسِ وَالْقُدْرَةُ وَالْإِرَادَةُ وَالْعِلْمُ وَالسَّمْعُ وَالْبَصَرُ وَالْحَيَاةُ وَالْكَلَامُ وَالْمُخَالَفَةُ لِلْحَوَادِثِ،

وَشَرْحُهَا كَمَا يَلِي:

**அவைகளின் விளக்கம் பின்வருமாறு:**

1. **الْوُجُوْدُ:** يَجِبُ الْإِيْمَانُ بِأَنَّ اللهَ مَوْجُوْدٌ لَا شَكَّ فِي وُجُوْدِهِ تَعَالَى، وَهُوَ مَوْجُوْدٌ بِلَا مَكَانٍ وَلَا جِهَةٍ وَلَا يَجْرِيْ عَلَيْهِ زَمَانٌ.

1. **அல்வுஜூத்: "அல்லாஹ் உள்ளான் அவனது உள்ளமையில் எவ்வித சந்தேகமும் இல்லை"** என்று ஈமான் கொள்வது கடமையாகும். மேலும் அவன் எவ்வித இடமோ, திசையோ

இல்லாமல் உள்ளான். மேலும் அவனை காலம் கடந்து செல்ல மாட்டாது.

2. **الْوَحْدَانِيَّةُ:** اللهُ وَاحِدٌ لَا شَرِيْكَ لَهُ، وَاحِدٌ فِي ذَاتِهِ وَوَاحِدٌ فِي صِفَاتِهِ وَوَاحِدٌ فِي فِعْلِهِ.

2. **அல்-வஹ்தானிய்யஹ்:** அல்லாஹ் இணையின்றித் தனித்தவன்; அவன் தனது யதார்த்தம், தன்மைகள், செயல்கள், அனைத்திலும் இணையின்றித் தனித்தவன்.

3. **الْقِدَمُ:** اللهُ أَزَلِيٌّ لَا بِدَايَةَ لِوُجُوْدِهِ، مَوْجُوْدٌ قَبْلَ الْمَخْلُوْقَاتِ.

3. **அல்-கிதம்:** அல்லாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித ஆரம்பமுமின்றி உள்ளான். படைப்புகளை படைக்க முன் அவன் ஆரம்பமில்லாத தன்மையில் உள்ளான்.

4. **الْبَقَاءُ:** اللهُ أَبَدِيٌّ لَا نِهَايَةَ لَهُ، لَا يَفْنَى وَلَا يَبِيْدُ.

4. **அல்-பகாஉ:** அல்லாஹ் அவனது உள்ளமைக்கு எவ்வித முடிவுமின்றி உள்ளான்; அவன் அழியவும் மாட்டான். மரணிக்கவும் மாட்டான்.

5. **الْقِيَامُ بِالنَّفْسِ:** اللهُ لَا يَحْتَاجُ إِلَى شَيْءٍ مِنْ مَخْلُوْقَاتِهِ وَكُلُّهَا مُحْتَاجَةٌ إِلَيْهِ.

5. **அல்-கியாமு பின்நப்ஸ்:** அல்லாஹ் அவனின் படைப்புகளில் எதன் பக்கமும் தேவைகாண மாட்டான், அவைகள் அனைத்தும் அல்லாஹ்வின் பால் தேவை காணுகின்றன.

6. **الْقُدْرَةُ:** اللهُ قَادِرٌ عَلَى كُلِّ شَيْءٍ.

6. **அல்-குத்ரஹ்:** அல்லாஹ் சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைத்தின் மீதும் வல்லமையுடையவன்.

7. **الْإِرَادَةُ:** أي الْمَشِيْئَةُ، فَكُلُّ شَيْءٍ يَحْصُلُ فِي الْعَالَمِ بِمَشِيْئَةِ اللهِ.

7. **அல்-இராதஹ்:** இவ்வுலகில் அனைத்து விடயங்களும் அழ்ழாஹ்வின் நாட்டப்படியே நடை பெறுகின்றன.

8. **الْعِلْمُ:** اللهُ عَالِمٌ بِكُلِّ الْأَشْيَاءِ قَبْلَ حُصُوْلِهَا.

8. **அல்-இல்ம்:** அழ்ழாஹ் உலகில் உள்ள அனைத்து விடயங்களும் உண்டாகுவதற்கு முன்பே அவைகளை நன்கறிந்தவன்.

9. **السَّمْعُ:** اللهُ تَعَالَى يَسْمَعُ الْمَسْمُوْعَاتِ كُلَّهَا بِدُوْنِ أُذُنٍ وَلَا ءَالَةٍ أُخْرَى.

9. **அஸ்ஸம்உ:** அழ்ழாஹ் காதோ, வேறு கருவிகளோ இன்றி கேட்கப்படக்கூடியவைகள் அனைத்தையும் கேட்பவன்.

10. **الْبَصَرُ:** اللهُ يَرَى كُلَّ الْمَرْئِيَّاتِ بِدُوْنِ حَدَقَةٍ وَلَا ءَالَةٍ أُخْرَى.

10. **அல்-பஸர்:** அழ்ழாஹ் கண்விழியோ, வேறு எந்த கருவியோ இன்றி பார்க்கப்படக்கூடிய அனைத்தையும் பார்ப்பவன்.

11. **الْحَيَاةُ:** اللهُ حَيٌّ بِدُوْنِ رُوْحٍ وَلَحْمٍ وَقَلْبٍ فَحَيَاتُهُ لَا تُشْبِهُ حَيَاتَنَا وَهُوَ حَيٌّ لَا يَمُوْتُ.

11. **அல்-ஹயாத்:** அழ்ழாஹ் மரணமில்லாதவன்; அவனது மரணமில்லாத தன்மைக்கு உயிர் தன்மையோ, சடத்தன்மையோ, உள்ளமோ இல்லை. அவனுடைய ஹயாத் எங்களுடைய ஹயாத்துக்கு ஒப்பாகமாட்டாது. அவன் மரணமில்லாதவன்.

12. **الْكَلَامُ:** اللهُ يَتَكَلَّمُ بِدُوْنِ لِسَانٍ وَشَفَتَيْنِ وَكَلَامُهُ لَيْسَ لُغَةً عَرَبِيَّةً أَوْ غَيْرَهَا، لِأَنَّهُ خَالِقُ اللُّغَاتِ وَالْحُرُوْفِ وَالْأَصْوَاتِ وَكَلَامُهُ لَا يُشْبِهُ كَلَامَ الْعَالَمِيْنَ.

12. **அல்-கலாம்:** அழ்ழாஹ் நாவோ, இரு உதடுகளோ இன்றி பேசுபவன். அவனது பேச்சு அறபோ , அது அல்லாத வேறு பாஷையாகவோ இல்லை. ஏனெனில் அழ்ழாஹ் பாஷைகள், எழுத்துக்கள், சத்தங்கள் போன்ற அனைத்தையும் படைத்தவன்.

மேலும் அவனது பேச்சு உலகத்தாரின் பேச்சுக்கு முற்றிலும் மாற்றமானது.

13. **الْمُخَالَفَةُ لِلْحَوَادِثِ:** اللهُ تَعَالَى لَا يُشْبِهُ الْمَخْلُوْقَاتِ.

13. **அல்-முஹாலபது லில்-ஹவாதிஸ்:** அழ்ழாஹ் தஆலா படைப்புகளுக்கு மாற்றமானவன்.

**أسئلة**

**1**–ماذا يجب على كل مكلف معرفته من صفات الله تعالى؟

**2**–عدد صفات الله تعالى الواجب معرفتها على كل مكلف.

**3**–تكلم عن صفة الوجود. والوحدانية.

**4**–تكلم عن صفة القدم. والبقاء. والقيام بالنفس.

**5**–تكلم عن صفة القدرة. والإرادة. والعلم.

**6**–تكلم عن صفة السمع. والبصر. والحياة.

**7**–تكلم عن صفة الكلام. والمخالفة للحوادث.

## مَا جَاءَ فِي بَدْءِ الْخَلْقِ

## الْمَاءُ أَوّلُ الْمَخْلُوْقَاتِ

### *அழ்ழாஹ்வின் முதல் படைப்பு*

### தண்ணீர் படைப்புக்களில் முதன்மையானதாகும்

قَالَ صَلى اللهُ عَلَيْهِ وَسَلّمَ عِنْدَمَا سُئِلَ عَنْ بَدْءِ الْأَمْرِ ( أي كَيْفَ بَدأَ هذَا الْكَوْنُ ): **كَانَ اللهُ وَلَمْ يَكُنْ شَيءٌ غَيْرُهُ، وَكَانَ عَرْشُهُ عَلَى الْمَاءِ، وَكَتَبَ فِي الذِّكْرِ كُلّ شَيءٍ، ثُمّ خَلَقَ السّموَاتِ وَالْأَرْضَ** – رواهُ الْبَخارِيٌّ –

**"இவ்வுலகம் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது?"** என்று கேட்கப்பட்ட போது **"எவ்வித வஸ்துக்களும் இல்லாத போது அழ்ழாஹ் ஆரம்பமின்றி உள்ளவன்; அவனின் அர்ஷ் தண்ணீருக்கு மேலே இருந்தது. அனைத்து விடயங்களும் லவ்ஹுல் மஹ்பூழில் எழுதப்பட்டுவிட்டது. பின்பு வானங்களையும் பூமிகளையும் படைத்தான்"** என அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்.

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ றஹிமஹுழ்ழாஹ்)**

أَجَابَ الرّسُوْلُ صَلى اللهُ عَلَيْهِ وَسَلّمَ عَنْ هذَا السُّؤَالِ بِأَنّ اللهَ لَا بِدَايَةَ لِوُجُوْدِهِ (أ ي أزليّ )، وَلَا أَزَلِيّ سِوَاهُ، وَبِعِبَارَةٍ أُخْرَى فَفِي الْأَزَلِ لَمْ يَكُنْ إِلّا اللهُ تَعَالَى وَاللهُ تَعَالَى خَلَقَ كَلّ شَيءٍ وَمَعَنَى خَلَقَ كُلّ شَيءٍ أَنّهُ أَخْرَجَ جَمِيْعَ الْمَوْجُوْدَاتِ مِنَ الْعَدَمِ إِلَى الْوُجُوْدِ. وَاللهُ تَعَالَى لَمْ يَخْلُقِ الْمَخْلُوْقَاتِ كُلّهَا دَفْعَةً وَاحِدَةً

وَلَوْ أَرَادَ ذلِكَ لَفَعَلَ، خَلَقَ اللهُ السَّموَاتِ وَالْأَرْضَ وَمَرَافِقَهَا مِنْ أَنْهَارٍ وَجِبَالٍ وَوِدْيَانٍ فِي سِتَّةِ أَيَّامٍ وَالْحِكْمَةُ مِنْ ذلِكَ أَنْ يُعَلِّمَنَا التَّأَنِّيَ فِي الْأُمُوْرِ.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அந்த வினாவிற்கு பதில் கூறினார்கள்: "நிச்சயமாக அழ்ழாஹ் விற்கு ஆரம்பமில்லை, அவனைத் தவிர வேறு யாரும் அத்தன்மையைப் பெறமுடியாது. வேறொரு வாசகத்தின்படி **"ஆரம்பமில்லாத தன்மையில் அவன் மாத்திரமே உள்ளான்"** என்றும் கூறலாம். அழ்ழாஹ் அனைத்துப் படைப்புக்களையும் படைத்தான். அழ்ழாஹ் அனைத்தையும் படைத்தான் என்றால் ; அவன் இந்த உலகில் உண்டாகி இருக்கக்கூடிய அனைத்தையும் இல்லாமையில் இருந்து வெளியாக்கினான்.

அழ்ழாஹ் எல்லா படைப்புக்களையும் ஒரே தடவையில் படைக்க வில்லை. அவன் அவ்வாறு ஒரே தடவையில் படைக்க நாடியிருந்தால் படைத்திருப்பான். அழ்ழாஹ் தஆலா **"வானங்கள், பூமிகள் மற்றும் அதனுடன் சேர்ந்து இருக்கக்கூடிய ஆறுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் போன்றவற்றை ஆறு நாட்களில் படைத்தான்"** இதன் நுட்பம் என்னவெனில், விடயங்களில் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும் என்பதை எமக்குக் கற்றுத் தருவதாகும்.

**الْمَاءُ أَوَّلُ الْمَخْلُوْقَاتِ:** وَأَوَّلُ الْمَخْلُوْقَاتِ الْمَاءُ، قَالَ النَّبِيُّ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: **إِنَّ اللهَ تَعَالَى خَلَقَ كُلَّ شَيءٍ مِنَ الْمَاءِ** – رَوَاهُ ابْنُ حِبَّان – يَعْنِي قَبْلَ أَنْ يَخْلُقَ اللهُ النُّوْرَ وَالظَّلَامَ وَالْأَرْضَ وَالسَّموَاتِ وَالْعَرْشَ وَاللَّوْحَ الْمَحْفُوْظَ، خَلَقَ قَبْلَ كُلِّ شَيءٍ الْمَاءَ، وَجَعَلَهُ أَصْلًا لِغَيْرِهِ مِنَ الْمَخْلُوْقَاتِ ثُمَّ خَلَقَ مِنَ الْمَاءِ الْعَرْشَ ثُمَّ الْقَلَمَ الْأَعْلَى ثُمَّ اللَّوْحَ الْمَحْفُوْظَ، وَخَلَقَ بَعْدَ هؤُلَاءِ سَائِرَ الْأَشْيَاءِ أي الْأَرْضَ وَالسَّموَاتِ وَالْبَهَائِمَ وَالْجِبَالَ وَالْأَشْجَارَ وَالْأَنْهَارَ. وَكَانَ ءَاخِرَ الْخَلْقِ مِنْ حَيْثُ الْجِنْسُ ءادَمُ عَلَيْهِ السَّلام، خُلِقَ بَعْدَ عَصْرِ يَوْمِ الْجُمُعَةِ.

**முதல் படைப்பு தண்ணீராகும்:**

**“அழ்ழாஹ் அனைத்துப் படைப்புக்களையும் தண்ணீரில் இருந்து படைத்தான்.” என அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்.**

**(அறிவித்தவர் : இமாம் இப்னு ஹிப்பான் றஹிமஹுமுழ்ழாஹ்)**

அதாவது ஒளி, இருள், பூமி, வானங்கள், அர்ஷ், அல்லவ்ஹுல் மஹ்பூழ் இவைகளையும் ஏனைய அனைத்து படைப்புக்களையும் படைக்க முன் அழ்ழாஹ் தண்ணீரை படைத்தான்.

அதனை படைப்புக்களுக்கு அடிப்படையாக ஆக்கினான். பின்னர் தண்ணீரில் இருந்து அர்ஷைப் படைத்தான். பின்னர் உயர்தரமான கலமைப் படைத்தான். பின்னர் அல்லவ்ஹுல் மஹ்பூழ் இவைகளுக்குப் பின்னர் ஏனைய அனைத்து படைப்புகளையும் படைத்தான். அதாவது பூமி, வானம், கால் நடைகள், மலைகள், மரங்கள், ஆறுகள் போன்றவற்றைப் படைத்தான். இனம் என்ற அடிப்படையில் இறுதி படைப்பு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாகும். அவர்கள் ஜும்அஹ் (வெள்ளிக்கிழமை) நாளன்று அஸ்ருக்குப் பின்னர் படைக்கப்பட்டார்கள்.

**الْعَرْشُ:** هُوَ سَرِيْرٌ لَهُ قَوَائِم، وَهُوَ أَكْبَرُ الْأَجْسَامِ الَّتِي خَلَقَهَا اللهُ تَعَالَى وَهُوَ سَقْفُ الْجَنَّةِ قَالَ رَسُوْلُ اللهِ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: **مَا السَّموَاتُ السَّبْعُ فِي جَنْبِ الْكُرْسِيِّ إِلَّا كَحَلْقَةٍ فِي أَرْضٍ فَلَاةٍ وَفَضْلُ الْعَرْشِ عَلَى الْكُرْسِيِّ كَفَضْلِ الْفَلَاةِ عَلَى الْحَلْقَةِ** – رَوَاهُ ابْنُ حِبَّان –

**அல்-அர்ஷ்:** அது கால்களைக் கொண்ட ஒரு கட்டிலாகும். மேலும் அது அழ்ழாஹ்வின் படைப்புகளில் மிக பிரமாண்டமான ஒரு படைப்பாகும்; அது சுவனத்தின் முகடுமாகும்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**“ஏழு வானங்களை குர்ஸியுடன் ஒப்பிட்டு பார்க்கையில், பூமியில் உள்ள ஓர் வெட்ட வெளியில் காணப்படும் ஒரு மோதிரத்தைப் போன்றதாகும். அதே போன்றுதான் குர்ஸியை அர்ஷுடன் ஒப்பிட்டு பார்க்கையில் பூமியில் உள்ள ஓர் வெட்ட வெளியில் காணப்படும் ஒரு மோதிரத்தைப் போன்றதாகும்.”**

**(அறிவித்தவர் : இமாம் இப்னு ஹிப்பான் றஹிமஹுழ்ழாஹ்)**

أي أَنّ السّموَاتِ السَّبْعَ بِالنّسْبَةِ لِلْكُرْسِيّ كَحَلْقَةٍ فِي فَلَاةٍ وَكَذلِكَ الْكُرْسِيُّ بِالنّسْبَةِ لِلْعَرْشِ كَحَلْقَةٍ فِي فَلَاةٍ.وَهذَا يَدُلُّ عَلَى عِظَمِ مِسَاحَةِ الْعَرْشِ الّذي يَحْمِلُهُ الْآنَ أَرْبَعَةٌ مِنَ الْمَلَائِكَةِ الضّخَامِ الْعِظَامِ، الْوَاحِدُ مِنْهُمْ ما بَيْنَ شَحْمَةِ أُذُنِهِ إِلَى عَاتِقِهِ مَسِيْرَةُ سَبْعِمِائَةِ عَامٍ بِخَفَقَانِ الطّيْرِ الْمُسْرِعِ أَمّا يَوْمَ الْقِيَامَةِ فَيَحْمِلُ الْعَرْشَ ثَمَانِيَةٌ مِنَ الْمَلَائِكَةِ.

وَالْعَرْشُ مَحْفُوْفٌ بِالْمَلَائِكَةِ وَلَيْسَ هُوَ مَكَانًا للهِ تَعَالَى لِأَنّ اللهَ لَيْسَ جِسْمًا وَلَا يَحْتَاجُ لِلْمَكَانِ.

அதாவது ஏழு வானங்களை குர்ஸியுடன் ஒப்பிட்டு பார்க்கையில் பூமியின் வெட்ட வெளியில் காணப்படும் ஒரு மோதிரத்தைப் போன்றதாகும். அதே போன்றுதான் குர்ஸியை அர்ஷுடன் ஒப்பிட்டு பார்க்கையில் பூமியின் வெட்ட வெளியில் காணப்படும் ஒரு மோதிரத்தைப் போன்றதாகும். இது மிகப் பெரும் தோற்றமுடைய மலக்குகளில் நான்கு பேர் சுமந்து கொண்டிருக்கும் அர்ஷின் பிரமாண்டத்தைக் காட்டுகிறது.

அந்த மலக்குமார்களில் ஒருவரின் காதுச் சோனைக்கும் தோல் புயத்திற்கும் மத்தியில் உள்ள தூரமானது வேகமாக பறந்து செல்லும் ஒரு பறவை எழுநூறு வருடம் பறக்கும் தூரமாகும். நாளை மறுமையில் மலக்குமார்களில் எட்டு பேர் அர்ஷை

சுமப்பார்கள். அந்த அர்ஷ் மலக்குமார்களைக் கொண்டு சூழப்பட்டுள்ளது ; அது அழ்ழாஹ் அமரும் இடமல்ல. ஏனெனில் அழ்ழாஹ் ஜடமற்றவன். அதனால் இடத்தின் பால் தேவைகாணமாட்டான்.

قَالَ الْإِمَامُ عَلِيٌّ رَضِيَ اللهُ عَنْهُ: **إِنَّ اللهَ خَلَقَ الْعَرْشَ إِظْهَارًا لِقُدْرَتِهِ وَلَمْ يَتَّخِذْهُ مَكَانًا لِذَاتِهِ.**

**இமாம் அலீ** رضي الله عنه **அவர்கள் கூறினார்கள் : "நிச்சயமாக அழ்ழாஹ் அர்ஷை தனது வல்லமையை வெளிப்படுத்துவதற்காகவே படைத்துள்ளான்; அவனுக்கு அதை இடமாக எடுத்துக் கொள்வதற்கு அல்ல"**

**(அறிவித்தவர்: இமாம் அபூ மன்ஸூர் அல்-பக்தாதீ றஹிமஹுழ்ழாஹ்)**

فَالْعَرْشُ وَالْكُرْسِيُّ خَلَقَهُمَا اللهُ إِظْهَارًا لِقُدْرَتِهِ وَهُوَ سُبْحَانَهُ مَوْجُودٌ بِلَا مَكَانٍ وَلَا جِهَةٍ.

எனவே அர்ஷ், குர்ஸி இவைகள் இரண்டையும் அழ்ழாஹ் தனது வல்லமையை வெளிப்படுத்தவதற்காகவே படைத்துள்ளான்; அவன் எவ்வித இடமும், திசையும் இன்றியே உள்ளான்.

## أسئلة

**1**-ماذا قال الرسول لما سئل عن بدء الأمر؟

**2**-هل خلق الله المخلوقات كلها دفعة واحدة؟

**3**-ما معنى الله تعالى خلق كل شيء؟

**4**-في كم يوم خلق الله السموات والأرض؟ وما الحكمة من ذلك؟

**5**-ما هو أول مخلوقات الله؟ وماذا خلق الله بعده؟

**6**-ما هو العرش؟ ماهو ءاخر المخلوقات من حيث الجنس؟

**7**-العرش أكبر الأجرام. اذكر دليلا على ذلك من الحديث الشريف.

**8**-كم ملكا يحمل العرش الآن؟ ويوم القيامة؟

9-من يحفّ بالعرش؟ وماذا قال الإمام علي عن العرش؟

## تَرْتِيْبُ الْمَخْلُوْقَاتِ بَعْدَ الْمَاءِ وَالْعَرْشِ

## நீர் மற்றும் அர்ஷிற்கு பின்னர் படைப்புகளின் ஒழுங்கு

بَعْدَ أَنْ خَلَقَ اللهُ الْمَاءَ وَالْعَرْشَ ،خَلَقَ الْقَلَمَ الْأَعْلَى ثُمَّ اللَّوْحَ الْمَحْفُوْظَ ثُمَّ سَائِرَ الْمَخْلُوْقَاتِ.

அழ்ழாஹ் நீர், அர்ஷ் இவைகள் இரண்டையும் படைத்ததன் பின்னர் உயர்தரமான கலமை படைத்தான் பின்னர் அல்லவ்ஹுல் மஹ்பூழையும் பின்னர் ஏனைய படைப்புகளைப் படைத்தான்.

**الْقَلَمُ الْأَعْلَى وَاللَّوْحُ الْمَحْفُوْظُ:** وَرَدَ فِي وَصْفِ اللَّوْحِ الْمَحْفُوْظِ أَنَّهُ مِنْ دُرَّةٍ بَيْضَاءَ حَافَتَاه يَاقُوْتَةٌ حَمْرَاءُ، عَرْضُهُ مَسِيْرَةُ خَمْسِمِائَةِ عَامٍ.

**உயர்தரமான கலம், அல்-லவ்ஹுல் மஹ்பூழ்:-** “அல்-லவ்ஹுல் மஹ்பூழின்” தன்மைப் பற்றி ஹதீஸில் பின்வருமாறு வந்துள்ளது. “நிச்சயமாக அது வெந்நிற முத்துக்களினாலானது. அதன் இரு ஓரப்பகுதிகள் சிவப்பு நிற மரகதத்தினாலும் அதன் அகலம் ஐந்நூறு வருட நடை தூரமுமாகும்.”

أَمَرَ اللهُ تَعَالَى الْقَلَمَ أَنْ يَكْتُبَ فَجَرَى بِقُدْرَةِ اللهِ تَعَالَى مِنْ غَيْرِ أَنْ يُمْسِكَهُ أَحَدٌ مِنْ خَلْقِهِ فَكَتَبَ عَلَى اللَّوْحِ الْمَحْفُوْظِ مَا كَانَ وَمَا يَكُوْنُ فِي الدُّنْيَا إِلَى نِهَايَتِهَا. ثُمَّ بَعْدَ ذلِكَ بِخَمْسِيْنَ أَلْفَ سَنَةٍ خَلَقَ اللهُ السَّمَوَاتِ وَالْأَرْضَ فِي سِتَّةِ أَيَّامٍ فَلَا يُوْلَدُ إِنْسَانٌ وَلَا تَنْزِلُ قَطْرَةُ مَاءٍ مِنَ السَّمَاءِ إِلَّا عَلَى حَسَبِ مَا كُتِبَ فِي اللَّوْحِ الْمَحْفُوْظِ.

அழ்ழாஹ் அந்த கலமை எழுதுமாறு ஏவினான். அவனின் படைப்புகளில் எவரும் அதனை தொடாமல் அழ்ழாஹ்வின் வல்லமையைக் கொண்டு எழுத ஆரம்பித்தது.

அது அல்-லவ்ஹுல் மஹ்பூழில் இந்த உலகில் நடந்தவை, இறுதி வரை நடக்கப் போகின்றவை அனைத்தையும் எழுதியது. ஐம்பது ஆயிரம் ஆண்டுகளின் பின் அழ்ழாஹ் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். யார் பிறப்பதாக இருந்தாலும், வானத்தில் இருந்து ஒரு துளி மழை இறங்குவதாக இருந்தாலும் அல்-லவ்ஹுல் மஹ்பூழில் எழுதப் பட்டிருக்கும் அடிப்படையில் தான் அனைத்தும் நிகழும்.

**الْأَرْضُ:** الْأَرْضُ الَّتِي نَحْنُ عَلَيْهَا هِيَ وَاحِدَةٌ مِنْ سَبْعِ أَرَضِينَ خَلَقَهَا اللهُ تَعَالَى وَهِيَ أَعْلَاهَا وَكُلُّ أَرْضٍ مُنْفَصِلَةٌ عَنِ الْأُخْرَى، وَفِي الْأَرْضِ السَّابِعَةِ يُوْجَدُ مَكَانٌ يُسَمَّى سِجِّيْنَ وَهُوَ مَكَانُ أَرْوَاحِ الْكُفَّارِ بَعْدَ بِلَى أَجْسَادِهِمْ إِلَى أَنْ يُبْعَثُوْا وَجَهَنَّمُ تَحْتَ الْأَرْضِ السَّابِعَةِ وَهِيَ النَّارُ الَّتِي تَوَعَّدَ اللهُ بِهَا الْكُفَّارَ وَالْعُصَاةَ مِنْ عِبَادِهِ. وَكَانَ خَلْقُ هٰذِهِ الْأَرْضِ فِي الْيَوْمَيْنِ الْأَوَّلَيْنِ مِنَ الْأَيَّامِ السِّتِّ.

1. **பூமி:** நாம் தற்போது எந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமோ அது அழ்ழாஹ் படைத்த ஏழு பூமிகளில் ஒன்றாகும். ஒவ்வொரு பூமியும் ஒன்றோடு ஒன்று சேராமல் பிரிந்து காணப்படுகின்றன. ஏழாவது பூமியில் "ஸிஜ்ஜீன்" என்று பெயர் சொல்லப்படும் ஒரு இடம் உண்டு. அது காபிர்கள் அவர்களது உடல் அழிந்து போனதன் பின் அவர்கள் எழுப்பப்படும் வரை அவர்களின் ஆத்மாக்களின் இடமாகும். மேலும் ஏழாவது பூமியின் கீழ் **"ஜஹன்னம்"** எனும் நரகம் உண்டு. காபிர்களுக்கும், பெரும் பாவிகளுக்கும் அதில் கடும் தண்டனை இருப்பதாக அழ்ழாஹ் எச்சரித்துள்ளான். அந்த பூமி ஆறு நாட்களில் முதல் இரண்டு நாட்களில் படைக்கப்பட்டது.

**السّموَاتُ السّبْعُ:** بَعْدَ أَنْ خَلَقَ اللهُ تَعَالَى الْأَرْضَ خَلَقَ السّموَاتِ السّبْعَ، وَهِيَ أَجْرَامٌ صُلْبَةٌ رَفَعَهَا اللهُ بِغَيْرِ عَمَدٍ، مُنْفَصِلَةٌ عَنْ بَعْضِهَا الْبَعْضُ، بَيْنَ الْوَاحِدَةِ وَالْأُخْرَى مَسَافَةُ خَمْسمِائَةِ عَامٍ وَلِكُلِّ سَمَاءٍ بَابٌ.

2. **ஏழு வானங்கள்:** அழ்ழாஹ் பூமியை படைத்ததன் பின்னர் ஏழு வானங்களைப் படைத்தான். அவை கட்டியான தன்மையைக் கொண்டதாகும். அழ்ழாஹ் அதனை எவ்வித தூண்களுமின்றி இல்லாமல் உயர்த்தியுள்ளான். அவை சிலது சிலதை விட்டு பிரிந்து காணப்படுகின்றன. இரண்டு வானங்களுக்கு மத்தியில் உள்ள தூரம் ஐந்நூறு ஆண்டுகள் நடை தூரமாகும்.
ஒவ்வொரு வானத்திற்கும் கதவுகள் உள்ளன.

وَمِنْ شِدّةِ بُعْدِ السّمَاءِ الْأُوْلَى عَنِ الْأَرْضِ وَعَجْزِ الْإِنْسَانِ عَنْ إِدْرَاكِهَا يَعْتَقِدُ بَعْضُ الْغَرْبِيِّيْنَ أَنّ الْفَضَاءَ الّذِيْ فِيْهِ النُّجُوْمُ وَالْكَوَاكِبُ هُوَ جُمْلَةُ هذَا الْعَالَمِ وَيَعْتَقِدُوْنَ بَاطِلًا أَنّهُ مُمْتَدٌّ إِلَى مَا لَا نِهَايَةَ لَهُ وَلَا عِبْرَةَ بِكَلَامِهِمْ لِأَنّ اللهَ تَعَالَى أَخبَرَنَا فِي الْقُرْءَانِ وَنَبِيّهُ صلّى الله عليه وسلّم أَخْبَرَنَا فِي حَدِيْثِهِ عَنْ هذِهِ الْأُمُوْرِ بِخِلَافِ مَا قَالُوْا. وَفَوْقَ السّمَاءِ السّابِعَةِ تُوْجَدُ الْجَنّةُ.

வானம் பூமியை விட்டும் கடும் தொலை தூரத்தில் உள்ளதனாலும், அதனை மனிதனால் அடைந்து கொள்ள இயலாமல் இருப்பதினாலும் ஒரு சில மேற்கத்தியர்கள் நட்சத்திரங்கள் எந்த விசாலமான வெட்ட வெளியில் காணப்படுகின்றனவோ அதுவே ஒட்டு மொத்த உலகம் என்று உறுதி கொள்கின்றனர். மேலும் அது ஒரு முடிவின்றி நீண்டு செல்கின்றது என்றும் பிழையாக உறுதி கொள்கின்றனர். அவர்களின் இந்தப் பேச்சை கணக்கெடுக்கப்படமாட்டாது.
ஏனெனில் அழ்ழாஹ் தனது வேதத்திலும், அவனின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் ஹதிஸிலும் இந்த விடயம் பற்றி வழிகெட்ட மேற்கத்தியர்களுக்கு மாற்றமாக கூறியுள்ளார்கள். ஏழாவது வானத்திற்கு மேல் சுவனம் உண்டு.

**مَرَافِقُ الْأَرْضِ:** وَبَعْدَ خَلْقِ السَّموَاتِ السَّبْعِ خَلَقَ اللهُ تَعالَى مَرَافِقَ الْأَرْضِ كَالْأَنْهَارِ وَالْأَشْجَارِ وَالْجِبَالِ وَغَيْرِهَا.

3. **பூமியுடன் சேர்ந்து இருப்பவைகள்:** ஏழு வானங்களை அழ்ழாஹ் படைத்ததன் பின் ஆறுகள், மரங்கள், மலைகள் போன்ற பூமியுடன் சேர்ந்து இருப்பவைகள் அனைத்தையும் அழ்ழாஹ் படைத்தான்.

**ءادَمُ:** ثُمَّ خَلَقَ اللهُ تَعَالَى ءادَمَ فِي ءاخِرِ الْيَوْمِ السَّادِسِ وَهُوَ يومُ الْجُمُعَةِ وَءادَمُ هُوَ ءاخِرُ الْمَخْلُوقَاتِ مِنْ حَيْثُ الْجِنْسُ وَأَوَّلُ الْأَنْبِيَاءِ خَلَقَهُ اللهُ تَعَالَى مِنْ تُرَابِ الْأَرْضِ بَعْدَ أَنْ خَلَطَهُ الْمَلَكُ بِأَمْرِ اللهِ بِمَاءٍ مِنَ الْجَنَّةِ وَخَلَقَ مِنْ ضِلَعِهِ الْأَيْسَرِ حَوَّاءَ، وَكَانَ خَلْقُ الْمَلَائِكَةِ وَالْجِنِّ وَالْبَهَائِمِ قَبْلَ خَلْقِ ءادَمَ.

4. **ஆதம் அலைஹிஸ்ஸலாம்**: பின்பு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆறாவது நாளின் இறுதிப் பகுதியில் படைத்தான். அது ஜும்அஹ் நாளாகும். இனம் ரீதியாக படைப்புகளில் இறுதியானவரும், நபிமார்களில் ஆரம்பமானவரும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆவார்கள். அழ்ழாஹ்வின் உத்தரவின் அடிப்படையில் சுவனத்து நீரைக் கொண்டு பூமியின் மண் கலக்கப்பட்ட பின் அந்த மண்ணிலிருந்து அவர்களை படைத்தான். மேலும் அவர்களின் இடது விலா எலும்பில் இருந்து **“ஹவ்வா”** அலைஹஸ்ஸலாம் அவர்களைப் படைத்தான். மேலும் மலக்குகள், ஜின்கள், விலங்குகள் இவைகள் அனைத்தும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்படுதவற்கு முன் படைக்கப்பட்டிருந்தன.

## أسئلة

1- ماذا خلق الله بعد الماء والعرش؟

2- ماذا ورد في وصف اللوح المحفوظ؟

3- بم أمر الله القلم الأعلى؟ وماذا كتب على اللوح المحفوظ؟

4- متى خلق الله السموات والأرض؟

5- كم أرضا خلق الله؟ وعلى أي أرض نحن؟

6- ماهو سجين؟ وأين يوجد؟

7- أين توجد جهنم؟

8- ما هي السموات؟ وكم سماء خلق الله؟

9- أين توجد الجنة؟

10- بعد خلق السموات السبع ماذا خلق الله؟

11- متى خلق الله الملائكة والجن والبهائم؟

12- مم خلق الله حواء؟

## الْمُعْجِزَةُ وَالْكَرَامَةُ

## மு.ஃ.ஜிஸத் மற்றும் கராமத்

### تَعْرِيفُ الْمُعْجِزَةِ:

الْمُعْجِزَةُ هِيَ أَمْرٌ خَارِقٌ لِلْعَادَةِ، يَأْتِيْ عَلَى وَفْقِ دَعْوَى مَنِ ادَّعَى النُّبُوَّةَ، سَالِمٌ مِنَ الْمُعَارَضَةِ بِالْمِثْلِ صَالِحٌ لِلتَّحَدِّيْ.

**"மு.ஃ.ஜிஸத்"** என்பதன் வரைவிலக்கணம்:

**"மு.ஃ.ஜிஸத்"** என்பது உலக வழமைக்கு மாற்றமாக நிகழக் கூடிய ஒரு விடயமாகும்.

தான் நபி என மக்களுக்கு மத்தியில் எடுத்துக்கூறும் ஓர் நபியின் நபித்துவப் பிரச்சாரத்துக்கு அது தோதுவாக அமையும்.

இவ்வழமைக்கு மாற்றமான மு.ஃ.ஜிஸத்தை இது போன்றதொரு விடயம் முறியடிக்கவோ தகர்த்தெறியவோ முடியாது. இவ்வற்புதம் சவாலிட முடியுமானதாக இருக்கும்.

فَمَا كَانَ مِنَ الْأُمُوْرِ عَجِيْبًا وَلَمْ يَكُنْ خَارِقًا لِلْعَادَةِ، فَلَيْسَ بِمُعْجِزَةٍ كَطَيَرَانِ الطَّائِرَاتِ، وَكَذلِكَ مَا كَانَ خَارِقًا لَكِنَّهُ لَمْ يَقْتَرِنْ بِدَعْوَى النُّبُوَّةِ كَالْخَوَارِقِ الَّتِي تَظْهَرُ عَلَى أَيْدِي الْأَوْلِيَاءِ أَتْبَاعِ الْأَنْبِيَاءِ، فَإِنَّهَا لَيْسَتْ مُعْجِزَاتٍ بَلْ تُسَمَّى كَرَامَاتٍ.

எவையெல்லாம் ஆச்சரியமாக இருந்து வழமைக்கு மாற்றமாக இல்லையோ அவைகள் **"மு.ஃ.ஜிஸத்தாக"** அமைய முடியாது.

உதாரணமாக பறக்கும் விமானங்களைப் போல.

இதனை போன்று தான் உலக வழமைக்கு மாற்றமாக இருக்கக்கூடிய ஒன்று ஆனால் அது நுபுவ்வத்தை வாதிடுவதுடன் சேர்ந்ததாக இல்லை. உதரணமாக அழ்ழாஹ்வின் தூதர்களை பின்பற்றக் கூடிய அழ்ழாஹ்வின் பொருத்தத்தைப் பெற்ற வலிமார்களின் மூலமாக வெளியாகக் கூடிய உலக வழமைக்கு மாற்றமான விடயங்களை போன்றதாகும். எனினும் இதனை **“மு.்.ஜிஸத்”** என்று சொல்லப்படமாட்டாது. மாறாக அதற்கு **“கராமத்”** என்று சொல்லப்படும்.

وَكَذلِكَ لَيْسَ مِنَ الْمُعْجِزَةِ مَا يُسْتَطَاعُ مُعَارَضَتُهُ بِالْمِثْلِ، كَالسِّحْرِ فَإِنَّهُ يُعَارَضُ بِسِحْرٍ مِثْلِهِ.

இதேபோல் தான், ஒன்றை அதே போல் உள்ள ஒன்றால் முறியடிக்க முடியுமானதாக இருந்தால் அது **“மு.்.ஜிஸாவாக”** இருக்க முடியாது. உதாரணமாக சூனியம். ஏனெனில் ஒரு சூனியத்தை அதே போன்ற சூனியத்தினால் முறியடிக்க முடியும்.

**وَالْمُعْجِزَةُ قِسْمَانِ:**

மு.்.ஜிஸத் இரண்டு வகைப்படும்

**قِسْمٌ** يَقَعُ بَعْدَ اقْتِرَاحٍ مِنَ النَّاسِ عَلَى مَنِ ادَّعَى النُّبُوَّةَ.

1. ஒருவகை, மனிதர்கள் **“நுபுவ்வத்தை”** வாதிடக்கூடியவர்களிடமிருந்து வேணடியதன் பின்னர் நிகழும்.

**وَقِسْمٌ** يَقَعُ مِنْ غَيْرِ اقْتِرَاحٍ.

2. மற்றவகை, எவ்வித வேண்டுதலும் இல்லாமல் நிகழும்.

**فَالْأَوّلُ** نَحْوُ نَاقَةِ صَالِحٍ الّتِي خَرَجَتْ مِنَ الصّخْرَةِ إِذَ اقْتَرَحَ قَوْمُهُ عَلَيْهِ ذَلِكَ فَأَخْرَجَ لَهُمْ نَاقَةً وَفَصِيْلَهَا ( أي ابْنَهَا ).

முதலாவது வகைக்கு உதாரணம் ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது சமூகத்தின் வேண்டுதலுக்கு இணங்க பெரிய மலைப்பாறையிலிருந்து ஒரு ஒட்டகத்தையும் அதன் குட்டியையும் வெளிப்படுத்திக் காட்டியதாகும்.

**وَالثّانِي** نَحْوُ مَا حَصَلَ لِنَبِيِّنَا مُحَمّدٍ صلى الله عليه وَسلّمَ مِنْ حَنِيْنِ الْجِذْعِ فَقَدْ رَوَى الْبُخارِيُّ أَنّ النّبِيّ صلى اللهُ عليهِ وَسَلّمَ كَانَ يَقُوْمُ يومَ الْجُمُعَةِ إِلَى شَجَرَةٍ أَوْ نَخلَةٍ فَقَالَتِ امْرَأَةٌ مِنَ الْأَنْصَارِ أَوْ رَجُلٌ: يا رَسُوْلَ اللهِ أَلَا نَجْعَلُ لَكَ مِنْبَرًا؟ قَالَ: **( إِنْ شِئْتُمْ )** فَجَعَلُوْا لَهُ مِنْبَرًا فَلَمّا كَانَ يَوْمُ الْجُمُعَةِ صَعِدَ إِلَى الْمِنْبَرِ فَأَنّتِ النّخْلَةُ أَنِينَ الصّبِيِّ ثُمّ نَزَلَ النّبِيُّ عَلَيْهِ السّلَامُ فَضَمّهَا إِلَيْهِ.

**இரண்டாவது வகை:** பெருமானார் முஹம்மத் ﷺ அவர்களுக்கு நிகழ்ந்த ஈத்தம் குற்றியின் முனங்கள் சத்தத்தை போல.

**இமாம் புஹாரி றஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்:**

**முஹம்மத் ﷺ அவர்கள் ஈச்சம் குற்றியின் மீது சாய்ந்தவர்களாக குத்பா பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்கள். அன்ஸாரித் தோழர்களில் ஒரு பெண்மணி அல்லது ஒரு மனிதர் கேட்டார்.**

**“அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்கு நாங்கள் ஒரு மிம்பரை செய்து தரட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு நீங்கள் விரும்பினால் செய்து தாருங்கள்” என கூறினார்கள். அவர்கள் ஒரு மிம்பரை செய்து கொடுத்தார்கள். ஜும்அஹ் நாளன்று புதிதாக செய்து கொடுக்கப்பட்ட மிம்பரின் மீது பெருமானார் முஹம்மத் ﷺ அவர்கள் ஏறினார்கள். அந்த ஈத்தம் குற்றி சிறு பிள்ளை அணுங்குவது போன்று அணுங்கியது.**

**பின்னர் முஹம்மத் ﷺ அவர்கள் இறங்கி அதனை தன்னோடு அணைத்துக் கொண்டார்கள்.**

وَقَدْكَانَ الْحَسَنُ بْنُ عَلِيّ إِذَا ذَكَرَ هَذِهِ الْمُعْجِزَةَ يَقُوْلُ: **يَا مَعْشَرَ الْمُسْلِمِيْنَ الْخَشَبَةُ تَحِنُّ إِلَى رَسُوْلِ اللهِ صلى الله عليه وسلّمَ شَوْقًا إِلَى لِقَائِهِ فَأَنْتُمْ أَحَقُّ أَنْ تَشْتَاقُوْا إِلَيْهِ.**

மேற்கூறப்பட்ட **"மு.ஃ.ஜிஸஹ்வை"** ஹஸன் இப்னு அலீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் நினைவு கூர்ந்தால் பின்வருமாறு சொல்லக்கூடியவர்களாக இருந்தார்கள். **"முஸ்லிம் வாலிபர்களே! மரக்கட்டை அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களை சந்திக்க ஆசைப்பட்டு முனங்கியது. நீங்கள் அவர்களை நேசம் கொள்வதற்கு மிக தகுதியானவர்கள்."**

**الْكَرَامَةُ:** أَمَّا الْكَرَامَةُ فَهِيَ أَمْرٌ خَارِقٌ لِلْعَادَةِ تَظْهَرُ عَلَى يَدِ الْمُؤْمِنِ الْمُسْتَقِيْمِ بِطَاعَةِ اللهِ (أي الولي) وَبِذَلِكَ تَفْتَرِقُ الْكَرَامَاتُ عَنِ السِّحْرِ وَالشَّعْوَذَةِ كَمَا حَصَلَ لِسَيِّدَتِنَا مَرْيَمَ وَالِدَةِ سَيِّدِنَا عِيْسَى عَلَيْهِمَا السَّلَامُ كَانَتْ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا نَبِيُّ اللهِ زَكَرِيَّا (وَكَانَ زَوْجَ أُخْتِهَا) وَجَدَ عِنْدَهَا فَاكِهَةَ الصَّيْفِ فِي الشِّتَاءِ وَفَاكِهَةَ الشِّتَاءِ فِي الصَّيْفِ،

கராமத் என்பது அழ்ழாஹ்வை வழிப்பட்டு உறுதியான ஈமானையுடைய ஒருவரின் புறத்திலிருந்து வெளியாகும். அது வழமைக்கு மாற்றமான ஒரு விடயமாகும். இதனால் கராமத், சூனியம் மற்றும் கண்கட்டு வித்தை ஆகியவற்றுக்கு முற்றிலும் மாற்றமானது. உதாரணமாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாய் மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்களுக்கு நிகழ்ந்ததைப் போல. மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்களின் சகோதரியின் கணவன் ஸகரிய்யாஅலைஹிஸ்ஸாம் அவர்கள், மர்யம் அலைஹஸ்ஸலாம் வணக்க வழிபாடுகள் மேற்கொள்ளும் இடத்திற்கு செல்லும் போதெல்லாம் அவர்களிடத்தில் மழைகால கனிகளை கோடையிலும், கோடை கால கனிகளை மாரியிலும் காண்பார்கள்.

قَالَ تَعَالَىٰ: ﴿ كُلَّمَا دَخَلَ عَلَيْهَا زَكَرِيَّا ٱلْمِحْرَابَ وَجَدَ عِندَهَا رِزْقًا ۖ قَالَ يَٰمَرْيَمُ أَنَّىٰ لَكِ هَٰذَا ۖ قَالَتْ هُوَ مِنْ عِندِ ٱللَّهِ ﴿٣٧﴾ ﴾

( سورة ءال عمران )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம்: அழ்ழாஹ்வின் தூதர் ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், மர்யம் அலைஹஸ்ஸலாம் வணக்க வழிபாடுகள் மேற்கொள்ளும் இடத்திற்கு செல்லும் போதெல்லாம் மனிதர்கள் கொண்டு வந்து கொடுக்க முடியாத உணவுகள் இருப்பதை காணுவார்கள். மழைகால கனிகள் கோடையிலும், கோடை கால கனிகள் மாரியிலும் அங்கு இருப்பதை அவதானித்த அவர்கள் இந்த உணவுகள் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? என்று கேட்ட போது "இது அழ்ழாஹ் எனக்கு அளித்தது" என மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் பதில் கூறினார்கள்.**

**(அத்தியாயம் : அலு இம்ரான்)**

أسئلة

**1**- ما هو تعريف المعجزة؟

**2**- ماذا تسمى الخوارق التي تحصل على أيدي الأولياء؟

**3**- إلى كم قسم تقسم المعجزة؟ أعط مثالا.

**4**- اذكر ما رواه البخاري في معجزة حنين الجذع؟

**5**- ماذا كان يقول الحسن بن علي عند ذكر هذه المعجزة؟

**6**- ما هي الكرامة؟ وما الدليل على وجودها من القرءان ؟

7- اذكر إحدى كرامات السيدة مريم عليها السلام

الْإِيْمَانُ بِمَا جَاءَ عَنِ النَّبِيِّ صلى الله عَليهِ وَسَلَّمَ ( 1 )

( عَذَابُ الْقَبْرِ وَنَعِيْمُهُ، وَسُؤَالُ الْمَلَكَيْنِ مُنْكَرٍ وَنَكِيْرٍ)

## அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 1 )

## கப்ரின் வேதனை, கப்ரின் இன்பம், இரு மலக்குமார்களின் கேள்வி கணக்கு

قَالَ تَعَالَى: ﴿وَمَا يَنطِقُ عَنِ ٱلْهَوَىٰٓ ۝٣ إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَىٰ ۝٤﴾

( سورة النجم )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**
**விளக்கம் :**

**“நிச்சயமாக முஹம்மத் ﷺ அவர்கள் அல் குர்ஆன் என்பதாக எவைகளை எல்லாம் உங்களுக்கு போதித்தார்களோ அது எதுவும் அவரது சுய கருத்துகளோ அல்லது அவரது மனோ இச்சை கூறிய விடயங்களோ அல்ல. நிச்சயமாக அல் குர்ஆன் என்பதாக போதித்த அனைத்தும் அழ்ழாஹ்வினால் அவருக்கு வஹி மூலம் அருளப்பட்டவைகளே.”**
**(அத்தியாயம் : அந்-நஜ்ம்)**

أَرْسَلَ اللهُ تَعَالَى سَيِّدَنَا مُحَمَّدَ بنَ عَبْدِ اللهِ بنِ عَبْدِ الْمُطَّلِبِ بِدِيْنِ الْحَقِّ، وَأَمَرَهُ بِتَبْلِيْغِهِ إِلَى النَّاسِ فَأَدَّى الْأَمَانَةَ وَبَلَّغَ الرِّسَالَةَ بِكُلِّ صِدْقٍ وَشَجَاعَةٍ.

அப்துல் முத்தலிப் மகன் அப்துழ்ழாஹ்வின் மகன் முஹம்மத் ﷺ அவர்களை அழ்ழாஹ் உண்மையான மார்க்கத்தை கொண்டு அனுப்பியுள்ளான். மேலும் அதனை மக்களுக்கு எத்தி வைக்குமாறும் ஏவியுள்ளான். அதன் அடிப்படையில் உண்மையாகவும், தைரியத்துடனும் தனது ரிஸாலத்தை எத்திவைத்து நம்பிக்கையை நிறைவேற்றி விட்டார்கள்.

وَكُلُّ شَيءٍ أَخْبَرَ بِهِ النَّبِيُّ صلى الله عليه وَسَلَّمَ هُوَ حَقٌّ وَصِدْقٌ سَوَاءٌ كَانَ مِنْ أُمُوْرِ الْحَلَالِ وَالْحَرَامِ أَوْ قَصَصِ الْأَنْبِيَاءِ أَوِ الْأُمُوْرِ الَّتِي تَحْدُثُ فِي الْمُسْتَقْبَلِ فِي الدُّنْيَا وَالآخِرَةِ.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அறிவித்த அனைத்து செய்திகளும் அது ஹலால், ஹறாம் போன்ற விடயங்களாக இருப்பினும் அல்லது நபிமார்களின் வாழ்க்கை வரலாறு சார்ந்த விடயங்களாக இருப்பினும் அல்லது இவ்வுலகில், மறுஉலகில் நிகழவிருக்கும் விடயங்களாக இருப்பினும் அது மறுக்கமுடியாத உண்மையாகும்.

فَمِنَ الْأُمُوْرِ الَّتِي أَخْبَرَنَا عَنْهَا سَيِّدُنَا مُحَمَّدٌ صلى الله عليه وسلّم: عَذَابُ الْقَبْرِ وَنَعِيمُهُ وَسُؤَالُ الْمَلَكَيْنِ مُنْكَرٍ وَنَكِيْرٍ.

கப்ரின் வேதனை, அதன் இன்பம், முன்கர், நகீர் இரு மலக்குமார்களின் கேள்வி கணக்கு. ஆகியவைகள் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அறிவித்துத் தந்த விடயங்களில் உள்ளதாகும்.

**عَذَابُ الْقَبْرِ:** يَجِبُ الْإِيْمَانُ بِأَنَّ اللهَ يُعَذِّبُ الْكُفَّارَ جَمِيْعَهُمْ فِي قُبُوْرِهِمْ فَيَأْمُرُ حَشَرَاتٍ فِي الْأَرْضِ مُؤْذِيَةً أَنْ تَأْكُلَ أَجْسَادَهُمْ وَيَأْمُرُ الْأَرْضَ فَتَنْطَبِقُ عَلَيْهِمْ فَتَكُوْنُ قُبُوْرُهُمْ حُفْرَةً مِنْ حُفَرِ النَّارِ إِلَى غَيْرِ ذَلِكَ مِنْ أَنْوَاعِ النَّكَدِ وَالْعَذَابِ أَمَّا الْمُسْلِمُوْنَ الْعُصَاةُ مِنْ أَهْلِ الْكَبَائِرِ الَّذِيْنَ مَاتُوْا مِنْ غَيْرِ تَوْبَةٍ فَهُمْ قِسْمَانِ :

**கப்ரின் வேதனை:-** இதனை நம்பிக்கை கொள்வது கட்டாயமாகும். நிச்சயமாக அழ்ழாஹ் அனைத்து காபிர்களையும் கப்ரில் வைத்து வேதனை செய்வான். மேலும் வேதனைக்காக வேண்டி பூமியில் உள்ள விஷப் பூச்சிகளுக்கு அவர்களின் உடலை சாப்பிடுவதற்கு ஏவுவான். மேலும் அழ்ழாஹ் அவர்களை நெருக்குமாறு பூமிக்கு ஏவுவான். அப்போது அவர்களின் கப்று நரக படுகுழியில் ஒன்றாக ஆகிவிடும். மேலும் இது அல்லாத ஏனைய கஷ்டங்களும், வேதனைகளும் உண்டு. ஆனால் பெரும் பாவம் செய்து தௌபஹ் இன்றி மரணித்த முஸ்லிம்கள் இரு வகையினர்.

1. قِسْمٌ يُعَذِّبُهُمُ اللهُ فِي قُبُوْرِهِمْ.

1. அழ்ழாஹ், அவர்களில் ஒரு பிரிவினரை கப்ரில் வேதனை செய்வான்.

2. وَقِسْمٌ يُعْفِيْهِمُ اللهُ مِنْ عَذَابِ الْقَبْرِ وَقَدْ يَكُوْنُ هَذَا الْعَفْوُ بِسَبَبِ اسْتِغْفَارِ مُسْلِمٍ حَيٍّ لَهُ أَوْ قِرَاءَةِ الْقُرْءَانِ لَهُ.

3. அழ்ழாஹ் மற்ற பிரிவினரை கப்ரின் வேதனையை விட்டும் பாதுகாப்பான். இவ்வாறு அழ்ழாஹ் மன்னிப்பது, உயிரோடு உள்ள ஒரு முஸ்லிம் அவருக்காக அழ்ழாஹ்விடத்தில் பாவமன்னிப்பு தேடுவதன் காரணமாகவும் அல்லது அவருக்காக அல்-குர்ஆன் ஓதுதல் காரணமாகவும் இருக்கலாம்.

**وَنَعِيْمُ الْقَبْرِ:** يَجِبُ الْإِيْمَانُ بِأَنَّ اللهَ يُنْعِمُ عَلَى عِبَادِهِ الْمُؤْمِنِيْنَ الْمُتَّقِيْنَ فِي قُبُوْرِهِمْ، وَمِنْ هَذَا النَّعِيْمِ أَنْ تُنَوَّرَ قُبُوْرُهُمْ بِنُوْرٍ كَنُوْرِ الْقَمَرِ لَيْلَةَ الْبَدْرِ وَأَنْ تُوَسَّعَ سَبْعِيْنَ ذِرَاعًا فِي سَبْعِيْنَ ذِرَاعًا وَيُمْلَأَ نُوْرًا إِلَى غَيْرِ ذَلِكَ مِنْ أَنْوَاعِ النَّعِيْمِ.

**கப்ரின் இன்பங்கள்:-** “அழ்ழாஹ்வை அஞ்சிய உண்மையான மு.ஃ.மின்களான அவனது அடியார்களுக்கு அவன் அவர்களது கப்ரில் இன்பங்களை வழங்குகிறான்.” என்பதாக ஈமான் கொள்வது அவசியமாகும்.

**கப்ரின் சில இன்பங்கள்:-**

அழ்ழாஹ் அந்த கப்ரினை பௌர்ணமி இரவின் பரிபூரண சந்திரனின் வெளிச்சத்தைப் போன்று ஒளிமயமானதாக மாற்றுதல்.

கப்ரின் நீளத்தையும், அகலத்தையும் எழுபது முழத்திற்கு விசாலமாக்கிக் கொடுத்தல்.

ஒளியினால் கப்ரினை நிரம்பவைத்தல். மற்றும் இது அல்லாத இன்னும் பல இன்பங்களை அழ்ழாஹ் அவர்களுக்கு வைத்துள்ளான்.

**وَسُؤَالُ الْمَلَكَيْنِ مُنْكَرٍ وَنَكِيْرٍ:** وَيَجِبُ الْإِيْمَانُ بِمُنْكَرٍ وَنَكِيْرٍ وَهُمَا مَلَكَانِ أَسْوَدَانِ أَزْرَقَانِ، يَسْأَلَانِ الْمَيِّتَ فِي قَبْرِهِ مَا كُنْتَ تَقُوْلُ فِي هَذَا الرَّجُلِ مُحَمَّدٍ فَإِنْ كَانَ مُؤْمِنًا يَقُوْلُ: أَشْهَدُ أَنَّهُ عَبْدُ اللهِ وَرَسُوْلُهُ، وَإِنْ كَانَ مِنْ أَهْلِ الْكُفْرِ لَا يَنْطِقُ بِهَا فَيَضْرِبَانِهِ بِمِطْرَقَةٍ بَيْنَ أُذُنَيْهِ لَوْ طُرِقَتْ بِهَا الْجِبَالُ لَذَابَتْ.

**முன்கர், நகீர் ஆகிய இரண்டு மலக்குமார்களின் கேள்வி கணக்கு:**

“முன்கர், நகீர் ஆகிய இரு மலக்குகளை ஈமான் கொள்வது கடமையாகும். அவர்கள் நீலம், கறுப்பு நிறத்தையுடைய மலக்குகளாவார்கள்.” கப்ரில் இருக்கும் மரணித்தவரிடம் அவ்விருவரும் “இந்த மனிதராகிய முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றி என்ன கூறிக்கொண்டிருந்தாய்?” எனக் கேட்பார்கள். அப்போது அந்த மனிதன் ஈமான் கொண்டவனாக இருந்தால் “அவர்கள், அழ்ழாஹ்வின் தூதரும், அடியாரும்” என்று நான் சாட்சி கூறுகின்றேன் என்று கூறுவான்.

அவன் காபிர்களின் கூட்டத்தினரை சேர்ந்தவராக இருந்தால் அதைப் பற்றி எதுவும் பேசமாட்டான். அப்போது இந்த இரண்டு மலக்குகளும் சுத்தியலால் அவனின் இரு காதுகளுக்குமிடையில் அடிப்பார்கள். அந்த சுத்தியலால் ஒரு மலைக்கு அடித்தால் அது சுக்குநூறாகிவிடும். (தவிடு பொடியாகிவிடும்)

وَسُؤَالُ الْمَلَكَيْنِ يَحْصُلُ لِلْمُؤْمِنِ وِالْكَافِرِ وَلَكِنّ الْمُؤْمِنَ الْكَامِلَ لَا يَلْحَقُهُ فَزَعٌ وَلَا انْزِعَاجٌ مِنْ سُؤَالِهِمَا لِأَنّ اللهَ يُثَبِّتُ قَلْبَهُ فَلَا يَرْتَاعُ مِنْ مَنْظَرِهِمَا الْمُخِيْفِ، وَيُسْتَثْنَى مِنْ هَذَا السُّؤَالِ الْأَنْبِيَاءُ وَالشُّهَدَاءُ وَالْأَطْفَالُ ( وَهُمُ الّذِيْنَ مَاتُوْا دَوْنَ الْبُلُوْغِ ).

இரு மலக்குகளின் கேள்வி கணக்கு முஸ்லிம்களுக்கும், காபிர்களுக்கும் நடைபெறும். ஆனால் பரிபூரணமான ஒரு மு.ஃ.மின் அவர்களின் கேள்வியின் காரணமாக எவ்வித நடுக்கமோ, அச்சமோ, திடுக்கமோ அவனுக்கு ஏற்படமாட்டாது. ஏனெனில் அழ்ழாஹ் அவரின் உள்ளத்தை உறுதியானதாக ஆக்கிவிடுவான். அச்சத்தை ஏற்படுத்தும் அவ்விருவரின் தோற்றத்தை பார்ப்பதின் மூலமாக அச்சம் கொள்ளமாட்டான். நபிமார்கள், அழ்ழாஹ்வுக்காக காபிர்களுடன் யுத்தம் செய்து அதில் மரணித்த ஷஹீத்கள், சிறுவர்கள் (பருவத்தை அடைய முன் மரணித்தவர்கள்) ஆகியோர்களுக்கு கப்ரில் கேள்வி கணக்கு கிடையாது.

أسئلة

1- اذكر دليلا من القرءان على صدق النبي فيما بلغه عن الله.

2-عدد بعض ما أخبر عنه النبي.

3-لمن يحصل عذاب القبر؟

4-ما هو حال المسلمين العصاة من أهل الكبائر في قبورهم؟

5-لمن يحصل نعيم القبر؟

6-عمن يسأل العبد في القبر؟ ومن هما ملكا السؤال؟

7-لمن يحصل سؤال الملكين في القبر ومن يستثنى من السؤال في القبر؟

الْإِيْمَانُ بِمَا جَاءَ عَنِ النَّبِيِّ صلّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ (2 )

( الْيَوْمُ الْآخِرُ، الْبَعْثُ، الْحَشْرُ )

## அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 2 )

## இறுதி நாள், எழுப்பப்படுதல், ஒன்று சேர்க்கப்படுதல்

مِمَّا أَخْبَرَنَا بِهِ النَّبِيُّ صلى الله عليه وسلّم وَيَجِبُ الْإِيْمَانُ بِهِ: الْيَوْمُ الْآخِرُ وَالْبَعْثُ وَالْحَشْرُ.

இறுதி நாள், எழுப்பப்படுதல், ஒன்று சேர்க்கப்படுதல் ஆகியன அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அறிவித்த மேலும் ஈமானும் கொள்ள வேண்டிய அம்சங்களில் உள்ளதாகும்.

**الْيَوْمُ الْآخِرُ:** هُوَ يَوْمُ الْقِيَامَةِ وَأَوَّلُه مِنْ خُرُوْجِ النَّاسِ مِنْ قُبُوْرِهِمْ إِلَى اسْتِقْرَارِ أَهْلِ الْجَنَّةِ فِي الْجَنَّةِ وَأَهْلِ النَّارِ فِي النَّارِ، وَفِي ذَلِكَ الْيَوْمِ تَدْنُو الشَّمْسُ مِنْ رُؤُوْسِ الْعِبَادِ وَتَحْصُلُ فِيْهِ أَحْوَالٌ صَعْبَةٌ يَنْجُوْ مِنْهَا الْمُؤْمِنُوْنَ الْأَتْقِيَاءُ وَيُجْمَعُ النَّاسُ لِلْحِسَابِ فَتُعْرَضُ عَلَيْهِمْ أَعْمَالُهُمْ سَوَاءٌ كَانَتْ خَيْرًا أَمْ شَرًّا وَتُوْزَنُ أَعْمَالُهُمْ بِمِيْزَانٍ فَتُوْضَعُ الْحَسَنَاتُ فِي كَفَّةٍ وَالسَّيِّئَاتُ فِي الْكَفَّةِ الْأُخْرَى.

**இறுதி நாள்:-** அது கியாமத் நாளாகும். அதன் ஆரம்பம் மனிதர்கள் அவர்களின் கப்றுகளில் இருந்து வெளியேறி சுவனவாசிகள் சுவனத்திலும் நரகவாசிகள் நரகத்திலும் தரிபடும் வரையிலாகும்.

அந்த நாளில் சூரியன் அடியார்களின் தலைகளுக்கருகில் காணப்படும். அத்தினத்தில் பல கஷ்ட நிலைகள் ஏற்படும். அழ்ழாஹ்வை அஞ்சி வாழ்ந்த மு.ஃ.மின்கள் அக்கஷ்டங்களிலிருந்து பாதுகாப்படுவார்கள். மேலும் மனிதர்களெல்லாம் கேள்விக்காக வேண்டி ஒன்று சேர்க்கப்பட்டு அவர்களின் தீய செயலாக இருந்தாலும் சரி நல்ல செயலாக இருந்தாலும் சரி அவைகள் அனைத்தும் அவர்களுக்கு எடுத்துக் காட்டப்படும். மேலும் அவர்கள் செய்த அமல்களை (மீஸான்) எனும் தராஸில் நன்மைகள் ஒரு தட்டிலும் தீமைகள் மறு தட்டிலும் வைத்து நிறுக்கப்படும்

**الْبَعْثُ:** وَهُوَ انْشِقَاقُ الْقُبُوْرِ وَخُرُوْجُ النَّاسِ مِنْهَا لِلْحِسَابِ بَعْدَ إِعَادَةِ الْأَجْسَادِ الَّتِي أَكَلَهَا التُّرَابُ، وَهِيَ أَجْسَادُ غَيْرِ الْأَنْبِيَاءِ وَالشُّهَدَاءِ، فَهَؤُلَاءِ لَا يَأْكُلُ التُّرَابُ أَجْسَادَهُمْ وَكَذَلِكَ بَعْضُ الْأَوْلِيَاءِ لَا يَأْكُلُ التُّرَابُ أَجْسَادَهُمْ.

**எழுப்பப்படுதல்:** எழுப்பப்படுதல் என்பது கப்றுகள் பிளக்கப்பட்டு எந்த உடல்களை மண் சாப்பிட்டதோ அவைகளை மீட்டிக்கொடுத்ததன் பின்னர் கேள்வி கணக்கிற்காக கப்றுகளிலிருந்து மனிதர்கள் வெளியேறுவதாகும். இது நபிமார்கள், அழ்ழாஹ்வுக்காக காபிர்களுடன் யுத்தம் செய்து அதில் மரணித்த ஷஹீத்கள் அல்லாதவர்களுடைய உடல்களாகும். இவர்களின் உடல்களை மண் சாப்பிடமாட்டாது. அதே போன்று ஒரு சில வலிமார்களின் உடல்களையும் மண் சாப்பிடமாட்டாது.

**الْحَشْرُ:** وَيَكُوْنُ بَعْدَ الْبَعْثِ حَيْثُ يُجْمَعُ النَّاسُ إِلَى مَكَانٍ لِيُسْأَلُوْا عَنْ أَعْمَالِهِمْ الَّتِي عَمِلُوْهَا وَهَذَا الْمَكَانُ هُوَ الْأَرْضُ الْمُبَدَّلَةُ فَهَذِهِ الْأَرْضُ الَّتِي نَعِيْشُ عَلَيْهَا تُدَكُّ يَوْمَ الْقِيَامَةِ وَيَخْلُقُ اللهُ أَرْضًا أُخْرَى لَا جِبَالَ فِيْهَا وَلَا وِدْيَانَ.

**“மஹ்ஷர்”** எனும் மைதானத்தில் ஒன்று சேர்க்கப்படுதல்: கப்றுகளிலிருந்து எழுப்பாட்டபட்டதன் பின் அவர்கள் செய்த செயல்களைப் பற்றி கேட்கப்படுதவற்காக ஒரு இடத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள். அதுவே இந்த பூமிக்கு பதிலாக மாற்றப்பட்ட பூமியாகும். நாம் வாழும் இந்த பூமி கியாமத்துடைய நாளில் சுக்குநூறாக்கப்படும் (தவிடு பொடியாக்கப்படும்). மேலும் அழ்ழாஹ் பள்ளத்தாக்குகள், மலைகள் இல்லாத வேறு ஒரு பூமியைப் படைப்பான்.

وَالنّاسُ فِي الْحَشْرِ يَكُوْنُوْنَ عَلَى ثَلَاثَةِ أَقْسَامٍ:

மனிதர்களை ஒன்று சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்கள் மூன்று பிரிவினர்களாக காணப்படுவார்கள்.

1. **قِسْمٌ** يُحْشَرُوْنَ طَاعِمِيْنَ رَاكِبِيْنَ كَاسِيْنَ وَهُمُ الْأَتْقِيَاءُ أي الّذِيْنَ كَانُوْا فِي الدُّنْيَا يُؤَدُّوْنَ الْوَاجِبَاتِ وَيَجْتَنِبُوْنَ الْمَحَرّمَاتِ.

1. ஒரு கூட்டம் வயிரு நிரம்ப சாப்பிட்டோராகவும் வாகனங்களில் ஏறியவர்களாகவும், ஆடை அணிந்தவர்களாகவும் வருவார்கள். இவர்கள் தான் தக்வாவுடையவர்கள். அதாவது இவ்வுலகில் அவர்கள் மீது கடமையான விடயங்களை நிறைவேற்றி, தடுக்கப்பட்டவைகளை தவிர்ந்து நடந்தவர்கள்.

2. **وَقِسْمٌ** يُحْشَرُوْنَ حُفَاةً عُرَاةً وَهُمُ الْمُسْلِمُوْنَ مِنْ أَهْلِ الْكَبَائِرِ.

2. மற்றுமொரு கூட்டம் எவ்வித ஆடையுமின்றி, பாதணியற்றோராக காணப்படுவார்கள். அவர்கள் தான் பெரும் பாவம் செய்த முஸ்லிம்கள்.

3. وَقِسْمٌ يُحْشَرُوْنَ وَهُمْ يُجَرُّوْنَ عَلَى وُجُوْهِهِمْ وَهَؤُلَاءِ هُمُ الْكُفَّارُ وَقَدْ وَرَدَ فِي عَذَابِ الْمُتَكَبِّرِيْنَ الَّذِيْنَ يَتَكَبَّرُوْنَ عَلَى عِبَادِ اللهِ أَنَّهُمْ يُحْشَرُوْنَ بِحَجْمِ النَّمْلِ الصَّغِيْرِ بِصُوْرَةِ بَنِي ءادَمَ فَيَدُوْسُهُمُ النَّاسُ بِأَقْدَامِهِمْ إِهَانَةً لَهُمْ وَلَا يَمُوْتُوْنَ.

3. மற்றுமொரு கூட்டம் அவர்கள் தங்களது முகங்களின் மீது இழுத்துக் கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் தான் காபிர்கள். அழ்ழாஹ்வுடைய அடியார்களிடம் பெருமையடித்த பெருமைகாரர்களின் தண்டனை பற்றி ஹதீஸில் பின்வருமாறு வந்துள்ளன.

“நிச்சயமாக அவர்கள் மனிதர்களின் தோற்றத்தைக் கொண்ட சிறு எறும்புகளின் அளவினில் மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று சேர்க்கப்படுவார்கள். மனிதர்கள் அவர்களின் கால்களினால் அவர்களை இழிவுபடுத்தும் நோக்கில் மிதிப்பார்கள். ஆனால் அவர்கள் மரணிக்க மாட்டார்கள்.”

أسئلة

1- ما هو اليوم الآخر؟

2- بم توزن أعمال العباد يوم القيامة؟

3- ما هو البعث؟

4- أجساد من لا يأكلها التراب؟

5- ما هو الحشر؟ وأين يحشر الناس؟

6- ما هي صفة أرض الحشر؟ وعلى كم قسم يكون الحشر؟

7- كيف يحشر الأتقياء؟ والعصاة؟

8- كيف يحشر الكفار وماذا ورد في عذاب المتكبرين على عباد الله؟

## الْإِيْمَانُ بِمَا جَاءَ عَنِ النَّبِيِّ صَلى اللهُ عليهِ وَسلّم ( 3 )

## ( الصِّرَاطُ وَالْحَوْضُ وَالشَّفَاعَةُ )

## அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 3 )

## (ஸிறாத், நீர்த் தடாகம், ஷஃபாஅத்)

مِنَ الْأُمُوْرِ الَّتِي أَخْبَرَ عَنْهَا النَّبِيُّ صلّى اللهُ عليهِ وَسلّم وَيَجِبُ الْإِيْمَانُ بِهَا: الصِّرَاطُ وَالْحَوْضُ وَالشَّفَاعَةُ.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் எதைப் பற்றி அறிவித்தார்களோ அத்தகைய விடயங்களை நம்பிக்கை கொள்வது கடமையாகும்.

**அவைகளில் சில:** ஸிறாத், நீர்த் தடாகம், ஷஃபாஅத்

**الصِّرَاطُ:** هُوَ جِسرٌ يُمَدُّ فَوْقَ جَهَنَّمَ يَرِدُهُ النَّاس، أَحَدُ طَرَفَيْهِ فِي الْأَرْضِ الْمُبَدَّلَة وَالطَّرَفُ الآخَرُ فِيْمَا يَلِي الْجَنَّةَ بَعْدَ النَّارِ، فَيَأْتِي النَّاسُ لِلْمُرُوْرِ عَلَيْهِ فَالْكُفَّارُ لَا يَجْتَازُوْنَهُ أَمَّا الْمُؤْمِنُوْنَ فَهُمْ عَلَى قِسْمَيْنِ:

**ஸிறாத்:** நரகத்தின் மேல் போடப்பட்ட (நீட்டப்பட்ட) ஒரு பாலமாகும். அதனை மனிதர்கள் கடந்து செல்வதற்காக வருவார்கள்.

அதன் இரண்டு ஓரப் பகுதிகளில் ஒன்று, இந்த பூமிக்கு பதிலாக மாற்றப்பட்ட பூமியின் மீதும் மற்றையது நரகத்தை கடந்து சுவனத்தை அண்மித்திருக்கும் பூமியை வந்தடையும். அதன் மீது நடந்து செல்வதற்காக மனிதர்கள் வருவார்கள்.

காபிர்கள் அதனை கடக்கவேமாட்டார்கள். ஆனால் மு.்.மின்கள் அதில் இரண்டு வகையினர்களாக இருப்பார்கள்.

**قِسْمٌ** لَا يَدُوْسُوْنَهُ بِالْمَرَّةِ إِنَّمَا يَمُرُّوْنَ فِي هَوَائِهِ طَائِرِيْنَ.

1. ஒரு வகையினர் அதனை ஒரு விடுத்தம் கூட மிதிக்கமாட்டார்கள். மாறாக அவர்கள் அதன் மேல் பறந்து செல்வார்கள்.

**وَقِسْمٌ** يَدُوْسُوْنَهُ، فَمِنْهُمْ مَنْ يَقَعُ فِي النَّارِ وَمِنْهُمْ مَنْ يُنْجِيْهُمُ اللهُ فَيَخْلُصُوْنَ مِنْهَا.

2. மற்ற வகையினர் அதனை மிதித்து செல்வார்கள். அவர்களில் சிலர் நரகத்தில் விழுந்து விடுவார்கள். இன்னும் சிலர் அழ்ழாஹ் அவர்களை நரகத்தில் விழுவதை விட்டும் காப்பாற்றுவான். அதாவது அவர்கள் அதிலிருந்து ஈடேற்றம் அடைவார்கள்.

**الْحَوْضُ:** وَهُوَ مَكَانٌ أَعَدَّ اللهُ فِيْهِ شَرَابًا لِأَهْلِ الْجَنَّةِ يَشْرَبُوْنَ مِنْهُ قَبْلَ دُخُوْلِهِمِ الْجَنَّةَ وَلِكُلِّ نَبِيٍّ حَوْضٌ يَشْرَبُ مِنْهُ الْمُؤْمِنُوْنَ مِنْ أُمَّتِهِ وَأَكْبَرُ الْأَحْوَاضِ حَوْضُ نَبِيِّنَا مُحَمَّدٍ عَلَيه الصَّلَاةُ وَالسَّلَام يَنْصَبُّ فِيْهِ مِنْ مَاءِ الْجَنَّةِ وَمَنْ شَرِبَ مِنْهُ لَا يَعْطَشُ بَعْدَ ذَلِكَ أَبَدًا وَيَكُوْنُ شَرَابُهُمْ فِي الْجَنَّةِ لِلتَّلَذُّذِ.

**நீர்த் தடாகம்:-** அழ்ழாஹ் சுவனவாசிகள் நீர் அருந்துவதற்காக தயார் செய்துள்ள ஒரு இடமாகும். அவர்கள் சுவனத்தில் நுழையும் முன் அதில் நீர் அருந்துவார்கள். ஒவ்வொரு நபிக்கும் ஒரு நீர் தடாகம் உள்ளன. அவர்களின் சமூகத்தினர்களில் "அழ்ழாஹ்வை நம்பிக்கை கொண்ட மு.்.மின்கள்" அதில் நீர் அருந்துவார்கள்.

நீர் தடாகங்களில் மிகப் பெரியது எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களின் நீர்த் தடாகமாகும். அதில் சுவனத்து நீர் கொட்டிக்கொண்டிருக்கும். யாரெல்லாம் அதில் இருந்து நீர் அருந்துவார்களோ அவர்கள் அதன் பின் ஒரு காலமும் தாகிக்க

மாட்டார்கள். அவர்கள் சுவனத்தில் அருந்துவது இன்பத்தை பெறுவதற்காக வேண்டியாகும்.

**الشّفَاعَةُ:** الشّفَاعَةُ هِيَ طَلَبُ الْخَيْرِ مِنَ الْغَيْرِ لِلْغَيْرِ وَمِمّنْ يَشْفَعُ يَوْمَ الْقِيَامَةِ: الْأَنْبِيَاءُ وَالْعُلَمَاءُ الْعَامِلُوْنَ وَالْمَلَائِكَةُ.

**ஷஃபாஅத்:** ஷஃபாஅத் (பரிந்துரை) என்பது ஒருவரிடத்தில் பிறருக்காக நலவை வேண்டுதல். நாளை மறுமையில் நபிமார்கள், மார்க்கக் கல்வியை கற்று அதன் படி அமல் செய்த அறிஞர்கள், மலக்குகள் அல்லாஹ்வின் பொருத்தைப் பெற்ற மனிதர்களுக்காக பரிந்துரை செய்வார்கள்.

وَكَذَلِكَ الطِّفْلُ يَشْفَعُ لِأَبَوَيْهِ الْمُسْلِمَيْنِ وَالشّهِيْدُ يَشْفَعُ لِسَبْعِيْنَ مِنْ أَهْلِ بَيْتِهِ،

அதே போன்று சிறு பிள்ளை தனது முஸ்லிமான பெற்றோர்களுக்கும், அல்லாஹ்வுக்காக காபிர்களுடன் யுத்தம் செய்து அதில் மரணித்த ஷஹீத்கள் அவர்களின் குடும்பத்திலிருந்து **“எழுபது பேருக்கும்”** பரிந்துரை செய்வார்கள்.

وَالشّفَاعَةُ تَكُوْنُ لِلْمُؤْمِنِيْنَ الْعُصَاةِ مِنْ أَهْلِ الْكَبَائِرِ الّذِيْنَ مَاتُوْا مِنْ غَيْرِ أَنْ يَتُوبُوْا.

பரிந்துரை என்பது முஸ்லிம்களில் பெரும் பாவம் செய்து தௌபஹ் இன்றி மரணித்த பாவிகளுக்காகவே செய்யப்படும்.

قَالَ عَلَيْهِ الصّلَاةُ وَالسّلَامُ: **شَفَاعَتِي لِأَهْلِ الْكَبَائِرِ مِنْ أُمّتِي**

– رواه أبو داود –

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : “எனது ஷஃபாஅத் எனது உம்மத்தில் பெரும் பாவம் செய்தவர்களுக்காகும்.”**

**(அறிவித்தவர் : இமாம் அபூ தாவூத் றஹிமஹுல்லாஹ்)**

وَلَا شَفَاعَةَ يَوْمَ الْقِيَامَةِ لِأَيِّ كَافِرٍ لِأَنَّ اللهَ تعالى قَالَ: ﴿وَلَا يَشْفَعُونَ إِلَّا لِمَنِ ٱرْتَضَىٰ ﴿٢٨﴾﴾ ( **سورة الأنبياء** ) أي إِلَّا لِمَنْ مَاتَ عَلَى الْإِيْمَانِ.

**ஆனால் நாளை மறுமையில் காபிர்களுக்கு எவ்வித ஷிபாஅத்தும் கிடையாது.**

**ஏனெனில் அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்**

**விளக்கம் :**

**"யார் ஈமானுடன் மரணிக்கின்றாரோ அவர்களுக்கு மாத்திரமே அவர்கள் ஷிபாஅத் செய்வார்கள்."**

**(அத்தியாயம் : அல்-அன்பியா)**

أسئلة

**1**-ما هو الصراط؟ وهل يجتازه الكفار؟

**2**-المؤمنون عند عبور الصراط على كم قسم يكونون؟

**3**-ما هو الحوض؟ ومن يشرب منه؟

**4**-أي الأحواض أكبر؟ ومن أين ينصبّ الماء فيه؟

**5**-ما هي الشفاعة؟ ومن يشفع يوم القيامة؟

**6**-لمن تكون الشفاعة يوم القيامة؟ اذكر حديثا يدلّ على ذلك.

**7**-ما الدليل من القرءان على أنه لا شفاعة يوم القيامة لأيّ كافر؟

## الْإِيْمَانُ بِمَا جَاءَ عَنِ النَبِيِّ صلّى اللهُ عَليه وسلّم ( 4 )

## الْجَنّةُ وَالنّارُ

## அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 4 )

## சுவனம், நரகம்

وَمِنْ الْأُمُوْرِ الّتِي أَخبَرَ عَنْهَا النّبِيُّ صلّى اللهُ عَليهِ وَسَلّمَ وَيَجِبُ الْإِيْمَانُ بِهَا: الْجَنّةُ وَالنّارُ.

சுவனம், நரகம் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அறிவித்த விடயங்களில் உள்ளவைகளாகும். அவைகளை நம்பிக்கை கொள்வது கடமையாகும்.

**الْجَنّةُ:** هِيَ دَارُ السّلَامِ وَالنّعِيْمِ وَالسُّرُوْرِ أَعَدّهَا اللهُ لِلْمُؤْمِنِيْنَ فِيْهَا أَنْهَارٌ مِنْ عَسَلٍ مُصَفّى وَمِنْ لَبَنٍ وَمِنْ خَمْرٍ لَيْسَ كَخَمْرِ الدُّنْيَا الّذِي يُذْهِبُ الْعَقْلَ وَغَيْرُ ذَلِكَ مِنَ النّعِيْمِ الْمُقِيْمِ.

**சுவனம்:-** அது ஈடேற்றம், இன்பம், சந்தோசம் நிறைந்த வீடாகும். அழ்ழாஹ் அதனை நம்பிக்கை கொண்ட மு.்.மின்களுக்காக தயார் செய்துள்ளான். அதிலே தூய்மையான தேனாறுகள், பாலாறுகள், மதுவாறுகள் உள்ளன. (மது பானம் என்றால் இவ்வுலகில் உள்ள புத்தியை போக்கிவிடக்கூடிய மதுபானமல்ல) மேலும் அவை அல்லாத இன்னும் பல நிரந்தரமான இன்பங்களும் உள்ளன.

وَالنَعِيْمُ فِيْهَا حِسِّيٌّ بِالْجَسَدِ وَالرُّوْحِ، وَالْجَنَّةُ دَرَجَاتٌ بَعْضُهَا أَعْلَى مِنْ بَعْضٍ وَأَعْلَى دَرَجَةٍ هِيَ دَرَجَةُ الْأَنْبِيَاءِ. وَأَهْلُ الْجَنَّةِ لَا يَحْزَنُوْنَ وَلَا يَمْرَضُوْنَ وَلَا يَهْرَمُوْنَ وَلَا يَمُوْتُوْنَ خَالِدُوْنَ فِيْهَا وَلَا يَخْرُجُوْنَ مِنْهَا أَبَدًا وَهُمْ فِي نَعِيْمٍ دَائِمٍ لَا نِهَايَةَ لَهُ.

சுவனத்தில் உள்ள அருட்கொடைகள் உடலாலும், ரூஹாலும் உணரப்படுகின்றவைகளாகும். மேலும் சுவனத்தில் பல படித்தரங்கள் உள்ளன. அதில் சிலது, சிலதைப் பார்க்கிலும் அந்தஸ்தில் உயர்ந்தவையாகும். அவற்றில் (அந்த அந்தஸ்தில்) மிக உயர்ந்தது நபிமார்களின் அந்தஸ்தாகும். சுவனவாசிகளுக்கு கவலை, நோய், வயோதிபம், மரணம் போன்றவைகள் ஏற்படமாட்டாது. மேலும் அவர்கள் அதில் நிரந்தரமாக இருப்பார்கள். எக்காலமும் அதனை விட்டு வெளியேறமாட்டார்கள். அவர்கள் முடிவில்லாத, நிரந்தர இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

قَالَ رسولُ الله صَلى اللهُ عَليهِ وَسلّم : **((أَلَا هَلْ مُشَمِّرٌ لِلْجَنَّةِ فَإِنَّ الْجَنَّةَ لَا خَطَرَ لَهَا، هِيَ وَرَبِّ الْكَعْبَةِ نُوْرٌ يَتَلَأْلَأُ وَرَيْحَانَةٌ تَهْتَزُّ وَقَصْرٌ مَشِيْدٌ وَنَهْرٌ مُطَّرِدٌ وَفَاكِهَةٌ كَثِيْرَةٌ نَضِيْجَةٌ وَزَوْجَةٌ حَسْنَاءُ جَمِيْلَةٌ وَحُلَلٌ كَثِيْرَةٌ فِي مُقَامٍ أَبَدِيٍّ فِي حَبْرَةٍ وَنَضْرَةٍ فِي دَارٍ عَالِيَةٍ سَلِيْمَةٍ بَهِيَّةٍ))** – رواه ابن حبان –

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "சுவர்க்கத்துக்கு தயாரானவர்கள் உண்டா? நிச்சயமாக சுவர்க்கம் அதற்கு உவமைக் கிடையாது. அல்லாஹ் மீது ஆணையாக அது ஒளிமயமானது இளங்கக்கூடியது. அது பிரம்மிக்க வைக்கக்கூடிய தோற்றம் கொண்ட அதிக செழிப்பு கொண்ட பழங்கள் நிறைந்த இடம். மேலும் ஓடக்கூடிய பல ஆறுகளைக் கொண்டதாகும். மேலும் உயர்ந்த மாளிகைகளைக் கொண்ட இடமாகும். மேலும் உள்ளம் ஆசைப்படக்கூடிய பழுத்த கனிகளைக் கொண்ட இடமுமாகும்.**

**அங்கே மிகவும் அழகான மனைவியர்களும் உண்டு. அங்கே அவர்கள் முடிவின்றி (நிரந்தரமாக) சந்தோஷமாக தங்குவார்கள். அவர்களுடைய முகங்கள் செழிப்பானதாகவும் இருக்கும்.**

**(அறிவித்தவர் : இமாம் இப்னு ஹிப்பான் றஹிமஹுஷ்ழாஹ்)**

**النَّارُ:** أي جَهَنَّمُ، يَجِبُ الْإِيْمَانُ بِأَنَّهَا دَارُ الشَّقَاءِ وَالْعَذَابِ وَأَنَّهَا لَا تَفْنَى، أَعَدَّهَا اللهُ لِلْكُفَّارِ الَّذِيْنَ اخْتَارُوا الْكُفْرَ وَأَعْرَضُوْا عَنِ الْإِسْلَامِ، وَالنَّارُ فِيْهَا عَذَابٌ حِسِّيٌّ حَقِيْقِيٌّ وَحَرُّهَا أَشَدُّ بِكَثِيْرٍ مِنْ حَرِّ الدُّنْيَا وَبَرْدُهَا أَشَدُّ بِكَثِيْرٍ مِنْ بَرْدِ الدُّنْيَا. وَهِيَ مَوْجُوْدَةٌ الآنَ وَمَكَانُهَا تَحْتَ الْأَرْضِ السَّابِعَةِ. وَالْكُفَّارُ خَالِدُوْنَ فِيْهَا أَبَدًا لَا يَخْرُجُوْنَ مِنْهَا.

**நரகம்:-** நிச்சயமாக அது தண்டனை, துன்பம் ஆகியவற்றின் வீடு என்றும் அது அழிந்து போகமாட்டாது என்றும் நம்பிக்கை கொள்வது கடமையாகும். யார் யாரெல்லாம் படைத்த றப்பை நிராகரிப்பதை தேர்ந்தெடுத்து, இஸ்லாத்தை புறக்கணித்து வாழ்ந்தார்களோ அப்படியான கொள்கை மறுப்பாளர்களுக்கு அழ்ழாஹ் அதனை தயார் செய்து வைத்துள்ளான். மேலும் நரகம் அதிலே உண்மையாக உணரக்கூடிய வேதனையுண்டு. அதன் வெப்பம் இவ்வுலகின் வெப்பத்தை விட அதிக வெப்பம் கொண்டதாகும். மேலும் அதன் குளிர் இவ்வுலகின் குளிரை விட அதிக குளிர் கொண்டதாகும். மேலும் நரகம் தற்போது படைக்கப்பட்டுள்ளது. அது ஏழாவது பூமிக்கு அடியில் உள்ள ஒரு இடமாகும். மேலும் காபிர்கள் அதிலே நிரந்தரமாக இருப்பார்கள். எக்காலமும் வெளியேறவே மாட்டார்கள்.

وَأَمَّا عُصَاةُ الْمُسْلِمِيْنَ مِنْ أَهْلِ الْكَبَائِرِ أي الَّذِيْنَ كَانُوا يَفْعَلُوْنَ الْمَعَاصِيَ الْكَبِيْرَةَ وَمَاتُوْا مِنْ غَيْرِ تَوْبَةٍ فَهَؤُلَاءِ عَلَى قِسْمَيْنِ:

எனவே பெரும் பாவங்களைச் செய்து தௌபஹ் செய்யாமல் மரணித்த பாவியான முஸ்லிம்கள் இரண்டு வகையினர்கள்.

1. قِسْمٌ يُعْفِيْهِمُ اللهُ مِنْ عَذَابِ النَّارِ بِشَفَاعَةِ النَّبِيِّ صلى اللهُ عليه وسلّم أَوْ غَيْرِ ذَلِكَ وَيُدْخِلُهُمُ الْجَنَّةَ بِرَحْمَتِه بِلَا عَذَابٍ.

1. முதலாவது கூட்டத்தினர் அழ்ழாஹ் அவர்களை பெருமானார் முஹம்மத் ﷺ அவர்களின் பரிந்துரையின் மூலம் அல்லது அது அல்லாத வேறு விடயங்களின் மூலம் நரக வேதனையை விட்டும் பாதுகாத்து, மன்னித்து, எவ்வித தண்டனையுமின்றி, அவனின் றஹ்மத்தைக் கொண்டு அவர்களை சுவனத்தில் நுழைவிப்பான்.

2. وَقِسْمٌ يُعَذِّبُهُمُ اللهُ فَتْرَةً فِي نَارِ جَهَنَّمَ ثُمَّ يُخْرِجُهُمْ مِنْهَا وَيُدْخِلُهُمُ الْجَنَّةَ لِأَنَّهُمْ مَاتُوْا عَلَى الْإِيْمَانِ.

2. இரண்டாவது கூட்டத்தினர் அழ்ழாஹ் அவர்களை நரக நெருப்பில் ஒரு குறிப்பிட்ட காலம் வேதனை செய்வான். பின்னர் அவர் ஈமானுடன் மரணித்த காரணத்தினால் அவரை நரகை விட்டு வெளியேற்றி, சுவனத்தில் நுழைவிப்பான்.

قَالَ تَعَالَى: ﴿إِنَّ ٱللَّهَ لَعَنَ ٱلْكَٰفِرِينَ وَأَعَدَّ لَهُمْ سَعِيرًا ۝٦٤﴾

( سورة الأحزاب )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் : விளக்கம்**

**“இஸ்லாமிய கொள்கையை நிராகரித்தவர்கள் அதாவது காபிர்கள் அனைத்து வித நன்மைகள், ரஹ்மத்தை விட்டும் தூரமாக்கப்படுவார்கள். அவர்களுக்கு அழ்ழாஹ் கடுமையாக கொதிக்கும் நரகத்தையும் ஏற்படுத்தியுள்ளான். அதிலே அவர்கள் நிரந்தரமாக தங்குவார்கள். அதை விட்டு வெளிவர மாட்டார்கள். அவர்களின் வேதனையை இலகுபடுத்தவோ அல்லது அதை விட்டும் விடுதலை செய்யவோ யாரும் இருக்கமாட்டார்கள்.”**
**(அத்தியாயம் : அல்-அஹ்தாப்)**

## أسئلة

1- ما هي الجنة؟ ولمن أعدّها الله؟

2- ماذا يقال عن النعيم في الجنة؟

3- اذكر حديثا عن رسول الله في وصف الجنة.

4- لمن أعد الله النار؟ وأين هي الآن؟ ومن يخلد فيها؟

5- ما هو حال العصاة من المسلمين ممن ماتوا من غير توبة يوم القيامة؟

6- اذكر ءاية من القرءان على خلود الكفار في النار.

பாடம் : 13 الدرس – 13

أبْوابُ الكفرِ وأَنواعُ الكافرين

## குப்ரின் வாயில்களும், காபிர்களின் வகைகளும்

قَالَ تَعَالَى: ﴿ إِنَّ ٱلَّذِينَ كَفَرُواْ وَصَدُّواْ عَن سَبِيلِ ٱللَّهِ ثُمَّ مَاتُواْ وَهُمْ كُفَّارٌ فَلَن يَغْفِرَ ٱللَّهُ لَهُمْ ﴿٣٤﴾ ﴾

( سورة محمد )

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“யாரெல்லாம் இஸ்லாமிய கொள்கையை நிராகரிப்புச் செய்து மேலும் மக்களை இஸ்லாத்தில் நுழைய விடாது தடுப்பார்களோ மேலும் இஸ்லாத்தில் நுழைந்தோரை அதை விட்டும் வெளியேற்றுவார்களோ அவர்கள் அனைவரும் காபிர்களாகும். அவர்கள் குப்ரின் மீது மரணித்தால் அவர்களுக்கு மறுமையில் மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. மேலும் அவர்கள் முடிவில்லாத வேதனையை அனுபவிப்பார்கள்.**

**(அத்தியாயம் : முஹம்மத்)**

الْكُفْرُ نَقِيْضُ الْإِيْمَانِ كَمَا أَنَّ الظَّلَامَ نَقِيْضُ النُّوْرِ، وَهُوَ ثَلَاثَةُ أَبْوَابٍ التَّشْبِيْهُ وَالتَّكْذِيْبُ وَالتَّعْطِيْلُ.

எவ்வாறு இருள், ஒளிக்கு எதிரானதோ அதே போல் குப்ர் என்பது ஈமானிற்கு எதிரானதாகும்.

அவை மூன்று வகைப்படும்

1. அத்-தஷ்பீஹ்
2. அத்-தக்தீப்
3. அத்-த.'.தீல்

**التَّشْبِيْهُ:** أي تَشْبِيْهُ الله بِخَلْقِهِ، كَالَّذِيْ يَصِفُ اللهَ بِأَنَّهُ جَالِسٌ أَوْ أَنَّ لَهُ شَكْلًا وَهَيْئَةً أَوْ يَصِفُهُ بِأَنَّ لَهُ مَكَانًا أَوْ جِهَةً.

1. **குப்ருத் தஷ்பீஹ் என்பது:-** அழ்ழாஹ்வை அவனின் படைப்பிற்கு ஒப்பாக்குவதாகும்.

உதாரணம்: அழ்ழாஹ் அர்ஷில் உட்கார்ந்திருக்கிறான். அல்லது அவனுக்கு உடல் அமைப்பு உண்டு அல்லது அவனுக்கு இடம், திசை உண்டு என்று அவனை வர்ணிப்பவரைப் போல.

**التَّكْذِيْبُ:** أي تَكْذِيْبُ مَا وَرَدَ فِي الْقُرْءَانِ الْكَرِيْمِ أَوْ مَا جَاءَ بِهِ الرَّسُوْلُ صلّى اللهُ عليه وسلّم عَلَى وَجْهٍ ثَابِتٍ كَإِنْكَارِ بَعْثِ الْأَجْسَادِ وَالْأَرْوَاحِ مَعًا وَإِنْكَارِ وُجُوْبِ الصَّلَاةِ وَالصِّيَامِ وَالزَّكَاةِ.

**குப்ருத் தக்தீப் என்பது:** அல்-குர்ஆனில் வந்த ஒன்றை அல்லது முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் உறுதியாக வந்த ஒன்றை பொய்ப்பிப்பதாகும்.

உதாரணம் : நாளை மறுமையில் உடல், ரூஹ் இரண்டும் ஒன்றாக எழுப்பப்படும் என்பதையும், தொழுகை, நோன்பு, ஸகாத் கடமை என்பதையும் மறுப்பதாகும்.

**التَّعْطِيْلُ:** وَهُوَ نَفْيُ وُجُوْدِ اللهِ تَعَالَى وَهُوَ أَشَدُّ الْكُفْرِ.

**குப்ருத் த.'.தீல் என்பது**: அழ்ழாஹ் உள்ளான் என்பதனை மறுப்பதாகும். இது குப்ரின் வகைகளில் மிக கடுமையானதாகும்.

وَالْكَافِرُ نَوْعَانِ: إِمَّا كَافِرٌ أَصْلِيٌّ أَوْ مُرْتَدٌّ عَنِ الْإِسْلَامِ.

காபிர்கள் இரு வகை.

1. அடிப்படைக் காபிர்
2. இஸ்லாத்தை விட்டு மதம் மாறியவன்.

**فَالْكَافِرُ الْأَصْلِيُّ:** هُوَ مَنْ نَشَأَ مِنْ أَبَوَيْنِ كَافِرَيْنِ عَلَى الْكُفْرِ وَبَلَغَ عَلَى الْكُفْرِ.

**அடிப்படைக் காபிர்:** அவன் காபிரான தாய் தந்தையருக்குப் பிறந்து, குப்ரின் மீது வளர்ந்து, குப்ரில் இருக்கும் நிலையில் பருவத்தை எத்தியவனாகும்.

**أَمَّا الْمُرْتَدُّ:** فَهُوَ الشَّخْصُ الَّذِي كَانَ مُسْلِمًا وَوَقَعَ فِي أَحَدِ أَنْوَاعِ الرِّدَّةِ.

**முர்தத் (மதம் மாறியவன்):** முஸ்லிமாக இருந்து, பின்பு இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய காரியங்களில் ஏதாவது ஒன்றை செய்தவன்.

قَالَ تَعَالَى: ﴿قُلْ أَبِاللَّهِ وَءَايَٰتِهِۦ وَرَسُولِهِۦ كُنتُمْ تَسْتَهْزِءُونَ ﴿٦٥﴾ لَا تَعْتَذِرُوا۟ قَدْ كَفَرْتُم بَعْدَ إِيمَٰنِكُمْ ﴿٦٦﴾﴾ ( سورة التوبة )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்**

**விளக்கம் :**

**“நீங்கள் கூறுங்கள் : நீங்கள் அழ்ழாஹ்வையும், அவனது வசனங்களையும், அவனுடைய தூதரையுமா பரிகசிக்கின்றீர்கள்? நிச்சயமாக நீங்கள் ஈமான் கொண்ட பின்னரும் காபிராகி விட்டீர்கள். உங்களுக்கு மன்னிப்பே கிடையாது.”**

**(அத்தியாயம் : அத்-தௌபஹ் வசனம் : 65-66)**

وَالرِّدَّةُ هِيَ الْخُرُوْجُ عَنِ الْإِسْلَامِ فَيَجِبُ عَلَى كُلِّ مُسْلِمٍ أَنْ يَحْفَظَ إِسْلَامَهُ وَيَصُوْنَهُ عَنْ هَذِهِ الرِّدَّةِ الَّتِي تُفْسِدُهُ وَتُبْطِلُهُ وَتَقْطَعُهُ وَالْعِيَاذُ بِاللهِ تَعَالَى.

மதம் மாறுதல் என்றால் இஸ்லாத்தை விட்டு வெளியேறுதல் என்பதாகும். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் அவனது இஸ்லாத்தை துண்டித்துவிடக்கூடிய இவ்வாறான ரித்தத்தை விட்டு பாதுகாப்பது கட்டாய கடமையாகும்.

அல்லாஹ் பாதுகாப்பானாக!

**أَقْسَامُ الرِّدَّةِ:** الرِّدَّةُ ثَلَاثَةُ أَقْسَامٍ كَمَا قَسَّمَهَا الْعُلَمَاءُ: كُفْرٌ اعْتِقَادِيٌّ وَكُفْرٌ فِعْلِيٌّ وَكُفْرٌ قَوْلِيٌّ.

**ரித்தத்தின் வகைகள் :-** உலமாக்கள் பங்கு பிரித்துகாட்டியது போன்று ரித்தத் மூன்று வகைப்படும். உள்ளம் சார்ந்த குப்ர், செயல் சார்ந்த குப்ர், சொல் சார்ந்த குப்ர்.

وَكُلُّ قِسْمٍ مِنْ أَقْسَامِ الرِّدَّةِ يَدْخُلُ تَحْتَهُ شُعَبٌ كَثِيْرَةٌ.

ரித்தத்துடைய வகைகள் ஒவ்வொன்றும் பல பகுதிகளாக பிரியும்.

1. **الْكُفْرُ الِاعْتِقَادِيُّ:** كَنَفْيِ وُجُوْدِ اللهِ تَعَالَى أَوْ اعْتِقَادِ أَنَّ اللهَ عَاجِزٌ أَوْ جَاهِلٌ أَوْ اعْتِقَادِ أَنَّ اللهَ جِسْمٌ أَوْ ضَوْءٌ أَوْ رُوْحٌ أَوْ أَنَّهُ يَتَّصِفُ بِصِفَةٍ مِنْ صِفَاتِ الْخَلْقِ وَالْعِيَاذُ بِاللهِ تَعَالَى،

உள்ளம் சார்ந்த குப்ருக்கு உதாரணம் : அல்லாஹ் உள்ளான் என்பதை மறுத்தல் அல்லது அல்லாஹ் தஆலா சக்தியற்றவன், அறியாதவன் என நம்புதல். அல்லது அல்லாஹ் உடல் அமைப்பை கொண்டவன் என அல்லது அவன் ஒளி அல்லது ரூஹ் என நம்புதல். அல்லது படைப்புகளின் தன்மைகளைக் கொண்டு வர்ணிக்கப்படக் கூடியவன் என நம்புதல். இவைகளை விட்டும் அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!

أَوْ اعْتِقَادِ أَنَّ شُرْبَ الْخَمْرِ حَلَالٌ، أَوْ أَنَّ السَّرِقَةَ حَلَالٌ أَوْ اعْتِقَادِ أَنَّ اللهَ لَمْ يَفْرِضِ الصَّلَوَاتِ الْخَمْسَ أَوْ صِيَامَ رَمَضَانَ، أَوِ الزَّكَاةَ أَوِ الْحَجَّ.

அல்லது மதுபானம் அருந்துவது ஹலால், திருடுவது ஹலால் என்று நம்பிக்கை கொள்ளல். அல்லது அழ்ழாஹ் ஐந்து நேரத் தொழுகைகள், றமழான் மாதத்தில் நோன்பு நோற்றல், ஸகாத் கொடுத்தல், ஹஜ் செய்தல் போன்ற விடயங்களை கடமையாக்கவில்லை என்று உறுதி கொள்ளல்.

2.**الْكُفْرُ الْفِعَلِيُّ:** كَإِلْقَاءِ الْمُصْحَفِ أَوْ أَوْرَاقِ الْعُلُوْمِ الشَّرْعِيَّةِ عَمْدًا فِي الْقَاذُوْرَاتِ أَوْ السُّجُوْدِ لِصَنَمٍ أَوْ لِشَمْسٍ أَوْ مَخْلُوْقٍ ءاخَرَ عَلَى وَجْهِ الْعِبَادَةِ لَهُ، وَكَكِتَابَةِ الْآيَاتِ الْقُرْءَانِيَّةِ بِالْبَوْلِ.

செயல் சார்ந்த குப்ருக்கு உதாரணம் : அல்-குர்ஆன் அல்லது மார்க்க விடயங்கள் அடங்கிய தாள்களை மனமுரண்டாக (வேனுமென்று) குப்பை தொட்டியில் வீசுதல். அல்லது சிலை, சூரியன் போன்றவற்றிற்கு ஸுஜூத் செய்தல்.
அல்லது வேறு படைப்புகளில் ஒன்றிக்கு (மனிதனுக்கு) அதனை வணங்கும் எண்ணத்துடன் ஸுஜூத் செய்தல். மேலும் சிறுநீரினால் அல்-குர்ஆன் வசனங்களை எழுதுதல்.

3. **الْكُفْرُ الْقَوْلِيُّ:** كَسَبِّ اللهِ أَوْ سَبِّ نَبِيٍّ مِنَ الْأَنْبِيَاءِ أَوْ مَلَكٍ مِنَ الْمَلَائِكَةِ أَوْ سَبِّ الْإِسْلَامِ أَوِ الْقُرْءَانِ أَوِ الِاسْتِهْزَاءِ بِالصَّلَاةِ أَوِ الصِّيَامِ أَوِ الِاعْتِرَاضِ عَلَى اللهِ.

**சொல் சார்ந்த குப்ருக்கு உதாரணம்:** அழ்ழாஹ்வை அல்லது நபிமார்களில் ஒரு நபியை அல்லது மலக்குமார்களில் ஒரு மலக்கை அல்லது இஸ்லாம் மார்க்கத்தை அல்லது அல்-குர்ஆனை ஏசுவதை போல. அல்லது தொழுகை, நோன்பு இவைகளை பரிகசிப்பதைப் போல. அல்லது அழ்ழாஹ்வுடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் குறுக்கீடு செய்தலைப் போல.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: **((إِنَّ الْعَبْدَ لَيَتَكَلَّمُ بِالْكَلِمَةِ لَا يَرَى بِهَا بَأْسًا يَهْوِي بِهَا فِي النَّارِ سَبْعِينَ خَرِيْفًا)) -رَوَاهُ التِّرْمِذِيُّ-**

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "ஓர் அடியான் தனக்கு குற்றத்தை (பாதகத்தை ஏற்படுத்தாது என நினைத்தவனாக குறிப்பிட்ட ஒரு வார்த்தையைப் பிரயோகிப்பான், அவ்வார்த்தைப் பிரயோகத்தினால் அந்த அடியான் நரகத்தில் எழுபது வருட தொலை தூரமான ஆழத்தில் போய் விழுவான்." (அறிவித்தவர் : இமாம் திர்மதீ றஹிமஹுழ்ழாஹ்)**

أي مَسَافَةَ سَبْعِيْنَ عَامًا فِي النُّزُوْلِ وَذَلِكَ مُنْتَهَى قَعْرِ جَهَنَّمَ وَهُوَ خَاصٌّ بِالْكُفَّارِ، وَهَذَا الْحَدِيْثُ دَلِيْلٌ عَلَى أَنَّهُ لَا يُشْتَرَطُ فِي الْوُقُوْعِ فِي الْكُفْرِ مَعْرِفَةُ الْحُكْمِ وَلَا انْشِرَاحُ الصَّدْرِ وَلَا اعْتِقَادُ مَعْنَى اللَّفْظِ وَلَا نِيَّةُ الْكُفْرِ.

அதாவது அவன் அதன் அடிப்பாகத்தை சென்றடைவதற்குரிய காலம் எழுபது வருடமாகும். அது நரக படு குழியின் முடிவிடமாகும். மேலும் அது காபிர்களுக்கு குறிப்பானதாகும். எனவே இந்த ஹதீஸ் "ஒரு மனிதனிடம் குப்ர் ஏற்படுவதற்கு அதன் சட்டம் தெரிந்திருத்தல், அவ்வார்த்தையை மொழியும் போது உள்ளம் அதனை பொருந்திக்கொள்தல், அதன் பொருளை உறுதி கொண்டிருத்தல், குப்ரை நாடிச் சொல்லல்" போன்ற விடயங்கள் நிபந்தனையிடப் படமாட்டாது என்பதற்கு சான்றாக அமைந்துள்து.

وَقَالَ رسولُ اللهِ صَلى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : **أَكْثَرُ خَطَايَا ابْنِ ءَادَمَ مِنْ لِسَانِهِ** –رَوَاهُ الطَّبَرَانِيُّ –

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :"மனிதன் செய்யும் அதிக பாவங்கள் அவனது நாவினாலேயே இடம்பெறுகின்றன."**

**(அறிவித்தவர் : இமாம் அத்-தபறானீ றஹிமஹுழ்ழாஹ்)**

**وَالْقَاعِدَةُ:** أَنَّ كُلَّ اعْتِقَادٍ أَوْ فِعْلٍ أَوْ قَوْلٍ يَدُلُّ عَلَى اسْتِخْفَافٍ بِاللهِ أَوْ كُتُبِهِ أَوْ رُسُلِهِ أَوْ مَلَائِكَتِهِ أَوْ شَعَائِرِهِ أَوْمَعَالِمِ دِيْنِهِ أَوْ أَحْكَامِهِ أَوْ وَعْدِهِ أَوْ وَعِيْدِهِ كُفْرٌ فَلْيَحْذَرِ الْإِنْسَانُ مِنْ ذَلِكَ جَهْدَهُ.

**மார்க்க விதியொன்று:** அழ்ழாஹ்வை அல்லது அவனது வேதத்தை அல்லது அவனது தூதர்களை அல்லது அவனது மலக்குகளை அல்லது இஸ்லாம் மார்க்கத்தின் அடையாளச் சின்னங்களை அல்லது மார்க்க சட்டங்களை அல்லது அவனது வாக்குறுதிகளை அல்லது எச்சரிக்கைகளை இழிவு படுத்தும் அனைத்து நம்பிக்கைகளும், செயல்களும், வார்த்தைகளும் குப்ராகும். எனவே மனிதன் இவைகளை அவனுக்கு முடிந்தளவு தவிர்ந்து கொள்ளட்டும்.

**فَائِدَةٌ:** قَالَ الْعُلَمَاءُ: إِنْكَارُ مَا عُلِمَ مِنَ الدِّيْنِ بِالضَّرُوْرَةِ كُفْرٌ، وَمَعْنَى كَوْنِ الْأَمْرِ مَعْلُوْمًا مِنَ الدِّيْنِ بِالضَّرُوْرَةِ أَنْ يَكُوْنَ هَذَا الْأَمْرُ مَعْلُوْمًا بَيْنَ الْمُسْلِمِيْنَ عُلَمَائِهِمْ وَعَوَامِّهِمْ، لَيْسَ أَمْرًا لَا يَعْرِفُهُ إِلَّا الْعُلَمَاءُ، وَذَلِكَ كَوُجُوْبِ الصَّلَوَاتِ الْخَمْسِ وَوُجُوْبِ صَوْمِ رَمَضَانَ وَحِلِّ الْبَيْعِ وَالشِّرَاءِ وَحُرْمَةِ شُرْبِ الْخَمْرِ وَالسَّرِقَةِ، فَإِنَّ هَذِهِ الْأُمُوْرَ لَا تَخْفَى عَلَى الْمُسْلِمِ مَهْمَا كَانَ جَاهِلًا.

அறிஞர்களால் கூறப்பட்ட ஒரு அறிவுரை: முஸ்லிம்களில் அறிஞர்கள், அறிஞர் அல்லாதவர்கள் அனைவரும் அறிந்த ஒரு மார்க்க விடயத்தை மறுப்பது குப்ராகும். அந்த விடயம் அறிஞர்களைத் தவிர வேறு யாரும் அறிய முடியாத விடயமல்ல (அனைவருக்கு மத்தியிலும் பிரபல்யமான விடயமாகும்).

உதாரணம் :- ஐங்காலத் தொழுகை, நோன்பு கடமை என்பதையும், ஆகுமாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஹலால் என்பதையும், தடைசெய்யப்பட்ட மது, கலவு போன்றவைகள் ஹறாம் என்பதையும் குறிப்பிடலாம். இந்த விடயங்கள் ஒரு முஸ்லிமின் மீது அவன் மடையனாக காணப்பட்டாலும் அவனுக்கு தெரியாமல் இருக்காது.

وَلْيُعْلَمْ أَنَّ مَنْ كَفَرَ لَا يَرْجِعُ إِلَى الْإِسْلَامِ إِلَّا بِالنُّطْقِ بِالشَّهَادَتَيْنِ بَعْدَ رُجُوْعِهِ عَنِ الْكُفْرِ فَلَا يَرْجِعُ الْكَافِرُ إِلَى الْإِسْلَامِ بِقَوْلِ أَسْتَغْفِرُ اللهَ بَلْ يَزِيْدُهُ ذَلِكَ كُفْرًا وَلَا تَنْفَعُهُ الشَّهَادَتَانِ مَا دَامَ عَلَى كُفْرِهِ لَمْ يَرْجِعْ عَنْهُ.

நிச்சயமாக யார் காபிராகின்றாரோ அவர் அந்த குப்ரை விட்டு மீண்டதன் பின் இரு ஷஹாதஹ் கலிமாக்களையும் மொழிந்தால்

மாத்திரமே அவர் இஸ்லாத்தின் பால் மீள முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு காபிர் **“அஸ்த.்.பிருழ்ழாஹ்”** என்ற வார்த்தையின் மூலம் இஸ்லாத்தில் நுழைய முடியாது. மாறாக அவ்வாறு கூறுவது அவனுக்கு குப்ரை அதிகரிக்கின்றது. மேலும் அவன் குப்ரை விட்டு மீண்டுவராமல் அதிலே இருக்கும் காலமெல்லாம் இரண்டு ஷஹாதஹ் கலிமாக்களை கூறுவது அவனுக்கு எவ்வித பிரயோசனத்தையும் கொடுக்கமாட்டாது.

## أسئلة

1- ما الدليل من القرءان على أن الله لا يغفر الكفر لمن مات عليه؟

2- ما هو الكفر؟ وما هي أبوابه؟

3- ما هو كفر التشبيه؟

4- ما هو كفرالتكذيب؟

5- ما هو كفر التعطيل؟

6- كم نوعا الكفار؟

7- من هو الكافرالأصلي ؟ ومن هو المرتد؟

8- اذكرءاية من القرءان على ثبوت حكم الردة على من استهزأ بالله أو رسوله.

9- ما هي الردة ؟ وكم قسم هي؟

10- اذكر بعض الأمثلة على الكفر الاعتقادي.

11- اذكر بعض الأمثلة على الكفر الفعلي.

12- اذكر بعض الأمثلة على الكفر القولي.

13- اذكر حديثا عن النبي فيه دليل على أنه لا يشترط في الوقوع في الكفر معرفة الحكم.

14- كيف يرجع من كفر إلى الإسلام؟

பாடம் : 14 الدرس – 14

الإيمانُ بالقَدَرِ خَيرِه وشرِّه

## நடைபெறும் நலவுகள், கெடுதிகள் யாவும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமே நிகழ்கின்றன என்பதை ஈமான் கொள்ளுதல்

قَالَ تَعَالَى: ﴿ إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ ﴿٤٩﴾ ﴾

( سورة القمر )

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“நிச்சயமாக நாம் அனைத்தையும் விதிப்பிரகாரமே படைத்துள்ளளோம்.”**

**(அத்தியாயம் : அல்-கமர் வசனம் : 49)**

وَقَالَ صلّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : الْإِيْمَانُ أَنْ تُؤْمِنَ بِاللهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ وَتُؤْمِنَ بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ. -رواه مسلم -

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“ஈமான் கொள்ளுதல் என்பது அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், இறுதி நாளையும் இன்னும் அல்லாஹ்வினால் படைக்கப்பட்ட நல்லவைகள், தீயவைகள் அனைத்தும் அவனது ஏற்பாட்டின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன என்று ஈமான் கொள்வதாகும்.”**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் றஹிமஹுல்லாஹ்)**

قَدْ عَرَضْنَا فِي الدُّرُوْسِ السَّابِقَةِ بَعْضَ الشُّرُوْحِ لِمَا وَرَدَ فِي هَذَا الْحَدِيْثِ وَهَذَا مِمَّا أَخْبَرَ عَنْهُ النَّبِيُّ صَلَّى اللهُ عليه وَسَلَّمَ وَيَجِبُ التَّصْدِيْقُ بِهِ.

இந்த ஹதீஸிற்குரிய சில விளக்கங்களை முந்திய பாடங்களில் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். இது அஜ்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அறிவித்த விடயங்களில் உள்ளதாகும். எனவே அவற்றை உண்மைப்படுத்துவது நம் மீது கடமையாகும்.

وَالْإِيْمَانُ (بِالْقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ ) مَعْنَاهُ: الْإِيْمَانُ بِأَنَّ كُلَّ مَا دَخَلَ فِي الْوُجُوْدِ مِنْ خَيْرٍ وَشَرٍّ هُوَ بِتَقْدِيْرِ اللهِ الْأَزَلِيِّ، فَالْخَيْرُ مِنْ أَعْمَالِ الْعِبَادِ بِتَقْدِيْرِاللهِ وَمَحَبَّتِهِ وَرِضَاهُ، وَالشَّرُّ مِنْ أَعْمَالِ الْعِبَادِ بِتَقْدِيْرِاللهِ وَخَلْقِهِ وَعِلْمِهِ وَلَكِنْ لَيْسَ بِمَحَبَّتِهِ وَلَا بِرِضَاهُ.

**அஜ்லஹ்வின் ஏற்பாட்டை நம்பிக்கை கொள்வதன் அர்த்தம் :**

“நிச்சயமாக அஜ்லாஹ்வினால் படைக்கப்பட்ட நலவுகள், கெடுதிகள் யாவும் அவனது ஆரம்பமில்லாத ஏற்பாட்டின் பிரகாரமே நடைபெறுகின்றன” என நம்பிக்கை கொள்வதாகும். எனவே அடியார்கள் செய்யும் நலவுகள் யாவும் அஜ்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டும், பொருத்தத்தைக் கொண்டுமாகும். மேலும் அடியார்கள் செய்யும் கெடுதிகள் யாவும் அஜ்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டும், அவனுடைய அறிவுக்கு உட்பட்டதுமாகும். என்றாலும் அவைகள் அஜ்லாஹ்வின் பொருத்தத்தைக் கொண்டல்ல.

**فائدة : قَالَ رَسُوْلُ اللهِ صَلّى اللهُ عَلَيهِ وَسَلّمَ لِابْنِ عَبّاسٍ رَضِيَ اللهُ عَنْهُمَا : وَاعْلَمْ أَنَّ الْأُمَّةَ لَوْ اجْتَمَعَتْ عَلَى أَنْ يَنْفَعُوْكَ بِشَىءٍ لَمْ يَنْفَعُوْكَ إِلَّا بِشَىءٍ قَدْ كَتَبَهُ اللهُ لَكَ وَلَوْ اجْتَمَعتْ عَلَى أَنْ يَضُرُّوْكَ بِشَىءٍ لَمْ يَضُرُّوْكَ إِلَّا بِشَىءٍ قَدْ كَتَبَهُ اللهُ عَلَيْكَ، رُفِعَتِ الْأَقْلَامِ وَجَفَّتِ الصُّحُفُ.** – رواه الترمذي–

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களுக்கு கூறினார்கள் : “நீங்கள் அறிந்துகொள்ளுங்கள் நிச்சயமாக இந்த சமூகம் ஒரு விடயத்தின் மூலம் உங்களுக்கு பிரயோசனமளிக்க ஒன்று சேர்ந்தாலும் அழ்ழாஹ் உங்களுக்கு எதனை ஏற்பாடு செய்துள்ளானோ அதனைத் தவிர வேறு எதன் மூலமும் உங்களுக்கு பிரயோசனமளிக்க மாட்டார்கள். மேலும் உங்களுக்கு ஒரு விடயத்தின் மூலம் தீங்கை ஏற்படுத்த அவர்கள் ஒன்று சேர்ந்தாலும் அழ்ழாஹ் உங்களுக்கு எதனை ஏற்பாடு செய்துள்ளானோ அதனைத் தவிர வேறு எதன் மூலமும் உங்களுக்கு தீங்கை ஏற்படுத்த மாட்டார்கள். கலம்கள் உயர்த்தப்பட்டுவிட்டன. ஏடுகள் காய்ந்துவிட்டன. அதாவது கியாமத் வரைக்கும் நடைபெற இருக்கும் அனைத்தையும் அழ்ழாஹ் நாடிவிட்டான். அவைகளிலே எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது.”**

**(அறிவித்தவர் : இமாம் திர்மதீ றஹிமஹுழ்ழாஹ்)**

وَقَالَ عَلَيْهِ الصَّلَاةُ وَالسَّلَامُ: كُلُّ شَيءٍ بِقَدَرٍ حَتَّى الْعَجْزُ وَالْكَيْسُ. – رواه مسلم –

وَالْعَجْزُ هُوَ الغَبَاءُ وَالْكَيْسُ الذَّكَاءُ.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் : “விவேகமில்லாத தன்மை, விவேகமுள்ள தன்மை உட்பட அனைத்தும் விதிப்பிரகாரமே நிகழ்கின்றது.”**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் றஹிமஹுழ்ழாஹ்)**

أسئلة

1- اذكر ءاية من القرءان عن الإيمان بالقدر.

2- اذكر حديثا عن النبي عن الإيمان بالقدر.

3- ما معنى الإيمان بالقدر خيره وشره؟

4- اذكر حديثا عن النبي يدل على أن الله خالق النفع والضرر.

5- اذكر حديثا نبويا يدل على أن كل شىء بتقديرالله.

# فَصْلُ الْعِبَادَاتِ

# வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்

பாடம் : 1 الدرس :1

## حُكْمُ الشَّرْعِ الْمُتَعَلِّقُ بِأَفْعَالِ الْمُكَلَّفِيْنَ

## புத்தியுள்ள,பருவத்தை அடைந்த முஸ்லிம்களின் செயற்களுடன் சம்பந்தப்படும் மார்க்க சட்டதிட்டங்கள்

الْحُكْمُ الشَّرْعِيُّ يَنْقَسِمُ إِلَى سَبْعَةِ أَقْسَامٍ:

மார்க்க சட்டங்கள் ஏழு வகைப்படும்.
**அவைகள் பின்வருமாறு:**

الْوَاجِبُ وَالْمَنْدُوْبُ وَالْحَرَامُ وَالْمَكْرُوْهُ وَالْمُبَاحُ وَالصَّحِيْحُ وَالْبَاطِلُ.

அல்-வாஜிப், அல்- மன்தூப், அல்-ஹறாம், அல்-மக்ரூஹ், அல்-முபாஹ், அஸ்ஸஹீஹ், அல்-பாதில்

1- **الْوَاجِبُ:** وَيُسَمَّى الْفَرْضَ، وَهُوَ مَا يُثَابُ فَاعِلُهُ وَيُعَاقَبُ تَارِكُهُ وَيَنْقَسِمُ إِلَى قِسْمَيْنِ: فَرْضُ عَيْنٍ وَفَرْضُ كِفَايَةٍ.

1. **அல்-வாஜிப் :** இதற்கு பர்ளு என்றும் சொல்லப்படும்.
இதை செய்பவருக்கு நன்மை வழங்கப்படும், செய்யாமல் விடுபவர் தன்னை தண்டனைக்கு ஆளாக்கிக்கொள்கிறார்.

வாஜிப் இரு வகைப்படும் :
1. பர்ளுல் அய்ன்
2. பர்ளுல் கிபாயஹ்

**فَرْضُ الْعَيْنِ:** هُوَ الْوَاجِبُ عَلَى كُلِّ مُكَلَّفٍ أَنْ يَتَعلّمَهُ أَوْ أَنْ يَتَعلّمَهُ وَيَفْعلَهُ كَمَعْرِفَةِ اللهِ وَرَسُوْلِهِ وَأَدَاءِ الصَّلَوَاتِ الْخَمْسِ وَصَوْمِ رَمَضَانَ.

**பர்ளுல் அய்ன் என்பது:** பருவத்தை எத்திய, புத்தியுள்ள ஒவ்வொருவரும் இதனை கற்பது அவசியமாகும்.

உதாரணம்: அல்லாஹ்வையும் அவனது தூதரையும் முறையாக அறிதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் கற்றதைக் கொண்டு அமல் செய்வதும் அவசியமாகும். உதாரணம்: ஐந்து நேரத் தொழுகைகளை நிறைவேற்றுதல். றமழான் மாதத்தில் நோன்பு நோற்றல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

**فَرْضُ الْكِفَايَةِ:** هُوَ مَا إِذَا قَامَ بِهِ الْبَعْضُ سَقَطَ بِفِعْلِهِم الْفَرْضُ عَنِ الْآخَرِيْنَ كَصَلَاةِ الْجَمَاعَةِ وَحِفْظِ الْقُرْءَانِ وَالْقِيَامِ بِالصَّنَائِعِ النَّافِعَةِ الَّتِي تَحْتَاجُهَا الْأُمَّةُ وَغَيْرِ ذَلِكَ مِنْ فُرُوْضِ الْكِفَايَةِ.

**பர்ளுல் கிபாயஹ் என்பது:** இதை சிலர் நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்கள் மீதான கடமை நீங்கி விடும்.

உதாரணம் : ஜமாஅத்துடன் தொழுதல், அல்-குர்ஆனை மனனம் செய்தல், சமூகத்திற்கு அவசியமான, பிரயோஜனமாக விடயங்களில் ஈடுபடுதல் மேலும் இது அல்லாத பர்ளு கிபாயாக்களைப் போல.

2- **الْمَنْدُوْبُ:** ( وَالسّنّةُ بِمَعْنًى وَاحِدٍ ) وَهُوَ مَا يُثَابُ فَاعِلُهُ وَلَا يُعَاقَبُ تَارِكُهُ، كَرَوَاتِبِ الصَّلَوَاتِ وَاسْتِعْمَالِ السِّوَاكِ وَنَحْوِ ذَلِكَ.

2. **அல்-மன்தூப்:** இதற்கும், ஸுன்னத்திற்கும் ஒரே அர்த்தமாகும். இதனை செய்பவருக்கு நன்மை வழங்கப்படும். செய்யாமல் விடுபவர் தண்டனைக்கு உள்ளாக மாட்டார்.

உதாரணம் : பர்ளான தொழுகைகளின் முன், பின் தொடரப்படும் ஸுன்னத்கள், மிஸ்வாக் செய்தல் இன்னும் இவைகள் போன்றவைகளுமாகும்.

3- **الْحَرَامُ:** هُوَ مَا يُثَابُ تَارِكُهُ ( إِنْ تَرَكَهُ امْتِثَالًا لِأَمْرِ اللهِ تَعَالَى ) وَيُعَاقَبُ فَاعِلُهُ، كَشُرْبِ الْخَمْرِ وَأَكْلِ الرِّبَا وَالْكَذِبِ وَالسَّرِقَةِ وَعُقُوقِ الْوَالِدَيْنِ وَغَيْرِهَا مِنَ الْمُحَرَّمَاتِ.

3. **அல்-ஹறாம்:** இதனை (அழ்ழாஹ்வின் கட்டளைக்கு வழிபட வேண்டும் என்ற நோக்கத்தில்) நிறைவேற்றாமல் விடுபவருக்கு கூலி வழங்கப்படும். மேலும் இதனை செய்பவர் தன்னை தண்டனைக்கு ஆளாக்கிக் கொள்கிறார்.

உதாரணம் : சாராயம் குடித்தல், வட்டி சாப்பிடுதல், பொய் பேசுதல், திருடுதல், பெற்றோர்களுக்கு நோவினை செய்தல், இவை தவிர்ந்த ஏனைய ஹறாமான விடயங்களுமாகும்.

4- **الْمَكْرُوهُ:** وَهُوَ مَا يُثَابُ تَارِكُهُ امْتِثَالًا وَلَا يُعَاقَبُ فَاعِلُهُ، كَالْإِسْرَافِ بِمَاءِ الْوُضُوْءِ أَوِ الْغُسْلِ وَالْأَكْلِ بِالْيَدِ الْيُسْرَى.

4. **அல்-மக்ரூஹ்:** இதனை (அழ்ழாஹ்வின் கட்டளைக்கு வழிபட வேண்டும் என்ற நோக்கத்தில்) செய்யாவிட்டால் நன்மை வழங்கப்படும். இதனை செய்பவர் தண்டனைக்கு ஆளாகமாட்டார். உதாரணம் : வுழூஉ செய்யும் தண்ணீரை அல்லது குளிக்கும் தண்ணீரை வீண்விரயம் செய்தல். இன்னும் இடது கரத்தால் சாப்பிடுதல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

5- **الْمُبَاحُ:** وَهُوَ مَا لَا يُثَابُ فَاعِلُهُ وَلَا يُعَاقَبُ تَارِكُهُ، كَأَكْلِ الْحِمِّصِ بَدَلَ الْفُوْلِ مَثَلاً وَنَحْوِ ذَلِكَ.

5. **அல்-முபாஹ்:** இதை செய்வதன் மூலம் நன்மையோ இன்னும் விடுவதன் மூலம் தண்டனையோ வழங்கப்பட மாட்டாது.

உதாரணம் : மொச்சைக்கொட்டைக்கு பதிலாக கடலையை சாப்பிடுதல். இன்னும் இது போன்றன.

6- **الصَّحِيْحُ:** الصَّحِيْحُ مِنَ الْعِبَادَاتِ هُوَ مَا وَافَقَ شَرْعَ اللهِ فَاسْتَوْفَى الْأَرْكَانَ وَالشُّرُوْطَ.

6. **அஸ்ஸஹீஹ்:** இபாதத்தில் ஸஹீஹ் என்பது அல்லாஹ்வின் ஷரீஅத்திற்கு நேர்பாடானதும் இன்னும் ருகுன்(கடமை)களையும், நிபந்தனைகளையும் முழுமைப்படுத்தியதுமாகும்.

7- **الْبَاطِلُ وَيُقَالُ لَهُ الْفَاسِدُ:** وَهُوَ ضِدُّ الصَّحِيْحِ أي مَا لَمْ يَسْتَوْفِ الشُّرُوْطَ وَالْأَرْكَانَ. وَلَوِ اسْتَوْفَى الْأَرْكَانَ وَالشُّرُوْطَ وَطَرَأَ عَلَيْهِ مَا يُفْسِدُهُ يُعَدُّ فَاسِدًا أَيْضًا.

7. **அல்-பாதில்:** இதற்கு **"பாஸித்"** என்றும் சொல்லப்படும். இது ஸஹீஹிற்கு எதிரானதாகும். அதாவது இது ருகுன்களையும், நிபந்தனைகளையும் முழுமைப்படுத்தாததாகும். மேலும் ருகுன்களும், நிபந்தனைகளும் முழுமையாக இருந்தும் அதனை முறிக்கக்கூடிய ஏதேனும் ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதனையும் பாதிலாகவே கவனிக்கப்படும்.

أسئلة

**1**-إلى كم قسم ينقسم الحكم الشرعي؟

**2**-ما هو الواجب وماذا يسمى أيضا؟

**3**-كم قسم ينقسم الواجب؟

**4**-ما هو فرض العين؟ أعط مثالا.

**5**-ما هو فرض الكفاية؟ أعط مثالا.

**6**-ما هو المندوب؟ أعط مثالا.

**7**-ما هو الحرام؟ أعط مثالا.

**8**-ما هو المكروه؟ أعط مثالا.

**9**-ما هو المباح؟ أعط مثالا.

**10**-ما هو الصحيح من العبادات؟

**11**-ما هو الباطل؟ وماذا يقال له أيضا؟

பாடம் : 2 الدرس –2

## الطَّهَارَةُ عَنِ النَّجَاسَةِ

## அசுத்தங்களிலிருந்து சுத்தமாகுதல்

**النَّجَاسَةُ مِنْهَا:** الْبَوْلُ وَالْغَائِطُ وَالدَّمُ وَالْقَيحُ وَالْقَيْءُ وَالْخَمْرَةُ وَالْمَيْتَةُ سِوَى السَّمَكِ وَالْجَرَادِ وَالْآدَمِيِّ وَكَذَلِكَ عَظْمُهَا وَشَعْرُهَا.

**அசுத்தங்களில் சில :** சிறு நீர், மலம், இரத்தம், வாந்தி, சாராயம். மேலும் மீன், வெட்டுக்கிளி, மனிதன் இவைகள் அல்லாத மரணித்த பிராணிகள் மேலும் இவைகளின் எலும்பு, முடி போன்றவைகளையும் குறிப்பிடலாம்.

وَتُقْسَمُ النَّجَاسَةُ إِلَى: عَيْنِيَّةٍ وَحُكْمِيَّةٍ.

“நஜீஸ் அய்னிய்யஹ்”, “நஜீஸ் ஹுக்மிய்யஹ்” என இரு வகைப்படும்.

**النَّجَاسَةُ الْعَيْنِيَّةُ:** هِيَ النَّجَاسَةُ الَّتِي لَهَا لَوْنٌ أَوْ طَعْمٌ أَوْ رِيحٌ، أَوْ بَقِيَ جِرْمُهَا. وَتُزَالُ النَّجَاسَةُ الْعَيْنِيَّةُ بِإِزَالَةِ عَيْنِهَا ثُمَّ بِصَبِّ الْمَاءِ الْمُطَهِّرِ عَلَى الْمَوْضِعِ الْمُتَنَجِّسِ فَإِذَا زَالَ اللَّوْنُ وَالطَّعْمُ وَالرِّيحُ أَصْبَحَ الْمَكَانُ طَاهِرًا.

1. **அந்நஜாஸதுல் அய்னிய்யஹ் எனப்படுவது:** நஜீஸின் நிறமோ, சுவையோ, வாடையோ அல்லது அதன் பெறுமானமோ தரிபடுவதாகும்.

**“அந்நஜாஸதுல் அய்னிய்யஹ்” எனும் நஜீஸை நீக்கும் முறை :** நஜீஸின் பெறுமானத்தை நீக்கியதன் பின் நஜீஸ் பட்ட இடத்தின் மீது தானும் சுத்தம் பிறதையும் சுத்தப்படுத்தக்கூடிய தண்ணீரை ஊற்றுவதின் மூலம் அதன் நிறம், சுவை, வாடை நீங்கினால் அந்த இடம் சுத்தமானதாக மாறிவிடும்.

**النَّجَاسَةُ الْحُكْمِيَّةُ:** هِيَ الَّتِي زَالَتْ عَيْنُهَا وَطَعْمُهَا وَلَوْنُهَا وَرِيْحُهَا لَكِنَّهَا لَمْ تُغْسَلْ بِالْمَاءِ.

**"அந்நஜாஸதுல் ஹுக்மிய்யஹ்" எனப்படுவது:** அதனை தண்ணீரினால் கழுவப்படாமல் அதன் பெறுமானம், சுவை, நிறம், வாடை நீங்கிய நஜீஸாகும்.

وَتُزَالُ النَّجَاسَةُ الْحُكْمِيَّةُ بِإِجْرَاءِ الْمَاءِ الْمُطَهِّرِ عَلَيْهَا فَلَوْ وَقَعَ بَوْلٌ عَلَى مَكَانٍ ثُمَّ جَفَّ فَذَهَبَتْ عَيْنُهُ وَانْقَطَعَ لَوْنُهُ وَرِيحُهُ وَطَعْمُهُ فَإِنَّهُ يَكْفِي صَبُّ الْمَاءِ عَلَى هَذَا الْمَكَانِ لِيَطْهُرَ عَنِ النَّجَاسَةِ.

**"அந்நஜாஸதுல் ஹுக்மிய்யஹ்"** எனும் நஜீஸை நீக்கும் முறை: தானும் சுத்தம் பிறரையும் சுத்தப்படுத்தும் தண்ணீரை அதன் மீது ஓடவிடுவதாகும்.

சிறுநீர் ஒரு இடத்தில் விழுந்து பின் அது காய்ந்து அதனுடைய நிறம், வாடை, சுவை நீங்கி விட்டால் அதனை சுத்தம் செய்வதற்கு அந்த இடத்தின் மீது தண்ணீரை ஊற்றுவது போதுமானதாகும்.

ثُمَّ إِنْ كَانَتِ النَّجَاسَةُ نَجَاسَةً كَلْبِيَّةً أَوْ خِنْزِيْرِيَّةً كَأَنْ مَسَّ شَخْصٌ بِيَدِهِ الْمُبْتَلَّةِ كَلْبًا أَوْ خِنْزِيْرًا أَوْ أَصَابَ رِيْقُ الْكَلْبِ أَوِ الْخِنْزِيْرِ شَيْئًا مِنْ جِسْمِهِ أَوْ ثَوْبِهِ فَتُزَالُ هَذِهِ النَّجَاسَةُ بِغَسْلِهَا سَبْعَ مَرَّاتٍ إِحْدَاهُنَّ مَمْزُوْجَةٌ بِالتُّرَابِ الطَّهُوْرِ.

மேற்கூறப்பட்ட நஜீஸ்கள் நாய் மற்றும் பன்றியின் நஜீஸாக இருந்தால் உதாரணமாக ஒரு மனிதன் அவனது ஈரமான கையின் மூலமாக நாயை அல்லது பன்றியை தொட்டால் அல்லது அவனது உடம்பிலோ, ஆடையிலோ, நாய் அல்லது பன்றியின் எச்சில் பட்டுவிட்டால் அந்நஜீஸ்களை சுத்தமான நீரினால் ஏழு முறை கழுவுவது கொண்டு நஜீஸ் நீங்கிவிடும். இதில் ஒரு முறை சுத்தமான மண்ணைக் கொண்டு கலக்கப்பட்ட தண்ணீரை உபயோகிக்க வேண்டும்.

**فائدة:** الْحَيَوَانَاتُ – وَهِيَ حَيَّةٌ – كُلُّهَا طَاهِرَةٌ إِلَّا الْكَلْبَ وَالْخِنْزِيْرَ وَمَا تَوَلَّدَ مِنْهُمَا أَوْ مِنْ أَحَدِهِمَا.

**குறிப்பு:** நாய், பன்றி மற்றும் அவற்றின் மூலம் பிறந்தவைகள், அவற்றில் ஒன்றின் மூலம் பிறந்தவைகளை தவிர ஏனைய அனைத்து மிருகங்களும் உயிரோடு இருக்கும் போது சுத்தமானவைகளாகும்.

**أسئلة**

**1**– اذكر بعض الأمثلة عن النجاسة.

**2**– إلى كم قسم تقسم النجاسة؟ وما هي النجاسة العينية؟

**3**– كيف تزال النجاسة العينية؟

**4**– ما هي النجاسة الحكمية؟ وكيف تزال؟

**5**– كيف تزال النجاسة الكلبية أو الخنزيرية؟

**6**– أي الحيوانات نجسة؟

பாடம் : 3 الدرس — 3

## الْوُضُوْءُ: الْفَرَائِضُ وَالسُّنَنُ

## வுழூவின் பர்ளுகளும் ஸுன்னத்களும்

الْوُضُوْءُ شَرْطٌ مِنْ شُرُوْطِ صِحَّةِ الصَّلَاةِ لِقَوْلِهِ تَعَالى:

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِذَا قُمۡتُمۡ إِلَى ٱلصَّلَوٰةِ فَٱغۡسِلُواْ وُجُوهَكُمۡ وَأَيۡدِيَكُمۡ إِلَى ٱلۡمَرَافِقِ وَٱمۡسَحُواْ بِرُءُوسِكُمۡ وَأَرۡجُلَكُمۡ إِلَى ٱلۡكَعۡبَيۡنِۚ ٦﴾

(سورة المائدة)

வுழூஉ செய்வது தொழுகை நிறைவேறுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகும்.

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களையும், முழங்கைகள் உட்பட உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். மேலும், உங்கள் தலைகளை (தண்ணீரினால்) தடவிக் கொள்ளுங்கள். கரண்டைக் கால்கள் உட்பட உங்கள் கால்களையும் கழுவிக்கொள்ளுங்கள்.”**

**(அத்தியாயம் : அல்-மாஇதஹ் வசனம் : 6)**

وَلِلْوُضُوْءِ فُرُوْضٌ وَسُنَنٌ وَمُبْطِلَاتٌ.

வுழூவிற்கு பர்ளுகளும், ஸுன்னத்துக்களும், அதனை முறிக்கக்கூடிய விடயங்களும் உள்ளன.

فُرُوْضُ الْوُضُوْءِ:

வுழூவின் பர்ளுகள்

لِلْوُضُوْءِ سِتَّةُ فُرُوْضٍ لَا يَصِحُّ بِدُوْنِ وَاحِدٍ مِنْهَا، وَهِيَ:

வுழூவிற்கு ஆறு பர்ளுகள் உள்ளன. அவைகளில் ஒன்றை விடுவதனால் வுழூஉ நிறைவேறமாட்டாது அவைகள் பின்வருமாறு.

1- **النِّيَّةُ:** وَمَكَانُهَا الْقَلْبُ وَتَكُوْنُ مُقْتَرِنَةً بِغَسْلِ الْوَجْهِ فَيَقُوْلُ بِقَلْبِهِ: (نَوَيْتُ الْوُضُوْءَ) مَثَلًا.

1. **அந்நிய்யத்:** இதன் இடம் உள்ளமாகும். இது முகத்தை கழுவுவதுடன் சேர்ந்து இருப்பது அவசியமானதாகும். "வுழூஉ செய்வதை நிய்யத்து வைத்துவிட்டேன்" என உள்ளத்தினால் கூறுவார்.

2- **غَسْلُ الْوَجْهِ جَمِيْعِهِ:** مِنْ مَنَابِتِ شَعَرِ الرَّأْسِ إِلَى الذَّقَنِ، وَمِنَ الْأُذُنِ إِلَى الْأُذُنِ.

2. **முகத்தை பூரணமாக கழுவுதல்:** அதாவது தலை முடி முளைக்க ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து நாடிக்குழி வரையிலும், ஒரு காதில் இருந்து மற்றைய காது வரையிலும் கழுவதாகும்.

3- **غَسْلُ الْيَدَيْنِ مَعَ الْمِرْفَقَيْنِ:** والمرفقُ هو مُجْتَمِعُ عَظْمَيِ السَّاعِدِ والعَضُدِ.

3. இரு கைகளையும் விரல் நுனியிலிருந்து இரு முழங்கை உட்பட கழுவுதல்.

4- **مَسْحُ الرَّأْسِ أَوْ بَعْضِهِ:** فَيَكْفِي مَسْحُ بَعْضِ الرَّأْسِ.

4. **தலை முழுவதையும் அல்லது தலையின் ஒரு பகுதியை தண்ணீரினால் தடவுதல்:** தலையில் ஒரு பகுதியை நீரால் தடவுவது போதுமாகும்.

5- **غَسْلُ الرِّجْلَيْنِ مَعَ الْكَعْبَيْنِ:** وَالْكَعْبَانِ هُمَا الْعَظْمَانِ النَّاتِئَانِ عِنْدَ مَفْصَلِ السَّاقِ وَالْقَدَمِ.

5. **இரு கால்களையும் கரண்டைக் கால் உட்படக் கழுவுதல். கரண்டைக்கால் என்பது:** கால் பாதம், முன்னங்கால் என்பவற்றின் மூட்டில் வெளிப்பட்டிருக்கும் இரு எலும்புகளாகும்.

6- **التَّرْتِيْبُ:** أي تَرْتِيبُ الْفَرَائِضِ كَمَا وَرَدَتْ، بِحَيْثُ تَكُوْنُ النِّيَّةُ عِنْدَ غَسْلِ الْوَجْهِ أَوَّلاً ثُمَّ غَسْلُ الْوَجْهِ ثُمَّ الْيَدَيْنِ ثُمَّ مَسْحُ بَعْضِ الرَّأْسِ ثُمَّ غَسْلُ الرِّجْلَيْنِ.

6. மேற்கூறப்பட்டது போன்று இந்த விடயங்களை ஒழுங்கு முறைப்படி செய்தல்.
**குறிப்பு:** வுழூஉ செய்யும் ஒழுங்குமுறை

1. முகத்தை கழுவும் போது நிய்யத் வைத்தல்.
2. முகத்தை கழுவுதல்.
3. இரு கைகளையும் முழங்கை உட்பட கழுவுதல்.
4. தலையின் சில பகுதியை தண்ணீரினால் தடவுதல்.
5. இரு கால்களையும் கரண்டைக்கால் உட்பட கழுவுதல்.

## سُنَنُ الْوُضُوْءِ

## வுழூவின் ஸுன்னத்துகள்

وَهِيَ أَفْعَالٌ يَصِحُّ الْوُضُوْءُ بِدُوْنِهَا وَلَكِنْ يَفُوْتُ ثَوَابُهَا، فَمَنْ تَرَكَ سُنَّةً مِنْ سُنَنِ الْوُضُوْءِ صَحَّ وُضُوْؤُهُ، أَمَّا مَنْ تَرَكَ فَرْضًا مِنْ فُرُوْضِ الْوُضُوْءِ فَلَا يَصِحُّ وُضُوْؤُهُ.

வுழூவின் ஸுன்னத்துக்கள் விடுபட்டாலும் வுழூஉ நிறைவேறும் ஆனால் அவற்றை விடுவதன் மூலம் அதன் நன்மை தவறிவிடும். யாரேனும் ஒருவர் வுழூவின் ஸுன்னத்துக்களில் ஒன்றை விட்டால் வுழூ நிறைவேறும் ஆனால் வுழூவின் பர்ளுகளில் ஒன்றை விட்டால் வுழூஉ நிறைவேறாது.

## فَمِنْ سُنَنِ الْوُضُوْءِ

## வுழூவின் ஸுன்னத்துகளில் சில

1- **التَّسْمِيَةُ:** أي قَوْلُ بِسْمِ اللهِ.

1. **"பிஸ்மில்லாஹ்"** கூறுதல்.

2- **غَسْلُ الْكَفَّيْنِ إِلَى الْكُوْعَيْنِ.**

2. இரு கைகளையும் மணிக்கட்டு உட்பட கழுவுதல்.

**3- اسْتِعْمَالُ السِّوَاكِ.**

3. "மிஸ்வாக்" செய்தல்.

4- **الْمَضْمَضَةُ** أي إِجْرَاءُ الْمَاءِ فِي الْفَمِ.

4. வாய் கொப்பளித்தல். அதாவது வாய்க்குள் தண்ணீரை ஓட விடுதல்.

5- **الاسْتِنْشَاقُ** أي إِدْخَالُ الْمَاءِ إِلَى دَاخِلِ الْأَنْفِ.

5. நாசிக்கு தண்ணீர் செலுத்துதல். அதாவது மூக்கின் உட்பகுதிக்கு தண்ணீரை செலுத்துதல்.

**6- مَسْحُ جَمِيْعِ الرَّأْسِ.**

6. தலை முழுவதையும் தண்ணீரினால் தடவுதல்.

**7- مَسْحُ الْأُذُنَيْنِ ظَاهِرِهِمَا وَبَاطِنِهِمَا بِمَاءٍ جَدِيْدٍ.**

7. இரு காதுகளின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் (தலையை மஸ்ஹு செய்வதற்கு பாவித்த தண்ணீரல்லாத வேறு) தண்ணீரால் தடவுதல்.

**8- تَخْلِيْلُ أَصَابِعِ الْيَدَيْنِ وَالرِّجْلَيْنِ وَاللِّحْيَةِ الْكَثِيْفَةِ.**

8. இரு கைகளின் மற்றும் இரு கால்களின் விரல்களையும், அடர்த்தியான தாடியையும் கோரிக் கழுவுதல்.

**9- الْبَدْءُ بِالْيُمْنَى قَبْلَ الْيُسْرَى.**

9. இடதிற்கு முன் வலதை ஆரம்பித்தல்.

10- **التَّثْلِيْثُ:** أي غَسْلُ مَا يُغْسَلُ ثَلَاثَ مَرَّاتٍ وَمَسْحُ مَا يُمْسَحُ ثَلَاثَ مَرَّاتٍ.

10. மூன்று மூன்று விடுத்தம் செய்தல். அதாவது கழுவப்படக்கூடிய உறுப்புகளை மூன்று தடவைகள் கழுவுதல். இன்னும் தண்ணீரினால் தடவப்படக்கூடிய உறுப்புகளை மூன்று தடவைகள் தண்ணீரால் தடவுதல்.

11- **دَلْكُ الْأَعْضَاءِ** أي إِمْرَارُ الْيَدِ عَلَى الْعُضْوِ الْمَغْسُوْلِ.

11. உறுப்புக்களை தேய்த்துக் கழுவுதல் : அதாவது கழுவப்படும் உறுப்புக்களை கையினால் தேய்த்துக் கழுவுதல்.

12- **الْمُوَالَاةُ:** أي غَسْلُ الْعُضْوِ قَبْلَ أَنْ يَجِفَّ الْمَاءُ عَنِ الْعُضْوِ الَّذِي قَبْلَهُ.

12. தொடர்ச்சியாக செய்தல்: அதாவது கழுவப்பட்ட உறுப்பு காய்வதற்கு முன்னர் அடுத்த உறுப்பைக் கழுவுதல்.

**13- اسْتِدَامَةُ النِّيَّةِ مِنْ أَوَّلِ الْعَمَلِ إِلَى ءاخِرِهِ.**

13. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வுழூவின் நிய்யத்தை தொடர்ச்சியாக வைத்திருத்தல்.

**14- التَّقْلِيْلُ فِي مَاءِ الْوُضُوْءِ كَمُدٍّ.**

14. வுழூஉ செய்யும் போது நீரைக் குறைவாகப் பயன் படுத்தல். ஒரு "முத்து" (நடுத்தரமான இரு கைகளில் நிரம்பும்) அளவு நீரைப் பயன்படுத்துவதைப் போல.

15- **الْغُرُّ:** وَهُوَ الزِّيَادَةُ فِي غَسْلِ الْوَجْهِ عَلَى الْمَفْرُوْضِ غَسْلُهُ مِنْ جَمِيْعِ جَوَانِبِهِ.

15. முகத்தில் கட்டாயம் கழுவவேண்டிய பகுதிகளை விட அதிகப்படுத்தி கழுவுதல்.

16- **وَالتَّحْجِيْلُ:** وَهُوَ الزِّيَادَةُ فِي غَسْلِ الْيَدَيْنِ وَالرِّجْلَيْنِ عَلَى الْمَفْرُوْضِ غَسْلُه.

16. அத்தஹ்ஜீல்: அதுவாகிறது இரு கைகள் மற்றும் இரு கால்களில் கட்டாயம் கழுவவேண்டிய பகுதிகளை விட அதிகப்படுத்தி கழுவுவதாகும்.

وَيُسَنُّ أَنْ يَقُوْلَ بَعْدَ الانْتِهَاءِ مِنَ الْوُضُوْءِ:

வுழூஉ செய்து முடிந்ததன் பின் பின்வரும் துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும்.

أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ اللهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِي مِنَ الْمُتَطَهِّرِيْنَ .

## أسئلة

**1**- ما هي الآية التي تدل على فرضيّة الوضوء؟

**2**- كم هي فروض الوضوء ؟ عدّدها.

**3**-أين محلّ النية؟ ومتى ينوي الوضوء؟

**4**- ما هي حدود الوجه في الوضوء؟

**5**- ما هو الواجب غسله في الوضوء من اليدين؟ وما هو المرفق؟

**6**- ما هو القدر الواجب في مسح الرأس؟

**7**- ما هو الواجب في غسل الرجلين؟ وما هما الكعبان؟

**8**- ما معنى الترتيب في الوضوء؟

**9**-عدّد بعض سنن الوضوء.

**10**- ما معنى التسمية؟ والمضمضة؟

**11**- ما معنى التثليث؟ والموالاة؟

**12**- ما هو الغر؟ والتحجيل؟

**13**- ماذا يسنّ أن يقول الشخص بعد الانتهاء من الوضوء؟

## مُبْطِلَاتُ الْوُضُوْءِ

## வுழூவை முறிக்கக்கூடிய விடயங்கள்

مُبْطِلَاتُ الْوُضُوْءِ هِيَ الْأُمُوْرُ الّتِي إِذَا حَصَلَتْ لِلْمُتَوَضِّئِ يَنْتَقِضُ وُضُوْؤُهُ وَلَا يَصِحُّ أَنْ يُصَلِّيَ إِلَّا بَعْدَ أَنْ يَتَوَضَّأَ وُضُوْءًا جَدِيْدًا وَهِيَ:

**வுழூவை முறிக்கக்கூடிய விடயங்கள் என்பது :** வுழூஉ செய்த ஒருவரிடமிருந்து இவைகளில் ஒன்று ஏற்படும் போது வுழூஉ முறிந்து விடும். எனவே புதிதாக வுழூஉ செய்யாமல் அவருக்கு தொழ முடியாது.

خُرُوْجُ شَيءٍ مِنْ أَحَدِ السَّبِيْلَيْنِ (أي القُبُلِ أو الدُّبُرِ ) كَخُرُوْجِ الْبَوْلِ أَوِ الْغَائِطِ أَو الرِّيحِ أَوِالْحَصَى أَوِ الدُّوْدِ أَوْ غَيْرِ ذَلِكَ.

1. சிறுநீர், மலம் அல்லது காற்று அல்லது சிறு கல் அல்லது புளு போன்றவைகள் முன், பின் துவாரங்களில் ஒன்றிலிருந்து வெளியாகுதல்.

وَمَسُّ الْقُبُلِ أَوِ الدُّبُرِ بِبَطْنِ الْكَفِّ بِلَا حَائِلٍ.

2. ஒரு மனிதனுடைய முன்துவாரத்தை அல்லது மலம் வெளியாகும் இடத்தை திரையின்றி உள்ளங்கையினால் தொடுதல்.

وَلَمْسُ بَشَرَةِ الْأَجْنَبِيَّةِ الّتِي تُشْتَهَى بِلَا حَائِلٍ.

3. இச்சை வைக்கப்படக்கூடிய அந்நியப் பெண்ணின் தோலை திரையின்றித் தொடுதல்.

وَزَوَالُ الْعَقْلِ بِجُنُوْنٍ أَوْ إِغْمَاءٍ أَوْ سُكْرٍ.

4. பைத்தியம், மயக்கம், போதை போன்றவற்றின் மூலம் சுய புத்தி நீங்குதல் (அறிவை இழத்தல்).

وَالنَّوْمُ عَلَى غَيْرِ هَيْئَةِ الْمُتَمَكِّنِ، فَمَنْ نَامَ مُمَكِّنًا مَقْعَدَتَهُ بِحَيْثُ لَا يَكُوْنُ بَيْنَ دُبُرِهِ وَبَيْنَ الْأَرْضِ تَجَافٍ لَا يَنْتَقِضُ وُضُوْؤُهُ.

5. காற்று வெளியேறுவதற்கு இடம்பாடான அமைப்பில் தூங்குதல். யார் காற்று வெளியேறுவதற்கு இடம்பாடில்லாத அமைப்பில் அதாவது தான் உட்காரும் இடத்திற்கும் தனது பித்தட்டிற்கும் இடையில் இடைவெளி எதுவும் இல்லாமல் தனது பித்தட்டை உட்காரும் இடத்தில் நன்கு பதித்து யார் தூங்குவாரோ அவரது வுழூஉ முறிந்து விடமாட்டாது.

مَاذَا يَحْرُمُ عَلَى مَنِ انْتَقَضَ وُضُوْؤُهُ؟

வுழூஉ முறிந்தவர் மீது தடுக்கப்பட்ட விடயங்கள் எவை ?

مَنِ انْتَقَضَ وُضُوْؤُهُ تَحْرُمُ عَلَيْهِ الصَّلَاةُ: صَلَاةُ الْفَرْضِ وَالسُّنَّةِ وَالطَّوَافُ بِالْبَيْتِ إِنْ كَانَ طَوَافَ الْفَرْضِ أَوْ طَوَافَ التَّطَوُّعِ لِأَنَّ الطَّوَافَ بِمَنْزِلَةِ الصَّلَاةِ إِلَّا أَنَّهُ يَحِلُّ فِيْهِ كَلَامُ النَّاسِ.

யாருடைய வுழூஉ முறிந்து விடுமோ அவருக்கு தொழுவது (அது பர்ளான தொழுகையாக அல்லது ஸுன்னத்தான தொழுகையாக இருப்பினும்) ஹறாமாகும். மேலும் அவருக்கு **“பைதுல்லாஹ்”** (க:பா)வை தவாப் செய்வது (அது பர்ளான தவாபாக அல்லது ஸுன்னத்தான தவாபாக இருப்பினும்) ஹறாமாகும். ஏனெனில் தவாப் என்பது தொழுகையை போன்றதாகும் என்றாலும் தவாபின் போது பேசுவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

وَيَحْرُمُ أَيْضًا عَلَى مَنِ انْتَقَضَ وُضُوْؤُهُ حَمْلُ الْمُصْحَفِ وَكَذَلِكَ مَسُّهُ أي مَسُّ وَرَقِهِ وَجِلْدِهِ الْمُتَّصِلِ بِهِ إِلَّا لِضُرُوْرَةٍ.

மேலும் வுழூஉ முறிந்தவருக்கு அல்-குர்ஆனை சுமப்பது ஹறாமாகும். இதே போன்றுதான் அதன் தாள்களையும், அதனுடன் சேர்ந்திருக்கும் அட்டையையும் எவ்வித நிர்ப்பந்த சூழ்நிலையுமின்றி தொடுவதும் ஹறாமாகும்.

وَيَجُوْزُ لِمَنِ انْتَقَضَ وُضُوْؤُهُ قِرَاءَةُ الْقُرْءَانِ وَدُخُوْلُ الْمَسْجِدِ وَالْمُكْثُ فِيْهِ.

வுழூஉ முறிந்த ஒருவருக்கு அல்-குர்ஆனை ஓதுவதும், பள்ளியினுல் நுழைவதும், அதில் தரிபடுவதும் ஆகுமானதாகும்.

**أسئلة**

**1- من انتقض وضوؤه متى يصح أن يصلي؟**

**2- ما هي مبطلات الوضوء؟ عدّدها.**

**3- ما معنى السبيلين؟**

**4- ماذا يحرم على من انتقض وضوؤه؟**

**5- اذكر بعض ما يجوز للمحدث فعله.**

பாடம் : 5 الدرس – 5

## الاسْتِنْجَاءُ

## மலசலம் கழித்து சுத்தம் செய்தல்

يَجِبُ الاسْتِنْجَاءُ مِنْ كُلِّ نَجَسٍ رَطْبٍ خَارِجٍ مِنَ السَّبِيْلَيْنِ كَالْبَوْلِ وَالْغَائِطِ.

முன், பின் துவாரத்தினால் வெளியேறும் மலம், சலம் போன்ற ஈரமான நஜீஸ்கள் அனைத்தை விட்டும் சுத்தம் செய்வது கட்டாயமாகும்.

وَالاسْتِنْجَاءُ يَكُوْنُ بِالْمَاءِ الْمُطَهِّرِ أَوْ بِالْقَالِعِ الطَّاهِرِ الْجَامِدِ غَيْرِ الْمُحْتَرَمِ ( كَالْحَجَرِ أَوِ الْوَرَقِ ).

**(இஸ்தின்ஜாஉ)மலசலம் கழித்து சுத்தம் செய்தல் என்பது:** தானும் சுத்தம் பிறரையும் சுத்தப்படுத்தக்கூடிய தண்ணீரைக் கொண்டு அல்லது மார்க்கத்தில் சங்கையான பொருள் அல்லாத, கட்டியான, சுத்தமான, உறிஞ்சும் தன்மையுடைய கல், பேப்பர் போன்ற பொருட்களைக் கொண்டு சுத்தம் செய்வது அவசியமாகும்.

**الاسْتِنْجَاءُ بِالْمَاءِ:** يَصُبُّ الْمُسْتَنْجِي مِنَ الْغَائِطِ الْمَاءَ الْمُطَهِّرَ عَلَى مَخْرَجِ النَّجَاسَةِ وَيَدْلُكُ بِيَدِهِ الْيُسْرَى حَتَّى تَزُوْلَ النَّجَاسَةُ عَنِ الْمَخْرَجِ وَيَطْهُرَ الْمَحَلُّ.

**தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்தல் என்பது:** மலம் கழித்த ஒருவர் சுத்தம் செய்யும் போது சுத்தமான தண்ணீரை நஜீஸ் வெளியேறிய இடத்தின் மீது ஊற்றி, மலம் வெளியேறிய இடத்தை விட்டும் நஜீஸ் நீங்கி, அவ்விடம் சுத்தமாகும் வரைக்கும் தனது இடது கரத்தினால் தேய்ப்பதாகும்.

**الاسْتِنْجَاءُ بِالْأَحْجَارِ:** أَمّا لَوْ أَرَادَ اسْتِعْمَالَ الْقَالِعِ الْجَامِدِ غَيْرِ الْمُحْتَرَمِ كَالْحَجَرِ فَيَمْسَحُ الْمَخْرَجَ بِهِ ثَلَاثَ مَسَحَاتٍ فَإِنْ بَقِيَتِ النَّجَاسَةُ يَمْسَحُ مَرَّةً رَابِعَةً أَوْ أَكْثَرَ حَتَّى يَنْقَى الْمَحَلُّ أَوْ يَمْسَحُ بِثَلَاثِ وَرَقَاتٍ ( مَنَادِيلَ وَرَقِيّة مَثَلًا ) ثَلَاثَ مَسَحَاتٍ أَوْ أَكْثَرَ حَتَّى يَنْقَى الْمَحَلُّ.

**கற்களைக் கொண்டு சுத்தம் செய்தல்:** அதாவது கல் போன்ற சங்கைப் படுத்தப்படாத, கட்டியான, சுத்தமான, உறிஞ்சும் தன்மை கொண்ட பொருளின் மூலம் சுத்தம் செய்ய நாடினால் நஜீஸ் வெளியேறிய இடத்தை அதன் மூலம் மூன்று தடவைகள் தடவுவார். மேலும் அதில் நஜீஸ் தென்பட்டால் அவ்விடம் சுத்தமாகும் வரை நான்கு விடுத்தமோ அல்லது அதை விட அதிகமாகவோ சுத்தம் செய்வார். அல்லது டிஸு பேப்பரைக் கொண்டு மூன்று தடவைகள் தடவுவார். அல்லது அவ்விடம் சுத்தமாகும் வரை அதிகமான விடுத்தங்கள் தடவுவார்.

وَلَا يَكْفِي لِلاسْتِنْجَاءِ بِغَيْرِ الْمَاءِ الْمَسْحُ مَرَّةً وَاحِدَةً حَتّى لَوْ حَصَلَ الْإِنْقَاءُ.

தண்ணீர் அல்லாத ஒன்றைக் கொண்டு சுத்தம் செய்கின்ற போது ஒரு தடவையில் அந்த இடம் சுத்தம் அடைந்தாலும் ஒரு தடவை தடவுவது போதுமாகாது.

وَيُشْتَرَطُ لِلاسْتِنْجَاءِ بِغَيْرِ الْمَاءِ أَنْ يَكُوْنَ:

**தண்ணீர் அல்லாத ஒன்றைக் கொண்டு "இஸ்தின்ஜாஉ"(சுத்தம்) செய்கின்ற போது இருக்க வேண்டிய நிபந்தனைகள் :**

1– **قَبْلَ الْجَفَافِ** فَلَوْ جَفَّ الْخَارِجُ وَجَبَ اسْتِعْمَالُ الْمَاءِ.

1. நஜீஸ் காய்வதற்கு முன் சுத்தம் செய்தல். ஆனால் அந்த நஜீஸ் காய்ந்து விட்டால் தண்ணீரை பயன்படுத்துவது கட்டாயமாகும்.

2- **وَقَبْلَ الانْتِقَالِ** فَلَوِ انْتَشَرَ الْخَارِجُ وَتَوَسَّعَ عَنِ الْمَوْضِعِ الّذي اسْتَقَرَّ فِيْهِ وَجَبَ اسْتِعْمَالُ الْمَاءِ.

2. நஜீஸ் பரவுவதற்கு முன்னர் சுத்தம் செய்தல். ஆனால் நஜீஸ் தரிபட்ட இடத்தை விட்டும் பரவிவிட்டால் தண்ணீரை பயன்படுத்துவது கட்டாயமாகும்.

وَيُسَنُّ الدُّخُوْلُ إِلَى الْخَلَاءِ بِالرِّجْلِ الْيُسْرَى وَالْخُرُوْجُ مِنْهُ بِالْيُمْنَى بِعَكْسِ الْمَسْجِدِ فَالْمَسْجِدُ يُسَنُّ دُخُولُهُ بِالرِّجْلِ الْيُمْنَى وَالْخُرُوْجُ مِنْهُ بِالرِّجْلِ الْيُسْرَى.

மலசல கூடத்திற்கு செல்லும் முறை:

இடது காலை வைத்து கழிவறைக்குள் நுழைவதும், வலது காலை வைத்து கழிவறையை விட்டு வெளியேறுவதும் ஸுன்னத்தாகும். பள்ளிவாயலுக்கு மாற்றமாக, ஏனெனில் வலது காலை வைத்து பள்ளிவாயலுக்குள் நுழைவதும், இடது காலை வைத்து வெளியேறுவதும் ஸுன்னத்தாகும்.

## دعاء

يُسَنُّ لِدَاخِلِ الْخَلَاءِ أَنْ يَقُوْلَ: ((**بِسْمِ اللهِ، اللّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ**)) وَالْبَسْمَلَةُ سَتْرٌ لَهُ عَنْ أَعْيُنِ الْجِنِّ،

கழிவறைக்குள் செல்பவன்

**“பிஸ்மில்லாஹ் அழ்ழாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஹுபுஸி வல்-ஹபாஇஸி”** என்ற துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும்.

**“பிஸ்மில்லாஹ்”** கூறுவதன் மூலம் ஜின்களின் தீய பார்வைகளை விட்டும் அழ்ழாஹ் அவரைப் பாதுகாக்கின்றான்.

وَيُسَنُّ أَنْ يَقُوْلَ إِذَا خَرَجَ: **((غُفْرَانَكَ، الْحَمْدُ للهِ الّذي أَذْهَبَ عَنِّيَ الْأَذَى وَعَافَانِيْ))**

கழிவறையை விட்டு வெளியேறும் போது **“غُகுப்ரானக அல்-ஹம்து லில்லாஹில்லதீ அத்கப அன்னியல் அதா வஆபானீ”** என்று ஓதுவது ஸுன்னத்தாகும்.

## أسئلة

**1**- ممّ يجب الاستنجاء؟

**2**- بم يكون الاستنجاء؟

**3**- كيف يستنجي الشخص من الغائط بالماء؟

4- كيف يستنجي الشخص بالأجحار؟

**5**- إن مسح ثلاث مسحات وبقيت النجاسة ماذا يفعل؟

**6**- هل يكفي الاستنجاء بغير الماء أن يمسح مسحة واحدة؟

**7**- إذا جفّ الخارج على المخرج هل يكفي الاستنجاء بالأحجار؟

**8**- بأيّ رجل يسن الدخول إلى الخلاء ؟ وبأيّ رجل يسن الخروج منه؟

பாடம் : 6 الدرس — 6

## الْحَدَثُ وَالْغُسْلُ الْوَاجِبُ

## தொடக்கும் கடமையான குளிப்பும்

الْحَدَثُ نَوْعَانِ: حَدَثٌ أَصْغَرُ وَحَدَثٌ أَكْبَرُ.

தொடக்கு இரு வகைப்படும்

1. சிறு தொடக்கு
2. பெருந் தொடக்கு

**الْحَدَثُ الْأَصْغَرُ:** وَهُوَ حُصُوْلُ أَحَدِ الْأَشْيَاءِ الَّتِي تَنْقُضُ الْوُضُوْءَ كَخُرُوْجِ الرِّيْحِ أَوِ الْبَوْلِ أَوِ الْغَائِطِ أَوْ غَيْرِهَا مِنْ مُبْطِلَاتِ الْوُضُوْءِ.

**சிறு தொடக்கு என்பது:** வுழூவை முறிக்கக் கூடிய விடயங்களில் ஒன்று ஏற்படுதல்.

உதாரணம்: காற்று அல்லது சிறுநீர் அல்லது மலம் வெளியேறுதல்.

இன்னும் வுழூஉவை முறிக்கக்கூடிய ஏனைய விடயங்கள்.

**الْحَدَثُ الْأَكْبَرُ:** وَهُوَ حُصُوْلُ أَحَدِ الْأَشْيَاءِ الَّتِي تُوْجِبُ الْغُسْلَ، وَهِيَ خَمْسَةٌ :

**1- خُرُوْجُ الْمَنِيِّ**

**2- وَالْجِمَاعُ**

**3- وَالْحَيْضُ**

**4- وَالنِّفَاسُ**

**5- وَالْوِلَادَةُ**

**பெருந்தொடக்கு என்பது:** குளிப்பை கடமையாக்கக்கூடிய விடயங்களில் ஒன்று ஏற்படுதல்.

இவை ஐந்து விடயங்களாகும்.

1. மணிய் (இந்திரியம்) வெளியேறுதல்.

2. உடலுறவு கொள்ளுதல்.

3. மாதவிடாய் ஏற்படுதல். (பெண்களுக்கு மாதாந்தம் வெளியாகும் கழிவு இரத்தம் வெளிப்படுவது.)

4. பிள்ளை பெற்றதன் பின்பு வெளியாகும் கழிவு இரத்தம் வெளிப்படுவது.

5. பிள்ளைப் பேறு ஏற்படுதல். (பிரசவம்)

وَتَتِمّ الطّهَارَةُ مِنَ الْحَدَثِ الْأَكْبَرِ بِالْغُسْلِ وَلَهُ فُرُوْضٌ وَسُنَنٌ.

فُرُوْضُ الْغُسْلِ اثْنَانِ:

குளிப்பதன் மூலம் பெருந்தொடக்கிலிருந்து முழுமையாக சுத்தமாகலாம்.

இந்த குளிப்பிற்கு பர்ளுகளும், ஸுன்னத்துகளும் உள்ளன.

பெருந்தொடக்கின் குளிப்பிற்கான பர்ளுகள் இரண்டு.

1- **النّيّةُ عِنْدَ غَسْلِ أَوّلِ جُزْءٍ مِنَ الْبَدَنِ** كَأَنْ يَقُوْلَ بِقَلْبِهِ: ((نَوَيْتُ الْغُسْلَ الْوَاجِبَ)) أَوْ ((نَوَيْتُ فَرْضَ الْغُسْلِ)) أَوْ ((نَوَيْتُ رَفْعَ الْحَدَثِ الْأَكْبَرِ)).

உடலின் ஆரம்ப பகுதியைக் கழுவும் போது நிய்யத் வைத்தல்.

அதாவது நிய்யத்தை மனதால் பின்வருமாறு கூறுதல்

- கடமையான குளிப்பை நிறைவேற்றுவதை நிய்யத் வைக்கின்றேன்.

- குளிப்பின் பர்ளை நிறைவேற்றுவதை நிய்யத் வைக்கின்றேன்.
- பெருந்தொடக்கை நீக்குவதை நிய்யத் வைக்கின்றேன்.

2- **وَتَعْمِيْمُ جَمِيْعِ الْبَدَنِ بِالْمَاءِ بَشَرًا وَشَعَرًا وَإِنْ كَثُفَ** وَالْبَشَرُ هُوَ الْجِلْدُ، وَيَجِبُ حَلُّ الضَّفَائِرِ الَّتِي لَا يَصِلُ الْمَاءُ إِلَى بَاطِنِهَا إِلَّا بِحَلِّهَا.

2. தோல், முடி உட்பட (அது அடர்த்தியாக இருந்த போதிலும்) உடலின் அனைத்து பகுதிகளையும் தண்ணீரினால் கழுவிக் கொள்ளல். கட்டப்பட்ட முடிகளை அவிழ்த்து விடுவதன் மூலம் மாத்திரம் நீர் உட்செல்லுமாக இருந்தால் அவற்றை அவிழ்த்து விடுவது அவசியமாகும்.

سُنَنُ الْغُسْلِ: وَهِيَ كَثِيْرَةٌ مِنْهَا:

பர்ளான குளிப்பின் ஸுன்னத்துகள் அதிகமாக உள்ளன. அவைகளில் சில

1- **التَّسْمِيَةُ** أي قَوْلُ (( بِسْمِ اللهِ )) عِنْدَ بَدْءِ الْغُسْلِ.

1. **"பிஸ்மில்லாஹ்"** கூறுதல். அதாவது குளிப்பை ஆரம்பிக்கும் போது **"பிஸ்மில்லாஹ்"** என்று கூறுதல்

**2- وَالْوُضُوْءُ قَبْلَ الْغُسْلِ.**

2. குளிப்பதற்கு முன்னால் வுழூஉ செய்தல்.

**3- وَالدَّلْكُ.**

3. தேய்த்துக் குளித்தல்.

**4- وَالتَّيَامُنُ أي الْبَدْءُ بِالشِّقِّ الْأَيْمَنِ.**

4. குளிக்கும் போது வலது பக்கத்தைக் கொண்டு ஆரம்பித்தல்

5- وَالتَّثْلِيْثُ.

5. மூன்று விடுத்தங்கள் முழு உடலையும் தண்ணீரினால் கழுவுதல்.

6- وَالْمُوَالَاةُ.

6. தொடர்ச்சியாக செய்தல்.

7- وَتَعَهُّدُ الْمَعَاطِفِ كَمَعَاطِفِ الْأُذُنَيْنِ.

7. மடிப்புகளைக் கவனித்தல்.

உதாரணம்: இரு காதுகளின் மடிப்புக்களைப் போல.

الاغْتِسَالَاتُ الْمَسْنُوْنَةُ:

**ஸுன்னத்தான குளிப்புகள்.**

وَهِيَ الاغْتِسَالَاتُ الّتِي يُثَابُ فَاعِلُهَا وَلَا يُعَاقَبُ تَارِكُهَا وَمِنْهَا :

ஸுன்னத்தான குளிப்புகள் என்பது அதனை செய்பவருக்கு நன்மை வழங்கப்படும். அதனை செய்யாமல் விடுபவருக்கு தண்டனை வழங்கப்படமாட்டாது.

**ஸுன்னத்தான குளிப்புகள் சில.**

غُسْلُ الْجُمُعَةِ وَهُوَ ءَاكَدُهَا.

1. ஜும்அஹ் தினத்திற்காக குளித்தல். இது ஸுன்னத் முஅக்கதாவான (நபிய் ﷺ அவர்கள் தொடராக செய்து வந்தவைகள்) குளிப்பாகும்.

وَغُسْلُ الْعِيْدَيْنِ ( الفِطْرِ والأَضْحَى ).

2. ஈதுல் பித்ர், ஈதுல் அழ்ஹா எனும் இரு பெருநாள்களுக்காக குளித்தல்.

وَالْغُسْلُ مِنْ غَسْلِ الْمَيِّتِ.

3. ஜனாஸஹ்வை குளிப்பாட்டியதற்காக குளித்தல்.

وَالْغُسْلُ لِلْمَجْنُوْنِ وَالْمُغْمَى عَلَيْهِ إِذَا أَفَاقَا.

4. பைத்தியம், மயக்கம் என்பவை தெளிந்த போது குளித்தல்.

وَالْغُسْلُ لِلْإِحْرَامِ بِالْحَجِّ أَوِ الْعُمْرَةِ.

5. உம்ரஹ், ஹஜ் வணக்கங்களுக்காக இஹ்ராம் ஆடை அணிவதற்கு குளித்தல்.

وَالْغُسْلُ لِدُخُوْلِ مَكَّةَ وَالْوُقُوْفِ بِعَرَفَةَ وَالْمَبِيْتِ بِمُزْدَلِفَةَ وَلِلطَّوَافِ.

6. இன்னும் மக்காஹ்விற்குள் நுழைவதற்காக குளித்தல்.
அரபாவில் தரிப்பதற்காக குளித்தல்.

முஸ்தலிபஹ்வில் இராத்தரிப்பதற்காக (இரவில் தங்குவதற்காக) குளித்தல்.

தவாபிற்காக குளித்தல்.

**أسئلة**

**1- كم نوعا الحدث؟**

**2- ما هو الحدث الأصغر؟ أعط مثالا.**

**3- ما هو الحدث الأكبر؟**

**4- ما هي الأمور التي توجب الغسل؟**

**5- كيف تتم الطهارة من الحدث الأصغر؟ ومن الحدث الأكبر؟**

**6- ما هي فروض الغسل؟**

**7- متى يجب حل الضفائر؟**

8- **اذكر بعض سنن الغسل.**

**9- ما هي الاغتسالات المسنونة؟ اذكر بعضها.**

பாடம் : 7 الدرس – 7

مَوَاقِيْتُ الصَّلَاةِ

## தொழுகையின் நேரங்கள்

قَالَ تَعَالَى: ﴿إِنَّ ٱلصَّلَوٰةَ كَانَتۡ عَلَى ٱلۡمُؤۡمِنِينَ كِتَٰبٗا مَّوۡقُوتٗا ١٠٣﴾

( سورة النساء )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“நிச்சயமாக தொழுகை மு.்.மின்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்.”**

**(அத்தியாயம் : அந் நிஸாஉ வசனம் : 103)**

الصَّلَاةُ هِيَ أَفْضَلُ الْأَعْمَالِ بَعْدَ الْإِيْمَانِ بِاللهِ وَرَسُوْلِهِ وَقَدْ فَرَضَ اللهُ عَلَى كُلِّ مُسْلِمٍ مُكَلَّفٍ بَالِغٍ عَاقِلٍ خَمْسَ صَلَوَاتٍ فِي الْيَوْمِ وَاللَّيْلَةِ.

அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டதன் பிறகு செய்யப்படும் மிகச் சிறந்த ஒரு வணக்கம் தொழுகையாகும்.

ஒவ்வொரு நாளும் ஐந்து நேரத் தொழுகைகளை பருவத்தை எத்திய, புத்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிம் மீதும் அழ்ழாஹ் கடமையாக்கியிருக்கின்றான்.

فَعَلَيْهِ أَنْ يُحَافِظَ عَلَيْهَا وَيَتَعَلَّمَ كَيْفَ يَدْخُلُ وَقْتُ كُلٍّ مِنْهَا وَكَيْفَ يَخْرُجُ.

எனவே அவர் மீது கடமையாக்கப்பட்ட இத்தொழுகைகளின் நேரங்கள் எப்போது நுழைகின்றன, முடிவடைகின்றன என்பதை அறிந்து வைப்பதும் கட்டாயக் கடமையாகும்.

وَالصَّلَوَاتُ الْخَمْسُ مَعَ أَوْقَاتِهَا هِيَ:

**ஐங்காலத் தொழுகைகளும், அதன் நேரங்களும்.**

**صَلَاةُ الظُّهْرِ:** وَيَبْدَأُ وَقْتُهَا مِنْ مَيْلِ الشَّمْسِ عَنْ وَسَطِ السَّمَاءِ إِلَى جِهَةِ الْمَغْرِبِ وَيَنْتَهِي إِذَا صَارَ ظِلُّ الشَّيْءِ مِثْلَهُ زِيَادَةً عَلَى ظِلِّ الاسْتِوَاءِ وَالْمَقْصُوْدُ بِالشَّيْءِ مَا كَانَ كَالْوَتَدِ الْمَغْرُوْسِ بِشَكْلٍ مُسْتَقِيْمٍ فِي الْأَرْضِ الْمُسْتَوِيَةِ، وَظِلُّ الاسْتِوَاءِ هُوَ ظِلُّ الشَّيْءِ عِنْدَمَا تَكُوْنُ الشَّمْسُ فِي وَسَطِ السَّمَاءِ.

**ளுஹ்ர் தொழுகை:** சூரியன் வானத்தின் நடுப் பகுதியை விட்டும் மேற்கு பக்கமாக சாய்ந்ததிலிருந்து ளுஹ்ருடைய நேரம் ஆரம்பமாகும்.

**“இஸ்திவா”** உடைய நிழலை தவிர்ந்து ஒரு பொருளினுடைய நிழல் அப்பொருள் போன்ற அளவை அடைந்ததும் அதனுடைய நேரம் முடிவடைந்து விடும்.

இங்கு ஒரு பொருள் என்பதன் நோக்கம் சமமான பூமியிலே நேரான வடிவமைப்பில் நட்டப்பட்ட ஒரு தடியை போன்றாகும்.

**“இஸ்திவா”** உடைய நிழல் என்பது: சூரியன் நடு வானில் தரிபட்டிருக்கும் போது பூமியில் தென்படும் நிழலையே குறிப்பிடப்படும்.

فَإِذَا وَقَفَ شَخْصٌ فِي مَكَانٍ مُشَمِّسٍ، وَالشَّمْسُ فِي وَسَطِ السَّمَاءِ يُلَاحَظُ أَنَّ لَهُ ظِلًّا فَهَذَا الظِّلُ هُوَ ظِلُّ الاسْتِوَاءِ،

எனவே சூரியன் நடு வானில் இருக்கும் போது சூரிய ஒளி படுகின்ற இடத்தில் ஒருவர் நின்றால் அவருக்கு நிழல் இருப்பதை கவனிக்கலாம். அந்த நிழலை **“இஸ்திவா”**வுடைய நிழல் என்று சொல்லப்படும்.

فَإِذَا مَالَتِ الشَّمْسُ إِلَى جِهَةِ الْمَغْرِبِ يُلَاحَظُ أَنَّ ظِلَّهُ يَطُوْلُ وَيَتَحَوَّلُ إِلَى جِهَةِ الْمَشْرِقِ وَهَذِهِ عَلَامَةٌ عَلَى دُخُوْلِ وَقْتِ الظُّهْرِ.

நடுவானிலிருந்து சூரியன் மேற்கு பக்கமாக சாய்ந்தால் அந்த நிழல் நீளமாகுவதையும் இன்னும் கிழக்குப் பக்கமாக திரும்புவதையும் கவனிக்க முடியும்.

இதுவே ளுஹ்ருடைய நேரம் நுழைவதற்குரிய அடையாளமாகும்.

**صَلَاةُ الْعَصْرِ:** وَيَبْدَأُ وَقْتُهَا مِنْ بَعْدِ وَقْتِ الظُّهْرِ وَيَنْتَهِي إِذَا غَرُبَتِ الشَّمْسُ.

**அஸ்ர் தொழுகை:** ளுஹ்ருடைய நேரம் முடிவடைந்ததும் அஸ்ர் தொழுகையுடைய நேரம் ஆரம்பமாகிவிடும்.

மேலும் சூரியன் மறைந்ததும் அதனுடைய நேரம் முடிவடைந்து விடும்.

فَإِذَا صَارَ طُوْلُ ظِلِّ الشَّيْءِ مِثْلَهُ زِيَادَةً عَلَى ظِلِّ الاسْتِوَاءِ يَكُوْنُ قَدْ دَخَلَ وَقْتُ الْعَصْرِ وَانْتَهَى وَقْتُ الظُّهْرِ.

**"இஸ்திவா"** உடைய நிழல் அல்லாமல் ஒரு பொருளினுடைய நிழல் அப்பொருளின் அளவுக்கு நீண்டால் அஸ்ருடைய நேரம் நுழைந்து, ளுஹ்ருடைய நேரம் முடிந்து விடும்.

**صَلَاةُ الْمَغْرِبِ:** وَيَبْدَأُ وَقْتُهَا مِنْ غُرُوْبِ الشَّمْسِ أَيْ مَغِيْبِ قُرْصِ الشَّمْسِ كُلِّهِ وَيَنْتَهِي بِمَغِيْبِ الشَّفَقِ الْأَحْمَرِ وَالشَّفَقُ الْأَحْمَرُ هُوَ الاِحْمِرَارُ الَّذِي يَظْهَرُ فِي جِهَةِ الْمَغْرِبِ بَعْدَ مَغِيْبِ الشَّمْسِ.

ம.்.ரிப் தொழுகை : சூரியன் மறைவதன் மூலம் அதாவது சூரியனின் முழு வட்டமும் முழுமையாக மறைந்து விடுவதின் மூலம் ம.்.ரிபுடைய நேரம் ஆரம்பமாகி விடும்.

வானிலே செம்மேகம் மறைவதன் மூலம் அதன் நேரம் முடிவடைந்து விடும்.

செம்மேகம் என்பது : சூரியன் மறைந்ததற்கு பிறகு மேற்கு திசையில் வெளிப்படக்கூடிய சிவப்பு நிறமாகும்.

**صَلَاةُ الْعِشَاءِ:** وَيَبْدَأُ وَقْتُهَا بِمَغِيْبِ الشَّفَقِ الْأَحْمَرِ وَيَنْتَهِي بِطُلُوْعِ الْفَجْرِ.

இஷா தொழுகை : செம் மேகம் மறைந்ததிலிருந்து அதனுடைய நேரம் ஆரம்பித்து, பஜ்ர் உதயமாகுவதன் மூலம் முடிவடைந்து விடும்.

**صَلَاةُ الصُّبْحِ:** وَيَبْدَأُ وَقْتُهَا بِطُلُوْعِ الْفَجْرِ الصَّادِقِ وَهُوَ بَيَاضٌ يَظْهَرُ مُعْتَرِضًا فِي الْأُفُقِ الشَّرْقِيِّ وَيَنْتَهِي بِطُلُوْعِ الشَّمْسِ.

**ஸுப்ஹ் தொழுகை:** ''பஜ்ருஸ்ஸாதிக்'' உதயமாகுவதன் மூலம் ஸுப்ஹ் தொழுகையின் நேரம் ஆரம்பமாகும்.

**''பஜ்ருஸ்ஸாதிக்'' என்பது:** கிழக்கு அடி வானத்தில் பரவலாகவும் அகன்றதாகவும் வெளிப்படக்கூடிய வெள்ளை நிற ஒளியாகும். சூரியன் உதயமாகுவதின் மூலம் ஸுப்ஹுடைய நேரம் முடிவடையும்.

فَتَجِبُ هَذِهِ الصَّلَوَاتُ فِي أَوْقَاتِهَا عَلَى كُلِّ مُسْلِمٍ بَالِغٍ عَاقِلٍ طَاهِرٍ وَمَعْنَى **طَاهِر** الْمَرْأَةُ الطَّاهِرُ مِنَ الْحَيْضِ وَالنِّفَاسِ.

குறிப்பு: பருவத்தை எத்திய, புத்தியுள்ள, சுத்தமான, அனைத்து முஸ்லிம்கள் மீதும் தொழுகைகளை அதனுடைய நேரங்களில் நிறைவேற்றுவது கட்டாயமாகும். ஒரு பெண் தாஹிராக (சுத்தமாக) இருத்தல் என்பதன் விளக்கம்: ஒரு பெண் மாதவிடாய், நிபாஸ் (பிள்ளை பெற்றதன் பின்பு வெளியாகும் கழிவு இரத்தம்) போன்றவைகளை விட்டும் சுத்தமாக இருத்தல்.

فَلَا يَجُوْزُ تَقْدِيْمُ الصَّلَاةِ عَلَى وَقْتِهَا أَوْ تَأْخِيْرُهَا عَنْهُ لِغَيرِ عُذْرٍ شَرْعِيٍّ كَالْمَرَضِ الشَّدِيْدِ وَالسَّفَرِ بِشُرُوْطِهِ.

மார்க்கம் அனுமதித்த எக்காரணமுமின்றி இத்தொழுகைகளை அதனுடைய நேரங்களை விட முற்படுத்துவதும், பிற்படுத்துவதும் கூடாது.
மார்க்கத்தில் அனுமதித்த காரணங்களுக்கு உதாரணம் : கடும் நோய் ஏற்படுவதையும் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட பிரயாணம் மேற்கொள்வதையும் குறிப்பிடலாம்.

أسئلة

1- اذكر ءاية تدل على فرضية الصلاة؟

2- ما هو أفضل الأعمال بعد الإيمان بالله ورسوله؟

3- كم صلاة فرض الله على المؤمنين؟

4- كيف يبدأ وقت الظهر؟ وكيف ينتهي؟

5- ماهو ظل الاستواء؟

6- كيف يبدأ وقت العصر؟ وكيف ينتهي؟

7- كيف يبدأ وقت المغرب؟ وكيف ينتهي؟

8- ما هو الشفق الأحمر؟

9- كيف يبدأ وقت العشاء؟ وكيف ينتهي؟

10- كيف يبدأ وقت الصبح؟ وكيف ينتهي؟

11- ما هو الفجر الصادق ؟

12- على من تجب الصلوات الخمس؟ وما معنى طاهر؟

13- متى يجوز تقديم الصلاة على وقتها أو تأخيرها عنه ؟ أعط مثالا.

பாடம் : 8 الدرس – 8

## أَرْكَانُ الصَّلَاةِ وَسُنَنُهَا

## தொழுகையுடைய ருகுன்(கடமை)களும், அதன் ஸுன்னத்துகளும்

الصَّلَاةُ لَهَا أَرْكَانٌ أي فَرَائِضُ ولَهَا سُنَنٌ فَالْأَرْكَانُ هِيَ الْأُمُوْرُ الَّتِي لَا بُدَّ مِنْهَا لِصِحَّةِ الصَّلَاةِ.

தொழுகைக்கு ருகுன்களும் ஸுன்னத்களும் உள்ளன.

**ருகுன்கள் என்பது:** அவைகளின்றி தொழுகை நிறைவேறமாட்டாது.

أَمَّا السُّنَنُ فَهِيَ الْأَشْيَاءُ الَّتِي فِي فِعْلِهَا زِيَادَةُ ثَوَابٍ وَتَرْكُهَا لَا يُبْطِلُ الصَّلَاةَ وَلَا مَعْصِيَةَ فِيْهِ وَنَحْنُ نَفْعَلُهَا اقْتِدَاءً بِالرَّسُوْلِ صلى الله عَلَيْهِ وَسَلَّمَ.

**ஸுன்னத்துக்கள் என்பது:** அவைகளை நிறைவேற்றுவதன் மூலமாக மேலதிக நன்மைகளை அடைந்து கொள்ளலாம். அதனை விடுவது தொழுகையை முறிக்கமாட்டாது. மேலும் அதனை விடுவதில் எவ்வித பாவமும் வழங்கப்படமாட்டாது. அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள், அவர்களது தொழுகைகளில் அவைகளை செய்தார்கள் என்பதனால் நாமும் அவர்களைப் பின்பற்றி அவைகளை செய்கின்றோம்.

أَرْكَانُ الصَّلَاةِ سَبْعَةَ عَشَرَ:

## தொழுகையின் ருகுன்கள் பதினேழாகும்.

1- **النِّيةُ:** وَمَحَلُّهَا الْقَلْبُ فَيَنْوِي الْفَرْضِيَّةَ فِي صَلَاةِ الْفَرْضِ وَيُعَيِّنُ الصَّلَاةَ إِنْ كَانَتْ إِحْدَى الصَّلَوَاتِ الْخَمْسِ أَوْ غَيْرَهَا.

1. **நிய்யத்து வைத்தல்:** அதன் இடம் உள்ளமாகும். இன்னும் பர்ளான தொழுகையிலே பர்ளை நிய்யத் வைப்பதும் இன்னும் அந்த தொழுகை ஐங்காலத் தொழுகைகளில் ஒன்றாகவோ அல்லது அது அல்லாததாகவோ இருந்தால் அந்த தொழுகையை குறிப்பிடுவதும் அவசியமாகும்.

2- **وَتَكْبِيْرَةُ الْإِحْرَامِ:** فَيَقُوْلُ بِحَيْثُ يُسْمِعُ نَفْسَهُ ((الله أكبر)) وَتَكُوْنُ النِّيَّةُ مُقْتَرِنَةً بِهَا.

2. **தக்பீரதுல் இஹ்றாம்:** தனக்கு கேட்கும் அளவுக்கு "அழ்ழாஹு அக்பர்" என்று கூறுதல். நிய்யத் இதனுடன் சேர்ந்திருத்தல் வேண்டும்.

3- **وَالْقِيَامُ فِي صَلَاةِ الْفَرْضِ لِلْقَادِرِ:** فَإِنْ لَمْ يَسْتَطِعْ صَلَّى قَاعِدًا فَإِنْ لَمْ يَسْتَطِعْ صَلَّى مُضْطَجِعًا عَلَى جَنْبِهِ فَإِنْ لَمْ يَسْتَطِعْ صَلَّى مُسْتَلْقِيًا.

3. **சக்தியுள்ளவர் பர்ளான தொழுகையிலே நின்று தொழுதல்:** நின்று தொழ சக்தியில்லை என்றால் அமர்ந்து தொழுதல் வேண்டும். இதற்கும் முடியவில்லை என்றால் விலா எலும்பின் மீது ஒருக்கணித்து (சாய்ந்து) தொழுதல் வேண்டும். இதற்கும் முடியவில்லை என்றால் மல்லாக்க சாய்ந்து தொழுதல் வேண்டும்.

4- **وَقِرَءَاةُ الْفَاتِحَةِ:** وَتَجِبُ فِي كُلِّ رَكْعَةٍ بِالْبَسْمَلَةِ وَالتَّشْدِيْدَاتِ الْأَرْبَعَ عَشْرَةَ وَتَجِبُ مُوَالَاتُهَا وَتَرْتِيْبُهَا وَإِخْرَاجُ الْحُرُوْفِ مِنْ مَخَارِجِهَا وَعَدَمُ اللَّحْنِ الْمُخِلِّ بِالْمَعْنَى.

4. **பாதிஹா ஸூறாவை ஓதுதல்:** அனைத்து ரக்அத்திலும் **"பதினான்கு "ஷத்து"**களோடும், **"பிஸ்மில்லாஹ்"** கூறுவதோடும் பாதிஹா ஸூறாவை ஓதுதல் கட்டாயமாகும். இந்த பாதிஹா ஸூறாவினை தொடராகவும், ஒழுங்கு முறையாகவும் இன்னும் அதன் எழுத்துக்கள் வெளியாகும் இடங்களிலிருந்து எழுத்துக்களை சரியாக வெளிப்படுத்தியும் இன்னும் பொருளை மாற்றக்கூடிய தவறுகள் நிகழாமலும் ஓதுவது கட்டாயமாகும்.

5- **وَالرُّكُوْعُ:** بِأَنْ يَنْحَنِي بِحَيْثُ تَنَالُ رَاحَتَاهُ رُكْبَتَيْهِ.

5. **ருகூஉ செய்தல்:** இரு உள்ளங்கைகளும் இரு முழங்கால்களை தொடும் விதத்தில் குனிதல் வேண்டும்.

6- **وَالطُّمَأْنِيْنَةُ فِيْهِ:** بِقَدْرِ قَوْلِ ((سبحان الله)) وَالطُّمَأْنِيْنَةُ هِيَ سُكُوْنُ كُلِّ عَظْمٍ مَكَانَهُ دَفْعَةً وَاحِدَةً.

6. **அதிலே தாமதித்தல்:** அதாவது ஒரே தடவையில் உடலுறுப்புக்கள் அனைத்தும் (குறைந்த பட்சம்) **"ஸுப்ஹானழ்ழாஹ்"** என்று சொல்லுமளவுக்கு அமைதி பெற்றிருத்தல் வேண்டும்.

7- وَالاعْتِدَالُ: بِأَنْ يَنْتَصِبَ بَعْدَ الرُّكُوْعِ قَائِمًا.

7. **இஃதிதாலுக்கு வருதல்:** அதாவது ருகூவிற்கு பின்னால் நேராக நிற்றல் வேண்டும்.

**8- وَالطُّمَأْنِيْنَةُ فِيْهِ.**

8. அதிலே தாமதித்தல்.

9-**وَالسُّجُوْدُ مَرَّتَيْنِ:** بِأَنْ يَضَعَ جَبْهَتَهُ كُلَّهَا أَوْبَعْضَهَا عَلَى مُصَلَّاهُ مَكْشُوْفَةً وَمُتَثَاقِلًا بِهَا وَيَضَعَ شَيْئًا مِنْ رُكْبَتَيْهِ وَمِنْ بُطُوْنِ كَفَّيْهِ وَمِنْ بُطُوْنِ أَصَابِعِ رِجْلَيْهِ.

9. **இரு தடவை "ஸுஜூத்" செய்தல்:** தொழுகின்ற இடத்தின் மீது நெற்றி முழுவதையும் அல்லது அதில் சிலதை திறக்கப்பட்ட நிலையிலும், பூமி தலையின் பாரத்தை பெற்றுக் கொள்கின்ற விதத்திலும் நெற்றியை வைத்தல் வேண்டும்.

ஸுஜூத் செய்யும் போது ஸுஜூத் செய்யவேண்டிய இடத்தில் வைக்கப்பட வேண்டிய உறுப்புகள் ஏழு உள்ளன. அவைகள் பின்வருமாறு:

1. நெற்றி
2. இரு முட்டுக்கால்களின் ஒரு பகுதி.
3. இரு உள்ளங்கைகளினது உட்பகுதிகளில் சில.
4. இரு கால் விரல்களினது உட்பகுதிகளில் சில.

**10- وَالطُّمَأْنِيْنَةُ فِيْهِ.**

10. அதிலே தாமதித்தல்.

11- وَالْجُلُوْسُ بَيْنَ السَّجْدَتَيْنِ.

11. இரு ''ஸஜ்தா''க்களுக்கு மத்தியில் அமர்தல் வேண்டும்.

**12- وَالطُّمَأْنِيْنَةُ فِيْهِ.**

12. அதிலே தாமதித்தல்.

**13**- وَالْجُلُوْسُ الْأَخِيْرُ أَي لِلتَّشَهُّدِ وَمَا بَعْدَهُ مِنَ الصَّلَاةِ عَلَى النَّبِيِّ وَالسَّلَامِ.

13.**கடைசி இருப்பு:** அதாவது இறுதி **"அத்தஹிய்யாத்"** ஓதுவதற்காகவும் அதற்கு பின்னர் முஹம்மத் ﷺ அவர்களின் மீது ஸலவாத் சொல்வதற்காகவும், ஸலாம் கொடுப்பதற்காகவும் உட்காருதல் வேண்டும்.

14- **وَالتَّشَهُّدُ الْأَخِيْرُ:** فَيَقُوْلُ: التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لله السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُه السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ هَذَا أَكْمَلُه وَلَهُ أَقلٌّ.

14. இறுதி **“அத்தஹிய்யாத்”** ஓதுதல் வேண்டும்.

**“அத்தஹிய்யாத்” பரிபூரணமாக ஓதும் முறை :**

التَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لله السَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُه السَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ

அதனை பின்வருமாறு குறைவாகவும் ஓதிக் கொள்ளலாம்.

التَّحِيَّاتُ للهِ سَلَامٌ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ سَلَامٌ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللهِ الصَّالِحِيْنَ أَشْهَدُ أَنْ لَا إِلَه إِلَّا اللهُ وَ أَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ

15- **وَالصَّلَاةُ عَلَى النَّبِيِّ:** وَأَقَلُّهَا ((اللهُمَّ صلِّ على محمّدٍ)) وَالْأَكْمَلُ أَنْ يَأْتِيَ بِالصَّلَاةِ الْإِبْرَاهِيْمِيَّةِ كُلِّهَا.

**பெருமானார் ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லுதல்:**
இதில் குறைந்த அளவு : **“அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்”** என்பதாகும்.

இதில் பரிபூரணமானது **“ஸலாதுல் இப்றாஹிமிய்யஹ்”**வை ஓதுவதாகும்.

16- **وَالسَّلَامُ:** وَأَقَلُّه ((السلام عليكم)).

16. “ஸலாம்” சொல்லுதல்.

இதில் குறைந்த அளவு “**அஸ்ஸலாமு அலைக்கும்**” என்று கூறுவதாகும்.

17- **وَالتَّرْتِيبُ**: أي أَنْ يَأْتِيَ بِالْأَرْكَانِ كَمَا ذَكَرْنَاهَا بِالتَّرْتِيبِ فَمَنْ قَدَّمَ رُكْنًا فِعْلِيًّا عَلَى مَا بَعْدَهُ كَأَنْ سَجَدَ قَبْلَ الرُّكُوعِ عَمْدًا بَطَلَتْ صَلَاتُهُ.

17. ஒழுங்கு முறையாக செய்தல் வேண்டும்.
மேற்கூறப்பட்ட ருகுன்களை ஒழுங்கு முறையாக செய்தல் வேண்டும்.
எனவே ஒருவர் செயல் ரீதியான ருகுனை அதற்கு பின்னால் உள்ள ஒன்றை பார்க்கிலும் முற்படுத்தினால் தொழுகை பாதிலாகும்.
உதாரணம்: வேண்டுமென ருகூவிற்கு முன் ஸுஜூத் செய்தல்.

سُنَنُ الصَّلَاةِ: مِنْهَا:

தொழுகையின் ஸுன்னத்துகளில் சில

1- وَضْعُ الْيَدِ الْيُمْنَى عَلَى كُوْعِ الْيُسْرَى فَوْقَ السُّرَّةِ وَتَحْتَ الصَّدْرِ.

1. நெஞ்சுக்கு கீழாகவும் தொப்புளுக்கு மேலாகவும் இடது கை மணிக்கட்டின் மீது வலதுகையை வைத்தல்.

2- وَقِرَاءَةُ دُعَاءِ الافْتِتَاحِ قَبْلَ قِرَاءَةِ الْفَاتِحَةِ فِي الرَّكْعَةِ الْأُوْلَى فَقَطْ.

2. முதலாவது ரக்அத்திலே மாத்திரம் பாதிஹா ஸூறாவை ஓதுவதற்கு முன் **"துஆஉல் இப்திதாஹ்"** (வஜ்ஜஹத்)தை ஓதுதல்.

3- وَقِرَاءَةُ شَيءٍ مِنَ الْقُرْءَانِ بَعْدَ الْفَاتِحَةِ مِنَ الرَّكْعَتَيْنِ الْأُوْلَيَيْنِ.

3. முதல் இரு ரக்அத்திலும் பாதிஹா ஸூறாவினை ஓதியதற்கு பிறகு அல்-குர்ஆனில் இருந்து ஒரு பகுதியை ஓதுதல்.

4- وَالتَّكْبِيرَاتُ عِنْدَ الرَّفْعِ وَالْخَفْضِ.

4. குனிகின்ற, உயர்கின்ற நேரத்தில் தக்பீர் சொல்லுதல்.

5- وَقَوْلُ ((سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ)) ثَلَاثَ مَرَّاتٍ فِي الرُّكُوْعِ.

5. ருகூஉவில் **"ஸுப்ஹான றப்பியல் அழீம்"** என்று மூன்று முறை ஓதுதல்.

6- وَقَوْلُ ((سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهُ)) فِي الاعْتِدَالِ.

6. நிலையிலே **"ஸமிஅழ்ழாஹு லிமன் ஹமிதஹ்"** என்று கூறுதல்.

7- وَقَوْلُ ((سبحانَ رَبِّيَ الْأَعْلَى)) ثَلَاثَ مَرَّاتٍ فِي السُّجُوْدِ.

7. ஸுஜூதில் **"ஸுப்ஹான றப்பியல் அ.்.லா"** என்று மூன்று முறை ஓதுதல்.

8- وَقَوْلُ ((اللهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَاهْدِنِي وَعَافِنِي وَارْزُقْنِي)) فِي الْجُلُوْسِ بَيْنَ السَّجْدَتَيْنِ.

8. இரு ஸுஜூதிற்கு மத்தியில் அமரும் நேரத்தில் **"அழ்ழாஹும்ம.்.பிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வஆபினீ வர்ஸுக்னீ"** என்று ஓதுதல்.

9- وَقِرَاءَةُ الصَّلَاةِ الْإِبْرَاهِيْمِيَّةِ بَعْدَ التَّشَهُّدِ الْأَخِيْرِ.

9. இறுதி அத்தஹிய்யாத்தை ஓதியதன் பிறகு **"ஸலாதுல் இப்றாஹிமிய்யஹ்"**வை ஓதுதல்.

10- وَزِيَادَةُ ((ورحمةُ اللهِ)) فِي السَّلَامِ فَيَقُوْلُ: ((السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ وَبَرَكَاتُهُ)).

10. ஸலாம் சொல்லும் போது **"வரஹ்மதுழ்ழாஹ்"** என்ற வார்த்தையை அதிகரித்தல். அதாவது அவர் **"அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுழ்ழாஹ் வபராகாதுஹு"** என்று கூறுவார்.

11- وَالتَّسْلِيْمَةُ الثَّانِيَةُ وَالالْتِفَاتُ فِي الْأُوْلَى إِلَى الْيَمِيْنِ وَفِي الثَّانِيَةِ إِلَى الْيَسَارِ .

11. இரண்டாவது ஸலாம் சொல்லல்.
முதலாவது ஸலாம் சொல்லும் போது வலது பக்கம் திரும்புதல். இரண்டாவது ஸலாம் சொல்லும் போது இடது பக்கம் திரும்புதல்.

أسئلة

1- ما هي أركان الصلاة؟

2- أين محل النية؟ وماذا ينوي لو أراد أن يصلي الظهر مثلا؟

3- من عجز أن يصلي قائما ماذا يفعل؟ فإن عجز؟

4- ما هي الأمور التي يجب مراعاتها في الفاتحة؟

5- ما هو الركوع؟ ومامعنى الطمأنينة؟

6- ما معنى الاعتدال؟ وكم مرة السجود في كل ركعة؟

7- اذكر كيفية السجود في الصلاة.

8- ما هو أكمل التشهد الأخير؟

9- ما هو أقل الصلاة على النبي؟ وما هو أقل السلام؟

10- ما معنى الترتيب؟

11- اذكر بعض سنن الصلاة .

12- ماذا يسن أن نقرأ قبل الفاتحة؟

13- ماذا يسن أن نقرأ بعد الفاتحة؟ وفي أي الركعات؟

14- ماذا يسن أن نقول في الركوع؟ وفي الاعتدال؟

15- ماذا يسن أن نقول في السجود؟ وفي الجلوس بين السجدتين؟

பாடம் : 9 الدرس – 9

## شُرُوْطُ صِحَّةِ الصَّلَاةِ

## தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள்

شُرُوْطُ صِحَّةِ الصَّلَاةِ هِيَ الْأُمُوْرُ الَّتِي لَا بُدَّ مِنْهَا لِصِحَّةِ الصَّلَاةِ قَبْلَ الشُّرُوْعِ فِيْهَا وَهِيَ :

ஒரு தொழுகையில் ஈடுபடுவதற்கு முன்னர் அந்த தொழுகை நிறைவேறுவதற்கு அவசியமான விடயங்களுக்கு "தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள்" எனப்படும்.

தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் பின்வருமாறு:

1- **الإِسْلَامُ:** فَلَا تَصِحُّ الصَّلَاةُ مِنْ كَافِرٍ.

1. **முஸ்லிமாக இருத்தல்:** எனவே காபிரிடமிருந்து தொழுகை நிறைவேறமாட்டாது.

2- **وَالتَّمْيِيْزُ:** وَهُوَ أَنْ يَكُوْنَ الْوَلَدُ بَلَغَ مِنَ الْعُمرِ إِلَى حَيْثُ يَفْهَمُ الْخِطَابَ وَيَرُدُّ الْجَوَابَ وَيُشْتَرَطُ أَنْ يَكُوْنَ عَاقِلًا غَيْرَ مَجْنُوْنٍ.

2. **பகுத்தறிவுள்ளவனாக இருத்தல்:** ஒரு குழந்தை, அக்குழந்தையிடம் கேட்கப்படும் பேச்சை விளங்கி அதற்கான பதிலை கூறக்கூடிய ஒரு வயதெல்லையை அடைந்திருத்தல். மேலும் அவன் பைத்தியம் இல்லாமல் புத்தியுடையவனாக இருப்பது நிபந்தனையிடப்படும்.

3- **وَالطَّهَارَةُ مِنَ الْحَدَثَيْنِ:** أَنْ يَكُوْنَ مُتَوَضِّئًا لَيْسَ عَلَيْهِ حَدَثٌ أَصْغَرُ، وَلَيْسَ عَلَيْهِ حَدَثٌ أَكْبَرُ.

**3. இரு தொடக்குகளை விட்டும் சுத்தமாக இருத்தல்:** ஒருவர் சிறு தொடக்கு, பெருந்தொடக்கு என்பவற்றில் இருந்து நீங்கி, வுழூஉ செய்தவராக இருத்தல்.

4– **وَطَهَارَةُ الثِّيَابِ وَالْبَدَنِ وَالْمَكَانِ وَالْمَحْمُوْلِ:** فَإِنْ كَانَ فِي جَيْبِهِ قِطْعَةُ قِمَاشٍ مُتَنَجِّسَةٌ وَصَلَّى بِهَا فَلَا تَصِحُّ صَلَاتُهُ.

4. ஆடை, உடல், இடம், தான் சுமந்திருக்கும் பொருள் சுத்தமாக இருத்தல். நஜீஸான ஆடையின் துண்டு ஒருவருடைய சட்டைப்பையிலே இருந்து அந்த நஜீஸோடு அவர் தொழுதால் அவரது தொழுகை நிறைவேறாது.

5– **وَسَتْرُ الْعَوْرَةِ:** وَعَوْرَةُ الرَّجُلِ مَا بَيْنَ السُّرَّةِ إِلَى الرُّكْبَةِ أَمَّا الْمَرْأَةُ الْحُرَّةُ فَعَوْرَتُهَا جَمِيْعُ بَدَنِهَا مَا عَدَا وَجْهَهَا وَكَفَّيْهَا.

**5. அவ்ரத்தை (உடலில் மறைக்க வேண்டிய பகுதியை) மறைத்தல்:** ஒரு ஆணுடைய **"அவ்ரத்"** தொப்புளுக்கும் முழங்காலுக்கும் மத்தியில் உள்ள பகுதியாகும்.

சுதந்திரமான ஒரு பெண்ணின் **"அவ்ரத்"** முகத்தையும் அவளது மணிக்கட்டுவரையிலான இரு கைகளையும் தவிர உடல் முழுவதுமாகும்.

**6– وَأَنْ يَعْلَمَ الْمُصَلِّي بِدُخُوْلِ وَقْتِ الصَّلَاةِ.**

6. தொழுகின்றவர் தொழுகையின் நேரம் நுழைவதை அறிந்திருத்தல்.

**7– وَأَنْ لَا يَعْتَقِدَ فَرْضًا مِنْ فُرُوْضِهَا سُنَّةً.**

7. தொழுகையின் பர்ளுகளில் ஒரு பர்ளை ஸுன்னத் என உறுதிகொள்ளாதிருத்தல்.

8– **وَاسْتِقْبَالُ الْقِبْلَةِ:** وَهِيَ الْكَعْبَةُ الْمُشَرَّفَةُ فِي مَكَّةَ الْمُكَرَّمَةِ.

8. கிப்லாவை முன்னோக்கியிருத்தல் வேண்டும். அதாவது மக்கா முகர்ரமாவில் உள்ள க.்.பாவை முன்னோக்குதலாகும்.

فَمَنْ أَخَلَّ بِشَرْطٍ مِنْ هَذِهِ الشُّرُوْطِ لَا تَصِحُّ صَلَاتُهُ.

இந்த நிபந்தனைகளில் ஒன்றை யாரேனும் ஒருவர் சீர்குலைத்தால் அவரின் தொழுகை நிறைவேறமாட்டாது.

## أسئلة

**1**-عدد شروط صحة الصلاة.

**2**-ما هو التمييز؟

**3**-ما معنى الطهارة من الحدثين؟

**4**-هل تصح الصلاة إن كان المصلي يحمل نجاسة لا يعفى عنها؟

**5**-ما هي عورة الرجل في الصلاة ؟ وما هي عورة المرأة الحرة؟

**6**-ما هي القبلة؟

**7**-من ترك شيئا من هذه الشروط ما حكم صلاته؟

## مُبْطِلَاتُ الصَّلَاةِ

## தொழுகையை முறிக்கக்கூடியவைகள்

يَنْبَغِي لِلْمُسْلِمِ أَنْ يَكُوْنَ خَاشِعًا لله فِي صَلَاتِهِ وَأَنْ يَجْتَنِبَ كُلَّ مَا يُفْسِدُ الصَّلَاةَ وَيُبْطِلُهَا، وَمُبْطِلَاتُ الصَّلَاةِ مِنْهَا:

ஒரு முஸ்லிம் தொழுகையில் அழ்ழாஹ்வைப் பயந்த நிலையில் தொழுவதும் தொழுகையை முறிக்கக்கூடியவைகளைத் தவிர்ந்திருப்பதும் அவசியமாகும்.

தொழுகையை முறிக்கக்கூடியவைகள் பின்வருமாறு :-

1- أَنْ يَتَكَلَّمَ الْمُصَلِّي بِكَلَامِ النَّاسِ الَّذِي لَيْسَ فِيْهِ ذِكْرُ اللهِ، عَامِدًا ذَاكِرًا أَنَّهُ فِي الصَّلَاةِ، وَلَوْ بِحَرْفَيْنِ أَوْبِحَرْفٍ مُفْهِمٍ مِثْلُ ( قِ ) أَوْ ( عِ ).

1. ஒருவர் தான் தொழுகையில் இருப்பதை ஞாபகித்தவராக (அல்-குர்ஆன், திக்ர் அல்லாத) இரு எழுத்துக்களையோ அல்லது **“கி”(பாதுகாரு), “இ”(மனனமிடு)** போன்ற அர்த்தம் தரும் ஒரு எழுத்தையோ வேண்டுமென்று மொழிந்தால் அவருடைய தொழுகை முறிந்து விடும்.

2- وأَنَ يَفْعَلَ أَفْعَالًا كَثِيْرَةً تسع قَدْرَ رَكْعَةٍ مِنَ الزَّمَنِ وَقَالَ بَعْضُ الْعُلَمَاءِ: تَبْطُلُ الصَّلَاةُ إِذَا فَعَلَ الْمُصَلِّي ثَلَاثَ حَرَكَاتٍ مُتَوَالِيَاتٍ.

2. ஒரு ரக்அத்தை தொழும் கால அளவிற்கு அதிக செயல்களை செய்தல்.
தொழுகின்றவர் தொடராக மூன்று அசைவுகளை செய்தால் அவரது தொழுகை முறிந்து விடும். எனவும் சில அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

3- وَأَنْ يَأْكُلَ ذَاكِرًا أَنَّهُ فِي الصَّلَاةِ، وَلَوْ كَانَ قَلِيْلًا كَحَبَّةِ سِمْسِمٍ.

3. தொழுபவர் தொழுகையில் இருப்பதை நினைவில் கொண்டவராக சாப்பிடுதல், அது எள்ளைப் போன்று குறைவாக இருந்தாலும் சரியே அவருடைய தொழுகை முறிந்து விடும்.

4- وَأَنْ يَشْرَبَ ذَاكِرًا أَنَّهُ فِي الصَّلَاةِ، وَلَوْ كَانَ قَلِيْلًا كَنُقْطَةِ مَاءٍ كَانَتْ عَلَى شَفَتِهِ فَابْتَلَعَهَا.

4. தொழுபவர் தொழுகையில் இருப்பதை நினைவில் கொண்டவராக ஏதாவது குடித்தல் அது குறைவாக இருந்தாலும் சரியே.
உதாரணம் : ஒருவர் தனது உதட்டின் மீது இருக்கும் நீர் துளியை விழுங்கி விடுவதைப் போல.

5- وَأَنْ يَفْعَلَ حَرَكَةً وَاحِدَةً بِقَصْدِ اللَّعِبِ.

5. விளையாடும் நோக்கத்தில் ஒரு அசைவைச் செய்தல்.

6- وَأَنْ يَفْعَلَ حَرَكَةً مُفْرِطَةً، كَأَنْ يَثِبَ وَثْبَةً فَاحِشَةً.

6. வரம்பு மீறிய ஒரு அசைவை செய்தல்.
உதாரணம் : கடுமையான ஒரு பாய்ச்சலை பாய்வதை போல.

7-    وَأَنْ يَزِيْدَ رُكْنًا فِعْلِيًا كَأَنْ يَتَعَمَّدَ السُّجُوْدَ ثَلَاثَ مَرَّاتٍ فِي الرَّكْعَةِ الْوَاحِدَةِ ذَاكِرًا.

7. செயல் சார்ந்த ஒரு பர்ளை அதிகரித்தல்.
உதாரணம் : ஒரே ரக்அத்திலே வேண்டுமென மூன்று தடவைகள் “ஸுஜூத்” செய்வதைப் போல.

8-    وَأَنْ يَنْوِيَ قَطْعَ الصَّلَاةِ، فَإِنَّ الصَّلَاةَ تَبْطُلُ فَوْرًا.

8. தொழுகையை துண்டிப்பதை எண்ணம் வைத்தல். எனவே உடனடியாக தொழுகை முறிந்து விடும்.

9-    وَأَنْ يُعَلِّقَ قَطْعَ الصَّلَاةِ عَلَى حُصُوْلِ شَيءٍ، كَأَنْ يَقُوْلَ فِي نَفْسِهِ: إِنْ جَاءَ أَخِي سَأَقْطَعُ الصَّلَاةَ لِأَفْتَحَ لَهُ الْبَابَ.

9. தொழுகையை இடை நிறுத்துவதை வேறோரு விடயம் ஏற்படுவதின் மீது சப்பந்தப்படுத்துதல்.
உதாரணம் : எனது சகோதரன் வந்தால் தொழுகையை நான் துண்டித்து, கதவை திறப்பேன் என தனக்குள் சொல்லிக் கொள்வதைப் போல.

10-  وَأَنْ يَتَرَدَّدَ هَلْ يَقْطَعُ الصَّلَاةَ أَمْ لَا.

10. தொழுகையை துண்டிப்பதா, இல்லையா என தடுமாறுதல்.

11-  وَأَنْ يَمْضِيَ رُكْنٌ مَعَ الشَّكِّ فِي نِيَةِ التَّحَرُّمِ أَوْ يَطُوْلَ زَمَنُ الشَّكِّ، وَذَلِكَ كَأَنْ أَنْهَى قِرَاءَةَ الْفَاتِحَةَ وَهُوَ شَاكٌّ هَلْ نَوَى الظُّهْرَ أَوِ الْعَصْرَ، وَلَوْ لَمْ يَمْضِ رُكْنٌ لَكِنْ طَالَ وَقْتُ الشَّكِّ كَأَنْ قَرَأَ سَوْرَةَ "تَبَارَكَ" مَثَلًا وَهُوَ شَاكٌّ فِي النِّيَةِ بَطَلَتْ صَلَاتُهُ. أَمَّا إِذَا طَالَ شَكُّهُ فِي عَدَدِ الرَّكَعَاتِ فَلَا يُفْسِدُ ذَلِكَ صَلَاتَهُ .

11. இஹ்றாம் நிய்யத்தில் சந்தேகத்துடன் ஒரு பர்ளை செய்தல் அல்லது சந்தேகத்தின் காலம் நீடித்திருத்தல்.

உதாரணம் : ளுஹ்ரை தொழுவதாக நிய்யத்து வைத்தோமா? அல்லது அஸ்ரை தொழுவதாக நிய்யத்து வைத்தோமா? என்று சந்தேகித்த நிலையில் சூறா பாதிஹாவை ஓதி முடித்தல். அல்லது ஒரு பர்ளை செய்து முடிக்கவில்லை ஆனாலும் சந்தேகத்தின் காலம் நீடித்திருத்தல். இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் தொழுகை முறிந்துவிடும்.

உதாரணம் : நிய்யத்திலே சந்தேகித்த நிலையில் **“தபாரக”** என்று ஆரம்பிக்கும் சூறாவை ஓதுதல்.

குறிப்பு : ரக்அத்தின் எண்ணிக்கையில் சந்தேகம் வந்தால் தொழுகை முறிந்து விடாது.

الأسئلة

1- إذا تكلم المصلي بكلام الناس عمدا ما حكم صلاته؟

2- إذا تكلم بحرفين أو بحرف مفهم ما حكم صلاته؟

3- ما الحكم إذا تحرك في الصلاة ثلاث حركات متواليات؟

4- ما حكم من أكل أو شرب في الصلاة عمدا ؟

5- ما حكم من فعل حركة واحدة بقصد اللعب في أثناء الصلاة؟

6- أعط مثالا عن حركة مفرطة.

7- ما حكم من تعمد زيادة ركن فعلي في صلاته ؟ أعط مثالا.

8- ما الحكم إذا نوى قطع الصلاة؟ أو علق قطعها على شيء؟ أو تردد في القطع؟

9- ما الحكم إذا مضى ركن مع الشك في نية التحرم ؟ أو طال زمن الشك؟

## صَلَاةُ الْجَمَاعَةِ

## ஜமாஅஹ் தொழுகை

حَضَّ سَيِّدُنَا مُحَمَّدٌ صلى الله عليه وسلّم عَلَى صَلَاةِ الْجَمَاعَةِ، وَأَمَرَ أَنْ تُصَلَّى الصَّلَوَاتُ الْخَمْسُ جَمَاعَةً بِحَيْثُ يَظْهَرُ شِعَارُهَا،

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் "ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டும்" என்பதை ஆர்வமூட்டியுள்ளார்கள்.

இன்னும் ஜமாஅத்தின் அடையாளம் வெளிப்படும் விதத்தில் ஐந்து நேரத் தொழுகைகளையும் ஜமாஅத்தாக நிறைவேற்றுமாறும் ஏவியுள்ளார்கள்.

فَإِنَّ اجْتِمَاعَ الْمُسْلِمِيْنَ عَلَى طَاعَةِ الله فِيْهِ خَيرٌ كَبِيْرٌ وَقَدْ قَالَ رسولُ الله صلّى الله عليه وسلّم: ((صَلَاةُ الْجَمَاعَةِ تَفْضُلُ صَلَاةَ الْفَذِّ بِسَبْعٍ وَعِشْرِيْنَ دَرَجَةً)) – رَوَاهُ ابْنُ مَاجه وَالتِّرمذيُّ وَأحمدُ بنُ حنبل – أي أَنْ صَلَاةَ الْجَمَاعَةِ خَيْرٌ وَأَفْضَلُ مِنْ صَلَاةِ الْمُنْفَرِدِ بِسَبْعٍ وَعِشْرِيْنَ دَرَجَةً، وَهِيَ فَرْضُ كِفَايَةٍ عَلَى الرِّجَالِ الْأَحْرَارِ الْمُقِيْمِيْنَ الْبَالِغِيْنَ غَيْرِ الْمَعْذُوْرِيْنَ لِكُلِّ صَلَاةٍ مُفْرُوْضَةٍ تُصَلَّى أَدَاءً.

அழ்ழாஹ்வை வழிப்படும் விடயத்தில் முஸ்லிம்கள் ஒன்று சேர்வதில் மிகப்பெரும் நலவு இருக்கின்றது.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**"ஜமாஅத்தாக தொழுவது தனித்து தொழுவதை விட இருபத்தி ஏழு மடங்குகள் மிகச் சிறந்ததாகும்."**

**(அறிவித்தவர்கள் : இமாம் இப்னு மாஜா, திர்மதீ, அஹ்மத் றஹிமஹுமுல்லாஹ்)**

ஜமாஅத் தொழுகை அதாவது (أداء) "அதாவாக" நிறைவேற்றப்படும் பர்ளான ஒவ்வொரு தொழுகையிலும் தங்கடம் அளிக்கப்படாத, பருவ வயதை அடைந்த, ஊர்வாசியான, சுதந்திரமான, ஆண்களின் மீது பர்ளு கிபாயாவாகும்.

## كَيْفِيَّةُ صَلَاةِ الْجَمَاعَةِ

## ஜமாஅத்தாக தொழும் முறை

يَتَقَدَّمُ الْمُصَلِّيْنَ أَحَدُهُمْ وَيُسْتَحْسَنُ أَنْ يَكُوْنَ أَتْقَاهُمْ وَأَحْسَنَهُمْ تِلَاوَةً لِلْقُرْءَانِ الْكَرِيْمِ وَيُسَمَّى الْإِمَامَ.

தொழக்கூடியவர்கள் அவர்களில் ஒருவரை தொழுகை நடாத்த முன்னால் அனுப்புவார்கள். அவர், அவர்களில் “தக்வா” மிக்கவராகவும், அல்-குர்ஆனை நன்றாக ஓதக்கூடியவராகவும் இருப்பது நல்லதாகும். இவருக்கு இமாம் என்று சொல்லப்படும்.

وَيَقِفُ الْمُصَلُّوْنَ وَرَاءَهُ فِي صُفُوْفٍ مُسْتَوِيَةٍ مُتَرَاصَّةٍ ثُمَّ يُكَبِّرُ الْإِمَامُ تَكْبِيْرَةَ الْإِحْرَامِ وَبَعْدَهُ يُكَبِّرُ الْمُصَلُّوْنَ لِلصَّلَاةِ مَعَ النِّيَّةِ فَيَقُوْلُ كُلُّ وَاحِدٍ مِنْهُمْ بِقَلْبِهِ ( أَثْنَاءَ التَّكْبِيْرِ بِلِسَانِهِ): ((أُصَلِّى فَرْضَ الْعَصْرِ جَمَاعَةً)) مَثَلًا وَالْإِمَامُ يَجْهَرُ بِكُلِّ التَّكْبِيْرَاتِ وَالتَّسْمِيْعِ وَالسَّلَامِ، وَبِالْفَاتِحَةِ وَمَا يَقْرَؤُهُ بَعْدَ الْفَاتِحَةِ، وَالتَّأْمِيْنِ إِنْ كَانَتْ الصَّلَاةُ جَهْرِيَّةً، وَإِنْ كَانَتْ سِرِّيَّةً لَا يَجْهَرُ بِالْفَاتِحَةِ وَالسُّوْرَةِ وَالتَّأْمِيْنِ.

தொழக்கூடியவர்கள் இமாமிற்கு பின்னால் நேராக ஸஃப்புகளில் நிற்பார்கள். பின்பு இமாம் இஹ்றாம் தக்பீர் சொல்வார். அதன் பின்பு மஃமூம்கள் தொழுவதற்காக நிய்யத்துடன் இஹ்றாம் தக்பீர் சொல்வார்கள். மஃமூம்கள் ஒவ்வொருவரும் தக்பீரின் இடையில்

உள்ளத்தால் உதாரணமாக **“உஸல்லி பர்ளல் அஸ்ரி ஜமாஅதன்”** (அஸ்ருடைய பர்ளான தொழுகையை ஜமாஅத்தாக தொழுகிறேன்) என்று கூறிக்கொள்வார்கள். மேலும் அத்தொழுகை **“ஜஹ்ரிய்யத்”தான** (பிறருக்கு கேட்கும் விதத்தில் ஓதப்படும்) தொழுகையாக இருப்பின் இமாம் அனைத்து தக்பீர்களையும், **“ஸமிஅழ்ழாஹு லிமன் ஹமிதஹ்”** என்பதையும், ஸலாமையும், பாதிஹாவையும், அதற்கு பின்னால் ஓதும் ஸூறாவையும், ஆமின் கூறுவதையும் பிறருக்கு கேட்கும் விதத்தில் சொல்வார். மாறாக அத்தொழுகை **“ஸிர்ரிய்யத்”**தானதாக (தனக்கு மாத்திரம் கேட்கும் விதத்தில்) இருப்பின் பாதிஹா, அதற்கு பின்னால் ஓதும் ஸூறா போன்றவைகளை தனக்கு மாத்திரம் கேட்கும் விதத்தில் ஓதுவார்.

وَالْمَأْمُومُ يَجْهَرُ بِالتَّأْمِينِ لِقِرَاءَةِ إِمَامِهِ فَقَطْ وَلَا يَقْرَأُ شَيْئًا بَعْدَ الْفَاتِحَةِ فِي الصَّلَاةِ الْجَهْرِيَّةِ أَمَّا فِي السِّرِّيَّةِ فَيَقْرَأُ.

பின்பு ம.்.மூம்கள், இமாமுடைய கிராஅத்திற்காக மாத்திரம் பிறருக்கு கேட்கும் விதத்தில் **“ஆமீன்”** சொல்வார்கள். இன்னும் **“ஜஹ்ரிய்யத்”**தாக ஓதப்படும் தொழுகையில் பாதிஹாவிற்குப் பிறகு எந்த ஒன்றையும் ஓதமாட்டார்கள். ஆனால் **“ஸிர்ரிய்யத்”**தாக ஓதப்படும் தொழுகையிலே பாதிஹாவிற்குப் பிறகு அல்-குர்ஆனில் ஒரு பகுதியை ஓதிக்கொள்வார்கள்.

## شُرُوْطُ الاقْتِدَاءِ

## இமாமை பின்வற்றுவதன் நிபந்தனைகள்

يَجِبُ عَلَى الْمَأْمُوْمِ مُرَاعَاةُ الْأُمُوْرِ التَّالِيَةِ:

பின்வரக்கூடிய விடயங்களை கவனிப்பது ம.்.மூமிற்கு கட்டாயமாகும்.

أَنْ لَا يَتَقَدَّمَ عَلَى إِمَامِهِ فِي الْمَوْقِفِ وَالْإِحْرَامِ أي لَايَتَقَدَّمَ عَلَى إِمَامِهِ بِعَقِبَيْهِ.

இமாமை தன் இரு குதிகால்களைக் கொண்டு நிற்குமிடத்திலும், இஹ்றாம் தக்பீரிலும் ம.்.மூம் முந்தாமல் இருத்தல் வேண்டும்.

وَأَنْ لَا يُكَبِّرَ تَكْبِيْرَةَ الْإِحْرَامِ إِلَّا بَعْدَ أَنْ يُكَبِّرَ الْإِمَامُ.

இமாம் இஹ்றாம் தக்பீர் சொல்வதற்கு முன் ம.்.மூம் தக்பீர் சொல்லாமல் இருத்தல் வேண்டும்.

وَأَنْ يُتَابِعَ الْإِمَامَ وَلَا يَسْبِقَهُ بِرُكْنَيْنِ فِعْلِيَّيْنِ وَلَا يَتَأَخَّرَ عَنْهُ بِرُكْنَيْنِ فِعْلِيَّيْنِ بِلَا عُذْرٍ وَلَا بِأَكْثَرَ مِنْ ثَلَاثَةِ أَرْكَانٍ طَوِيْلَةٍ وَلَوْ لِعُذْرٍ.

இமாமை பின்பற்றுதல் வேண்டும். அதாவது செயல் ரீதியான இரு ‘‘ருகுன்’’களால் இமாமை முந்துவதும் இன்னும் எவ்வித காரணமுமின்றி பிந்துவதும் கூடாது. இன்னும் ஏதாவது தங்கடம் இருந்தாலும் நீளமான மூன்று ‘‘ருகுன்’’களை விட அதிகமான ‘‘ருகுன்’’களால் இமாமை முந்தவோ, பிந்தவோ கூடாது.

وَأَنْ يَعْلَمَ بِانْتِقَالَاتِ إِمَامِهِ مِنْ رُكْنٍ إِلَى رُكْنٍ إِمَّا بِسَمَاعِ صَوْتِهِ أَوْ صَوْتِ مُبَلِّغٍ عَدْلٍ.

இமாமின் சத்தத்தை செவிமடுப்பதன் மூலமோ அல்லது நீதமான எத்திவைப்பவரின் சத்தத்தை செவிமடுப்பதன் மூலமோ இமாம் ஒரு **‘‘ருகுனில்’’** இருந்து இன்னொரு **‘‘ருகுனுக்கு’’** செல்லும் நகர்வுகளை ம.்.மூம் அறிதல் வேண்டும்.

وَأَنْ يَجْتَمِعَ الْإِمَامُ وَالْمَأْمُوْمُ فِي مَكَانٍ وَاحِدٍ، فَإِنْ كَانَا فِي مَسْجِدٍ صَحّ الِاقْتِدَاءُ وَإِنْ بَعُدَتِ الْمَسَافَةُ بِشَرْطِ أَنْ لَا يَتَقَدّمَ الْمَأْمُوْمُ عَلَى الْإِمَامِ، وَإِنْ كَانَا فِي غَيْرِ الْمَسْجِدِ فَشَرْطُهُ أَنْ لَا تَزِيْدَ الْمَسَافَةُ بَيْنَهُمَا عَلَى ثَلَاثِمِائَةِ ذِرَاعٍ.

இமாமும், ம.:.மூமும் ஒரே இடத்தில் ஒன்று சேர்ந்திருத்தல் வேண்டும். ஒரே பள்ளிவாயலில் இவ்விருவரும் இருந்தால் இமாமை ம.:.மூம் முந்தி நிற்காமல் இருத்தல் வேண்டும். என்ற நிபந்தனையைக் கொண்டு இவ்விருவருக்குமிடையில் உள்ள தூரம் அதிகமாக இருந்தாலும் பின்பற்றுதல் நிறைவேறும். ஆனால் இவ்விருவரும் பள்ளி அல்லாத இடங்களில் இருந்தால் இருவருக்கும் மத்தியில் முந்நூறு முழத்தை விட தூரம் அதிகரிக்காமல் இருப்பதை நிபந்தனையிடப்படும்.

وَأَنْ لَا يَحُوْلَ بَيْنَهُمَا حَائِلٌ يَمْنَعُ الْمُرُوْرَ.

இமாம் அளவில் நடந்து செல்வதைத் தடுக்கக்கூடிய எந்தவொரு தடையும் இமாமுக்கும், ம.:.மூமுக்கும் மத்தியில் இருக்கக்கூடாது.

وَأَنْ يَتَوَافَقَ نَظْمُ صَلَاتَيْهِمَا فَلَا تَصِحُّ قُدْوَةُ مُصَلِّي إِحْدَى الصَّلَوَاتِ الْخَمْسِ خَلْفَ مَنْ يُصَلِّي صَلَاةَ الْجَنَازَةِ لِأَنَّ الصَّلَوَاتِ الْخَمْسَ فِيْهَا رُكُوْعٌ وَسُجُوْدٌ أَمَّا صَلَاةُ الْجَنَازَةِ فَلَيْسَ فِيْهَا رُكُوْعٌ وَلَا سُجُوْدٌ.

அவ்விருவரின் தொழுகையின் அமைப்பு ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். அதாவது ஐவேளைத் தொழுகையில் ஒன்றை தொழும் ஒருவர் ஜனாஸஹ் தொழுகை நிறைவேற்றுபவரை பின்பற்றுவது கூடாது. ஏனெனில் ஐவேளைத் தொழுகைகளில் ருகூஉ, ஸுஜூது உள்ளன. ஆனால் ஜனாஸஹ் தொழுகையில் ருகூஉ, ஸுஜூது இல்லை.

وَأَنْ لَا يَتَخَالَفَا فِي سُنَّةٍ تَفْحُشُ الْمُخَالَفَةُ فِيْهَا كَالْجُلُوْسِ لِلتَّشَهُّدِ الْأَوَّلِ فِعْلًا وَتَرْكًا أي إِنْ جَلَسَ الْإِمَامُ جَلَسَ الْمَأْمُوْمُ مَعَهُ وَإِنْ تَرَكَهُ قَامَ مَعَهُ.

கடுமையான மாற்றம் ஏற்படும் ஒரு ஸுன்னத்தில் இருவரும் அதனைச் செய்வதிலோ, விடுவதிலோ மாறுபடாதிருத்தல் வேண்டும். உதாரணம் : முதலாவது அத்தஹிய்யாத்திற்கு அமர்வதைப் போல.

அதாவது இமாம் முதலாவது அத்தஹிய்யாத்திற்கு அமர்ந்தால் ம.்.மூமும் அவருடன் அமர்ந்து விடுவார். இமாம் அதனை விட்டு விட்டால் ம.்.மூமும் அதனை விட்டுவிடுவார்.

وَأَنْ يَنْوِيَ الِاقْتِدَاءَ أَوِ الْجَمَاعَةَ قَبْلَ الْمُتَابَعَةِ وَطُوْلِ الِانْتِظَارِ أَمَّا فِي صَلَاةِ الْجُمُعَةِ فَتَكُوْنُ نِيَّةُ الِاقْتِدَاءِ أَثْنَاءَ تَكْبِيْرَةِ الْإِحْرَامِ.

இமாமை பின்துயர முன்னரும் அவரை அதிக நேரம் எதிர்பார்க்க முன்னரும் ம.்.மூம் இமாமை பின்பற்றுகின்றேன் அல்லது ஜமாஅத்தாக தொழுகின்றேன் என்ற நிய்யத்தை வைக்க வேண்டும்.எனினும் ஜும்அஹ் தொழுகையில் இஹ்றாம் தக்பீர் சொல்வதற்கு மத்தியில் இமாமை பின்பற்றுகின்றேன் என்று நிய்யத்து வைப்பது அவசியமாகும்.

## أسئلة

1-اذكر حديثا عن رسول الله في الحثّ على صلاة الجماعة.

2-ما الحكم إذا تقدم المأموم على الإمام في الموقف والإحرام؟

3-متى يكبر المأموم؟

4-ما الحكم إذا تقدم المأموم على الإمام بركنين فعليين؟

5-ما الحكم إذا تأخّر المأموم عن الإمام بركنين فعليين بلا عذر؟

6- كيف يعلم المأموم بانتقالات الإمام؟

7-هل تصح القدوة إذا حال بينهما حائل يمنع المرور؟

8-لم لا تصح قدوة مصلي الظهر خلف من يصلي صلاة الجنازة؟

## صَلَاةُ الْجُمُعَةِ

## ஜும்அஹ் தொழுகை

يَوْمُ الْجُمُعَةِ هُوَ أَفْضَلُ أَيَّامِ الْأُسْبُوْعِ.

வார நாட்களில் மிகச் சிறந்த நாள் வெள்ளிக்கிழமையாகும்.

قَالَ رسولُ اللهِ صلّى اللهُ عَليهِ وَسَلَّمَ: (( **خَيْرُ يَوْمٍ طَلَعَتْ عَلَيْهِ الشَّمْسُ يَوْمُ الْجُمُعَةِ فِيْهِ خُلِقَ ءادَمُ وفِيْهِ أُدْخِلَ الْجَنَّةَ وَفِيْهِ أُخْرِجَ مِنْهَا** )) -رواه مُسلم-

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“சூரியன் உதயமாகும் தினங்களில் மிகச் சிறந்த தினம் ஜும்அஹ் தினமாகும். ஏனெனில் அத்தினத்தில் தான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கவும் பட்டார்கள் மேலும் அத்தினத்தில் தான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவர்க்கத்துக்குள் நுழைக்கவும் பட்டார்கள். மேலும் அத்தினத்தில் தான் பூமிக்கு இறக்கவும் பட்டார்கள்.”**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் றஹிமஹுல்லாஹ்)**

وَقَدْ فَرَضَ اللهُ تَعَالَى فِيْهِ صَلَاةً يَجْتَمِعُ فِيْهَا الْمُسْلِمُوْنَ فِي الْمَسْجِدِ الْجَامِعِ فِي كَافَّةِ الْبُلْدَانِ الْإِسْلَامِيَّةِ لِأَدَائِهَا.

அல்லாஹ் தஆலா இந்த நாளில் ஒரு தொழுகையை கடமையாக்கியுள்ளான்.

அந்தக் கடமையை நிறைவேற்றுதவற்காக இஸ்லாமிய ஊர்களிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் பள்ளி வாயலிலே ஒன்று சேர்வார்கள்.

وَصَلَاةُ الْجُمُعَةِ فَرْضُ عَيْنٍ عَلَى الذُّكُوْرِ الْأَحْرَارِ الْمُقِيْمِيْنَ الْبَالِغِيْنَ غَيْرِ الْمَعْذُوْرِيْنَ، ( وَمِنَ الْعُذْرِ الشَّرْعِيِّ أَنْ يَكُوْنَ الْمُسْلِمُ مَرِيْضًا مَرَضًا شَدِيْدًا يَشُقُّ عَلَيْهِ مَعَهُ الذَّهَابُ إِلَى الْمَسْجِدِ ).

இந்த ஜும்அஹ் தொழுகை சுதந்திரமான ஊர்வாசிகளான பருவத்தை அடைந்த மார்க்கம் அனுமதித்த காரணமுடையவர் அல்லாத ஆண்கள் மீது கடமையாகும்.

மார்க்கம் அனுமதித்த காரணங்களில் ஒன்று பள்ளிவாயலுக்கு செல்ல முடியாத அளவுக்கு கடுமையான நோய் ஏற்படல்.

وَيُشْتَرَطُ أَنْ يَكُوْنُوْا أَرْبَعِيْنَ مُكَلَّفِيْنَ مُسْتَوْطِنِيْنَ فِي أَبْنِيَةٍ لَا فِي الْخِيَامِ لِأَنَّهَا لَا تَجِبُ عَلَى أَهْلِ الْخِيَامِ.

கட்டிடங்களில் வசிக்கக்கூடியவர்களான, ஊர்வாசிகளான, நாற்பது **"முகல்லபக்கள்"** (பருவத்தை எத்திய புத்தியுள்ள ஆண்கள்) இருப்பது நிபந்தனையிடப்படும். கூடாரத்தில் வசிப்பவர்கள் அல்ல. ஏனென்றால் கூடாரத்தில் வசிப்பவர்களுக்கு ஜும்அஹ் கடமையாக மாட்டாது.

وَيَجِبُ عَلَى مَنْ نَوَى الْإِقَامَةَ فِي بَلَدِ الْجُمُعَةِ أَرْبَعَةَ أَيَّامٍ صِحَاحٍ غَيْرِ يَوْمَيِ الدُّخُوْلِ وَالْخُرُوْجِ فَأَكْثَرَ، لِأَنَّهُ بِذَلِكَ يَنْقَطِعُ حُكْمُ السَّفَرِ.

முழுமையாக நான்கு அல்லது அதை விட அதிகமான நாட்கள் ஜும்ஆஹ் நடாத்தப்படும் ஒரு ஊரிலே தங்குவதை நிய்யத்து வைத்த ஒருவரின் மீதும் ஜும்அஹ் கடமையாகும். அந்த நான்கு நாட்களில் செல்லுகின்ற நாளும் வெளியாகின்ற நாளும் உள்ளடங்காது. ஏனென்றால் இவ்வாறு நிய்யத்து வைப்பதன் மூலம் பிரயாணத்தின் சட்டம் துண்டித்து விடும்.

وَتَجِبُ الْجُمُعَةُ عَلَى مَنْ تَوَطَّنَ مَحَلًّا لَا تَجِبُ فِيهِ الْجُمُعَةُ لِعَدَمِ اسْتِيفَاءِ الشُّرُوْطِ وَلَكِنْ كَانَ بِحَيْثُ يَبْلُغُهُ فِيْهِ النِّدَاءُ مِنْ شَخْصٍ صَيِّتٍ أَيْ عَالِي الصَّوْتِ فِي بَلَدِ الْجُمُعَةِ بِحَيْثُ يَعْلَمُ أَنَّ مَا يَسْمَعُهُ نِدَاءُ الْجُمُعَةِ.

ஜும்அஹ் வின் நிபந்தனைகள் பரிபூரணப்படுத்தப்படாமல் இருப்பதனால் அங்கே ஜும்அஹ் தொழுவது கடமையாகாத ஒரு இடத்தில் ஒருவர் வாழ்ந்து வருகிறார். என்றாலும் அவர் ஜும்அஹ் நிலைநாட்டப்படக்கூடிய ஒரு ஊரில் சப்தமிட்டு பாங்கு சொல்லக்கூடிய ஒருவரின் பாங்கோசையைத் தன்னுடைய இடத்திலிருந்து கேட்கிறார். அது பாங்கோசை தான் என்று புரிந்து கொள்ளும் அமைப்பில் இருந்தால் அவரின் மீது ஜும்ஆஹ் கடமையாகும்.

وَصَلَاةُ الْجُمُعَةِ رَكْعَتَانِ بَدَلَ صَلَاةِ الظُّهْرِ تُؤَدَّى جَمَاعَةً وَيَسْبِقُهَا خُطْبَتَانِ مِنَ الْإِمَامِ وَلَهَا شُرُوْطٌ لَا بُدَّ مِنْ تَوَفُّرِهَا حَتَّى تَصِحَّ وَكَذَلِكَ الْخُطْبَتَانِ لَهُمَا أَرْكَانٌ وَشُرُوْطٌ.

ளுஹ்ர் தொழுகைக்கு பதிலாக தொழப்படும் ஜும்அஹ் தொழுகை இரண்டு ரக்அத்களாகும். இந்தத் தொழுகை ஜமாஅத்தாக நிறைவேற்றப்படும். இத்தொழுகைக்கு முன்னர் இமாம் இரண்டு குத்பாக்களை நிகழ்த்தியிருக்க வேண்டும்.

இத்தொழுகைக்கு சில நிபந்தனைகள் உள்ளன. அவைகளை பரிபூரணமாக நிறைவேற்றுவதன் மூலம்தான் இத்தொழுகை நிறைவேறும்.

அதே போன்று இரு குத்பாக்களுக்கும் சில ருகுன்களும், நிபந்தனைகளும் உள்ளன.

شُرُوْطُ الْجُمُعَةِ: وَمِنْ شُرُوْطِ الْجُمُعَةِ:

**ஜும்ஆவின் சில நிபந்தனைகள் பின்வருமாறு:**

1- وُقُوْعُهَا وَقْتَ الظُّهْرِ.

1. இது ளுஹ்ருடைய நேரத்தில் இடம்பெறுதல் வேண்டும்.

2- وَخُطْبَتَانِ قَبْلَ الصَّلَاةِ يَسْمَعُهُمَا الْأَرْبَعُوْنَ.

2. இத்தொழுகைக்கு முன்னர் இரண்டு குத்பாக்கள் இடம்பெறுதலும், அவ்விரு குத்பாக்களையும் நாற்பது பேர் செவிமடுத்தலும் வேண்டும்.

3- وَأَنْ تُصَلَّى جَمَاعَةً بِالْأَرْبَعِيْنَ.

3. இத்தொழுகை நாற்பது பேர்களைக் கொண்டு ஜமாஅத்தாக நடாத்தப்படுதல் வேண்டும்.

4- وَأَنْ لَا تُقَارِنَهَا أُخْرَى بِبَلَدٍ وَاحِدٍ فَإِنْ أُقِيْمَتْ جُمُعَتَانِ بِبَلَدٍ وَاحِدٍ وَسَبَقَتْ إِحْدَاهُمَا بِالتَّحْرِيْمَةِ ( أي بِتَكْبِيْرَةِ الْإِحْرَامِ ) صَحَّتِ السَّابِقَةُ وَلَمْ تَصِحَّ الْمَسْبُوْقَةُ، أَمَّا إِذَا كَانَ يَشُقُّ عَلَيْهِمُ الاجْتِمَاعُ فِي مَكَانٍ وَاحِدٍ وَتَعَدَّدَتْ بِقَدْرِ الْحَاجَةِ صَحَّتِ السَّابِقَةُ وَالْمَسْبُوْقَةُ.

4. ஒரே ஊரில் இரண்டு ஜும்ஆக்கள் இடம்பெறக்கூடாது. அவ்வாறு இரண்டு ஜும்ஆக்கள் இடம் பெற்றால் எந்த ஜும்அஹ் இஹ்றாம் தக்பீரைக் கொண்டு முந்திவிடுமோ அந்த ஜும்அஹ் தான் நிறைவேறும். மாறாக அனைவரும் ஒரே பள்ளிவாயலில் ஒன்று சேர்வது கஷ்டமாக இருந்தால் தேவைக்கேற்றவாறு ஜும்ஆவை பல இடங்களில் ஆக்கிக்கொள்ளலாம். அப்போது தான் முந்துகின்ற ஜும்ஆவும், பிந்துகின்ற ஜும்ஆவும் நிறைவேறும்.

أَرْكَانُ الْخُطْبَتَيْنِ:

**இரு குத்பாகளின் ருகுன்கள் பின்வருமாறு:**

1- حَمْدُ اللهِ.

1. அல்லாஹ்வைப் புகழ்தல்.

2- وَالصَّلَاةُ عَلَى النَّبِيِّ صلى الله عليه وسلّم.

2. பெருமானார் முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லல்.

3- وَالْوَصِيَّةُ بِالتَّقْوَى.

3. **“தக்வா”**வைக் கொண்டு **“வஸிய்யத்”** செய்தல்.

وَهَذِهِ الْأَرْكَانُ الثَّلَاثَةُ تُشْتَرَطُ فِي الْخُطْبَتَيْنِ الْأُولَى وَالثَّانِيَةِ.

இம்மூன்று ருகுன்களும் முதலாவது குத்பாவிலும், இரண்டாவது குத்பாவிலும் இடம் பெறுவது நிபந்தனையிடப்படும்.

4- وَءَايَةٌ مُفْهِمَةٌ فِي إِحْدَاهُمَا ( وَالْأَوْلَى أَنْ تَكُوْنَ فِي الْخُطْبَةِ الْأُولَى ).

4. இரண்டு குத்பாக்களில் ஒன்றில் பரிபூரண கருத்தை விளக்கும் ஒரு அல்-குர்ஆன் வசனத்தை ஓதுதல் வேண்டும். முதலாவது குத்பாவில் ஓதுவது மிக ஏற்றமானதாகும்.

5- وَالدُّعَاءُ لِلْمُؤْمِنِيْنَ فِي الثَّانِيَةِ.

5. இரண்டாவது குத்பாவிலே மு.்.மின்களுக்காக துஆச் செய்தல்.

**شُرُوْطُ الْخُطْبَتَيْنِ:**

**இரண்டு குத்பாக்களின் நிபந்தனைகள் பின்வருமாறு:**

1- الطَّهَارَةُ عَنِ الْحَدَثَيْنِ وَعَنِ النَّجَاسَةِ غَيْرِ الْمَعْفُوِّ عَنْهَا فِي الْبَدَنِ وَالْمَكَانِ وَالْمَحْمُوْلِ.

1. இரு தொடக்குகளை விட்டும் மேலும் உடல், தொழும் இடம், தான் சுமந்திருப்பவைகள் ஆகியன மன்னிக்கப்படாத நஜீஸை விட்டும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

2- وَسَتْرُ الْعَوْرَةِ.

2. அவ்ரத்தை மறைத்தல்.

3- وَالْقِيَامُ.

3. நிற்றல்.

4- وَالْجُلُوْسُ بَيْنَهُمَا.

4. இரு குத்பாவுக்கும் மத்தியில் அமர்தல்.

5- وَالْمُوَالَاةُ بَيْنَ أَرْكَانِهِمَا، وَبَيْنَهُمَا وَبَيْنَ الصَّلَاةِ.

5. இரு குத்பாக்களுக்கு மத்தியிலும் இன்னும் அவற்றின் ருகுன்களுக்கு மத்தியிலும் மேலும் இரு குத்பாக்களுக்கும், தொழுகைக்கும் மத்தியிலும் தொடராக செய்தல் வேண்டும்.

6- وَأَنْ تَكُوْنَا بِالْعَرَبِيَّةِ، فَإِذَا أَتَى بِالْأَرْكَانِ بِالْعَرَبِيَّةِ وَالْبَاقِي بِغَيْرِهَا صَحَّتِ الْخُطْبَتَانِ.

6. இவ்விரு குத்பாக்களும் அறபு மொழியில் இடம் பெறுதல் வேண்டும். ஒருவர் ருகுன்கள் அனைத்தையும் அறபு மொழியில் ஓதிவிட்டு ஏனையவற்றை அறபு அல்லாத மொழியில் ஓதினாலும் இவ்விரு குத்பாக்களும் நிறைவேறும்.

## أسئلة

**1**-ما هو أفضل أيام الأسبوع؟

**2**-اذكر حديثا يبين فضل يوم الجمعة. ومن رواه؟

**3**-على من تجب صلاة الجمعة ؟

**4**-متى تجب الجمعة على من نوى الإقامة في بلد الجمعة؟

**5**-متى تجب الجمعة على من توطن محلا خارج بلد الجمعة؟

**6**- كم ركعة صلاة الجمعة ؟ وهل تؤدّى جماعة أم بالانفراد؟

**7**-ما هي شروط الجمعة؟ عددها.

**8**-ما الحكم إذا أقيمت جمعتان ببلد واحد؟

**9**-عدد أركان الخطبتين

**10**- ما هي الأركان التي تعاد في الخطبتين؟ وفي أي خطبة يشترط الدعاء للمؤمنين؟

11- عدد شروط الخطبتين.

# الصِّيَامُ

# நோன்பு

فَرَضَ اللهُ سُبْحَانَهُ وَتَعَالَى عَلَى الْمُكَلَّفِيْنَ صِيَامَ رَمَضَانَ، **قَالَ تَعَالَى:** ﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ ١٨٣﴾

(سورة البقرة)

றமழான் மாதத்தில் நோன்பு நோற்பதை அழ்ழாஹ் ஒவ்வொரு **"முகல்லபின்"** மீதும் கடமையாக்கியுள்ளான். அதனை **அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான் :**

**விளக்கம் :**

**"நம்பிக்கை கொண்டோரே! உங்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது"**

**(அத்தியாயம் : பகரஹ் வசனம் : 183)**

أي فُرِضَ عَلَيْكُمْ الصِّيَامُ، وَكَانَ فَرْضُهُ فِي شَعْبَانَ فِي السَّنَةِ الثَّانِيَةِ مِنَ الْهِجْرَةِ.

அதாவது உங்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. இந்த றமழான் மாத நோன்பு ஹிஜ்ரி இரண்டில் ஷ.ஃ.பான் மாதத்தில் கடமையாக்கப்பட்டது.

وَصِيَامُ شَهْرِ رَمَضَانَ فَرِيْضَةٌ عَظِيْمَةٌ وَأَمْرٌ مِنْ أَهَمِّ أُمُوْرِ الْإِسْلَامِ، وَالْمُسْلِمُوْنَ يَسْتَبْشِرُوْنَ بِقُدُوْمِهِ، فَهُوَ شَهْرُ الْخَيْرَاتِ وَالطَّاعَاتِ وَالْبَرَكَاتِ وَهُوَ أَفْضَلُ شُهُوْرِ السَّنَةِ وَفِيْهِ أَفْضَلُ اللَّيَالِي وَهِيَ لَيْلَةُ الْقَدْرِ.

றமழான் மாத நோன்பு பெரும் கடமையும், இஸ்லாத்தின் மிக முக்கிய விடயங்களில் ஒன்றுமாகும். முஸ்லிம்கள் இம்மாதத்தின் வருகையைக் கொண்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள்.
இம்மாதம் பரகத்கள், வணக்க வழிபாடுகள், நலவுகள் நிறைந்த மாதமாகும்.
இம்மாதம் வருடத்தில் உள்ள ஏனைய மாதங்களை விட மிக சிறந்த ஒரு மாதமாகும்.
இம்மாதத்தில் சிறப்பு மிக்க இரவு இருக்கிறது. அது தான் **“லைலதுல் கத்ரு”**டைய இரவாகும்.

وَالصِّيَامُ هُوَ الْإِمْسَاكُ عَنِ الْمُفَطِّرَاتِ أَثْنَاءَ النَّهَارِ مَعَ النِّيَّةِ فِي اللَّيْلِ وَهُوَ فَرْضٌ عَلَى كُلِّ مُسْلِمٍ بَالِغٍ عَاقِلٍ قَادِرٍ عَلَى الصِّيَامِ وَلَا يَصِحُّ مِنَ الْحَائِضِ وَالنُّفَسَاءِ.

பொதுவாக நோன்பு என்பது இரவு நேரத்தின் நிய்யத்துடன் பகல் நேரத்தில் நோன்பை முறிக்கக்கூடியவைகளை விட்டும் தன்னைத் தடுத்துக் கொள்வதாகும்.
இந்த நோன்பு புத்தியுள்ள, பருவத்தை எத்திய, நோன்பு நோற்பதற்கு சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

மாதவிடாய், பிள்ளை பெற்றதன் பின்பு கழிவு இரத்தம் வெளிப்பட்ட பெண்களிடமிருந்து நோன்பு நிறைவேறமாட்டாது.

وَيَجِبُ صِيَامُ رَمَضَانَ بِأَحَدِ أَمْرَيْنِ:

1. إِكْمَالِ شَعْبَانَ ثَلَاثِيْنَ يَوْمًا.
2. رُؤْيَةِ هِلَالِ رَمَضَانَ لَيْلَةَ الثَّلَاثِيْنَ مِنْ شَعْبَانَ لِقَوْلِهِ ﷺ: ((صُوْمُوْا لِرُؤْيَتِهِ وَأَفْطِرُوا لِرُؤْيَتِهِ فَإِنْ غُمَّ عَلَيْكُمْ فَأَكْمِلُوْا عِدَّةَ شَعْبَانَ ثَلَاثِيْنَ يَوْمًا ))

-رَوَاهُ البخاريُّ ومُسْلِمٌ-

இரண்டு விடயங்களில் ஒன்றைக் கொண்டு றமழான் நோன்பு கடமையாகும்.

1. ஷ∴.பான் மாதத்தின் முப்பது நாளும் பரிபூரணமாகுதல்.

2. ஷ∴.பான் மாதத்தின் முப்பதாவது நாள் இரவு றமழான் பிறை தென்படுதல்.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : பிறையைப் பார்த்து நோன்பு பிடியுங்கள் இன்னும் பிறையைப் பார்த்தே நோன்பை விடுங்கள். பிறையைப் பார்ப்பதை தடுக்கக்கூடிய ஒன்று தடுத்தால் ஷ∴.பானுடைய எண்ணிக்கையை முப்பதாக பூர்த்தி செய்யுங்கள்.**

**(அறிவித்தவர்கள் : இமாம் புஹாரீ, இமாம் முஸ்லிம் றஹிமஹுமல்லாஹ்)**

فَمَنْ رَأَى هِلَالَ رَمَضَانَ صَامَ وَمَنْ لَمْ يَرَهُ وَأَخْبَرَهُ مُسْلِمٌ ثِقَةٌ عَدْلٌ حُرٌّ غَيْرُ كَاذِبٍ وَجَبَ عَلَيْهِ الصِّيَامُ.

பிறையைக் கண்டவர் நோன்பு பிடிப்பது கடமையாகும்.
பிறையைக் காணாத ஒருவர், பொய் கூறாத, நீதமான, சுதந்திரமான, நம்பிக்கையான ஒரு முஸ்லிம் பிறை கண்டதை அவருக்கு அறிவித்தால், அவரும் நோன்பு நோற்பது கடமையாகும்.

## فَرَائِضُ الصِّيَامِ

## நோன்பின் பர்ளுகள்

وَفَرَائِضُ الصِّيَامِ اثْنَانِ:

நோன்பின் பர்ளுகள் இரண்டு

1- **النِّيَّةُ:** بِالْقَلْبِ عَنْ كُلِّ يَوْمٍ كَأَنْ يَقُوْلَ بِقَلْبِهِ: ((نَوَيْتُ صَوْمَ غَدٍ عَنْ أَدَاءِ فَرْضِ رَمَضَانَ هَذِهِ السَّنَةَ إِيْمَانًا وَاحْتِسَاباً لله تَعَالَى)).

1. **நிய்யத்து வைத்தல்:** ஒவ்வொரு நாளும் தான் நோன்பு நோற்பதை உள்ளத்தினால் நிய்யத் வைத்தல்.

உதாரணமாக **"நவய்த்து ஸவ்ம غ கதின் அன் அதாஇ பர்ளி றமழானி ஹாதிஹிஸ்ஸனதி ஈமானன் வஹ்திஸாபன் லில்லாஹி தஆலா"** என உள்ளத்தால் கூறிக் கொள்வதைப் போல.

وَالاِحْتِسَابُ طَلَبُ الْأَجْرِ وَوَقْتُ النِّيَةِ مِنْ غُرُوْبِ الشَّمْسِ إِلَى دُخُوْلِ الْفَجْرِ.

**"இஹ்திஸாப்"** என்பது : கூலியை வேண்டுவதாகும்.
நிய்யத் வைப்பதற்கான நேரம் : சூரியன் மறைந்ததிலிருந்து பஜ்ர் உதயமாகும் வரையிலாகும்.

2- **وَتَرْكُ الْمُفَطِّرَاتِ:** مِنْ طُلُوْعِ الْفَجْرِ الصَّادِقِ إِلَى غُرُوْبِ الشَّمْسِ.

2. நோன்பை முறிக்கக் கூடியவைகளை விட்டுவிடுதல்.

**"பஜ்ருஸ் ஸாதிக்"** உதயமானதிலிருந்து சூரியன் மறையும் வரை நோன்பை முறிப்பவைகளை விட்டும் தவிர்ந்திருத்தல்.

## مُفْسِدَاتُ الصِّيَامِ

## நோன்பை முறிக்கக்கூடியவைகள்

مُفْسِدَاتُ الصِّيَامِ كَثِيْرَةٌ مِنْهَا:

நோன்பை முறிக்கக்கூடிய விடயங்கள் அதிகமாக உள்ளன. அவைகளில் சில பின்வருமாறு:

1- **الْأَكْلُ:** وَلَوْ قَدْرَ سِمْسِمَةٍ وَالشُّرْبُ وَلَوْ قَطْرَةَ مَاءٍ أَوْ دَوَاءٍ إِذَا كَانَ ذَاكِرًا لِلصِّيَامِ.

1. **சாப்பிடுதல்:** நோன்பு நோற்றதை ஞாபகித்தவராக எள்ளளவு சாப்பிட்டாலும் நோன்பு முறிந்துவிடும்.

மேலும் பருகுதல் : நோன்பு நோற்றதை ஞாபகித்தவராக ஒரு துளி நீரேனும் குடித்தாலும் நோன்பு முறிந்துவிடும்.

2- **وَالْقَطْرَةُ:** فِي الْأَنْفِ وَالْأُذُنِ إِذَا وَصَلَ الدَّوَاءُ إِلَى الْجَوْفِ وَكَذَلِكَ الْحُقْنَةُ فِي الْقُبُلِ أَوِ الدُّبُرِ، أَمَّا الْقَطْرَةُ فِي الْعَيْنِ فَلَا تُفَطِّرُ وَالْإِبْرَةُ فِي الْجِلْدِ أَوِ الْعَضَلِ أَوِ الشِّرْيَانِ لَا تُفَطِّرُ أَيْضًا.

2. சொட்டு மருந்துகள் இடல் மூக்கு மற்றும் காதுகளினூடாக செலுத்தப்படும் மருந்து உட்பகுதியை அடைவதாகும். இது போன்றே முன், பின் துவாரங்களினூடாக மருந்து செலுத்துவதுமாகும். ஆனால் கண்களுக்கு மருந்தை ஊற்றுவது நோன்பை முறிக்காது. மேலும் தோல்களினூடாக அல்லது தசைகளி

3. னூடாக அல்லது நரம்புகளினூடாக ஊசி போடுவது நோன்பை முறிக்காது.

3- **وَالْإِغْمَاءُ كُلَّ الْيَوْمِ:** فَمَنْ أُغْمِيَ عَلَيْهِ كُلَّ الْيَوْمِ مِنَ الْفَجْرِ حَتَّى الْغُرُوْبِ لَمْ يَصِحَّ صِيَامُهُ وَكَذَلِكَ مَنْ جُنَّ وَلَوْ لَحْظَةً أَفْطَرَ.

3. **முழு நாளும் மயக்கமுற்றிருத்தல்:** ஒருவர் “**பஜ்ரில்**” இருந்து சூரியன் மறையும் வரை முழு நாளும் மயக்கம் முற்றிருந்தால் அவரது நோன்பு நிறைவேறாது.

ஒரு மனிதனுக்கு ஒரு நொடிப் பொழுதாவது பைத்தியம் ஏற்பட்டால் அது நோன்பை முறித்து விடும்.

4- **وَالاسْتِقَاءَةُ:** بِوَضْعِ الْإِصْبَعِ وَنَحْوِهِ فِي الْفَمِ وإِخْرَاجِ الْقَيءِ مِنَ الْجَوْفِ، أَمَّا إِذَا تَقَيَّأَ بِغَيْرِ إِرَادَتِه وَلَمْ يَرْجِعْ شَيءٌ إِلَى جَوْفِهِ فَلَا يُفْطِرُ.

4. வாந்தி வரவைத்தல் கைவிரல் அல்லது அது போன்றதை வாயினுள் விட்டு வாந்தியை வரவைத்தல். தானாகவே வாந்தி வெளிவந்து கொஞ்சமும் அவரது தொண்டையினூடாக உட்செல்லவில்லையெனில் அவரது நோன்பு முறிந்து விட மாட்டாது.

5- **وَالرِّدَّةُ:** بِأَيِّ نَوْعٍ مِنْ أَنْوَاعِهَا الثَّلَاثَةِ: الاعْتِقَادِيَّة وَالْفِعْلِيَّة وَالْقَوْلِيَّة وَمَنْ أَفْسَدَ صَوْمَ يَوْمٍ مِنْ رَمَضَانَ بِالْأَكْلِ أَوِ الشُّرْبِ أَوْ الاسْتِقَاءَةِ فَعَلَيْهِ الْإِثْمُ وَالْقَضَاءُ فَوْراً بَعْدَ رَمَضَانَ وَيَومِ الْعِيْدِ، وَلَا يَجِبُ عَلَيْهِ دَفْعُ الْمَالِ لِلْفُقَرَاءِ وَالْمَسَاكِيْنِ.

5. மதம் மாறுதல்: நம்பிக்கை சார்ந்த, செயல் சார்ந்த, சொல் சார்ந்த குப்ருகளில் ஏதேனும் ஒருவகை குப்ர் ஏற்பட்டு இஸ்லாத்தை விட்டு வெளியேறுதல்.

யாராவது ஒருவர் சாப்பிடுவதனாலோ அல்லது பருகுவதனாலோ அல்லது வாந்தி எடுப்பதனாலோ றமழான் மாதத்தின் ஒரு நோன்பை வீணாக்கிவிட்டால் அவருக்கு பாவம் உண்டு. மேலும் பெருநாள் தினத்திற்கு பின்னர் உடனடியாக அதனை “**களா**” செய்வது கடமையாகும். பகீர்களுக்கோ, மிஸ்கீன்களுக்கோ பணம் கொடுப்பது அவர் மீது கடமையாக மாட்டாது.

فائدة

يَحْرُمُ صِيَامُ يَوْمِ عِيْدِ الْفِطْرِ وَيَوْمِ عِيْدِ الْأَضْحَى وَأَيَّامِ التَّشْرِيْقِ الثَّلَاثَةِ، وَهِيَ الْأَيَّامُ الثَّلَاثَةُ الَّتِي تَلِي عِيْدَ الْأَضْحَى.

**நோன்பு நோற்க ஹறாமான (தடுக்கப்பட்ட) தினங்கள் :**

1. ஈதுல் பித்ர் (நோன்புப் பெருநாள்)
2. ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்)
3. அய்யாமுத்தஷ்ரீக் : அதவாது ஹஜ்ஜுப் பெருநாளை தொடர்ந்து வரும் மூன்று தினங்கள்.

دعاء

اللهُمَّ لَكَ صُمْتُ وَعَلَى رِزْقِكَ أَفْطَرْتُ، وَكَانَ رسولُ اللهِ صلّى اللهُ عليه وسلّم يَقُوْلُ إِذَا أَفْطَرَ: **((ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوْقُ وَثَبَتَ الْأَجْرُ إِنْ شَاءَ اللهُ))** - رَوَاهُ أَبو داود -.

நோன்பு திறக்கும் போது ஓதும் துஆ : **“அழ்ழாஹும்ம லக ஸும்து வஅலா ரிஸ்கிக அப்தர்து”**

**முஹம்மத் ﷺ அவர்கள் நோன்பு திறந்தால் பின்வருமாறு கூறுபவர்களாக இருந்தார்கள் “தஹபள்ளமஉ வப்தல்லதில் உருகு வஸபதல் அஜ்ரு இன்ஷா அழ்ழாஹ்”**

**(அறிவித்தவர் : இமாம் அபூ தாவூத் றஹிமஹுழ்ழாஹ்)**

**أسئلة**

**1-أي شهر فرض الله فيه الصيام؟**

**2-اذكر ءاية فيها وجوب الصيام.**

**3-متى فرض الصوم في شهر رمضان؟**

**4-ما هو الصيام؟ وعلى من يجب؟**

**5- كيف يثبت الصيام؟ واذكر حديثا في ذلك.**

**6-من لم ير الهلال ماذا يفعل؟**

**7-ما هي فرائض الصيام؟**

**8-متى وقت نية الصيام؟ وماذا ينوي من أراد الصيام؟**

**9-عدد بعض مفسدات الصيام.**

**10- ما هي الأيام التي يحرم الصوم فيها؟**

பாடம் : 14 الدرس – 14

## الزَّكَاةُ

## ஸகாத்

قَالَ تَعَالَىٰ: ﴿وَأَقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَءَاتُوا۟ ٱلزَّكَوٰةَ وَٱرْكَعُوا۟ مَعَ ٱلرَّٰكِعِينَ ﴿٤٣﴾﴾

(سورة البقرة)

**அழ்ழாஹ் அல்–குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“தொழுகையை நிறைவேற்றுங்கள், ஸகாத்தை கொடுங்கள்.”**

**(அத்தியாயம் : அல்-பகரஹ்)**

**الزَّكَاةُ مَعْنَاهَا فِي اللُّغَةِ:** التَّطْهِيرُ وَالنَّمَاءُ، **وَشَرْعًا:** اِسْمٌ لِمَا يُخْرَجُ عَنْ مَالٍ أَوْ بَدَنٍ عَلَى وَجْهٍ مَخْصُوصٍ وَسُمِّيَتْ كَذَلِكَ لِأَنَّ الْمَالَ يَنْمُو بِبَرَكَةِ إِخْرَاجِهَا وَلِأَنَّهَا تُطَهِّرُ مُخْرِجَهَا مِنَ الْإِثْمِ .

**(அறபு மொழியில்) ஸகாத் என்பதன் பொருள்:** சுத்தப்படுத்துதல், வளர்ச்சியடைதல் என்பதாகும்.

**மார்க்க ரீதியாக ஸகாத் என்பது:**
குறிப்பிடப்பட்ட ஒரு விதத்தில் பணம், அல்லது உடலுக்காக (அதாவது தனக்காக, தன் பொறுப்பில் உள்ளவர்களுக்காக) வெளிப்படுத்துவதற்குரிய ஒரு பெயராகும். அவ்வாறு அதற்கு பெயர் வைக்கப்பட்டதற்கான காரணம் ஸகாத்தை கொடுப்பதின் பறகத்தினால் செல்வம் வளர்ச்சியடைவதோடு அதை கொடுப்பவரை பாவத்தை விட்டும் பரிசுத்தப்படுத்தும்.

وَالزَّكَاةُ مِنْ أَعْظَمِ أُمُوْرِ الْإِسْلَامِ، فَرَضَهَا اللهُ فِي السَّنَةِ الثَّانِيَةِ مِنَ الْهِجْرَةِ.

ஸகாத் என்பது இஸ்லாத்தின் முக்கிய விடயங்களில் ஒன்றாகும். ஹிஜ்ரி இரண்டில் அல்லாஹ் இதனை கடமையாக்கினான்.

**الْأَشْيَاءُ الَّتِي تَجِبُ فِيْهَا الزَّكَاةُ:**

**ஸகாத் கடமையாகக்கூடிய பொருட்கள்:**

**1- الْأَنْعَامُ:** وَهِيَ الْإِبْلُ وَالْبَقَرُ وَالْغَنَمُ.

1. **"அல்-அன்ஆம்" கால்நடைகள்**: அவை ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியனவாகும்.

2- **وَالزُّرُوْعُ الْمُقْتَاتَةُ حَالَةَ الاخْتِيَارِ:** أي الَّتِي يُدَخِّرُهَا الْإِنْسَانُ عَادَةً لِيُقْتَاتَ بِهَا كَالْقَمْحِ وَالشَّعِيْرِ وَالذُّرَةِ، لَا الْفَوَاكِهِ كَالتُّفَّاحِ وَالْبُرْتُقَالِ.

2. தங்கடமான சூழ்நிலை அல்லாத சந்தர்ப்பத்தில் உட்கொள்ளப்படக்கூடிய தானியங்கள் அதாவது ஒரு மனிதன் வழமையில் உணவாக உட்கொள்ள சேமித்துவைக்கும் தானியங்களாகும். உதாரணம் கோதுமை, தொலிக்கோதுமை, சோளம் போன்றனவாகும்.

ஆனால் அப்பில், தோடை போன்ற பழங்கள் இதில் நுழையமாட்டாது.

3- **وَالثِّمَارُ:** وَتَجِبُ فِي شَيْئَيْنِ مِنْهَا هُمَا: ثَمَرَةُ النَّخْلِ وَالْعِنَبِ.

3.கனிவர்க்கங்கள்

இதிலே இரண்டு பொருட்களிலேயே ஸகாத் கடமையாகும்.

1. ஈத்தம் பழம்
2. திராட்சை

4- **وَأَمْوَالُ التِّجَارَةِ:** وَهِيَ تَقْلِيبُ الْمَالِ فِي الْبَيْعِ وَالشِّرَاءِ لِغَرَضِ الرِّبْحِ كَأَنْ يَبِيعَ وَيَشْتَرِيَ ثُمَّ يَبِيعَ وَيَشْتَرِيَ وَهَكَذَا.

4. **வியாபாரப் பொருட்கள்:** வியாபாரம் என்பது இலாபம் பெரும் நோக்கில் விற்பதிலும், வாங்குவதிலும் பணத்தைப் பரிமாற்றம் செய்வதாகும்.
உதாரணம்: வாங்கி விற்பதைப் போல. இவ்வாறே

5- **وَالنَّقْدَانِ:** وَهُمَا الذَّهَبُ وَالْفِضَّةُ.

5. நாணயங்கள்.
நாணயங்கள் என்பது தங்கமும், வெள்ளியுமாகும்.

**وَتَجِبُ أَيْضًا زَكَاةُ الْفِطْرِ:** وَهِيَ زَكَاةٌ عَنِ الْبَدَنِ لَا عَنِ الْمَالِ يَدْفَعُهَا الْمُكَلَّفُ عَنْ نَفْسِهِ وَزَوْجَتِهِ وَأَوْلَادِهِ الصِّغَارِ وَوَالِدَيْهِ الْفَقِيرَيْنِ فِي شَهْرِ رَمَضَانَ أَوْ يَوْمِ عِيدِ الْفِطْرِ.

**இன்னும் “ஸகாதுல் பித்ர்” என்பதும் கடமையான ஒன்றாகும்.**
இந்த ஸகாத் உடலுக்காக (அதாவது தனக்காக, தன் பொறுப்பில் உள்ளவர்களுக்காக) கொடுக்கப்படும். மாறாக சொத்துக்காக கொடுக்கப்படுவதல்ல.
றமழான் மாதத்தில் அல்லது பெருநாள் தினத்தில் ஒரு **“முகல்லப்”** (புத்தியுள்ள, பருவத்தையடைந்த ஒருவர்) தனக்காகவும் தனது மனைவிக்காகவும், பருவத்தை அடையாத தனது பிள்ளைகளுக்காகவும், தனது ஏழையான பெற்றோருக்காகவும் கொடுப்பார்.

الْمُسْتَحِقُّوْنَ لِلزَّكَاةِ :

**ஸகாத் பெறுவதற்கு தகுதியானவர்கள் :**

وَلَا يَجُوْزُ دَفْعُ الزَّكَاةِ إِلَّا إِلَى مُسْتَحِقِّيْهَا وَهُمُ الْأَصْنَافُ الثَّمَانِيَةُ الَّذِيْنَ ذَكَرَهُمُ اللهُ تَعَالَى فِي الْقُرءانِ الْكَرِيمِ فِي الآيةِ:

ஸகாத் பெறத் தகுதியற்றோருக்கு ஸகாத் கொடுக்கக் கூடாது. அல்லாஹ் தஆலா ஸகாத் பெறத் தகுதியான எட்டு கூட்டத்தாரை பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தில் குறிப்பிட்டுள்ளான்.

قَالَ تَعَالَى: ﴿ إِنَّمَا ٱلصَّدَقَٰتُ لِلۡفُقَرَآءِ وَٱلۡمَسَٰكِينِ وَٱلۡعَٰمِلِينَ عَلَيۡهَا وَٱلۡمُؤَلَّفَةِ قُلُوبُهُمۡ وَفِي ٱلرِّقَابِ وَٱلۡغَٰرِمِينَ وَفِي سَبِيلِ ٱللَّهِ وَٱبۡنِ ٱلسَّبِيلِ ۝٦٠ ﴾ سورة التوبة )

1- **الْفُقَرَاءُ:** هُمُ الَّذِيْنَ لَا يَجِدُوْنَ نِصْفَ كِفَايَتِهِمْ.

1. **அல்-புகராஉ:** தங்களுக்கு அத்தியவசியமான தேவைகளின் அரைப்பகுதியைக் கூட பெற்றுக் கொள்ளாதவர்கள்.

2- **الْمَسَاكِيْنُ:** هُمُ الَّذِيْنَ لَا يَجِدُوْنَ كُلَّ كِفَايَتِهِمْ وَلَكِنْ يَجِدُوْنَ نِصْفَهَا.

2. **அல்-மஸாகீனு:** தங்களுக்கு அத்தியவசியமான அனைத்து தேவைகளையும் பெற்றுக் கொள்ளாதவர்கள். என்றாலும் தனக்கு அத்தியவசியமான தேவைகளின் அரைப்பகுதியை மாத்திரம் பெற்றுக் கொள்பவர்கள்.

3- **الْعَامِلُوْنَ عَلَيْهَا:** هُمُ الَّذِيْنَ يُوَظِّفُهُمُ الْخَلِيْفَةُ لِجَمْعِ الزَّكَاةِ بِدُوْنِ رَاتِبٍ.

3. **அல்-ஆமிலூன அலைஹா:** இவர்கள் எந்த ஊதியமும் பெறாமல் ஸகாத்தை வசூலிக்க கலீபாவினால் நியமிக்கப்பட்டவர்கள்.

4– **الْمُؤَلَّفَةُ قُلُوْبُهُمْ:** هُمُ الَّذِيْنَ أَسْلَمُوْا حَدِيْثًا وَنِيَّتُهُمْ ضَعِيْفَةٌ أَوْ كَانَ يُرْجَى بِإِعْطَائِهِمْ أَنْ يُسْلِمَ نُظَرَاؤُهُمْ.

4.**அல்-முஅல்லபது குலூபுஹும்:** இவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள். இன்னும் எண்ணம் பலகீனமானவர்கள். அல்லது இவர்களுக்கு ஸகாத் கொடுப்பதன் மூலம் இவர்களைப் போன்றோர்கள் இஸ்லாத்திற்குள் வருவதை ஆதரவு வைக்கப்படுபவர்களுமாகும்.

5– **الرِّقَابُ:** هُمُ الْعَبِيْدُ الْمُكَاتَبُوْنَ أي الَّذِيْنَ اشْتَرَطَ عَلَيْهِمْ أَسْيَادُهُمْ قَدْرًا مِنَ الْمَالِ لِيَصِيْرُوْا أَحْرَارًا.

5. **அர்ரிகாப்:** முன்னுரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள். அதாவது இவர்கள் உரிமை பெறுவதற்காக தங்களுடைய எஜமான்களினால் ஒரு தொகை பணம் செலுத்துமாறு நிபந்தனையிடப்பட்ட அடிமைகளாகும்.

6– **الْغَارِمُوْنَ:** هُمُ الْمَدِيْنُوْنَ الْعَاجِزُوْنَ عَنِ الْوَفَاءِ.

6. **அல்-காரிமூன்:** இவர்கள் (ஹலாலான) கடன்களை நிறைவேற்ற இயலாத கடன்காரர்கள்.

7– **وَأَمَّا وَفِي سَبِيْلِ اللهِ:** فَمَعْنَاهُ الْغُزَاةُ الْمُتَطَوِّعُوْنَ فِي سَبِيْلِ اللهِ وَلَيْسَ كُلَّ عَمَلٍ خَيْرِيٍّ فَلَا يَجُوْزُ دَفْعُ الزَّكَاةِ لِبِنَاءِ الْمُسْتَشْفَيَاتِ وَالْمَسَاجِدِ وَنَحْوِ ذَلِكَ.

7. **"பீ ஸபீலில்லாஹ்"** என்பதன் பொருள் : எவ்வித சம்பளமுமின்றி நன்மையை எதிர்பார்த்து அழ்ழாஹ்வுடைய பாதையில் போர் புரிபவர்கள். இங்கே **"பீ ஸபீலில்லாஹ்"** என்பது பொதுவாக எல்லா நற்காரியங்களையும் உள்ளடக்கிக் கொள்ளமாட்டாது. எனவே வைத்தியசாலைகள், பள்ளி வாயல்கள் அது போன்றவைகளை கட்டுவதற்காக ஸகாத் கொடுக்கப்படமாட்டாது.

8- **ابْنُ السَّبِيْلُ:** هُوَ الْمُسَافِرُ الَّذِي لَيْسَ مَعَهُ مَا يُوْصِلُهُ إِلَى مَقْصِدِهِ.

8. **“இப்னுஸ்ஸபீல்”:** ஸகாத் வழங்கப்படும் ஊருக்கு பிரயாணம் மேற்கொண்ட ஒருவர் மீண்டும் அவர் நாடும் இடத்துக்கு செல்லப் போதுமான வசதியற்றவர்.

## شُرُوْطُ الزَّكَاةِ

## ஸகாத்தின் நிபந்தனைகள்

شُرُوْطُ الزَّكَاةِ قِسْمَانِ: شُرُوْطُ وُجُوْبٍ وَشُرُوْطُ صِحَّةٍ.

ஸகாத்தின் நிபந்தனைகள் இரண்டாகும்.

1. ஸகாத் கடமையாகுவதற்கான நிபந்தனைகள்.
2. ஸகாத் நிறைவேறுவதற்கான நிபந்தனைகள்.

**شُرُوْطُ وُجُوْبِهَا خَمْسَةٌ:**

**ஸகாத் கடமையாகுவதற்கான நிபந்தனைகள் ஐந்தாகும்.**

1. الإِسْلَامُ.

1. முஸ்லிமாக இருத்தல்.

2. وَالْحُرِّيَّةُ.

2. சுதந்திரமாக இருத்தல்.

3. وَالْمِلْكُ التَّامُّ.

3. ஸகாத் விதியாகும் பொருள் முழுமையாக தனக்கு சொந்தமானதாக இருத்தல்.

4. وَمُضِيُّ الْحَوْلِ فِي الْمَالِ الْحَوْلِيِّ.

4. ஈத்தம், திராட்சை மற்றும் தானியவகைகள் அல்லாத ஸகாத் விதியாகக்கூடிய ஏனைய பொருட்களில் ஒரு வருட காலம் சென்றிருத்தல்.

5. وَمِلْكُ النِّصَابِ وَهُوَ قَدْرٌ لَا تَجِبُ الزَّكَاةُ إِذَا لَمْ يَبْلُغْهُ الْمَالُ، وَيُزَادُ عَلَيْهَا السَّوْمُ فِي كَلَأٍ مُبَاحٍ لِلْمَاشِيَةِ.

5. **"நிஸாபை"** அடைந்திருத்தல். அதாவது "ஸகாத் விதியாகும் பொருட்களில் ஸகாத்தை வெளிப்படுத்துவது கடமையாகும் அளவை அடைந்திருத்தல்." (ஸகாத் விதியாகும் பொருட்கள் **"நிஸாபை"** அடையவில்லை என்றால் ஸகாத் கொடுப்பது கடமையாகமாட்டாது)
மேலும் கால்நடைகள் ஆகுமான மேய்க்கும் தளங்களில் மேய்ப்பதையும் நிபந்தனையிடப்படும்.

**وَشُرُوْطُ صِحَّتِهَا هِيَ:**

**ஸகாத் நிறைவேறுவதற்கான நிபந்தனைகள்.**
**அவையாவன :**

1- صَرْفُهَا لِمُسْتَحِقِّيْهَا وَهُمُ الْأَصْنَافُ الثَّمَانِيَةُ الَّذِيْنَ مَرَّ ذِكْرُهُمْ.

1. மேலே கூறிய எட்டு கூட்டத்தினருக்கு ஸகாத் கொடுத்தல்.

2- وَصَرْفُهَا لِمُسْلِمٍ وَلَا يَصِحُّ دَفْعُهَا لِكَافِرٍ.

2. முஸ்லிமுக்கு கொடுத்தல். எனவே காபிருக்கு கொடுப்பது நிறைவேறமாட்டாது.

3- وَدَفْعُهَا لِحُرٍّ فَلَا يَجُوْزُ دَفْعُهَا لِلرَّقِيْقِ إِلَّا الْمُكَاتَبَ.

3. சுதந்திரமானவருக்கு கொடுத்தல். ஆனால் உரிமை சீட்டு எழுதப்பட்ட அடிமையைத் தவிர ஏனைய அடிமைகளுக்கு கொடுக்கமுடியாது.

4- .وَأَنْ لَا يَكُوْنَ ءَاخِذُهَا مِنْ بَنِي هَاشِمٍ أَوْ بَنِي الْمُطَّلِبِ. فَالْمَنْسُوْبُ لِلرَّسولِ صلّى اللهُ عليه وسلّم لَا يَجُوْزُ لَهُ أَكْلُ مَالِ الزَّكَاةِ وَلَوْ كَانَ فَقِيْرًا مِثْل ءَال مُنَيْمنة وَالْحُوْتِ وَالشَّرِيْفِ وَالْكَيَالِي وَالْجِيْلَانِي وَالرِّفَاعِي وَالصَّيَادِي وَكِيْوَانِ وَالْقَادِرِي وَالْكَيْلَانِي وَغَيْرُهُمْ كَثِيْرٌ فَلْيُتَنَبَّهْ إِلَى ذَلِكَ.

4. ஸகாத்தை பெற்றுக்கொள்பவர் பனூ ஹாஷிம் அல்லது பனூ முத்தலிபை சார்ந்தவராக இருக்கக்கூடாது. அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர் அவர் பகீராக இருந்த போதிலும் ஸகாத் பணத்தை எடுப்பது கூடாது.

## أسئلة

1- اذكر ءاية فيها الأمر بأداء الزكاة.

2- ما معنى الزكاة لغة؟ وشرعا؟

3- في أي سنة فرض الله الزكاة؟

4- ما هي الأشياه التي تجب فيها الزكاة؟

5- ما هي الأنعام؟ وما معنى الزروع المقتاتة حالة الاختيار؟

6- ما هما النقدان؟

7- ما هي زكاة الفطر؟

8- عدد المستحقين للزكاة.

9- ما معنى ((وفي سبيل الله))؟

# الحَجٌّ

## அல்-ஹஜ்

قَالَ تَعَالَى: ﴿وَلِلَّهِ عَلَى ٱلنَّاسِ حِجُّ ٱلۡبَيۡتِ مَنِ ٱسۡتَطَاعَ إِلَيۡهِ سَبِيلٗاۚ ٩٧﴾

(سورة ءال عمران)

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**"இஸ்லாம் கட்டளையிட்டதுக்கமைய க.ஃபா அமைந்துள்ள நகராகிய மக்கா நகர் சென்றுவர ஆற்றலையுடையவர்கள் (சக்தியுடையவர்கள்) ஹஜ் செய்வதை அழ்ழாஹ் கடமையாக்கியுள்ளான்."**

**(அத்தியாயம் : ஆலு இம்ரான் வசனம் : 97)**

الْحَجٌّ مِنْ أَعْظَمِ أُمُوْرِ الْإِسْلَامِ، وَهُوَ فَرْضٌ عَلَى الْمُكَلَّفِ الْحُرِّ الْمُسْتَطِيْعِ، وَكَذَلِكَ الْعُمْرَةُ، فَيَجِبُ أَدَاؤُهُمَا فِي الْعُمرِ مَرَّةً وَاحِدَةً وَيُسَنٌّ تَكْرَارُهُمَا.

ஹஜ் இஸ்லாத்தின் பெரும் கடமைகளில் ஒன்றாகும்.
அது சக்தி பெற்ற சுதந்திரமான **"முகல்லபின்"** மீது கடமையாகும். இன்னும் உம்றாவும் அவ்வாறாகும். அவ்விரண்டையும் வாழ்நாளில் ஒரு விடுத்தம் நிறை வேற்றுவது கடமையாகும். மேலும் அவ்விரண்டையும் மீண்டும் மீண்டும் செய்வது ஸுன்னத்தாகும்.

وَلِلْحَجِّ مزيةٌ وَهِيَ أَنّهُ يُكفِّرُ الذُّنُوْبَ الْكَبَائِرَ وَالصَّغَائِرَ لِقَوْلِهِ صلّى اللهُ عليه وسلّم :**( مَنْ حَجَّ فَلَمْ يَرْفُثْ وَلَمْ يفْسُقْ خَرَجَ مِنْ ذُنُوْبِهِ كَيَوْمَ وَلَدَتْهُ أُمُّهُ)** -رواه البخاري-

ஹஜ்ஜுக்கு தனிப்பெரும் சிறப்புகள் உள்ளன. அச்சிறப்பு என்னவெனில் : முஹம்மத் ﷺ அவர்கள் சொன்னவாறு பெரிய சிறிய பாவங்களுக்குப் பரிகாரமாகும்.
அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :
**(யார் பாவங்களில் ஈடுபடாது, உடலுறவில் ஈடுபடாது ஹஜ் செய்வாறோ அவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று வீடு திரும்புவார்.)**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ றஹிமஹுல்லாஹ்)**

بِشَرْطِ أَنْ تَكُوْنَ نِيّتُهُ خَالِصَةً للهِ تَعَالَى، وَأَنْ يَكُوْنَ الْمَالُ الّذِي يَتَزَوّدُهُ لِحَجِّهِ حَلَالًا، وَأَنْ يَحْفَظَ نَفْسَهُ مِنَ الْفُسُوْقِ، أي مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ، وَالرَّفَثُ أي الْجِمَاعُ وَمِمّا يَدُلُّ عَلَى فَضْلِ الْحَجِّ أَنّهُ جَمَعَ أَنْوَاعَ رِيَاضَةِ النّفْسِ أي تَهْذِيْبِهَا فَفِيْهِ إِنْفَاقُ مَالٍ وَجَهْدُ نَفْسٍ بِنَحْوِ الْجُوْعِ وَالْعَطَشِ وَالسّهَرِ وَاقْتِحَامِ مَهَالِكَ وَفِرَاقِ وَطَنٍ وَأَهْلٍ وَأَصْحَابٍ.

ஆயினும் இவருடைய நிய்யத் (எண்ணம்) அல்லாஹ்வின் பொருத்தத்தை எதிர்ப்பார்த்ததாகவும், மேலும் ஹஜ்ஜிற்கு கட்டுச்சாதனமாக எடுத்துச் செல்லும் பணம் ஹலாலானதாகவும் மேலும் தன்னை பெரும் பாவங்களை , உடலுறவை விட்டும் பாதுகாத்துக் கொள்வதும் நிபந்தனையிடப்படும்.
மனிதன் பல வகையான (ஆத்மீக)பயிற்சிகளை அதாவது பல வகையான சீரமைப்புகளை, ஒழுங்கமைப்புகளை உள்ளடக்கியிருப்பதென்பது இந்த ஹஜ்ஜின் சிறப்பை காட்டுகின்றது. இதில் நற்கருமத்திற்காக பணத்தை செலவு செய்வதும், பசி, தாகம், விழித்திருத்தல், பல ஆபத்துகளுக்கு முகங்கொடுத்தல், ஊர், குடும்பம் மற்றும் தோழர்களை பிரிதல்

போன்றவற்றைக் கொண்டு மனதைக் கஷ்டப்படுத்துவதும் உள்ளது.

أَرْكَانُ الْحَجِّ وَالْعُمْرَةِ

## ஹஜ் உம்றாவின் ருகுன்கள்(கடமைகள்)

الْأَرْكَانُ هِيَ مَا لَا يَصِحُّ الْحَجُّ وَالْعُمْرَةُ إِلَّا بِهَا، فَمَنْ تَرَكَ رُكْنًا لَمْ يَصِحّ حَجُّهُ وَلَا يُجْبَرُ تَرْكُهُ بِشَيْءٍ بَلْ لَا بُدَّ مِنَ الْإِتْيَانِ بِهِ.

**ருகுன்கள் என்பது:** இவைகளின்றி ஹஜ், உம்றஹ் செல்லுபடியாகமாட்டாது.

யாராவது ஒரு ருகுனை விட்டால் அவருடைய ஹஜ் நிறைவேறமாட்டாது. மேலும் அதனை விடுவது இன்னொன்றினால் பூர்த்திசெய்யப்படவுமாட்டாது. மாறாக அதை செய்தே ஆக வேண்டும்.

وَأَرْكَانُ الْحَجِّ سِتَّةٌ هِيَ:

**ஹஜ்ஜின் ருகுன்கள் ஆறு அவையாவன:**

1- **الْإِحْرَامُ:** أي نِيَّةُ الْإِحْرَامِ، فَيَقُوْلُ بِقَلْبِهِ مَثَلًا: نَوَيْتُ الْحَجَّ وَأَحْرَمْتُ بِهِ لله تَعَالَى.

1. **இஹ்றாம்:** அதாவது இஹ்றாமை நிய்யத்து வைத்தல். உதாரணம் ஹஜ்ஜை நிய்யத்து வைத்துவிட்டேன் இன்னும் அல்லாஹ்வுக்காக வேண்டி அதைக் கொண்டு இஹ்றாம் நிய்யத்து வைத்துவிட்டேன் என உள்ளத்தால் கூறிக்கொள்வதாகும்.

2- **وَالْوُقُوْفُ بِعَرَفَةَ:** (وَلَوْ لَحْظَةً): وَوَقْتُهُ مِنْ زَوَالِ شَمْسِ التَّاسِعِ مِنْ ذِي الْحِجَّةِ إِلَى طُلُوْعِ فَجْرِ يَوْمِ الْعَاشِرِ أي يَوْمِ الْعِيْدِ.

2. அறபாவில் ஒரு வினாடியேனும் தரிபடுதல்.

இதன் நேரம் துல்ஹிஜ்ஜஹ் மாதம் ஒன்பதாவது நாள் சூரியன் நடு உச்சியிலிருந்து சாய்ந்ததிலிருந்து பத்தாவது நாள் அதாவது பெருநாள் தின பஜ்ர் உதயமாகும் வரையில் நீடித்திருக்கும்.

3- **وَالطَّوَافُ بِالْبَيْتِ:** سَبْعَةُ أَشْوَاطٍ أي أَنْ يَدُوْرَ حَوْلَ الْكَعْبَةِ سَبْعَ مَرَّاتٍ جَاعِلًا الْبَيْتَ عَنْ يَسَارِهِ وَيَبْدَأَ بِالْحَجَرِ الْأَسْوَدِ وَيُشْتَرَطُ لَهُ الطَّهَارَةُ مِنَ الْحَدَثَيْنِ وَسَتْرُ الْعَوْرَةِ.

3. **பைதுழ்ழாஹ்வை தவாப் செய்தல் :** அதாவது க.்.பஹ் இடது பக்கம் அமையும் வண்ணம் ஏழு விடுத்தம் க.்.பஹ்வை சுற்றி வலம் வருவதாகும். இதனை **"ஹஜருல் அஸ்வதை"**க் கொண்டு ஆரம்பிப்பார். இதற்கு இரு தொடக்குகளை விட்டும் சுத்தமாக இருப்பதும், "அவ்ரத்தை" மறைத்திருப்பதும் நிபந்தனையிடப்படும்.

4- **وَالسَّعْيُ بَيْنَ الصَّفَا وَالْمَرْوَةِ:** سَبْعَ مَرَّاتٍ، وَلَا يُشْتَرَطُ لَهُ طَهَارَةٌ. وَيَبْدَأُ بِالصَّفَا وَيَنْتَهِي بِالْمَرْوَةِ.

4. ஸபா, மர்வஹ் இரு மலைகளுக்கு மத்தியில் ஏழு தடவை தொங்கோட்டம் ஓடுதல். இதற்கு சுத்தம் நிபந்தனையிடப்படமாட்டாது. ஸபாவைக் கொண்டு ஆரம்பித்து மர்வாவைக் கொண்டு முடிப்பார்.

5- **وَالْحَلْقُ أَوِ التَّقْصِيْرُ:** وَالْحَلْقُ هُوَ إِزَالَةُ شَعَرِ الرَّأْسِ كُلِّهِ، أَمَّا التَّقْصِيْرُ فَيَحْصُلُ وَلَوْ بِقَصِّ ثَلَاثِ شَعَرَاتٍ وَالنِّسَاءُ يُقَصِّرْنَ وَلَا يَحْلِقْنَ.

5. **"அல்-ஹல்க்"** என்பது தலைமுடி முழுவதையும் சிரைப்பதாகும் (வழிப்பதாகும்).

**"அத்தக்ஸீர்"** என்பது மூன்று முடிகளை கத்தரிப்பதினாலும் கூட ஏற்படும். பெண்கள் முடியை கத்தரிப்பார்கள். வழிக்கமாட்டார்கள்.

6- **وَالتَّرْتِيْبُ فِي مُعْظَمِ الْأَرْكَانِ:** فَيُقَدَّمُ الْإِحْرَامُ عَلَى الْجَمِيْعِ وَيُشْتَرَطُ تَأْخِيرُ الْحَلْقِ أَوْ التَّقْصِيرِ وَطَوَافِ الْإِفَاضَةِ عَنِ الْوُقُوْفِ بِعَرَفَةَ.

6. பெரும்பாலான ருகுன்களில் ஒழுங்குமுறையை கையாழுதல். அனைத்தைப் பார்க்கிலும் இஹ்றாம் முற்படுத்தப்பட வேண்டும். இன்னும் **“அல்-ஹல்க்”**, **“அத்தக்ஸீர்”** மேலும் **“தவாபுல் இபாழஹ்”** ஆகியவைகளை அறபாவில் தரிபடுவதை பார்க்கிலும் பிற்படுத்துவது நிபந்தனையாகும்.

وأَرْكَانُ الْعُمْرَةِ خَمْسَةٌ هيَ:

**உம்றாவின் ருகுன்கள் ஐந்து அவையாவன:**

1- الإِحْرَامِ وَهُوَ نِيّةُ الدُخُوْلِ فِي الْعُمْرَةِ فَيَقُوْلُ بِقَلْبِهِ مَثَلًا: ((نَوَيْتُ الْعُمْرَةَ وأَحْرَمْتُ بِهَا لله تَعَالَى)).

1. **இஹ்றாம்:** உம்றஹ் வணக்கத்தில் நுழைவதை நிய்யத்து வைத்தல். உதாரணம் உம்றஹ் செய்வதை நிய்யத்து வைத்துவிட்டேன் இன்னும் அழ்ழாஹ்வுக்காக வேண்டி அதைக் கொண்டு இஹ்றாம் நிய்யத்து வைத்துவிட்டேன் என்று உள்ளத்தினால் கூறிக்கொள்வதாகும்.

2- وَالطَّوَافُ.

2. **“தவாப்” செய்தல்.**

3- وَالسَّعْيُ.

3. **ஸபா, மர்வா மலைகளுக்கு மத்தியில் தொங்கோட்டம் ஓடுதல்.**

4- وَالْحَلْقُ أَوِ التَّقْصِيرُ.

4. **வழித்தல் அல்லது கத்தரித்தல்.**

5- وَتَرْتِيْبُ جَمْيعِ أَرْكَانِهَا عَلَى مَا هُوَ مَذْكُوْرٌ.

5. **அதன் அனைத்து ருகுன்களையும் மேற்கூறப்பட்டவாறு ஒழுங்கு முறைப்படி செய்தல்.**

وَاجِبَاتُ الْحَجِّ وَالْعُمْرَةِ

## ஹஜ் உம்றாவின் கடமை(வாஜிப்)கள்

الْوَاجِبُ هُو مَا يَصِحُّ الْحَجُّ أَوِ الْعُمْرَةُ بِدُوْنِهِ ولَكِنْ يُجْبَرُ تَرْكُهُ بِالدَّمِ، وَفِي تَرْكِهِ عَمْدًا مَعْصِيَةٌ.

**வாஜிப்**: இது விடுபட்டாலும் ஹஜ், உம்றஹ் நிறைவேறும். எனினும் “தமு” கொடுப்பது கொண்டு விடுபட்டதை பூர்த்தி செய்யப்படும். அதை வேண்டுமென்று விடுவதில் பாவமுள்ளது.

مِنْ وَاجِبَاتِ الْحَجِّ:

**ஹஜ்ஜின் கடமைகளில் சில:**

1– الإِحْرَامُ مِنَ الْمِيْقَاتِ.

1. **“ மீகாதில்” நிய்யத்து வைத்தல்.**

2– **وَرَمْيُ الْجِمَارِ الثَّلَاثِ:** الْجَمْرَةِ الصُّغْرَى وَالْجَمْرَةِ الْوُسْطَى وَجَمْرَةِ الْعَقَبَةِ بِسَبْعِيْنَ حَصَاةً.

2. **மூன்று “ஜம்ரா”க்களுக்கும் கல் எறிதல்:**

அவை **“ஜம்ரதுஸ்ஸுஹ்ரா”, “ஜம்ரதுல் வுஸ்தா”, “ஜம்ரதுல் அகபஹ்”** இவற்றுக்கு எழுபது கற்களை எறிவதாகும்.

3– **وَالْمَبِيْتُ بِمُزْدَلِفَةَ:** وَهُوَ مَكَانٌ قُرْبَ عَرَفَاتٍ يَأْخُذُ مِنْهُ الْحُجَّاجُ الْحَصَى لِلرَّجْمِ.

3. **“முஸ்தலிபா”வில் இராத்தரித்தல்:** இது அறபாவுக்கு அண்மையிலுள்ள ஒரு இடமாகும். இங்கிருந்து ஹாஜிகள் எறிவதற்கு கல் எடுப்பார்கள்.

4– **وَالْمَبِيْتُ بِمِنى:** وَهُوَ مَكَانٌ بَيْنَ مَكَّةَ وَعَرَفَاتٍ وَهُوَ أَقْرَبُ إِلَى مَكَّةَ.

4. **“மினா”வில் இராத்தரித்தல்:** இது மக்காவிற்கும் அறபாவிற்கும் மத்தியிலுள்ள ஒரு இடமாகும். இது மக்காவுக்கு மிக அண்மையில் உள்ளது.

5- وَطَوَاعُ الْوَدَاعِ.

**5. தவாபுல் வாதாஇ**

**مَا يَجِبُ بِتَرْكِ الْوَاجِبِ**

**வாஜிபை விடுவதன் மூலம் கடமையாகக்கூடியவைகள்.**

(இதற்கு **“தமு”** என்று சொல்லப்படும்.)

يَجِبُ ذَبْحُ شَاةٍ عَلَى مَنْ تَرَكَ وَاجِبًا مِنْ وَاجِبَاتِ الْحَجِّ.

ஹஜ்ஜின் வாஜிபுகளில் ஒரு வாஜிபை விடுபவர் ஒரு ஆட்டை அறுப்பது கடமையாகும்.

وَمَنْ عَجَزَ عَنِ الذَّبْحِ صَامَ عَشْرَةَ أَيَّامٍ: ثَلَاثَةَ أَيَّامٍ فِي الْحَجِّ وَسَبْعَةً إِذَا رَجَعَ إِلَى أَهْلِهِ.

எவருக்கு ஆடு அறுக்க முடியவில்லையோ அவர் பத்து நாட்கள் நோன்பு நோற்பார். மூன்று நாட்கள் ஹஜ்ஜிலும் இன்னும் வீடு திரும்பினால் ஏழு நாட்களும் நோன்பு நோற்பார்.

**الْمُحَرَّمَاتُ إِلَى الْمُحْرِمِ بِالْحَجِّ أَوِ الْعُمْرَةِ:**

ஹஜ், உம்றஹ்வுடைய வணக்கத்துக்குல் நுழைகின்றேன் என்று நிய்யத்து வைத்தவர்களின் மீது ஹறாமான விடயங்கள்.

وَمِنْ مُحَرَّمَاتِ الْإِحْرَامِ شَيْئَانِ مُحَرَّمَانِ عَلَى الرَّجُلِ فَقَطْ وَهُمَا:

ஹஜ், உம்றஹ்வுடைய வணக்கத்துக்குல் நுழைகின்றேன் என்று நிய்யத்து வைத்தவர்களின் மீது ஹறாமான விடயங்களில்

இரண்டு ஆண்களுக்கு மாத்திரம் ஹறாமாகும். அவ்விரண்டும் பின்வருமாறு

1- سَتْرُ رَأْسِهِ.

1. தலையை மறைத்தல்.

2- وَلُبْسُ مُحِيْطٍ بِخِيَاطَةٍ أَوْ لِبْدٍ أَوْ نَحْوِهِ.

2. தையலினால் அல்லது சுருலினால் அல்லது அவை போன்றதினால் சூழப்பட்ட ஆடை அணிதல்.

وَيَحْرُمُ عَلَى الْمَرْأَةِ:

பின்வருவன பெண்கள் மீது ஹறாமாகும்.

1- سَتْرُ وَجْهِهَا.

1. முகத்தை மறைத்தல்.

2- وَلُبْسُ قُفَّازٍ.

2. கை உறை அணிதல்.

وَيَحْرُمُ عَلَى كُلٍّ مِنَ الرَّجُلِ وَالْمَرْأَةِ فِي حَالِ الْإِحْرَامِ:

இஹ்றாம் கட்டிய நிலையில் ஆண், பெண் இரு பாலார் மீதும் ஹறாமாகும் விடயங்கள்.

1- التَّطَيُّبُ.

1. மணம் பூசுதல்.

2- وَدَهْنُ الرَّأْسِ وَاللِّحْيَةِ بِمَا يُسَمَّى دُهْنًا كَالزَّيْتِ وَنَحْوِهِ.

2. எண்ணெய்யாக கருதப்படும் ஒன்றினை தலையிலோ, தாடியிலோ பூசுதல். உதாரணமாக ஸைதூன் எண்ணெய் அது போன்றவைகள்.

3- وَإِزَالَةُ الشّعَرِ وَتَقْلِيْمُ الْأَظْفَارِ.

3. முடியை நீக்குதல், நகங்களை வெட்டுதல்.

4- وَعَقْدُ الزِّوَاجِ.

4. திருமண உடன்படிக்கை செய்தல்.

5- وَصَيْدُ مَأْكُوْلٍ بَرِّيٍّ وَحْشِيٍّ كَالْغَزَالِ وَالْحَمَامِ.

5.சாப்பிடப்படக்கூடிய தரைவாழ் மிருகங்களை வேட்டை யாடுதல். உதாரணம் : புறா, மான்.

**أسئلة**

**1-على من يجب الحج؟ وكم مرة يجب في العمر؟**

**2-ما هي مزية الحج؟ واذكر الحديث.**

**3-عدد أركان الحج.**

**4-ما معنى الإحرام؟ وما هو وقت الوقوف بعرفة؟**

**5-ما معنى الحلق؟ والتقصير؟**

**6-ما هي أركان العمرة؟**

**7-عدد بعض واجبات الحج.**

**8-عدد ما يحرم على المحرم بالحج والعمرة.**

# فصلٌ

## الأَخْلاقِ الإسْلاميّةِ

# இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்

## الْإِخْلَاصُ فِي الْعِبَادَةِ وَالرِّيَاءُ وَالْعُجْبُ

## அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி அமல் செய்தலும் மற்றும் முகஸ்துதி கொள்வதும், தற்பெருமை அடிப்பதும்

الْإِخْلَاصُ فِي الْعِبَادَةِ مِنْ أَعْمَالِ الْقُلُوْبِ الْوَاجِبَةِ – وَهُوَ مِنَ الْأَخْلَاقِ الْحَسَنَةِ.

அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல் என்பது உள்ளத்தினால் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளில் ஒன்றும் மேலும் நற்குணத்தைச் சார்ந்த ஒன்றுமாகும்.

**وَمَعْنَى الْإِخْلَاصِ فِي الْعِبَادَةِ:** إِخْلَاصُ الْعَمَلِ بِالطَّاعَةِ للهِ تَعَالَى وَحْدَهُ أي أَنْ لَا يَقْصِدَ بِعَمَلِ الطَّاعَةِ مَحْمَدَةَ النَّاسِ وَالنَّظَرَ إِلَيْهِ بِعَيْنِ الاِحْتِرَامِ وَالتَّعْظِيْمِ، وَقَدْ جَعَلَ اللهُ تَعَالَى الْإِخْلَاصَ شَرْطًا لِقَبُوْلِ الْأَعْمَالِ الصَّالِحَةِ.

**“இஹ்லாஸுடன்” அமல் செய்வதென்பது:** அல்லாஹ்வின் பொருத்தத்தை மாத்திரம் நாடி ஒரு அமலை செய்வதாகும். அதாவது தான் மேற்கொள்ளக்கூடிய அமலின் மூலம் மக்களின் புகழையோ அல்லது பிறர் தன்னை கண்ணியப் பார்வையின் மூலம் பார்பதையோ நாடாமலிருப்பதாகும்.

நல்லமல்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு **“இஹ்லாஸை”** அல்லாஹு தஆலா நிபந்தனையாக ஆக்கியுள்ளான்.

قَالَ تَعَالَى: ﴿فَمَن كَانَ يَرْجُواْ لِقَآءَ رَبِّهِۦ فَلْيَعْمَلْ عَمَلًا صَٰلِحًا ﴿١١٠﴾﴾

( سورة الكهف )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம்:**

**“யார் மறுமை நாளில் நல்ல நிலையில் இருக்க விரும்புவாரோ அவர் நல்லமல்கள் செய்யும் போது மனிதர்களின் புகழ்ச்சியை நாடாமல் அமல் செய்து கொள்ளட்டும்.”**

**(அத்தியாயம் : அல்-கஹ்ப் வசனம் : 110)**

وَالْمُخْلِصُ هُوَ الَّذِي يَقُوْمُ بِأَعْمَالِ الطَّاعَةِ مِنْ صَلَاةٍ وَصِيَامٍ وَحَجٍّ وَزَكَاةٍ وَقِرَاءَةٍ لِلْقُرْآنِ وَغَيْرِهَا ابْتِغَاءَ الثَّوَابِ مِنَ اللهِ وَلَيْسَ لِأَنْ يَمْدَحَهُ النَّاسُ وَيَذْكُرُوْهُ، فَالْمُصَلِّي يَجِبُ أَنْ تَكُوْنَ نِيَّتُهُ خَالِصَةً لله تَعَالَى وَحْدَهُ فَقَطْ، لَا لِيَقُوْلَ عَنْهُ النَّاسُ: (فُلَانٌ مُصَلٍّ لَا يَتْرُكُ الْفَرَائِضَ) وَالصَّائِمُ يَجِبُ أَنْ يَكُوْنَ صِيَامُهُ لله تَعَالَى وَحْدَهُ فَقَطْ، وَكَذَلِكَ الْأَمْرُ بِالنِّسْبَةِ لِلْمُزَكِّي وَالْمُتَصَدِّقِ وَقَارِئِ الْقُرْآنِ، وَلِكُلِّ مَنْ أَرَادَ أَنْ يَعْمَلَ عَمَلَ بِرٍّ وَإِحْسَانٍ.

**“முஹ்லிஸ்”** (மனத்தூய்மையுடன் அமல் செய்பவர்) எனப்படுபவர் தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத், குர்ஆன் ஓதுதல்” போன்ற மற்றுமுண்டான ஏனைய அமல்களை செய்யும் போது மக்கள் தன்னை புகழ்வதையும், தன்னைப்பற்றிப் பெருமையாக பேசுவதையும் எதிர்பாராமல் அழ்ழாஹ்வினுடைய பொருத்தத்தை மாத்திரம் நாடி அமல்கள் செய்பவராவார்.

தொழக்கூடியவரின் எண்ணம் அழ்ழாஹ்வினுடைய பொருத்தத்தை மாத்திரம் நாடியதாக இருப்பது அவசியமாகும். மாறாக இந்த மனிதர் தொழுகையை விடாமல் தொழுது வருகின்றார் என்று பிறர் கூற வேண்டும் எனும் நோக்கில் இருக்கக்கூடாது. மேலும் நோன்பு நோற்பவரின் நோன்பு அழ்ழாஹ்விற்காகவே இருக்க

வேண்டும். இவ்வாறுதான் ஸகாத் கொடுப்பவரின் எண்ணமும், குர்ஆன் ஓதுவபரின் எண்ணமும் மற்றும் நன்மையான காரியங்களை செய்பவரின் எண்ணமும் இருக்க வேண்டும்.

قال النبيُّ صلى الله عليه وسلم: ( **إِنَّ اللهَ يُحِبُّ أَحَدَكُمْ إِذَا عَمِلَ عَمَلاً أَنْ يُتْقِنَهُ** ) ، قِيْلَ: وَمَا إِتْقَانُهُ يَا رَسُوْلَ اللهِ ؟ قَالَ: ( **يُخْلِصُهُ مِنَ الرِّيَاءِ وَالْبِدْعَةِ** ) - رواه الحافظُ السيوطيّ -

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:**

**“ஒரு அமலை திறன்பட செய்தல் என்பது எவ்வாறு எனக் கேட்கப்பட்டது? அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அமலை திறன்பட செய்தல் என்பது ஒரு அமலை செய்யும் போது அதனை அல்லாஹ்விற்காகவும் மேலும் மார்க்கத்திற்கு நேர்படக்கூடிய அமைப்பிலும் செய்வதாகும்” எனக் கூறினார்கள்.”**

**(அறிவித்தவர்: இமாம் ஸுயூதீ ரஹிமஹுல்லாஹ்)**

**الرِّيَاءُ:** وَيُقَابِلُ الْإِخْلَاصَ الرِّيَاءُ وَمَعْنَاهُ: أَنْ يَقْصِدَ الْإِنْسَانُ بِأَعْمَالِ الْبِرِّ كَالصَّوْمِ وَالصَّلَاةِ وَغَيْرِهِمَا مَدْحَ النَّاسِ وَإِجْلَالَهُمْ لَهُ.

**முகஸ்துதி** : இது **“இஹ்லாஸுக்கு”** எதிரானதாகும். முகஸ்துதி என்பதன் அர்த்தம் : தொழுகை, நோன்பு மற்றும் ஏனைய நல்லமல்கள் செய்வதன் மூலம் தன்னை மக்கள் புகழ்வதையும், கண்ணியப்படுத்துவதையும் நாடுவதாகும்.

والرِّيَاءُ يُحْبِطُ ثَوَابَ الْعَمَلِ الَّذِي قَارَنَهُ فَأَيّ عَمَلٍ مِنْ أَعْمَالِ الْبِرِّ يَدْخُلُهُ الرِّيَاءُ لَا ثَوَابَ فِيْهِ سَوَاءٌ كَانَ مُجَرَّدَ قَصْدِهِ الرِّيَاءُ أَوْ قَرَنَ بِهِ قَصْدَ طَلَبِ الْأَجْرِ مِنَ اللهِ تَعَالَى.

எந்த அமலில் முகஸ்துதி சேர்ந்துவிடுமோ அது அந்த அமலின் கூலியை அழித்து விடும்.

எந்த நன்மையான காரியத்தில் முகஸ்துதி நுழைந்துவிட்டதோ அந்த அமலுக்கு கூலி வழங்கப்படமாட்டாது. இவர் ‘‘முகஸ்துதியை மாத்திரம் நாடி அந்த அமலை செய்திருந்தாலும் சரி அல்லது ‘‘முகஸ்துதியுடன் அழ்ழாஹ்விடம் கூலியை எதிர்பார்த்து அமல் செய்திருந்தாலும் சரி அவருக்கு நற்கூலி வழங்கப்படமாட்டாது.

**الْعُجْبُ بِطَاعَةِ اللهِ:** أَمَّا الْعُجْبُ بِطَاعَةِ اللهِ فَهُوَ شُهُوْدُ الْعِبَادَةِ صَادِرَةً مِنَ النَّفْسِ غَائِبًا عَنِ الْمِنَّةِ أي أَنْ يَشْهَدَ الْعَبْدُ عِبَادَتَهُ، مَحَاسِنَ أَعْمَالِهِ صَادِرَةً مِنْ نَفْسِهِ غَائِبًا عَنْ شُهُوْدِ أَنَّهَا نِعْمَةٌ مِنَ اللهِ عَلَيْهِ، أي أَنَّ اللهَ هُوَ الَّذِي تَفَضَّلَ عَلَيْهِ بِهَا فَأَقْدَرَهُ عَلَيْهَا وَأَلْهَمَهُ أَنْ يَقُوْمَ بِهَا.

**அழ்ழாஹ்விற்கு வழிப்படுவதில் தற்பெருமை கொள்ளுதல்:**

அழ்ழாஹ்விற்கு வழிப்படுவதில் தற்பெருமை கொள்வதென்பது ஒரு அடியான் தான் செய்யக்கூடிய வணக்க வழிபாடுகள், நற்கருமங்கள் அழ்ழாஹ் அவனுக்கு அளித்த அருட்கொடை இன்னும் அவன்தான் அதை செய்வதற்குரிய ஆற்றலை வழங்கினான் என்பதை மறந்து இவைகள் தன்னால் ஏற்பட்டதாக எண்ணிக்கொள்வதாகும்.

وَالرِّيَاءُ بِأَعْمَالِ الْبِرِّ وَالْعُجْبُ بِطَاعَةِ اللهِ مَعْصِيَتَانِ مِنْ مَعَاصِي الْقُلُوْبِ وَخَصْلَتَانِ رَدِيْئَتَانِ يَجِبُ عَلَى الْمُكَلَّفِ أَنْ يَجْتَنِبَهُمَا وَيَكُوْنَ مُخْلِصًا فِي عِبَادَتِهِ للهِ تَعَالَى حَتَّى يَنَالَ الثَّوَابَ.

நன்மையான காரியங்களில் முகஸ்துதி, அழ்ழாஹ்வை வழிப்படுவதில் தற்பெருமை ஆகிய இரண்டும் உள்ளத்தினால்

ஏற்படக்கூடிய பாவங்களைச் சார்ந்ததும் மேலும் அனைத்து ''முகல்லபுகளும்'' தவிர்ந்து கொள்ள வேண்டிய இழிவான இரு பண்புகளுமாகும். மேலும் அவர் அவருடைய வணக்க வழிபாடுகளில் நன்மையை பெற்றுக்கொள்ள அழ்ழாஹ்வின் பொருத்தத்தை மாத்திரம் பெறும் நோக்கில் அமல்களை மேற்கொள்வது அவசியமாகும்.

## أسئلة

1- ما معنى الإخلاص في العبادة؟

2- ما الدليل من القرءان على أن الإخلاص شرط لقبول الأعمال الصالحة؟

3- من هو المخلص؟

4- اذكر حديثا في الحثّ على الإخلاص وترك الرياء في العمل.

5- ما معنى الرياء؟ وإذا دخل الرياء في عمل البرّ ما حكم العمل؟

6- ما معنى العجب بطاعة الله تعالى؟

பாடம் : 2 الدرس – 2

الصَّبْرُ وَالرِّضَا عَنِ اللهِ

## பொறுமை கொள்வதும், அழ்ழாஹ்விற்கு முழுமையாக கட்டுப்படுதலும்

قَالَ تَعَالَى: ﴿ٱسْتَعِينُوا۟ بِٱلصَّبْرِ وَٱلصَّلَوٰةِ ۚ إِنَّ ٱللَّهَ مَعَ ٱلصَّٰبِرِينَ ﴿١٥٣﴾﴾

( سورة البقرة )

அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :

**விளக்கம் :**

**“நீங்கள் பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள்”**

**(அத்தியாயம்: பகரஹ்)**

الصَّبْرُ مِنَ الْوَاجِبَاتِ الْقَلْبِيَّةِ وَهُوَ: حَبْسُ النَّفْسِ وَقَهْرُهَا عَلَى مَكْرُوهٍ تَتَحَمَّلُهُ أَوْ لَذِيذٍ تُفَارِقُهُ.

பொறுமை கொள்வதென்பது உள்ளத்தினால் செய்யப்பட வேண்டிய கடமைகளில் ஒன்றாகும்.

**பொறுமை என்பது:** மனது கஷ்டமாக கருதக்கூடிய ஒன்றை அடைவதில் அல்லது இன்பமான ஒன்றை பிரிவதில் உள்ளத்தை கட்டுப்படுத்துவதாகும்.

وَالصَّبْرُ ثَلَاثَةُ أَنْوَاعٍ:

1- الصَّبْرُ عَلَى أَدَاءِ مَا أَوْجَبَ اللهُ.

2- وَالصَّبْرُ عَمَّا حَرَّمَ اللهُ.

3- وَالصَّبْرُ عَلَى الْمَصَائِبِ.

பொறுமை மூன்று வகைப்படும்.
1. அல்லாஹ் கடமையாக்கிய விடயங்களை நிறைவேற்றுவதில் பொறுமையாக இருத்தல்.
2. அல்லாஹ் ஹறாமாக்கியவற்றை தவிர்ந்து கொள்வதில் பொறுமையாக இருத்தல்.
3. சோதனைகள் எதிர் கொள்ளும் போது பொறுமையாக இருத்தல்.

1- **الصَّبْرُ عَلَى أَدَاءِ مَا أَوْجَبَ اللهُ**: أي قَهْرُ النَّفْسِ عَلَى أَدَاءِ الْوَاجِبَاتِ الدِّيْنِيَّةِ الَّتِي فَرَضَهَا اللهُ، كَإِقَامَةِ الصَّلَاةِ فِي وَقْتِهَا وَصِيَامِ شَهْرِ رَمَضَانَ وَحُضُوْرِ مَجَالِسِ الْعِلْمِ لِتَعَلُّمِ مَا فَرَضَ اللهُ تَعَلُّمَهُ مِنْ عِلْمِ الدِّيْنِ، وَغَيْرِ ذَلِكَ مِنَ الْوَاجِبَاتِ.

1. அல்லாஹ் கடமையாக்கிய விடயங்களை நிறைவேற்றுவதில் பொறுமையாக இருத்தல் : அதாவது அல்லாஹ் கடமையாக்கிய கடமைகளை நிறைவேற்றுவதின் மீது மனதை கட்டுப்படுத்துவதாகும்.

உதாரணமாக : தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவது, றமழான் மாதத்தில் நோன்பு நோற்பது, மார்க்கத்தில் கட்டாயமாக்கப்பட்ட அறிவை கற்பதற்காக கற்பிக்கப்படும் இடங்களுக்கு சமூகமளிப்பது இன்னும் ஏனைய கடமைகளை கூறலாம். இது போன்ற விடயங்களை மேற்கொள்ளும் வேளையில் பொறுமையை கையாளுதல்.

2- **الصَّبْرُ عَمَّا حَرَّمَ اللهُ**: أي كَفّ النَّفْسِ عَنِ ارْتِكَابِ مَا حَرَّمَ اللهُ وَهَذَا يَحْتَاجُ إِلَى مُجَاهَدَةٍ كَبِيرَةٍ لِمَنْعِ النَّفْسِ وَكَبْحِهَا عَنِ ارْتِكَابِ الْمُحَرَّمَاتِ كَتَرْكِ الصَّلَاةِ وَشُرْبِ الْخَمْرِ وَالسَّرِقَةِ وَغَيْرِ ذَلِكَ.

2. அழ்ழாஹ் ஹறாமாக்கியவற்றை விட்டும் பொறுமையாக இருத்தல் : அதாவது அழ்ழாஹ் தடுத்தவற்றை தவிர்ந்து கொள்வதில் மனதை கட்டுப்படுத்துவதாகும்.

ஹறாமான விடயங்களை தவிர்ந்து கொள்வதில் மனதைக் கட்டுப்படுத்துவதற்கு பெரும் முயற்சி அவசியமாகும். உதாரணம் தொழுகையை விடுவது, மது அருந்துவது, திருடுவது, மற்றுமுண்டானவைகளை தவிர்ந்து கொள்கையில் பொறுமையுடன் இருப்பது.

3- **الصَّبْرُ عَلَى الْمَصَائِبِ**: أي عَلَى مَا يُزْعِجُ النَّفْسَ مِنْ أَلَمٍ أَوْ أَذًى أَوْ ضِيقِ مَعِيْشَةٍ أَوْ حُزْنٍ يَلْحَقُ الْإِنْسَانَ بِسَبَبِ مُصِيْبَةٍ لِأَنَّ الدُّنْيَا دَارُ بَلَاءٍ وَاخْتِبَارٍ وَدَارُ عَمَلٍ وَالْآخِرَةُ دَارُ حِسَابٍ.

3. சோதனைகள் எதிர் கொள்வதில் பொறுமையாக இருத்தல் : அதாவது சோதனையின் காரணமாக மனிதனுக்கு ஏற்படக்கூடிய துக்கம், நெருக்கடியான பொருளாதாரம், நோவினை, வலி போன்ற மனதுக்கு கஷ்டத்தையும், நெருக்கடியையும் தரக்கூடிய விடயங்களின் மீது பொறுமையாக இருப்பதாகும். ஏனெனில் இவ்வுலகம் துன்பங்கள், சோதனைகள் நிறைந்த ஒரு இடமாகும். மேலும் அது அமல் செய்வதற்கான ஒரு இடமுமாகும். மறுமைநாள் கேள்விகணக்குக்குரிய இடமாகும்.

قَال رسولُ اللهِ صلّى اللهُ عَليهِ وَسَلّمَ :(إِنّ اللهَ عَزّ وَجَلّ يَقُولُ: إِذَا ابْتَلَيْتُ عَبْدِي بِحَبِيبَتَيْهِ (أي عَيْنَيْهِ) فَصَبَرَ عَوَّضْتُهُ مِنْهُمَا الْجَنَّةَ ) - رواه البخاري -

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ் கூறியதாக கூறினார்கள் : "நான் என்னுடைய அடியானின் இரு கண்களின் பார்வையை போக்கி சோதித்து, அதற்கவர் பொறுமையாக இருந்தால் அவ்விரண்டிற்கும் பதிலாக சுவனத்தை அவருக்கு வழங்குவேன்."**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ றஹிமஹுல்லாஹ்)**

**الرِّضَا عَنِ اللهِ بِمَعْنَى التَّسْلِيْمِ لَهُ:** يَجِبُ عَلَى الْمُكَلَّفِ أَنْ لَا يَعْتَرِضَ عَلَى اللهِ تَعَالَى وَأَنْ يَرْضَى بِقَضَائِهِ وَقَدَرِهِ، وَالرِّضَا عَنِ اللهِ مِنَ الْوَاجِبَاتِ الْقَلْبِيَّةِ، وَمَعْنَاهُ التَّسْلِيْمُ لَهُ تَبَارَكَ وَتَعَالَى فَإِنَّ كَثِيْرًا مِنَ النَّاسِ يَقَعُوْنَ فِي الْمَعَاصِي بِتَرْكِهِمِ الصَّبْرَ عَلَى الْمَصَائِبِ.

அழ்ழாஹ்வை பொருந்திக் கொள்ளல், அதாவது அழ்ழாஹ்வின் கழா கதருக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அதனை பொருந்திக் கொள்வது ஒவ்வொரு முகல்லபின் மீது கட்டாயமாகும். **“இவ்வுலகில் நடைபெறும் விடயங்கள் யாவும் அழ்ழாஹ்வின் ஏற்பாட்டின் (கழாகதரின்) பிரகாரமே இடம்பெறுகின்றது.”** என ஏற்றுக்கொள்வது கடமையாகும். அழ்ழாஹ்வை பொருந்திக் கொள்வது உள்ளத்தினால் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். அழ்ழாஹ்வை பொருந்திக் கொள்வது என்பதன் நாட்டமாகிறது **“கலா கதரை”** முழுமையாக ஏற்று கொள்வதாகும். அதிகமான மனிதர்கள் சோதனைகளின் போது பொறுமையைக் கடைபிடிக்காததின் காரணமாக பெரும் பாவங்களிலே சிக்கி விடுகிறார்கள்.

فَيَنْبَغِي عَلَى الْمُسْلِمِ أَنْ يَتَحَلَّى بِالصَّبْرِ وَيُعَوِّدَ نَفْسَهُ عَلَيْهِ وَيُسَلِّمَ أَمْرَهُ للهِ وَيَتَوَكَّلَ عَلَيْهِ فِي أُمُوْرِهِ كُلِّهَا.

எனவே ஒரு முஸ்லிம் பொறுமையை கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்வதும், அதன் மீது தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்வதும், தன்னுடைய விடயங்கள் அனைத்தையும் அழ்ழாஹ்விடம் பொறுப்புச் சாட்டுவதும் அவசியமாகும்.

## أسئلة

1- اذكر ءاية قرءانية تدل على فضل الصبر.

2- ما هو الصبر؟ ومن أي الواجبات هو؟

3- عدّد أنواع الصبر.

4- ما معنى الصبر على أداء ما أوجب الله؟

5- ما معنى الصبر عما حرّم الله؟

6- ما معنى الصبر على المصائب؟

7- اذكر حديثا في بيان ثواب من صبر على فقد عينيه.

8- من الواجبات القلبية الرضا عن الله. ما معنى ذلك؟

பாடம் : 3 الدرس – 3

## مَحَبَّةُ اللهِ وَرَسُوْلِهِ

## அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்தல்.

الْمَحَبَّةُ وَالْبُغْضُ مِنْ أَعْمَالِ الْقُلُوْبِ، فَيَجِبُ عَلَى الْمُكَلَّفِ أَنْ يَسْتَعْمِلَهُمَا فِي مُوَافَقَةِ شَرْعِ اللهِ تَعَالَى، فَيُحِبّ اللهَ تَعَالَى وَمَا يُوَافِقُ شَرْعَهُ، وَيُبْغِضَ الشَّيْطَانَ وَمَا يُوَسْوِسُ بِهِ مِنْ مَعَاصٍ.

நேசிப்பதும், கோபம் கொள்வதும் உள்ளங்களினால் ஏற்படும் செயற்களாகும். ஒரு முகல்லப் அவ்விரண்டையும் மார்க்கத்துக்கு நேர்பாடான அமைப்பில் பயன்படுத்துவது அவசியமாகும். எனவே அவர் அழ்ழாஹ்வையும் அவனது மார்க்கத்துக்கு நேர்படக்கூடியவற்றையும் நேசிப்பார். ஷைத்தானையும் மேலும் அவன் தூண்டக்கூடிய பாவங்களையும் வெறுப்பார்.

1- **مَحَبَّةُ اللهِ وَرَسُوْلِهِ**: يَجِبُ عَلَى الْمُكَلَّفِ مَحَبَّةُ اللهِ تَعَالَى وَمَحَبَّةُ كَلَامِهِ وَمَحَبَّةُ رَسُوْلِهِ صَلَّى اللهُ عليه وسلّم، وَذَلِكَ بِاتِّبَاعِ أَوَامِرِ الشَّرْعِ وَاجْتِنَابِ نَوَاهِيْهِ.

1. அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் நேசம் கொள்ளுதல்: அதாவது ஒவ்வொரு முகல்லபும் அழ்ழாஹ்வையும், அவனது கலாமையும் (திருமறை ஷரீபையும்) அவனது தூதரையும் நேசிப்பது கடமையாகும். இது ஷரீஅத்துடைய கட்டளைகளை பின்பற்றுவதன் மூலமும், அது தடுத்தவைகளை தவிர்ந்து கொள்வதன் மூலமுமாகும்.

قَالَ تَعَالَىٰ: ﴿قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِي يُحْبِبْكُمُ ٱللَّهُ ۝٣١﴾

( سورة ءال عمران )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**
**விளக்கம் :**
**“யார் அழ்ழாஹ்வை உண்மையாக நேசம் கொள்கிறாரோ அவர் என்னை(முஹம்மத் ﷺ அவர்களை) ஈமான் கொள்ளட்டும். அவ்வாறு ஈமான் கொண்டால் அழ்ழாஹ் அவரை பொருந்திக்கொள்கின்றான்.”**
**(அத்தியாயம் ஆலு இம்ரான்)**

وَهَذَا نَابِعٌ مِنَ الْإِيْمَانِ بِاللهِ تَعَالَى وَبِمَا أَنْزَلَ وَبِتَصْدِيْقِ رَسُوْلِهِ صلى الله عليه وسلّم وَمَا جَاءَ عَنْهُ.

இது அழ்ழாஹ்வையும், அவன் இறக்கியவற்றையும் ஈமான் கொள்வதன் மூலமும் மேலும் முஹம்மத் ﷺ அவர்களையும் அவர்கள் கொண்டு வந்த விடயங்களை ஈமான் கொள்வதன் மூலமும் ஏற்படும்.

أَمَّا الشَّكّ فِي اللهِ تَبَارَكَ وَتَعَالَى أَوْ فِي كَلَامِهِ أَوْ فِي رَسُوْلِهِ صلى الله عليه وسلّم فَهُوَ مِنْ مَعَاصِي الْقَلْبِ وَهُوَ كُفْرٌ مُخْرِجٌ مِنَ الْإِسْلَامِ.

பரிசுத்தமான அழ்ழாஹ்வையும், அவனது கலாமையும் (திருமறை ஷரீபையும்) சந்தேகம் கொள்வது, இன்னும் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களை சந்தேகம் கொள்வது போன்றன உள்ளத்தினால் ஏற்படக்கூடிய பாவங்களில் ஒன்றாகும். இது மனிதனை இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய குப்ராகும்.

2- **مَحَبَّةُ الصَّحَابَةِ وَالْآلِ وَالصَّالِحِيْنَ:** مِنَ الْوَاجِبَاتِ الْقَلْبِيَّةِ مَحَبَّةُ الصَّحَابَةِ وَالْآلِ وَالصَّالِحِيْنَ، وَعَدَمُ مَحَبَّتِهِمْ مِنْ مَعَاصِي الْقُلُوْبِ وَشَتْمُهُمْ وَسَبُّهُمْ مِنْ مَعَاصِي اللِّسَانِ. بَلْ سَبُّ الصَّحَابَةِ جُمْلَةً كُفْرٌ.

2. ஸஹாபாக்களையும், பெருமானாரின் குடும்பத்தாரையும், ஸாலிஹீன்களையும் நேசிப்பது உள்ளத்தினால் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். அவர்களை நேசிக்காமல் வெறுப்பது உள்ளத்தினால் ஏற்படக்கூடிய ஒரு பாவமாகும். மேலும் அவர்களைத் திட்டுவது நாவினால் ஏற்படக்கூடிய பாவத்தைச்சார்ந்ததாகும். மாறாக ஸஹாபாக்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாகத் திட்டுவது குப்ராகும்.

**الصَّحَابَةُ:** هُمْ أَصْحَابُ رَسُوْلِ اللهِ صلّى اللهُ عليهِ وَسلّم، وَأَنْصَارُ دِيْنِ اللهِ تَعَالَى وَلَا سِيَّمَا السَّابِقِيْنَ الْأَوَّلِيْنَ مِنْهُمْ مِنَ الْمُهَاجِرِيْنَ وَالْأَنْصَارِ، وَهُمْ ( أي الصحابة ) مَنْ لَقُوْهُ فِي حَيَاتِه صلّى اللهُ عليهِ وَسلّم مَعَ الْإِيْمَانِ بِهِ، سَوَاءٌ طَالَتْ صُحْبَتُهُمْ لَهُ أَوْ لم تَطُلْ وَمَاتُوْا عَلَى ذَلِكَ ( أي عَلَى الْإِيْمَانِ بِهِ).

ஸஹாபாக்கள் அவர்கள் **"முஹம்மத் ﷺ அவர்களின் தோழர்களும்"** இம்மார்க்கத்துக்கு உதவி செய்தவர்களுமாவார்கள். குறிப்பாக ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தில் இணைந்து கொண்ட முஹாஜிரீன், அன்ஸாரீ ஸஹாபாக்கள் அழ்ழாஹ்வின் மார்க்கத்திற்கு அதிகமாக உதவி செய்யக்கூடியவர்களாக காணப்பட்டார்கள். ஸஹாபாக்கள் என்போர் முஹம்மத் ﷺ அவர்களை ஈமானுடன் தனது வாழ்நாளில் சந்தித்து அதே ஈமான் கொண்ட நிலையில் மரணித்தோராவர். அவர்களுடைய தோழமை நீடித்திருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி.

**الْآلُ** : يُطْلَقُ عَلَى أَزْوَاجِ النَّبِيّ صلى اللهُ عليه وسلّم مِثْلُ خَدِيْجَةَ وَعَائِشَةَ، وَأَقْرِبَائِه الْمُؤْمِنِيْنَ مِثْلُ حَمْزَةَ وَالْعَبَّاسِ وَعَلِيّ وَالْحَسَنِ وَالْحُسَيْنِ وَأُمِّهِمَا فَاطِمَةَ ( رضي الله عنهم أجمعين ). فَمَحَبَّتُهُمْ وَاجِبَةٌ لِمَا خُصّوْا بِهِ مِنَ الْفَضْلِ.

**பெருமானாரின் குடும்பத்தார்:** இவ்வார்த்தை ஹதீஜா, ஆஇஷா றழியல்லாஹு அன்ஹுமா போன்ற முஹம்மத் ﷺ அவர்களின் மனைவிமார்களுக்கும். மேலும் ஹம்ஸா, அப்பாஸ், அலி, ஹஸன், ஹுஸைன் அவ்விருவருடைய தாயார் பாதிமா றழியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களுக்கும் பிரயோகிக்கப்படும். அவர்களுக்கு தனிப்பட்ட சிறப்பு இருப்பதின் காரணமாக அவர்களை நேசிப்பது கடமையாகும்.

أَمّا إِنْ أُرِيْدَ بِالْآلِ مُطْلَقُ أَتْبَاعِ النَّبِي الْأَتْقِيَاءِ فَتَجِبُ مَحَبَّتُهُمْ لِأَنَّهُمْ أَحْبَابُ اللهِ تَبَارَكَ وَتَعَالَى بِمَا لَهُمْ مِنَ الْقُرْبِ إِلَيْهِ بِطَاعَتِهِ الْكَامِلَةِ.

பெருமானாரின் குடும்பத்தார் என்பதைக் கொண்டு பொதுவாக தக்வாதாரிகளான முஹம்மத் ﷺ அவர்களை பின்பற்றும் தக்வாதாரிகளை நாடப்படுமாயின் அவர்களையும் நேசிப்பது கடமையாகும். காரணம் இவர்கள் பரிபூரணமான முறையில் கடமைகளை நிறைவேற்றி, அல்லாஹ்வுடைய பொருத்தத்தை பெற்றவர்களாவார்கள்.

**الصَّالِحُوْنَ**: هُمُ الْأَتْقِيَاءُ الَّذِيْنَ أَدَّوا الْوَاجِبَاتِ وَاجْتَنَبُوْا الْمُحَرَّمَاتِ وَمِنْهُمُ الْعُلَمَاءُ الْعَامِلُوْنَ وَكُلّ وَلِيّ صَالِحٍ.

**ஸாலிஹூன்கள் எனப்படுபவர்கள்** கடமைகளை நிறைவேற்றி, ஹறாம்களை தவிர்ந்து நடந்தவர்கள். இவர்களில் அமல்கள் செய்யக்கூடிய உலமாக்களும், ஸாலிஹான வலிமார்கள் அனைவரும் உள்ளடங்குவார்கள்.

3- **بُغْضُ الشّيْطَانِ وَالْمَعَاصِي**: كَذَلِكَ مِنْ أَعْمَالِ الْقُلُوْبِ الْوَاجِبَةِ بُغْضُ الشّيْطَانِ وَالْمَعَاصِي وَالنّدَمُ عَلَيْهَا.

**ஷைத்தானையும், பாவங்களையும் வெறுப்பதும் மேலும் தான் செய்த பாவங்களுக்காக வருந்துவதும் உள்ளத்தினால் செய்ய வேண்டிய கடமைகளில் உள்ளவைகளாகும்.**

**أسئلة**

1- اذكر بعض الأشياء التي يجب على العبد محبتها.

2- ما الدليل من القرءان على أن علامة حب الله للعبد صدق اتباعه للنبيّ؟

3- من هم الصحابة؟ ولم تجب محبتهم؟ وعلى من يطلق لفظ الصحابة؟

4- من هم الآل؟ ولم تجب محبتهم؟

5- من هم الصالحون؟

6- اذكر بعض ما يجب على العبد بغضه.

பாடம் : 4 الدرس – 4

## التّكَبّرُ وَالْحِقْدُ وَالْحَسَدُ

## பெருமையடித்தலும், வஞ்சகம், பொறாமை கொள்ளலும்

التّكَبّرُ وَالْحِقْدُ وَالْحَسَدُ مِنْ مَعَاصِي الْقَلْبِ، وَهِيَ صِفَاتٌ مَذْمُوْمَةٌ تَخْفَى عَلَى كَثِيْرٍ مِنَ النّاسِ لِعَدَمِ تَعَلّمِهِمْ مَا هِيَ وَكَيْفَ يَتَجَنّبُوْنَهَا.

பெருமை, வஞ்சகம், பொறாமை ஆகியன உள்ளத்தினால் ஏற்படக்கூடிய பாவங்களும் இழிவான பண்புகளுமாகும். இப்பண்புகள் என்ன? அவற்றை எவ்வாறு தவிர்ந்து கொள்வது? என்பன பற்றி கற்றுக்கொள்ளாததன் காரணத்தினால் அதிகமான மக்களுக்கு இவை பற்றிய அறிவு தெளிவின்றி மறைவாகவே இருக்கின்றது.

1– **التّكَبّرُ**: هُوَ رَدّ الْحَقِّ عَلَى قَائِلِهِ وَاسْتِحْقَارُ النّاسِ.

**பெருமை என்பது:** உண்மை உரைப்பவரின் உண்மையை ஏற்காமல் மறுத்தல் மற்றும் மனிதர்களை இழிவாக கருதுவதுமாகும்.

قَالَ النّبِيّ صلّى اللهُ عليه وسلّم: ( **الْكِبْرُ بَطَرُ الْحَقِّ وَغَمْطُ النّاسِ** ) – رَوَاهُ مُسْلِمٌ – وَمَعْنَى بَطَرِ الْحَقّ: دَفْعُهُ وَرَدّهُ عَلَى قَائِلِهِ، وَمعْنَى غَمْطِ النّاسِ: احْتِقَارُهُمْ.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "பெருமை என்பது உண்மை உரைப்பவரின் உண்மையை ஏற்காமல் மறுத்தல் மற்றும் மனிதர்களை இழிவாக கருதுவதுமாகும்."**

(அறிவித்தவர்: இமாம் முஸ்லிம் றஹிமஹுஅல்லாஹ்)

وَيُفْهَمُ مِنْ هَذَا الْحَدِيْثِ أَنّ التَّكَبّرَ هُوَ رَدّ الْحَقّ عَلَى قَائِلِهِ مَعَ الْعِلْمِ بِأَنّ الصّوَابَ مَعَ الْقَائِلِ، إِمّا لِكَوْنِهِ صَغِيْرًا أَوْ فَقِيْرًا أَوْ تِلْمِيْذًا أَوْ ضَعِيْفًا، وَاسْتِحْقَارُ النّاسِ أَيِ ازْدِرَاؤُهُمْ كَأَنْ يَتَكَبّرَ عَلَى الْفَقِيْرِ وَيَنْظُرَ إِلَيْهِ نَظَرَ احْتِقَارٍ أَوْ يُعْرِضَ عَنْهُ أَوْ يَتَرَفّعَ عَلَيْهِ فِي الْخِطَابِ.

இந்த ஹதீஸிலிருந்து பெருமை என்பது உண்மை என்னவென்று தெரிந்து கொண்டு அதனை ஏற்காமல் மறுத்தலாகும் என்பதை விளங்க முடிகின்றது. அதாவது உண்மை இவ்விடயத்தை கூறுபவரிடம்தான் இருக்கின்றது என்று தெரிந்து கொண்டு அவர் சிறியவராக அல்லது ஏழையாக அல்லது மாணவராக அல்லது பலவீனமானவராக இருக்கின்றார் என்பதனால் அதனை ஏற்க மறுத்தல். இன்னும் மனிதர்களை இழிவாக பார்ப்பதுமாகும். அதாவது ஏழையான ஒருவரிடம் பெருமையடித்து அவரை இழிவாக பார்ப்பது அல்லது அவரை புறக்கணிப்பது அல்லது அவரை விட சத்தத்தை உயர்த்திப் பேசுவது.

2- **الْحِقْدُ**: هُوَ إِضْمَارُ الْعَدَاوَةِ لِلْمُسْلِمِ مَعَ الْعَمَلِ بِمُقْتَضَى ذَلِكَ وَعَدَمِ اسْتِشْعَارِ الْكَرَاهِيَةِ لِهَذَا الْعَمَلِ.

வஞ்சகம் என்பது ஒரு முஸ்லிமின் மீதான விரோதத்தை உள்ளத்தில் மறைத்து அவ்வஞ்சகம் தூண்டுகின்ற விடயத்தை செய்வதும் அச்செயல் வெறுப்பானது என்று உணராமலும் இருப்பதுமாகும்.

قَال النَّبِيّ صلّى اللهُ عليه وسلّم: ( مَنْ أَرَادَ أَنْ يُزَحزَحَ عَنِ النَّارِ وَيُدْخَلَ الْجَنَّةَ فَلْتَأْتِه مَنِيَّتُهُ وَهُوَ يُؤْمِنُ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ وَلْيَأْتِ إِلَى النَّاسِ بِمَا يُحِبّ أَنْ يُؤْتَى إِلَيْهِ ) – رواه ابنُ حبّانَ والبيهقيّ

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "யார் நரகத்தை விட்டும் தூரப்படுத்தப்பட்டு சுவனத்தினுள் நுழைவிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றாரோ அவரது மரணம் அழ்ழாஹ்வையும், இறுதி நாளையும் ஈமான் கொண்ட நிலையில் அவருக்கு வந்தடையட்டும். இன்னம் அவர் தனக்கு எது கொடுக்கப்பட வேண்டும் என விரும்புகின்றாரோ அதனை ஏனைய மனிதர்களுக்கு கொடுக்கட்டும்."**

**(அறிவித்தவர்கள் : இமாம் இப்னு ஹிப்பான், இமாம் பைஹகீ றஹிமஹுமழ்ழாஹ்)**

3- **الْحَسَدُ:** هُوَ أَنْ يَكْرَهَ الشَّخْصُ النِعْمَةَ الّتِي أَنْعَمَ اللهُ بِهَا عَلَى الْمُسْلِمِ دِيْنِيَّةً كَانَتْ أَوْ دُنْيَوِيَّةً وتَمنّى زَوَالَهَا وَاسْتِثْقَالَهَا لَه، وَإِنَّمَا يَكُوْنُ مَعْصِيَةً إِذَا عَمِلَ بِمُقْتَضَاه، فَإِنْ كَرِهَهُ وَلَمْ يَعْمَلْ بِمُقْتَضَاه لَمْ يَكُنْ عَلَيْهِ ذَنْبٌ. وَمَعْنَى عَمَلٌ بِمُقْتَضَاه كَأَنْ يَسْرِقَ مَالَهُ حَسَدًا أَوْ يُخَرِّبَ سَيَّارَتَهُ حَسَدًا.

பொறாமை என்பது ஒரு மனிதன் அழ்ழாஹ்வினால் ஒரு முஸ்லிமிற்கு வழங்கப்பட்ட அருளை வெறுப்பதாகும். அந்த அருள் மார்க்கம் சார்ந்ததாக அல்லது உலகம் சார்ந்ததாக இருந்தாலும் சரியே. மேலும் அந்த அருள் அவனிடமிருந்து நீங்கிவிட வேண்டும் என்று ஆசை வைப்பதும், அதனை கஷ்டமாக கருதுவதுமாகும்.

பொறாமை என்பது குற்றமாக ஆகுவதெல்லாம் அது தூண்டுகின்ற விடயத்தை செய்வதன் மூலமாகும். அதனை வெறுத்து அது தூண்டுகின்ற விடயத்தை செய்யாவிட்டால் அவர் மீது எவ்வித குற்றமும் கிடையாது.

பொறாமை தூண்டுகின்ற விடயத்தை செய்வதென்பது அவனது பணத்தை பொறாமை காரணமாக திருடுவதைப் போல அல்லது பொறாமை காரணமாக அவனது வாகனத்தை நாசப்படுத்துவதைப் போல.

**أسئلة**

1- ما هو التكبر؟

2- اذكر حديثا عن النبيّ في النهي عن التكبر. ومن رواه؟

3- ما معنى بطر الحق؟ وما معنى غمط الناس؟

4- ما معنى استحقار الناس؟

5- ما هو الحقد؟

6- اذكر حديثا عن النبيّ في الحثّ على حسن المعاملة للناس.

7- ما هو الحسد؟ ومتى يكون معصية؟

பாடம் : 5 الدرس — 5

## الْغِيْبَةُ وَالْبُهْتَانُ وَالنَّمِيْمَةُ

## புறம் பேசுதலும், இட்டுக்கட்டுதலும், கோள் சொல்லுதலும்

قَالَ تَعَالَىٰ: ﴿مَّا يَلْفِظُ مِن قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ﴿١٨﴾﴾

(سورة ق)

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்: விளக்கம்:**

**“மனிதன் பேசக்கூடிய அனைத்து நல்ல வார்த்தைகளையும், தீய வார்த்தைகளையும் றகீப், அதீத் (அலைஹிமஸ்ஸலாம்) என்றழைக்கப்படும் இரு மலக்குமார்கள் பதிவிடுகிறார்கள்.”**

**(அத்தியாயம் : காப்)**

فِي هَذِهِ الْآيَةِ بَيَانُ أَنَّ كُلَّ مَا يَتَلَفَّظُ بِهِ الْإِنْسَانُ سَوَاءٌ كَانَ خَيْرًا أَوْ شَرًّا يَكْتُبُهُ مَلَكَانِ أَحَدُهُمَا رَقِيْبٌ وَالْآخَرُ عَتِيْدٌ، وَالْإِنْسَانُ الْعَاقِلُ يَنْبَغِي أَنْ يَحْفَظَ لِسَانَهُ عَنْ كُلِّ مَا هُوَ شَرٌّ وَمِنْ هَذَا الشَّرِّ: الْغِيْبَةُ وَالْبُهْتَانُ، وَالنَّمِيْمَةُ، وَهِيَ مِنْ مَعَاصِي اللِّسَانِ وَمِنَ الْخِصَالِ الْمَذْمُوْمَةِ.

மனிதன் பேசக்கூடிய வார்த்தைகள் அது நல்லதாக இருந்தாலும் சரி கெட்டதாக இருந்தாலும் சரி அனைத்தையும் ரகீப் மற்றும் அதீத் ஆகிய இரு மலக்குமார்களும் பதிவிடுகிறார்கள். எனவே ஒரு புத்திசாலி தீய பேச்சுக்களை விட்டும் தன் நாவை பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

**தீய பேச்சுக்கள் சில**: புறம் பேசுதல், இட்டுக்கட்டுதல், கோள் சொல்லுதல் இவை நாவினால் ஏற்படக்கூடிய பாவங்களாகும். மேலும் இழிவான பண்புகளுமாகும்.

ثَبَتَ أَن أحَدَ الصّحَابَةِ خَاطَبَ لِسَانَهُ وَقَالَ: ( يَا لِسَانُ قُلْ خَيْرًا تَغْنَمْ وَاسْكُتْ عَنْ شَرٍّ تَسْلَمْ مِنْ قَبْلِ أَن تَنْدَمَ، إِنِّي سَمِعْتُ رَسُوْلَ اللهِ صلّى اللهُ عليه وسلّم يَقُوْلُ: **أَكْثَرُ خَطَايَا ابْنِ ءَادَمَ مِنْ لِسَانِهِ** – رواه الطّبرانيّ -

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**"ஒரு ஸஹாபி தன் நாவை நோக்கி பின்வருமாறு கூறினார்கள் "நாவே நீ நல்லதை கூறு பயனடைவாய். கெட்டதை பேசாதிரு நீ கவலையடைவதை விட்டும் நீ ஈடேற்றம் பெறுவாய்". அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூற நான் செவிமடுத்தேன்: "மனிதனுடைய அதிகமான பாவங்கள் நாவினால்தான் ஏற்படுகின்றன"."**

**(அறிவித்தவர்: இமாம் தபறானீ றஹிமஹுல்லாஹ்)**

1. الْغِيْبَةُ: هُوَ ذِكْرُ الْمُسْلِمِ بِمَا فِيْهِ مِمَّا يَكْرَهُ فِي غِيْبَتِهِ فَلَوْ كَانَ شَخْصٌ مُسْلِمٌ قَصِيرَ الْقَامَةِ فَقَالَ عَنْهُ شَخْصٌ فِي غَيْبَتِهِ فُلَانٌ قَصِيرٌ وَكَانَ يَكْرَهُ أَنْ يُقَالَ عَنْهُ ذَلِكَ فَإِنَّ ذَلِكَ مِنَ الغِيْبَةِ الْمُحَرَّمَةِ الَّتِي نَهَى عَنْهَا رَسولُ اللهِ صلّى اللهُ عليهِ وسلّم.

**புறம் பேசுதல் என்பது: ஒரு முஸ்லிமான சகோதரனிடம் இருக்கின்ற அவர் வெறுக்கும் விடயமொன்றை அவர் இல்லாத நேரத்தில் கூறுவதாகும். குள்ளமான ஒரு முஸ்லிமை "அவர் குள்ளமானவர்" என்று அவர் இல்லாத போது கூறுவதை அவர் வெறுப்பவராக இருந்தால் அவரை "குள்ளமானவர்" என்று கூறுவது முஹம்மத் ﷺ அவர்கள் தடுத்த ஹறாமான புறம் பேசுதலை சார்ந்ததாகும்.**

**قَالَ تَعَالَى: ﴿وَلَا يَغْتَب بَّعْضُكُم بَعْضًا ١٢﴾**

سورة الحجرات

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் விளக்கம்**

**“மார்க்கம் சார்ந்த எக்காரணமுமின்றி இன்னொரு முஸ்லிமைப்பற்றி புறம் பேசுவதை தவிர்ந்து கொள்ளட்டும்.” (அத்தியாயம் : அல்-ஹுஜராத்)**

1. **الْبُهْتَانُ**: هُوَ ذِكْرُ الْمُسْلِمِ بِمَا لَيْسَ فِيْهِ مِمَّا يَكْرَهُهُ، وَإِثْمُهُ أَشَدُّ مِنْ إِثْمِ الْغِيْبَةِ لِأَنَّهُ يَتَضَمَّنُ الْكَذِبَ.

**இட்டுக்கட்டுதல் என்பது:** ஒரு முஸ்லிமான சகோதரனிடம் இல்லாத, அவன் வெறுக்கக்கூடிய ஒன்றை கூறுவதாகும். இன்னும் அதனது குற்றம் புறம் பேசுவதை விடவும் மிகக் கொடியதாகும். ஏனெனில் அது பொய்யை உள்ளடக்கியுள்ளது.

قَالَ رسولُ الله صلّى الله عليه وسلّم مُخَاطِبًا بَعْضَ الصَّحَابَةِ: **أَتَدْرُوْنَ مَا الْغِيْبَةُ** قَالُوْا: اللهُ وَرَسُوْلُهُ أَعْلَمُ، قَالَ: ( **ذِكْرُكَ أَخَاكَ بِمَا يَكْرَهُ** )، قِيْلَ: أَفَرَأَيْتَ إِنْ كَانَ فِي أَخِي مَا أَقُوْلُ؟ قَالَ:( **إِنْ كَانَ فِيْهِ مَا تَقُوْلُ فَقَدِ اغْتَبْتَهُ وَإِنْ لَمْ يَكُنْ فِيْهِ فَقَدْ بَهَتَّهُ** ) – رواه مسلم – وَمَنِ اسْتَمَعَ لِلْغِيْبَةِ الْمُحَرَّمَةِ فَقَدْ وَقَعَ فِي مَعْصِيَةٍ مِنْ مَعَاصِي الْأُذُنِ وَعَلَيْهِ النَّهْيُ عَنْ ذَلِكَ.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் “புறம் பேசுதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?” என ஸஹாபாக்களிடம் கேட்டார்கள் அதற்கு அவர்கள் “அழ்ழாஹ்வும் அவனது தூதருமே மிகவும் அறிந்தவர்கள்.” என்றனர்.**

**“உங்கள் சகோதரர் வெறுக்கும் ஒன்றைப் பற்றி நீர் கூறுவதாகும்.” என அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள். தான் கூறுவது அந்த சகோதரரிடம் இருந்தால் அதைப் பற்றி என்ன கூறுவீர்? எனக் கேட்கப்பட்ட போது “நீர் கூறுவது அவரிடம் காணப்பட்டால் நீர் அவரைப் பற்றி புறம் பேசிவிட்டீர். அது அவரிடம் இல்லையெனில் நீர் அவர் மீது இட்டுக்கட்டிவிட்டீர்”. எனக் கூறினார்கள்.**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் றஹிமஹுழ்ழாஹ்)**

யார் ஹறாமான புறம் பேசுதலை செவிமடுப்பாரோ அவர் காதினால் ஏற்படக்கூடிய ஒரு பாவத்திலே சிக்கியவராக ஆகிவிடுவார். அந்த புறம் பேசுதலை அவர் தடுப்பது அவர் மீது கடமையாகும்.

2. **النَّمِيْمَةُ** : هِيَ نَقْلُ كَلَامِ النَّاس بَعْضِهِمْ إِلَى بَعْضٍ عَلَى وَجْهِ الْإِفْسَادِ بَيْنَهُمْ، كَنَقْلِ الْكَلَامِ لِلتَّفْرِيْقِ بَيْنَ اثْنَيْنِ مُتَحَابَّيْنَ لِلْإِفْسَادِ أَوِ الْقَطِيْعَةِ أَوِ الْعَدَاوَةِ بَيْنَهُمَا. قَالَ تَعَالَىٰ: ﴿هَمَّازٖ مَّشَّآءِۭ بِنَمِيمٖ ١١﴾

**கோள் சொல்லுதல் என்பது:** சிலர் கூறிய பேச்சை இன்னும் சிலரிடத்தில் அவர்களுக்கிடையில் பிரச்சினையை உண்டுபண்ணும் விதத்தில் கூறுவதாகும்.
உதாரணமாக நேசம் கொண்டிருக்கும் இருவருக்கிடையில் குழப்பத்தை உண்டுபண்ணும் விதமாக அல்லது துண்டிப்பை, பகைமையை ஏற்படுத்தும் விதமாக கதைகளை கூறல்.

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:**
**விளக்கம்:**
**“எவ்வித உரிமையுமின்றி மக்களின் குறைகளை கூறி அவர்களை பற்றி புறம்பேசி, கோள் சொல்லித் திரியக்கூடிய, பிரச்சினைகளை அங்கும் இங்கும் கூறி வருபவர்”**

وَقَالَ رسولُ الله صلّى الله عليه وسلّم : ( **لَا يَدْخُلُ الْجَنَّةَ قَتَّاتٌ** ) رواه البخاريّ – وَالْقَتَّاتُ هُوَ النَّمَّامُ، أي لَا يَدْخُلُ الْجَنَّةَ مَعَ الْأَوَّلِيْنَ، بَلْ بَعْدَ أَنْ يَنَالَ الْعَذَابَ الَّذِي يَسْتَحِقُّ فِي نَارِ جَهَنَّمَ إِنْ لَمْ يَعْفُ اللهُ عَنْهُ

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் : “முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரச்சினையை ஏற்படுத்துவதற்காக கோள் சொல்லித் திரிபவன் (ஈமானுடன் மரணித்தாலும்)**

**ஆரம்பமாக சுவர்க்கம் நுழையக்கூடியவர்களுடன் சுவர்க்கம் நுழையமாட்டான்."** மாறாக, அவன் செய்த பாவங்களை அல்லாஹு தஆலா மன்னிக்கவில்லையாயின் அதற்கான தண்டனையை நரகில் அனுபவித்ததன் பின்பாக சுவனம் நுழைவான்.

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ றஹிமஹுல்லாஹ்)**

أسئلة

1- اذكر ءاية في الأمر بحفظ اللسان.

2- اذكر بعض ما يجب حفظ اللسان عنه.

3- اذكر ما روي عن أحد الصحابة.

4- ما هي الغيبة؟ أعط مثالا.

5- ما الدليل من القرءان على حرمة الغيبة؟

6- ما هو البهتان؟ وما الدليل على حرمته من حديث رسول الله؟

7- ما هي النميمة؟ وما الدليل على حرمتها من القرءان؟

8- أيّهما أشدّ إثما الغيبة أم البهتان؟

9- اذكر حديثا في تحريم النميمة وما معناه؟

பாடம் : 6 الدرس – 6

# الْكَذِبُ

## பொய் சொல்லுதல்

الْكَذِبُ مِنْ مَعَاصِي اللِّسَانِ وَهُوَ الْإِخْبَارُ بِالشَّيْءِ عَلَى خِلَافِ الْوَاقِعِ عَمْدًا أي مَعَ الْعِلْمِ بِأَنَّ خَبَرَهُ هَذَا عَلَى خِلَافِ الْوَاقِعِ، وَهُوَ حَرَامٌ سَوَاءٌ كَانَ عَلَى وَجْهِ الْجِدِّ أَوْ عَلَى وَجْهِ الْمَزْحِ، فَقَدْ قَالَ النَّبِيّ صلّى الله عليه وسلّم ( **لَا يَصْلُحُ الْكَذِبُ فِي جِدٍّ وَلَا هَزْلٍ** ) – رواه البيهقيّ – وَقَالَ صلّى اللهُ عليه وسلّم: ( **إِيَّاكَ وَالْكَذِبَ فَإِنَّ الْكَذِبَ يَهْدِي إِلَى الْفُجُوْرِ وَإِنَّ الْفُجُوْرَ يَهْدِي إِلَى النَّارِ وَلَا يَزَالُ الْعَبْدُ يَكْذِبُ وَيَتَحَرَّى الْكَذِبَ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللهِ كَذَّابًا** ) رواه ابنُ ماجه.

**"பொய்"** நாவினால் எற்படக்கூடிய பாவங்களை சார்ந்ததாகும். பொய் என்பது உண்மை நிகழ்வுக்கு மாற்றமாக வேண்டுமென்றே அறிவித்தல். அதாவது தான் அறிவித்த விடயம் நடந்ததற்கு மாற்றம் என அறிந்திருப்பதுடன் அதனை கூறுவது. இது **"ஸீரியஸ்"** அமைப்பிலாக இருந்தபோதிலும் சரியே நகைச் சுவை அமைப்பிலாக இருந்தாலும் சரியே ஹறாமாகும்.
**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: ஸீரியஸாகவோ, நகைச்சுவையாகவோ பொய் பேசக்கூடாது.**

**(அறிவித்தவர் : இமாம் பைஹகீ றஹிமஹுமுல்லாஹ்)**

இன்னும் **அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: பொய் சொல்வதை விட்டும் உன்னை எச்சரிக்கை செய்கின்றேன். நிச்சயமாக பொய் சொல்லுதல் கெட்ட விடயங்களுக்கு வழிகாட்டுகின்றது. இன்னும் நிச்சயமாக கெட்ட விடயங்கள் நரகத்திற்கு வழிகாட்டுகின்றது. ஒரு அடியான் பொய்**

**கூறிக்கொண்டே இருக்கிறான். தேடித் தேடி பொய் கூறிகிறானென்றால் பொய்யன் என எழுதப்படுகின்றான். (அறிவித்தவர்: இமாம் இப்னு மாஜா றஹிமஹுழ்ழாஹ்)**

وَيَدْخُلُ تَحْتَ الْكَذِبِ أَشْيَاءُ كَثِيْرَةٌ مِنْ مَعَاصِي اللِّسَانِ مِنْهَا: الْيَمِيْنُ الْكَاذِبَةُ، وَشَهَادَةُ الزُّوْرِ، وَالْكَذِبُ عَلَى اللهِ وَرَسُوْلِهِ.

**பொய்யினுள் நாவினால் ஏற்படக்கூடிய பல பாவங்கள் உள்ளடங்குகின்றன அவை:** பொய் சத்தியம் செய்தல், பொய்சாட்சி கூறுதல், அழ்ழாஹ்வின் மீதும், அவனது தூதர் மீதும் பொய் கூறுதல்.

1- **الْيَمِيْنُ الْكَاذِبَةُ :** الْيَمِيْنُ الْكَاذِبَةُ مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ كَأَنْ يَحْلِفَ إِنْسَانٌ بِاللهِ تَبَارَكَ وَتَعَالَى بِخِلَافِ الْوَاقِعِ فَيَقُوْلُ:( وَاللهِ فَعَلْتُ كَذَا ) وَهُوَ لَمْ يَفْعَلْ، أَوْ يَقُوْلُ: ( وَاللهِ لَمْ أَفْعَلْ هَذَا الشَّيْءَ ) وَهُوَ قَدْ فَعَلَهُ، فَهَذَا مِنَ التَّهَاوُنِ فِي تَعْظِيْمِ اللهِ تَعَالَى.

1. பொய் சத்தியம் செய்வது : இது பெரும் பாவமாகும்.

உதாரணம் : தான் ஒரு விடயத்தை செய்யாத நிலையில் **"நான் அழ்ழாஹ்வின் மீது ஆணையாக செய்தேன்"** என நடந்ததற்கு மாற்றமாக சத்தியம் செய்வது அல்லது ஒரு விடயத்தை செய்த நிலையில் **"அழ்ழாஹ்வின் மீது ஆணையாக நான் செய்ய வில்லை"** என நடந்ததற்கு மாற்றமாக சத்தியம் செய்தல்.

2- **شَهَادَةُ الزُّوْرِ:** مَعْنَى الزُّوْرِ: الْكَذِبُ، وَشَهَادَةُ الزُّوْرِ مِنْ أَكْبَرِ الْكَبَائِرِ، كَأَنْ يَشْهَدَ شَخْصٌ عِنْدَ الْقَاضِي أَنَّ فُلَانًا سَرِقَ وَهُوَ يَكْذِبُ.

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عليه وسلّم: ( **عَدَلَتْ شَهَادَةُ الزُّوْرِ الْإِشْرَاكَ بِاللهِ** ) - رواه البيهقيُّ - أي شُبِّهَتْ بِالْإِشْرَاكِ مِنْ عِظَمِ الذَّنْبِ النَّاتِجِ عَنْهَا، وَلَيْسَ الْمُرَادُ أَنَّ فَاعِلَهَا يَخْرُجُ مِنْ دِيْنِ الْإِسْلَامِ وَلَكِنَّهُ مُذْنِبٌ ذَنْبًا كَبِيْرًا.

**“ஸூzர்” என்பதன் கருத்து:** பொய் என்பதாகும். இது பெரும் பாவங்களில் மிகக் கொடியதாகும். உதாரணம் இந்த மனிதர் திருடினார் என **“காழியாரிடம்”** பொய்யாக சாட்சி கூறுவதாகும்.
**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் “பொய்சாட்சி கூறுவது அழ்ழாஹ்வுக்கு இணை வைப்பதன் மூலம் ஏற்படும் பாவத்தைப் போன்றது.”**

**(அறிவித்தவர்: இமாம் பைஹகீ றஹிமஹுழ்ழாஹ்)**

அதாவது இதன் மூலம் ஏற்படக்கூடிய பாவம் கடுமையானது எனும் ரீதியில் ஷிர்குக்கு ஒப்பாக்கப்பட்டுள்ளது. அதாவது **“இப்பாவத்தை செய்தவர் இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் வெளியேறிவிட்டார்.”** என்று பொருள் கொள்ளக்கூடாது. என்றாலும் இவர் பெரும் பாவம் புரிந்த பாவியாகி விட்டார் என்றே பொருள் கொள்ள வெண்டும்.

**الْكَذِبُ عَلَى اللهِ وَعَلَى رَسُوْلِهِ:** وَهُوَ مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ.

அழ்ழாஹ்வின் மீதும் அவனது தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் பொய் கூறுவது பெரும் பாவமாகும்.

قَالَ تَعَالَى: ﴿وَيَوْمَ ٱلْقِيَٰمَةِ تَرَى ٱلَّذِينَ كَذَبُواْ عَلَى ٱللَّهِ وُجُوهُهُم مُّسْوَدَّةٌ ﴿٦٠﴾﴾

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**
**விளக்கம் :**
**“கியாமத் நாளில் அழ்ழாஹ்வின் மீது பொய் கூறியவர்களின் முகங்களை கருமை நிறமானதாக காண்பீர்.”**
**(அத்தியாயம் : அஸ்ஸுமர்)**

وَالْكَذِبُ عَلَى اللهِ كَأَنْ يَقُوْلَ شَخْصٌ: ( خَلَقَ اللهُ فِي جِهَةِ كَذَا جَبَلًا مِنْ ذَهَبٍ )، وَهُوَ يَكُوْنُ غَيْرَ مَوْجُوْدٍ فَهُوَ خِلَافُ الْوَاقِعِ، مَعَ الْعِلْمِ أَنَّ اللهَ قَادِرٌ عَلَى أَنْ يَخْلُقَهُ. وَمِنَ الْكَذِبِ عَلَى اللهِ مَا يَكُوْنُ كُفْرًا كَمَنْ يَقُوْلُ إِنَّ اللهَ جَالِسٌ عَلَى الْعَرْشِ أَوْ سَاكِنٌ فِي جِهَةٍ مِنَ الْجِهَاتِ أَوْ مَنْ يَقُوْلُ إِنَّ اللهَ حَالٌّ فِي كُلِّ شَيْءٍ فَهَذَا كُفْرٌ. وَكَذلِكَ مَنْ يَنْسُبُ إِلَى اللهِ تَحْلِيْلَ مَا حَرَّمَهُ فِي شَرْعِهِ أَوْ تَحْرِيْمَ مَا أَحَلَّهُ فِي شَرْعِهِ مَعَ الْعِلْمِ بِهِ.

அழ்ழாஹ்வின் மீது பொய் கூறுவதற்கு உதாரணம்: ஒரு திசையில் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கூறுவதாகும். உதாரணமாக அழ்ழாஹ் இந்தத் திசையில் தங்க மலையொன்றைப் படைத்துள்ளான். இது உண்மைக்கு மாற்றமான செய்தியாகும். அதாவது அழ்ழாஹ்வால் அந்த திசையில் இதைப் படைக்க முடியும் என்று தெரிந்திரிப்பதுடன் இவ்வாறு கூறுவதாகும். அழ்ழாஹ்வின் மீது சொல்லப்படக்கூடிய சில பொய்கள் குப்ராக ஆகிவிடும்.

உதாரணம்: **“அழ்ழாஹ் அர்ஷின் மீது உட்கார்ந்திருக்கின்றான்”** அல்லது **“ஏதாவது ஒரு திசையில் குடியிருக்கின்றான்”** அல்லது **“அழ்ழாஹ் எல்லாவற்றிலும் இறங்கியுள்ளான்”** எனக் கூறுவது. இது கொள்கை மறுப்பாகும். இவ்வாறுதான் **“அழ்ழாஹ் ஒரு விடயத்தை ஹலாலாக்கியுள்ளான்”** எனத் தெரிந்தும் **“அழ்ழாஹ் அதை ஹறாமாக்கியுள்ளான்”** எனக் கூறுவது இன்னும் **“அழ்ழாஹ் இந்த விடயத்தை ஹறாமாக்கியுள்ளான்”** என தெரிந்து கொண்டு இதை **“அழ்ழாஹ் ஹலாலாக்கியுள்ளான்”** எனக் கூறுவது போன்றன.

أَمَّا الْكَذِبُ عَلَى الرَّسُوْلِ صلى الله عليه وسلّم فَهُوَ كَأَنْ يَنْسُبَ كَاذِبًا إِلَى رَسُوْلِ الله صلى الله عليه وسلّم كَلَامًا لَمْ يَقُلْهُ، قَالَ رسولُ اللهِ صلّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: **( إِنَّ كَذِبًا عَلَيَّ لَيْسَ كَكَذِبٍ عَلَى أَحَدٍ، فَمَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ )** – رواه مسلم –

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது பொய் சொல்வதற்கு உதாரணம் : முஹம்மத் ﷺ அவர்கள் கூறாத ஒரு வார்த்தையை பொய்யாக அவர்களின் மீது இணைத்து கூறுவது போன்றதாகும்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: என் மீது பொய் சொல்வது உங்களில் ஒருவர் மீது பொய் சொல்வதைப் போன்றல்ல. யார் என் மீது வேண்டுமென பொய் சொல்வாரோ அவர் தன் இருப்பிடத்தை நரகில் ஆக்கிக் கொள்ளட்டும்.**

**(அறிவித்தவர்: இமாம் முஸ்லிம் றஹிமஹுழ்ழாஹ்)**

أسئلة

1– ما هو الكذب؟ وما الدليل على حرمته من الحديث؟

2– اذكر حديثا يدل على تحريم الكذب في حال الجدّ والمزح.

3– ما معني اليمين الكاذبة؟

4– ما معنى شهادة الزور؟ أعط مثالا.

5– بم شبّه النبيّ شهادة الزور؟ اذكر حديثا وبيّن معناه.

6– اذكر مثالا عن الكذب على الله. والدليل على تحريحه من القرءان.

7– اذكر حديثا في تحريم الكذب على الرسول.

பாடம் : 7 الدرس – 7

## فَضْلُ الْعِلْمِ وَالْعَمَلِ بِهِ

## மார்க்க கல்வியின் சிறப்பும், அதை செயற்படுத்துவதின் சிறப்பும்

قال النبيّ صلى الله عليه وسلم ( **طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ عَلَى كُلِّ مُسْلِمٍ** ) – رواه البيهقيّ–

العِلْمُ وَالتَّفَقُّهُ فِي الدِّيْنِ هُوَ أَسْنَى مَا تُنْفَقُ فِيهِ نَفَائِسُ الْأَوْقَاتِ، لِأَنَّ الطَّرِيقَ السَّلِيمَ لِوِقَايَةِ النَّفْسِ وَالْأَهْلِ مِنْ عَذابِ النَّارِ يَكونُ بِتَعَلُّمِ الْأُمُوْرِ الدِّيْنِيَّةِ أَي تَعلُّمِ مَا فَرَضَ اللهُ علَينا تَعلُّمَهُ وَاجْتِنابِ ما فَرَضَ اللهُ علينا اجْتِنابَهُ.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "மார்க்க அறிவை தேடிக்கற்றுக் கொள்வது அனைத்து முஸ்லிம்கள் மீதும் விதியாக்கப்பட்டுள்ளது."**

**(அறிவித்தவர் : இமாம் பைஹகீ றஹிமஹுல்லாஹ்)**

மார்க்கக் கல்வியைக் கற்பதென்பது: நேரங்களை எதற்காக செலவு செய்யப்படுமோ அவைகளில் பெறுமதியானதும், மிக உயர்ந்த விடயமுமாகும்.
காரணம்: அல்லாஹு தஆலா கற்றுக் கொள்ளுமாறு ஏவிய மார்க்க விடயங்களை கற்பதன் மூலமும் மேலும் அல்லாஹ் தவிர்ந்து கொள்ளுமாறு விலக்கிய விடயங்களை தவிர்ந்து கொள்வதன் மூலமுமே தன்னையும், தன் குடும்பத்தையும் ஒருவர் நரகத்தை விட்டும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

قَالَ تَعَالَى: ﴿ يَرْفَعِ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَالَّذِينَ أُوتُوا الْعِلْمَ دَرَجَاتٍ ﴾

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**"உங்களில் ஈமான் கொண்டோரின் அந்தஸ்த்தையும் இன்னும் அறிவு கொடுக்கப்பட்டோரின் அந்தஸ்த்தையும் அல்லாஹ் உயர்த்தி விடுகின்றான்."**

**(அத்தியாயம் : அல்-முஜாதிலஹ்)**

وقال النبيّ صلّى الله عليه وسلّم: **( مَنْ يُرِدِ اللهُ بِهِ خَيْرًا يُفَقِّهْهُ فِي الدِّيْنِ )** – رواه البخاريّ –

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் யாருக்கு நலவை நாடியுள்ளானோ அவருக்கு இஸ்லாமிய மார்க்க தெளிவுகளை வழங்குவான்."**

**(அறிவித்தவர் : இமாம் புஹாரீ றஹிமஹுல்லாஹ்)**

**الْعِلْمُ وَالْأَخْلَاقُ الْفاضِلَةُ:**

لا يَكونُ الْعَبْدُ صالِحًا إِلّا بِالْعِلْمِ مَعَ الْعَمَلِ أَي بِأَنْ يَتَعلّمَ أُمُورَ الدّيْنِ وَيُطَبِّقَ ما تَعَلَّمَهُ عَلَى نَفْسِهِ فَمَنْ تَعلّمَ وعَمِلَ بِما تَعلّمَ فَهُوَ الشّخْصُ الّذِي يَعْرِفُ كيفَ يَصْرِفُ قَلْبَهُ وَجوارِحَهُ فِي طاعَةِ اللهِ، وبِذلِكَ يَصِلُ الْمُسْلِمُ إِلَى الْأَخْلَاقِ الْفاضِلَةِ، فَهُوَ يَسْتَعْمِلُ سَمْعَهُ في تَلَقّي الْعِلْمِ ويَسْتعمِلُ لِسانَهُ في مُذاكَرَتِهِ وكذلِكَ في تَبْلِيغِ ما تَعَلّمَهُ، فَقَدْ قال النبيُّ صلى الله عليه وسلم: **( بَلِّغُوا عَنِّي وَلَوْ آيَةً )** – رواه البخاريّ –

கல்வியும், நற்குணங்களும்: மார்க்கத்தில் கட்டாயம் கற்றிருக்க வேண்டிய விடயங்களை கற்று, அதனை நடைமுறைப் படுத்துபவரே ஸாலிஹான ஒரு மனிதராக இருக்க முடியும். எவர் மார்க்க அறிவை கற்று மேலும் தான் கற்றதைக் கொண்டு அமல் செய்வாரோ அவரே தன் உள்ளத்தையும், உறுப்புகளையும் வணக்கவழிபாடுகளில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை சரியாக அறிவார். இதன் மூலமே ஒரு முஸ்லிம் சிறப்புமிகு நற்குணங்களின் பக்கம் சென்றடைய முடியும். எனவே அவர் தன் செவிப்புலனை மார்க்க விடயங்களை கேட்பதிலும், தன் நாவை அறிவை மீட்டும் விடயத்திலும், கற்ற விடயங்களை பிறருக்கு எத்திவைப்பதிலும் ஈடுபடுத்துவார்.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "என் மூலமாக கிடைக்கப்பட்ட சரியான அறிவை மக்களுக்கு எத்திவையுங்கள்."**
**(அறிவித்தவர் : இமாம் புஹாரி றஹிமஹுல்லாஹ்)**

**تَجَنُّبُ مَعَاصِي اللِّسَانِ:** وَمِنْ جُمْلَةِ مَا يَنْبَغِي عَلَى الْمُتَعَلِّمِ تَجَنُّبُهُ مَعَاصِي اللِّسَانِ، وَمِنْهَا: الْفَتْوَى بِغَيْرِ عِلْمٍ، وَكَتْمُ الْعِلْمِ الْوَاجِبِ مَعَ وُجُوْدِ الطَّالِبِ، وَالسُّكُوْتُ عَنِ الْأَمْرِ بِالْمَعْرُوْفِ وَالنَّهْيِ عَنِ الْمُنْكَرِ مَعَ الِاسْتِطَاعَةِ.

நாவினால் ஏற்படக்கூடிய பாவங்களை தவிர்ந்து கொள்வது மார்க்க அறிவை கற்றுக்கொள்ளக்கூடியவர் கட்டாயம் செய்ய வேண்டிய விடயங்களைச் சார்ந்தாகும்.
**நாவினால் ஏற்படக்கூடிய பாவங்களில் சில:** மார்க்க சட்டங்களை திறன்பட கற்காமல் "பத்வாக்கள்" (தீர்ப்புகள்) வழங்குதல். கற்றுக்கொள்ளும் எண்ணம் கொண்டோர் இருக்கும் நிலையில் தான் கற்ற அறிவை கற்றுக் கொடுக்காது மறைத்தல். நல்லவற்றை ஏவி, தீயவற்றை தடுப்பதற்கு சக்தியிருந்தும் மௌனமாக இருத்தல் ஆகியனவாகும்.

1- **الْفَتْوَى بِغَيْرِ عِلْمٍ:** وَهُوَ أَنْ يَقُوْلَ الشَّخْصُ فِي أُمُوْرِالدِّيْنِ بِرَأْيِهِ وَهَذَا حَرَامٌ يُوْقِعُ صَاحِبَهُ فِي الْمَهَالِكِ، كَأَنْ يَقُوْلَ عَنْ شَيْءٍ يَجُوْزُ فِعْلُهُ أَوْ لَا يَجُوْزُ وَهُوَ لَا يَعْلَمُ حُكْمَهُ فِي الشَّرْعِ. قَالَ رسولُ اللهِ صلّى الله عليه وسلّم: **(مَنْ أَفْتَى بِغَيْرِ عِلْمٍ فَعَلَيْهِ لَعْنَةُ اللهِ وَالْمَلَائِكَةِ وَالنَّاسِ أَجْمَعِيْنَ)** - رواه السُّيوطيُّ –

1. மார்க்க சட்டங்களை திறன்பட கற்காமல் **"பத்வாக்கள்"** (தீர்ப்புக்கள்) வழங்குதல்: அதாவது மார்க்க விடயங்களில் மனதுக்கு தோன்றும் விதத்தில் பேசுவது ஹறாமாகும். இவ்வாறு பேசுவது அவரை அழிவிலே வீழ்த்திவிடும். உதாரணம்: ஒருவர் மார்க்க சட்டம் தெரியாத நிலையில் **"இது செய்வது கூடும், இது செய்வது கூடாது"** எனக் கூறுதல்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "யார் மார்க்க சட்டம் தெரியாத நிலையில் மார்க்க தீர்ப்பு வழங்குவாரோ அவருக்கு அழ்ழாஹ்வுடைய இன்னும் மலக்குமார்களுடைய இன்னும் அனைத்து மனிதர்களுடைய "ல∴னத்" உண்டாகும். அதாவது நலவை விட்டும் தூராமாக்கப்படுவார்.**

**(அறிவித்தவர் : இமாம் ஸுயூதீ றஹிமஹுழ்ழாஹ்)**

2- **كَتْمُ الْعِلْمِ الْوَاجِبِ مَعَ وُجُوْدِ الطَّالِبِ:** مِنْ مَعَاصِي اللِّسَانِ كَتْمُ الْعِلْمِ الْوَاجِبِ كَتَعْلِيْمِ فَرْضِ الْعَيْنِ لِلشَّخْصِ الْمُحْتَاجِ إِلَيْهِ مَعَ وُجُوْدِهِ، قَالَ النّبي صلى الله عليه وسلّم: **( مَنْ سُئِلَ عَنْ عِلْمٍ فَكَتَمَهُ أُلْجِمَ يَوْمَ الْقِيَامَةِ بِلِجَامٍ مِنْ نَارٍ )** - رواه ابن ماجه والحاكم وابن حبان -.

**கட்டாயம் கற்க வேண்டிய கல்வியை கற்கக்கூடிய மாணவன் இருந்தும் அதனை கற்றுக்கொடுக்காது மறைத்தல்:** உதாரணமாக கட்டாயம் கற்க வேண்டிய ஒரு விடயத்தை அதன் பக்கம் தேவை காணக்கூடிய மாணவனுக்கு கற்றுக்கொடுக்காது மறைப்பது நாவினால் ஏற்படக்கூடிய பாவங்களைச் சார்ந்ததாகும்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "யாரிடத்தில் மார்க்க அறிவு சார்ந்த விடயம் கேட்கப்பட்டு அதனை அவர் மறைத்து விடுவாரோ "கியாமத்" நாளில் அவருக்கு நெருப்பினாலான கடிவாளம் இடப்படும்.**

**(அறிவித்தவர்கள் : இமாம் இப்னு மாஜஹ், இமாம் ஹாகிம், இமாம் இப்னு ஹிப்பான் றஹிமஹுமுழ்ழாஹ்)**

3- **السُّكُوْتُ عَنِ الْأَمْرِ بِالْمَعْرُوْفِ وَالنَّهْيِ عَنِ الْمُنْكَرِ**: وَيَكُوْنُ مَعْصِيَةً مِنْ مَعَاصِي اللِّسَانِ مَعَ الاسْتِطَاعَةِ، أي إِنْ كَانَ مُسْتَطِيْعًا، فَإِذَا رَأَى شَخْصًا يَتْرُكُ الصَّلَاةَ وَهُوَ يَقْبَلُ النَّصِيْحَةَ وَجَبَ أَمْرُهُ بِالْمَعْرُوْفِ أي بِأَدَاءِ الصَّلَاةِ.

**நல்லவற்றை ஏவி, தீயவற்றை தடுப்பதற்கு சக்தியிருந்தும் மௌனமாக இருத்தல்:** இவ்வாறு நல்லதை ஏவி தீயதை தடுக்க சக்தியிருந்தும் அதனை செய்யாமலிருப்பது பாவமாக கணிக்கப்படும்.

இவர் தொழாமல் இருக்கும் ஒரு மனிதரைப் பார்க்கிறார். இந்த மனிதனுமோ புத்திமதி கூறப்பட்டால் ஏற்றுக் கொள்பவராக இருப்பாரென்றால் கட்டாயம் இந்த மனிதனுக்கு தொழுகையை நிறைவேற்றும்படி கூறுவது கடமையாகும்.

أسئلة

1- اذكر حديثا عن النبي في الحثّ على طلب العلم.

2- ما هو الطريق السليم لوقاية النفس والأهل من النار؟

3- اذكر ءاية وحديثا في فضل العلم.

4- اذكرحديثا في الأمر بتبليغ العلم. ومن رواه؟

5- عدّد بعض معاصي اللسان.

6- اذكر حديثا في تحريم الفتوى بغير علم.

7- اذكر حديثا في تحريم كتم العلم.

## الْأَلْعَابُ الْمُحَرَّمَةُ

## ஹறாமான விளையாட்டுக்கள்

مِنْ مَعَاصِي الْيَدِ اللَّعِبُ بِالْأَلْعَابِ الَّتِي حَرَّمَهَا الشَّرْعُ وَهِيَ كَثِيْرَةٌ مِنْهَا: النَّرْدُ وَالشَّدَّةُ لِأَنَّهَا تَعْتَمِدُ عَلَى الْحَزْرِ وَالتَّخْمِيْنِ لَا عَلَى الْفِكْرِ وَالْحِسَابِ. وَتَصْوِيْرُ ذِي رُوْحٍ وَالْقِمَارُ. وَالْأَلْعَابُ الْمُحَرَّمَةُ بَعْضُهَا يُؤَدِّي لِلتَّخَاصُمِ وَالْفِتَنِ بَيْنَ النَّاسِ وَيَنْتِجُ عَنْهَا شُرُوْرٌ كَثِيْرَةٌ.

மார்க்கம் ஹறாமாக்கிய விளையாட்டுக்களை விளையாடுவது கையினால் ஏற்படக்கூடிய பாவங்களில் ஒன்றாகும். இவ்வாறான விளையாட்டுக்கள் அதிகமாக உள்ளன. அவை லூடா (பாம்பு மட்டை, தாயக்கட்டை), கார்ட்பெக் போன்ற விளையாட்டுக்களாகும். ஏனெனில் இவ்வாறான விளையாட்டுக்கள் அதிஷ்டம் என்பதை அடிப்படையாக வைத்தே விளையாடப்படுகின்றன. மாறாக சிந்திப்பதோ, கணக்கிடுவதோ இவ்விளையாட்டின் அடிப்படையல்ல. இன்னும் உயிருள்ள ஒன்றை படம் பிடித்தல், இன்னும் ஹறாமாக்கப்பட்ட சூது போன்றன. விளையாட்டுகளில் ஒரு சில விளையாட்டுக்கள் தர்க்கம், பிரச்சினை போன்றவற்றின் பக்கம் கொண்டு சேர்த்து விடும். இவைகள் மூலம் பல தீங்குகள் உண்டாகும்.

النَّرْدُ: وَيُسَمّى أَيْضًا (النَّرْدَشِيْر)، قَالَ عليه الصّلاةُ وَالسَّلَامُ: ( مَنْ لَعِبَ بِالنَّرْدَشِيْرِ فَكَأَنَّمَا غَمَسَ يَدَهُ فِي لَحْمِ خِنْزِيْرٍ وَدَمِهِ ) – رواه أُبو داودَ وابنُ ماجه –.

லூடா விளையாடுதல் :

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "யார் லூடா விளையாடுவாரோ நிச்சயமாக அவர் தன்னுடைய கையை பன்றியின் இறைச்சியிலும், இரத்தத்திலும் மூழ்க வைத்தவரைப் போல"**

**(அறிவித்தவர்கள் : இமாம் அபூ தாவூத் இமாம் இப்னு மாஜா றஹிமஹுமழ்ழாஹ்)**

وَالشَّدَّةُ: وَتُقَاسُ عَلَى النَّرْدِ لِأَنَّ كُلَّ لُعْبَةٍ كَانَ الاعْتِمَادُ فِي لُعِبهَا عَلَى الْحَزْرِ وَالتَّخْمِيْنِ لَا عَلَى الْفِكْرِ وَالْحِسَابِ فَهِيَ حَرَامٌ مِثْلُ اللّعب بِالْأَوْرَاقِ الْمَعْرُوْفَةِ بِالشَّدَّةِ.

**"காட் பெக்" card pack:** இவ்விளையாட்டு லூடா விளையாட்டைப் போன்று பாவமான விளையாட்டாகும். ஏனெனில் எவ்விளையாட்டுகலெல்லாம் சிந்தனை, கணக்கின் மீது ஊண்டுதல் பிடிக்கப்படாமல் எண்ணம், யூகம் போன்றவற்றின் மீது ஊண்டுதல் பிடிக்கப்படிகின்றதோ அவ்விளையாட்டுகள் ஹறாமாகும். உதாரணம் **"card pack"** என்று பிரபல்யமாக உள்ள தாள்களினால் விளையாடப்படக்கூடிய விளையாட்டைப் போல.

وَكَذَلِكَ الدُّوْمِيْنُو وَالْبَرْجِيْسُ لِأَنَّهَا أَلْعَابٌ لَيْسَ الْعَمَلُ فِيْهَا إِلَّا عَلَى الْحَزْرِ وَالتَّخْمِيْنِ وَهَذِهِ الْأَلْعَابُ إِنْ كَانَتْ بِعِوَضٍ ( أي عَلَى مَالٍ يَدْفَعُهُ الْخَاسِرُ فِي اللّعبِ ) فَهُوَ قِمَارٌ حَرَامٌ مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ.

மேலும் இவ்வாறுதான் "டொமினஸ்", "பெர்ஜிஸ்" எனும் விளையாட்டுக்களும் ஹறாமாகும். ஏனெனில் இவைகளும் யூகம், எண்ணம் என்பவற்றின் மீது ஊண்டுதல் பிடிக்கப்படுகின்றது.

இவ்விளையாட்டுக்கள் ஒரு பகரத்தை அதாவது இதிலே தோல்வியுற்றவர் பணம் செலுத்த வேண்டிய அமைப்பில் இருக்குமாயின் அவை பெரும் பாவத்தை சார்ந்த சூதாட்டமாகும்.

أَمَّا الشَّطْرَنْجُ فَإِنَّهُ لَيْسَ فِي مَعْنَى اللَّعِبِ بِالنَّرْدِ لِأَنَّ الْعُمدَةَ فِيْهِ عَلَى الْفِكْرِ وَالْحِسَابِ قَبْلَ النَّقْلِ، وَمَا وَرَدَ عَنِ النَّبِيِّ صلّى الله عليه وسلّم فِي ذَمِّهِ غَيْرُ ثَابِتٍ، إِذْ هُوَ مَوْضَوْعٌ لِصِحَّةِ الْفِكْرِ وَصَوَابِ التَّدْبِيْرِ وَنِظَامِ السِّيَاسَةِ وَهُوَ مُعِيْنٌ عَلَى تَدْبِيْرِ الْحُرُوْبِ وَالْحِسَابِ.

“செஸ்” (சதுரங்கம்) விளையாட்டு லூடா விளையாட்டை போன்ற பாவமான விளையாட்டுக்களை சார்ந்தததல்ல. காரணம் இவ்விளையாட்டில் காய்களை நகர்த்த முன்னர் சிந்தனை, கணக்கின் மீது ஊண்டுதல் கொள்ளப்படும்.

இதை இகழும் விதத்தில் வந்துள்ள ஹதீஸ் தரிபாடற்றது. ஏனெனில் இது சரியான சிந்தனைக்காகவும், சரியான திட்டமிடலுக்காகவும், அரசியல் ஒழுங்கு முறைக்காகவும் வைக்கப்பட்ட விளையாட்டாகும். மேலும் இவ்விளையாட்டு யுத்தத்தை திட்டமிட்டு நடாத்துவதற்கும், கணக்கை சிராக செய்வதற்கும் உதவியாக அமைகின்றது.

**وَتَصْوِيْرُ ذِي رُوْحٍ:** وَمِنْ مَعَاصِي الْيَدِ تَصْوِيْرُ ذِي رُوْحٍ سَوَاءٌ كَانَ مُجَسَّمًا أَوْ مَنْقُوْشًا فِي سَقْفٍ أَوْ جِدَارٍ أَوْ مُصَوَّرًا فِي وَرَقٍ أَوْ مَنْسُوْجًا فِي ثَوْبٍ أَوْ غَيْرَ ذَلِكَ، وَيُسْتَثْنَى مِنْ ذَلِكَ لعبُ الْبَنَاتِ الصِّغَارِ، وَيُشْتَرَطُ لِتَحْرِيْمِ اسْتِبْقَاءِ الصُّوْرَةِ أَنْ تَكُوْنَ الصُّوْرَةُ بِهَيْئَةٍ يَعِيْشُ عَلَيْهَا الْحَيَوَانُ.

**உயிர் உள்ளவைகளை உருவமைத்தல்:** உயிர் உள்ள ஒன்றை உருவமைப்பது அது சடம் கொடுக்கப்பட்ட அமைப்பில் அல்லது கூரை, சுவர் போன்றதில் செதுக்கப்பட்ட அமைப்பில் அல்லது ஒரு தாளில் வரையப்பட்ட அமைப்பில் அல்லது ஆடை, அது போன்றவைகளில் நெய்யப்பட்ட அமைப்பில் இருந்த போதிலும் சரியே இவ்வாறு உருவமைப்பது கையினால் ஏற்படும் பாவங்களைச் சார்ந்ததாகும். பருவத்தை அடையாத பெண்

பிள்ளைகள் பயன்படுத்தக்கூடிய சிறு பொம்மைகள் இதில் உள்ளடங்காது.

படம் பிடிக்கப்பட்டவைகளை வைத்துக்கொள்வது ஹறாம் என்பதற்கு **“அப்படத்தில் உள்ள உருவம் உயிர் வாழமுடியுமான அமைப்பில் இருப்பது”** நிபந்தனையிடப்படும்.

أسئلة

1-عدّد بعض الألعاب المحرّمة.

2-لم حرّمت هذه الألعاب؟

3-ما هو النرد؟ وما الدليل على تحريمه؟

4-لم يحرم اللعب بالأوراق المزوّقة - الشدة -؟

5-ما حكم اللعب بالشطرنج؟ ولم وضع؟

6-ما حكم تصوير ذي روح؟ وماذا يستثنى من ذلك؟

பாடம் : 9 الدرس – 9

## عُقُوْقُ الْوَالِدَيْنِ

## பெற்றோரைத் துன்புறுத்தல்

عُقُوْقُ الْوَالِدَيْنِ مِن الْكَبَائِرِ الَّتِي تَوَعَّدَ اللهُ فَاعِلَهَا بِالْعَذَابِ الشَّدِيْدِ فِي النَّارِ، وَمَعْنَى الْعُقُوْقِ أَنْ يُؤْذِيَ وَالِدَيْهِ أَوْ أَحَدَهُمَا أَذًى لَيْسَ بِهَيِّنٍ، وَإِيْذَاءُ الْوَالِدَيْنِ سَوَاءٌ كَانَ أَذًى شَدِيْدًا أَوْ خَفِيْفًا حَرَامٌ.

பெற்றோரை துன்புறுத்துதல் பெரும் பாவமாகும். அழ்ழாஹு தஆலா அதனைச் செய்வோருக்கு நரகில் கடும் வேதனை இருப்பதாக எச்சரிக்கை செய்துள்ளான்.

**“உகூக்” என்பதன் அர்த்தம்:** தாய், தந்தை இருவரையும் அல்லது இருவரில் ஒருவரை கடுமையாக நோவினை செய்வதாகும். பெற்றோருக்கு செய்யக்கூடிய நோவினை இலேசாக இருந்தாலும், கடுமையாக இருந்தாலும் அது ஹறாமாகும்.

وَمِنَ الْأَمْثِلَةِ عَلَى الْعُقُوْقِ: شَتْمُ الْأُمِّ أَوِ الْأَبِ أَوْ ضَرْبُ الْأُمِّ أَوِ الْأَبِ أَوْ إِهَانَتُهُمَا أَوْ أَحَدِهِمَا.

பெற்றோருக்கு நோவினை செய்யக்கூடிய சில செயற்களுக்கு உதாரணம்: தாயை அல்லது தந்தையை ஏசுதல், தாய்க்கு அல்லது தந்தைக்கு அடித்தல் அல்லது அவ்விருவரை அல்லது அவ்விருவரில் ஒருவரை இழிவு படுத்துதல்.

وَمِنْ جُمْلَةِ الْعُقُوْقِ: إِذَا أَطَاعَ الْوَلَدُ أُمَّهُ عَلَى ظُلْمِ أَبِيْهِ أَوْ أَطَاعَ أَبَاهُ عَلَى ظُلْمِ أُمِّهِ، وَلَا يَنْفَعُهُ عِنْدَ اللهِ تَعَالَى إِنْ أَطَاعَ أُمَّهُ وَظَلَمَ أَبَاهُ لِأَنَّهُ لَا طَاعَةَ لِمَخْلُوْقٍ فِي مَعْصِيَةِ الْخَالِقِ، فَنُصْرَةُ أَحَدِ الْأَبَوَيْنِ فِي ظُلْمِ الْآخَرِ حَرَامٌ.

இன்னும், ஒருவர் தனது தந்தைக்கு அநியாயம் செய்வதில் தாய்க்கு வழிப்படுவதும், தனது தாய்க்கு அநியாயம் செய்வதில் தந்தைக்கு வழிப்படுவதும் நோவினை செய்வதில் உள்ளதாகும். தாய்க்கு வழிப்பட்டு தந்தைக்கு அநியாயம் செய்தான் என்பதனால் அவருக்கு அல்லாஹ்விடத்தில் அது பிரயோஜனமளிக்காது. காரணம் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் விடயத்தில் படைப்புகளுக்கு வழிப்படக்கூடாது. பெற்றோர்கள் இருவரில் ஒருவர் மற்றவருக்கு அநியாயம் செய்யும் போது அவ்விடயத்தில் உதவி செய்வது ஹறாமாகும்.

قَالَ تَعَالَى: ﴿وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعْبُدُوٓاْ إِلَّآ إِيَّاهُ وَبِٱلْوَٰلِدَيْنِ إِحْسَٰنًاۚ إِمَّا يَبْلُغَنَّ عِندَكَ ٱلْكِبَرَ أَحَدُهُمَآ أَوْ كِلَاهُمَا فَلَا تَقُل لَّهُمَآ أُفٍّ وَلَا تَنْهَرْهُمَا وَقُل لَّهُمَا قَوْلًا كَرِيمًا ٢٣﴾

**அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“உமது இரட்சகன் அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யுமாறும் கட்டளையிட்டுள்ளான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவ்விருவருமோ உம்மிடம் முதுமையை அடைந்து விட்டால் அவர்களை நோக்கி ‘உ.ஃப்’ (சீ) எனக் கூறவோ, அவ்விருவரையும் விரட்டவோ வேண்டாம். அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக!”**

**(அத்தியாயம் : அல்- இஸ்ராஉ வசனம் : 23-24 )**

قَالَ تَعَالَىٰ: ﴿وَٱخۡفِضۡ لَهُمَا جَنَاحَ ٱلذُّلِّ مِنَ ٱلرَّحۡمَةِ وَقُل رَّبِّ ٱرۡحَمۡهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرٗا ٢٤﴾

( سورة الإسراء )

இன்னும் **அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:**

**விளக்கம்:**

**“இவ்விருவருக்காக இரக்கத்துடன் பணிவு எனும் இறக்கையை நீர் தாழ்த்துவீராக மேலும் எனது றப்பே! நான் குழந்தையாக இருந்த பொழுது என்னை பராமரித்து என் மீது இரக்கம் காட்டியது போன்று நீயும் அவ்விருவருக்கும் இரக்கம் காட்டுவாயாக”**

**(அத்தியாயம்: அல்-இஸ்ராஉ)**

وَمَعْنَى قَوْلِهِ تَعَالَى: ﴿وَقَضَىٰ رَبُّكَ أَلَّا تَعۡبُدُوٓاْ إِلَّآ إِيَّاهُ وَبِٱلۡوَٰلِدَيۡنِ إِحۡسَٰنًا﴾ أي أَمَرَ اللهُ أَنْ لَا يُعْبَدَ سِوَاهُ وَبِبِرِّ الْوَالِدَيْنِ،

பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தின் பொருள்:-

“அதாவது அல்லாஹ் அவனைத்தவிர வேறு எதனையும் வணங்க கூடாதென்றும் இன்னும் பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கின்றான்.

وَمَعْنَى قَوْلِهِ: ﴿وَقُل لَّهُمَا قَوۡلٗا كَرِيمٗا﴾

اي قَوْلًا لَيِّنًا لَطِيْفًا، فَاللهُ سُبْحَانَهُ وَتَعَالَى نَهَى عَنْ أَنْ يُقَالَ لَهُمَا أُفٍّ وَهَذَا مِنَ الْكَبَائِرِ، وَأَمَرَ سُبْحَانَهُ وَتَعَالَى أَنْ يُقَالَ لَهُمَا الْقَوْلُ الْكَرِيْمُ أي اللِّيْنُ لَا سِيَّمَا عِنْدَ الْكِبَرِ، وَأَنْ نُخْفِضَ لَهُمَا الْجَنَاحَ بِأَنْ نُكَلِّمَهُمَا بِأَدَبٍ وَاحْتِرَامٍ.

இன்னும் பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தின் பொருள்:- **அவ்விருவருக்கும் மென்மையான வார்த்தையையே கூறுவீராக!** என்பதாகும். அழ்ழாஹ் அவ்விருவருக்கும் **"சீ"** என்ற வார்த்தையை கூறுவதை விட்டும் தடுத்துள்ளான். இன்னும் இவ்வாறு கூறுவதென்பது பெரும்பாவத்தை சார்ந்ததாகும். மேலும் அழ்ழாஹு தஆலா அவ்விருவருக்கும் மரியாதையான, கண்ணியமான வார்த்தையை கூற வேண்டுமென கட்டளையிட்டுள்ளான். (குறிப்பாக அவ்விருவரும் வயோதிபத்தை அடைந்த சந்தர்ப்பத்தில்) கண்ணியம், ஒழுக்கம் என்பவற்றுடன் நாங்கள் அவ்விருவருடன் பேசி பணிவு எனும் இறக்கையை தாழ்த்த வேண்டுமென்றும் கட்டளையிட்டுள்ளான்.

**عَذَابُ الْعَاقِّ لِوَالِدَيْهِ:**

إِنّ عَذَابَ عُقُوْقِ الْوَالِدَيْنِ عِنْدَ اللهِ تَعَالَى عَظِيْمٌ حَيْثُ إِنّ عَاقّهُمَا لَا يَدْخُلُ الْجَنّةَ مَعَ الْمُسْلِمِيْنَ الْأَوّلِيْنَ بَلْ يَدْخُلُهَا بَعْدَ عَذَابٍ شَدِيْدٍ مَعَ الْآخِرِيْنَ إِنْ لَمْ يَعْفُ اللهُ عَنْهُ، وَذَلِكَ لِأَنّ هَذَا الذّنْبَ هُوَ مِنْ كَبَائِرِ الذُّنُوْبِ، قَالَ رسولُ الله صلّى الله عليهِ وسلّم: **( لَايَدْخُلُ الْجَنّةَ عَاقٌّ )** رواهُ الْبخاريّ ومسلم

أي لَا يَدْخُلُهَا مَعَ الْأَوّلِيْنَ، وَلَيْسَ الْمَعْنَى أَنّهُ كَافِرٌ مَحْرُوْمٌ مِنَ الْجَنّةِ.

**பெற்றோரை நோகடிக்கக்கூடியவருக்கான வேதனை :**

பெற்றோரை நோவினை செய்பவருக்கு தயார்படுத்தப்பட்டுள்ள வேதனை கடுமையானது. நிச்சயமாக அவ்விருவரையும் நோவினை செய்தவன் ஆரம்பமாக சுவனம் நுழையும் முஸ்லிம்களுடன் சேர்ந்து சுவனம் நுழையமாட்டான். மாறாக அழ்ழாஹ் இவனை மன்னிக்காவிட்டால் ஏனையோருடன் கடும் வேதனைக்கு பின்னர் சுவனம் நுழைவான். இது பெரும் பாவத்தை சாரும்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: "பெற்றோரை நோவினை செய்பவன் ஆரம்பமாக சுவனம் நுழையக்கூடியவர்களுடன் சுவனம் நுழையமாட்டான். அதனால் இவன் சுவர்க்கம் ஹறாமாக்கப்பட்ட காபிர் என கருத்துக் கொள்ள முடியாது."**

**(அறிவித்தவர்கள்: இமாம் புஹாரீ இமாம் முஸ்லிம் றஹிமஹுமழ்ழாஹ்)**

ءَايَاتٌ قُرْءَانِيّةٌ فِي الْحَثّ عَلَى بِرِ الْوَالِدَيْنِ:

பெற்றோருக்கு உபகாரம் செய்யும் விடயத்தை தூண்டுவதிலே உள்ள குர்ஆன் வசனங்கள்

قَالَ تَعَالَى: ﴿وَوَصَّيْنَا ٱلْإِنسَٰنَ بِوَٰلِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُۥ وَهْنًا عَلَىٰ وَهْنٍ وَفِصَٰلُهُۥ فِى عَامَيْنِ أَنِ ٱشْكُرْ لِى وَلِوَٰلِدَيْكَ إِلَىَّ ٱلْمَصِيرُ ۝١٤﴾

( سورة لقمان )

**அழ்ழாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:**

**விளக்கம்:**

**"நான் மனிதனுக்கு தன் பெற்றோர் (இருவருக்கும் அன்பு கொண்டு அரவணைத்துக் கொள்வது) பற்றி நல்ல உபதேசமும் செய்தோம்., அவனுடைய தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனம் அடைந்தவளாக அவனைச் சுமந்தாள்., இன்னும் (அவனுக்கு பால் குடி மறக்கடித்து) அவன் பிரிவது இரண்டு வருடங்களிலாகும்., (ஆகவே மனிதனே!) "நீ எனக்கும், உன்னுடைய பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக., (முடிவில்) என் பக்கமே உனது மீளுதல் இருக்கிறது."**

**(அத்தியாயம் : லுக்மான்)**

وقَالَ تَعَالَى: ﴿وَٱعۡبُدُواْ ٱللَّهَ وَلَا تُشۡرِكُواْ بِهِۦ شَيۡـٔٗاۖ وَبِٱلۡوَٰلِدَيۡنِ إِحۡسَٰنٗا ٣٦﴾

( سورة النساء )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“நீங்கள் அழ்ழாஹ்வை மாத்திரமே வணங்குங்கள். அவனுக்கு எந்த ஒன்றையும் இணையாக்காதீர்கள். இன்னும் பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்.**

**(அத்தியாயம் : அந்நிஸா)**

فَاعْلَمْ، أَنّ الْمَرْءَ مَهْمَا كَانَ مُوَاظِبًا عَلَى أَدَاءِ الصّلَوَاتِ الْخَمْسِ وَالصّيَامِ وَنَحْوِ ذَلِكَ مِنَ الْفَرَائِضِ إِذَا كَانَ عَاقًّا لِوَالَدِيْهِ يُؤْذِيْهِمَا أَذَى شَدِيْدًا بِالْقَوْلِ أَوِ الْفِعْلِ، فَإِنّهُ لَا يَكُوْنُ عِنْدَ اللهِ مِنَ الْمُتّقِيْنَ الصّالِحِيْنَ. فَاحْرِصْ عَلَى بِرِّ الْوَالِدَيْنِ، وَإِيّاكَ وَالْعُقُوْقَ. فَإِنّكَ إِمّا أَنْ تَمُوْتَ قَبْلَهُمَا أَوْ يَمُوْتَا قَبْلَكَ فَلَا تُفَوِّتْ هَذَا الْفَضْلَ الْعَظِيْمَ بِرّ الْوَالِدَيْنِ.

நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் நிச்சயமாக ஒரு மனிதன் எவ்வாறு ஐவேளை தொழுகைகளையும் நோன்பையும் மற்றுமுள்ள கடமைகளையும் தொடர்படியாக நிறைவேற்றி வந்தாலும் அவர் தன்னுடைய பெற்றோரை வார்த்தையினாலோ அல்லது செயலினாலோ கடுமையாக நோவினை செய்பவராக இருந்தால் அவர் அழ்ழாஹ்விடத்தில் தக்வஹ்வுள்ள ஸாலிஹான முஸ்லிம்களில் ஒருவராக ஆகிவிடமாட்டார்.

பெற்றோருக்கு உபகாரம் செய்வதற்கு நீர் பேராசை கொள்ளவும் பெற்றோரை துன்புறுத்துவதை உங்களுக்கு எச்சரிக்கின்றேன். அவ்விருவருக்கும் முன்னர் நீர் மரணிக்கலாம் அல்லது அவ்விருவரும் உமக்கு முன்னர் மரணிக்கலாம்.

பெற்றோருக்கு உபகாரம் செய்தல் என்ற மாபெரும் சிறப்பை நீ தவற விடவேண்டாம்.

أسئلة

1- ما معنى عقوق الوالدين؟ وما حكمه؟

2- أعط أمثلة على عقوق الوالدين.

3- اذكر دليلا من القرءان على تحريم العقوق.

4- اشرح الآية ( وقضى ربك ألا تعبدوا إلا إياه وبالوالدين إحسانا ).

5- ما معنى الآية ( وقل لهما قولا كريما )؟

6- اذكر حديثا في تحريم العقوق. وما معناه؟

7- اذكر ثلاث ءايات فيها الأمر بالإحسان للوالدين.

பாடம் : 10 الدرس – 10

## قَطِيْعَةُ الرَّحِمِ

## குடல்வாய் பந்தங்களைத் துண்டித்து வாழ்தல்

**قَطِيْعَةُ الرَّحِمِ:** هِيَ مِنْ مَعَاصِي الْبَدَنِ، وَهِيَ مِنَ الْكَبَائِرِ، وَتَحْصُلُ بِإِيْحَاشِ قُلُوْبِ الْأَرْحَامِ وَتَنْفِيْرِهَا إِمَّا بِتَرْكِ الْإِحْسَانِ بِالْمَالِ فِي حَالِ الْحَاجَةِ النَّازِلَةِ بِهِمْ، أَوْتَرْكِ الزِّيَارَةِ بِلَا عُذْرٍ كَأَنْ يَفْقِدَ مَا كَانَ يَصِلُهُمْ بِهِ مِنَ الْمَالِ، أَوْ يَجِدَهُ لَكِنَّهُ يَحْتَاجُهُ لِمَا هُوَ أَوْلَى بِصَرْفِهِ فِيْهِ مِنْهُمْ.

**"ரஹிம்களை"** குடல்வாய் பந்தங்களை(உற்றார் உறவினரை) துண்டித்து வாழ்வது உடலினால் ஏற்படக்கூடிய ஒரு பாவமாகும். இது பெரும்பாவத்தைச் சார்ந்ததாகும். மார்க்கம் அனுமதித்த எக்காரணமுமின்றி உறவினர்களுக்கு பணத் தேவைகள் ஏற்படும் நிலையில் அவர்களுக்கு பணத்தின் மூலம் நலவு செய்யாமல் இருத்தல் அல்லது அவர்களை சந்திக்காமல் இருப்பதனால் அவர்களின் உள்ளங்களில் தனிமையை உணரச் செய்தல் என்பவற்றின் மூலம் இப்பாவம் ஏற்படும். மார்க்கம் அனுமதித்த காரணங்கள் சிலவற்றுக்கு உதாரணம் : அவர்களுக்கு உதவும் அளவுக்கு அவனிடத்தில் பணவசதி இல்லாமல் இருப்பது போல அல்லது பணத்தைப் பெற்றுக் கொள்கிறான் என்றாலும் இவர்களுக்கு கொடுப்பதை விட மிக முக்கியமான ஒன்றுக்கு செலவளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை போல.

قَالَ تَعَالَى: ﴿فَهَلْ عَسَيْتُمْ إِن تَوَلَّيْتُمْ أَن تُفْسِدُوا فِي الْأَرْضِ وَتُقَطِّعُوا أَرْحَامَكُمْ ﴿٢٢﴾﴾

( سورة محمد )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:**

**விளக்கம்:**

**“ நீங்கள், அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் ஷரீஅத்தை ஏற்காது புறக்கனித்தால் பூமியிலே அநியாயங்கள் செய்து பிரச்சினைகளை உண்டுபன்னுபவர்களாகவும், உறவுகளை துண்டிப்பவர்களாகவும் ஆகக்கூடும்”.**

**(அத்தியாயம்: முஹம்மத்)**

وَقَالَ النّبِيّ صلّى اللهُ عليه وسلّم: ( **لَا يَدْخُلُ الْجَنّة قَاطِعٌ** ) - رواه البخاري - وَمَعْنَى قَاطِعٌ: أي قَاطِعُ رَحِمٍ فَهُوَ لَا يَدْخُلُ الْجَنةَ مَعَ الْأَوّلِيْنَ، بَلْ يَدْخُلُهَا بَعْدَ عَذَابٍ إِنْ لَمْ يَعْفُ اللهُ عَنْهُ.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : “உறவினர்களை துண்டித்து நடப்பவர் ஆரம்பமாக சுவனம் நுழையமாட்டார்.”**

**(அறிவித்தவர்: இமாம் புஹாரீ றஹிமஹுழ்ழாஹ்)**

**“காதிஉன்” என்பதன் அர்த்தம்:** உறவினர்களை துண்டித்து நடப்பவர் என்பதாகும். இவர் ஆரம்பமாக சுவனம் நுழைபவர்களுடன் சுவனம் நுழையமாட்டார். ஆனால் அழ்ழாஹ் இவரை மன்னிக்காவிட்டால் வேதனை செய்யப்பட்டதன் பின்னர் சுவனம் நுழைவார்.

**صِلَةُ الرّحِمِ:** وَالْمُرَادُ بِالرّحِمِ الْأَقَارِبُ كَالْخَالَاتِ وَالْعَمّاتِ وَأَوْلَادِهِنّ وَالْأَخْوَالِ وَالْأَعْمَامِ وَأَوْلَادِهِمْ، سَأَلَ أَحَدُ الصّحَابَةِ رَسُوْلَ اللهِ صلّى الله عليه وسلّم فَقَالَ: مَا النّجَاةُ يَا رَسُوْلَ اللهِ قَالَ: ( **تَصِلُ مَنْ قَطَعَكَ وَتُعْطِي مَنْ حَرَمَكَ وَتَعْفُوْ عَمّنْ ظَلَمَكَ** ) - رواه التِّرمذيٌّ -

**உறவினர்களை சேர்ந்து நடப்பது:** உறவினர்கள் என்பதன் மூலம் பின்வருபவர்களை நாடப்படும் **தாயின் சகோதரிகள்(சாச்சி, பெரியம்மாமார்கள்), தகப்பனின் சகோதரிகள்(மாமிமார்கள்)** இன்னும் **அவர்களுடைய பிள்ளைகள், தாயின் சகோதரர்கள்(மாமாமார்கள்), தகப்பனின் சகோதரர்கள்(சாச்சா, பெரியப்பாமார்கள்)** இன்னும் **அவர்களுடைய பிள்ளைகள் போன்ற உறவினர்களாவார்கள்.**

ஸஹாபாக்களில் ஒருவர் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களிடத்தில் அழ்ழாஹ்வின் தூதரே! நரக விடுதலையை பெற வழி என்ன? எனக் கேட்டார். **அதற்கு உங்கள் உறவைத் துண்டித்து நடப்போரை நீங்கள் சேர்ந்து நடப்பதாகும் எனக் கூறினார்கள் உங்களுக்கு தராமல் தடுத்தவர்களுக்கு கொடுப்பதாகும். இன்னும் உங்களுக்கு அநியாயம் இழைத்தவரை மன்னிப்பதாகும்.**

**(அறிவித்தவர்: இமாம் திர்மதீ றஹிமஹுல்ழ்ழாஹ்)**

فَهَذِهِ الْخِصَالُ الثَّلَاثُ الْعَظِيْمَةُ كَانَتْ مِنْ أَوْصَافِ الرَّسُوْلِ وَأَخْلَاقِهِ، وَالَّتِي مِنْهَا وَصْلُ مَنْ قَطَعَ أي أَنَّ لِلرَّحِمِ حَقَّ الصِّلَةِ. فَلَا يَجُوْزُ لِلْمَرْءِ أَنْ يَقْطَعَ مَنْ تَجِبُ عَلَيْهِ صِلَتُهُ مِنَ الْأَقَارِبِ بِحَيْثُ يَشْعُرُ بِالْجَفَاءِ وَلَوْ قَطَعَ هَذَا الْقَرِيْبُ زِيَارَتَهُ.

இந்த மகத்தான நன்மையை பெற்றுத்தரும் மூன்று விடயங்களும் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுடைய நற்குணம், நற்பண்புகளில் உள்ளவைகளாகும். இவற்றில் உறவைத் துண்டித்து நடப்பதும், சேர்ந்து நடப்பதும் உள்ளடங்குகிறது. அதாவது உறவினர்களை சேர்ந்து நடப்பது அவசியமாகும். எனவே ஒரு மனிதன் தனது உறவினர்களில் யாரை சேர்ந்து நடக்கவேண்டுமோ அவர் தனிமையை உணரும் அமைப்பில் அவர்களின் உறவைத் துண்டித்து நடக்கக்கூடாது. இவ்வுறவினர் தன் உறவைத் துண்டித்து நடந்தாலும் தான் அவரை சேர்ந்து நடக்க வேண்டும்.

**الصِّلَةُ الْكَامِلَةُ لِلرَّحِمِ:** وَالصِّلَةُ الْكَامِلَةُ لِلرَّحِمِ هُوَ أَنْ يَصِلَ الْمَرْءُ مَنْ قَطَعَهُ مِنَ الرَّحِمِ فَلَا يَقُوْلُ: ( هَذَا رَحِمِي لَا يَزُوْرُنِي فَلَا أَزُوْرُهُ ) لَا يَجُوْزُ أَنْ يُقَابِلَ الْقَطِيْعَةَ بِالْقَطِيْعَةِ بَلْ يَجِبُ عَلَيْهِ أَنْ يُقَابِلَ الْقَطِيْعَةَ بِالصِّلَةِ. قَالَ رَسُولُ اللهِ صلّى الله عليه وسلّم: ( **لَيْسَ الْوَاصِلُ بِالْمُكَافِئِ وَلَكِنَّ الْوَاصِلَ مَنْ وَصَلَ إِذَا قَطَعَتْ** ) – رواه مسلم – فَفِي هَذَا الْحَدِيْثِ إِيْذَانٌ بِأَنَّ صِلَةَ الرَّجُلِ رَحِمَهُ الَّتِي لَا تَصِلُهُ أَفْضَلُ مِنْ صِلَتِهِ رَحِمَهُ الَّتِي تَصِلُهُ لِأَنَّ ذَلِكَ مِنْ حُسْنِ الْخُلُقِ الَّذِي حَضَّ الشَّرْعُ عَلَيْهِ حَضًّا بَالِغًا.

الصِّلَةُ الكَامِلَةُ لِلرَّحِمِ **என்பதன் அர்த்தம்:-** ஒரு மனிதன் தன்னுடைய உறவினர்களில் தன் உறவைத் துண்டித்து நடப்போரையும் சேர்ந்து வாழ்வதாகும். என்னுடைய இந்த சொந்தக்காரர் என்னை சந்திப்பதில்லை நானும் அவரை சந்திக்கமாட்டேன் எனக் கூறக் கூடாது. அவர் உறவைத் துண்டித்து நடப்பதற்கு பகரமாக இவர் அவர்களை துண்டித்து நடக்கக்கூடாது. மாற்றமாக உறவைத் துண்டித்து நடப்பவரையும் சேர்ந்து நடப்பது அவசியமாகும்.

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "என்னுடன் சேர்ந்து நடந்தால் தான் நானும் சேர்ந்து நடப்பேன் என்ற நிலைப்பாட்டில் இருப்பவர் உறவுகளை பேணி நடப்பவர் அல்ல. மாறாக உறவுகள் அவனை துண்டித்து வாழ்ந்தாலும் அவர்களை துண்டிக்காமல் அவர்களுடன் சேர்ந்து நடப்பவனே உறவுகளை பேணி நடப்பவனாகும்."**

**(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் றஹிமஹுல்லாஹ்)**

**இந்த ஹதீஸினூடாக விளங்கப்படுகின்றது:** ஒரு மனிதன் தன் உறவைத் துண்டித்து நடப்பவருடன் சேர்ந்து நடப்பது தன்னை சேர்ந்து நடப்பவருடன் சேர்ந்து நடப்பதைவிட சிறந்ததாகும். ஏனெனில் இது மார்க்கம் அதிகம் ஆசையூட்டிய ஒரு நற்பண்பாகும்.

أسئلة

1- ما حكم قطيعة الرحم؟ ومن أيّ المعاصي هي؟

2- كيف تحصل قطيعة الرحم؟

3- اذكرءاية في تحريم قطيعة الرحم.

4- اذكر حديثا في تحريم قطيعة الرحم. وما معناه؟

5- ما المراد بالرحم؟

6- اذكر حديثا في فضل صلة الرحم.

7- كيف تكون الصلة للرحم كاملة ؟

8- اذكر حديثا في بيان فضل الإحسان إلى القريب الذي قطعك.

பாடம் : 11 الدرس – 11

## احْتِرَامُ الْمُؤْمِنِ

## ஒரு மு.்.மினை மரியாதை செய்தல்

خَلَقَ اللهُ الْإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيْمٍ، وَسَخَّرَ لَهُ مَا فِي السَّمَوَاتِ وَمَا فِي الْأَرْضِ جَمِيْعًا، جَعَلَ لَهُ عَقْلًا وَلِسَانًا وَشَفَتَيْنِ وَعَيْنَيْنِ وَأُذُنَيْنِ، لِيَسْتَعْمِلَ هَذِهِ الْأَدَوَاتِ فِيْمَا يُرْضِي اللهَ تَعَالَى، خَلَقَهُ لِيَقُوْمَ بِعِبَادَتِهِ وَلِيَسْتَعْمِلَ جَوَارِحَهُ فِي طَاعَتِهِ.

அழ்ழாஹ் மனிதனை மிக அழகிய தோற்றத்திலே படைத்துள்ளான். அவனுக்கு வானம், பூமிகளிலுள்ள அனைத்தையும் வசப்படுத்தியும் கொடுத்துள்ளான். அழ்ழாஹு தஆலா அவனுக்கு புத்தியையும், நாவையும், இரு உதடுகளையும், இரு கண்களையும், இரு காதுகளையும் அவனது பொருத்தம் உள்ள விடயங்களில் பயன்படுத்துவதற்காகவும், அவனை வணங்குவதைக் கொண்டு ஏவுவதற்காகவும், அவனுக்கு வழிப்படும் விடயங்களில் பயன்படுத்துவதற்காகவும் அருளியுள்ளான்

قَالَ تَعَالَى: ﴿وَصَوَّرَكُمْ فَأَحْسَنَ صُوَرَكُمْ وَإِلَيْهِ الْمَصِيرُ ۝٣﴾

( سورة التغابن )

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான் :**

**விளக்கம் :**

**“ரூஹுள்ள அனைத்துப் படைப்பை விடவும் மனிதனை அழ்ழாஹ் அழகு படுத்தியுள்ளான். அனைத்தும் அவனிடமே விசாரிக்கப்பட இருக்கின்றன.”**

**(அத்தியாயம் :அத்-தகாபுன்)**

وَجَعَلَ اللهُ لِلْمُؤْمِنِ مِيْزَةً عَلَى غَيْرِهِ لِأَنَّهُ أَدّى أَعْظَمَ حَقٍّ مِنْ حُقُوْقِ اللهِ وَهُوَ تَوْحِيْدُهُ تَعَالَى وَتَرْكُ الْإِشْرَاكِ بِهِ شَيْئًا.

அல்லாஹ் மு.ஃமினுக்கு ஏனையவர்களை விட ஒரு சிறப்பம்சத்தை கொடுத்துள்ளான் ஏனென்றால் இந்த மு.ஃமின் அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டும் அவனுக்கு எதனையும் இணைவைக்கக்கூடாது, எனும் பெரும் கடமையை நிறைவேற்றினார்.

فَالْإِنْسَانُ الْمُؤْمِنُ لَهُ حُرْمَةٌ عَظِيْمَةٌ عِنْدَ اللهِ تَعَالَى، وَقَدْ حَثَّ الشَّرْعُ عَلَى احْتِرَامِهِ وَعَدَمِ تَحْقِيْرِهِ وَجَعَلَ إِيْذَاءَهُ مَعْصِيَةً يُعَاقَبُ عَلَيْهَا، فَإِذَا اغْتَابَهُ شَخْصٌ وَلَا عُذْرَ لَهُ ارْتَكَبَ مَعْصِيَةً مِنْ مَعَاصِي اللِّسَانِ، وَلَوْ ضَرَبَهُ بِغَيْرِ حَقٍّ ارْتَكَبَ مَعْصِيَةً مِنْ مَعَاصِي الْيَدَيْنِ، وَهَكَذَا.

மு.ஃமினான அடியானுக்கு அல்லாஹ்விடத்தில் பெரும் கண்ணியமுண்டு. அவரை அவமதிக்காமல் கண்ணியப்படுத்துமாறு இஸ்லாம் நமக்கு வலியுறுத்துகிறது. அந்த முஸ்லிமை நோவினைப்படுத்துதல் தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்த முஸ்லிமை ஒரு மனிதன் மார்க்க ரீதியான எக்காரணமுமின்றி புறம் பேசினால் நாவினால் ஏற்படக்கூடிய ஒரு பாவத்தை செய்தவராகிவிடுவார். மேலும் எந்த ஹக்குமின்றி(உரிமையுமின்றி) அவரை அடித்தால் கைகளினால் ஏற்படக்கூடிய பாவத்தை செய்தவராகிவிடுவார்.

بَعْضُ أَبْوَابِ الْمَعَاصِي الَّتِي يَجِبُ تَجَنُّبُهَا:

**இவ்வாறு கட்டாயம் தவிர்ந்து கொள்ள வேண்டிய பாவங்கள் சில:**

- مِنْ مَعَاصِي الْقَلْبِ : التَّكَبُّرُ وَالْحِقْدُ وَالْحَسَدُ.

உள்ளத்தினால் ஏற்படக்கூடிய பாவங்களில் சில பெருமை, குரோதம்(வெறுப்பு), பொறாமை.

- مِنْ مَعَاصِي الْعَيْنِ: النَّظَرُ إِلَى الْمُؤْمِنِ بِالاسْتِحْقَارِ وَالازْدِرَاءِ.

ஒரு மு.ஃ.மினை கேவலமாக அவமரியாதையாக பார்ப்பது கண்ணினால் ஏற்படக்கூடிய பாவத்தைச் சார்ந்ததாகும்.

- مِنْ مَعَاصِي اللِّسَانِ: الاسْتِهْزَاءُ بِالْمُؤْمِنِ أي التَّحْقِيْرُ لَهُ وَكَذَلِكَ كُلُّ كَلَامٍ يُؤْذِي الْمُؤْمِنَ، وَالضَّحِكُ عَلَيْهِ اسْتِحْقَارًا لَهُ بِمَا فِيْهِ مِنَ الْإِيْذَاءِ.

**நாவினால் ஏற்படக்கூடிய பாவங்கள் சில:** ஒரு மு.ஃ.மினை பரிகசிப்பது அதாவது அவரை அற்பமாக கருதுவது. மேலும் அது போன்று ஒரு மு.ஃ.மினுக்கு நோவினை தரக்கூடிய பேச்சுக்களை பேசுவது. மேலும் ஒரு மு.ஃ.மினை ஏளனமாக பார்த்து சிரிப்பது. அதனால் அந்த மு.ஃ.மின் நோவினை அடைந்தால் அதுவும் குற்றச்செயலே.

قَالَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

( بِحَسْبِ امْرِئٍ مِنَ الشَّرِ أَنْ يَحْقِرَ أَخَاهُ ) - رَوَاهُ مُسْلِمٌ -

**அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :**

**“ஒரு மனிதர் தனது சகோதரனை ஏளனமாக கருதுவது கெடுதியால் அவனுக்கு போதுமானதாகும்.**

**(அறிவித்தவர்: இமாம் முஸ்லிம் றஹிமஹுமுல்லாஹ்)**

• مِنْ مَعَاصِي الْيَدَيْنِ: ضَرْبُ الْمُؤْمِنِ بِغَيْرِ حَقٍّ، وَمِثْلُ الضَّرْبِ تَرْوِيعُ الْمُؤْمِنِ وَالْإِشَارَةُ إِلَيْهِ بِنَحْوِ سِلَاحٍ، قَالَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: ( **مَنْ أَشَارَ إِلَى أَخِيهِ بِحَدِيدَةٍ فَإِنَّ الْمَلَائِكَةَ تَلْعَنُهُ وَإِنْ كَانَ أَخَاهُ لِأَبِيهِ وَأُمِّهِ** ) - رَوَاهُ ابْنُ حِبَّانَ-

**கையினால் ஏற்படக்கூடிய பாவங்கள் சில:** ஒரு மு·மினை எந்த ஹக்குமின்றி(உரிமையுமின்றி) அடிப்பது, பயமுறுத்துவது, ஆயுதம் போன்ற ஒற்றைக் கொண்டு சைக்கினை செய்வதும் அடிப்பதைப் போல கருதப்படும்.

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: எவரொருவர் தனது சகோதரனை ஆயுதத்தைக் காட்டி பயமுறுத்துவாறோ அவரை மலக்குமார்கள் சபிக்கிறார்கள். அவர் அவனது உடன் பிறந்த சகோதரனாயினும் சரியே!**

**(அறிவித்தவர்: இமாம் இப்னு மாஜா றஹிமஹுழ்ழாஹ்)**

• مِنْ مَعَاصِي الرِّجْلَيْنِ: السِّعَايَةُ بِالْمُؤْمِنِ وَالْوِشَايَةُ بِهِ لِإِيذَائِهِ عِنْدَ الظَّلَمَةِ.

**இரு கால்களினாலும் ஏற்படக்கூடிய பாவமொன்று:** ஒரு முஸ்லிமை காட்டிக் கொடுத்து நோவினை செய்தவற்காக அநியாயக்காரர்களிடம் செல்வது இரு கால்களினால் ஏற்படக்கூடிய பாவங்களை சார்ந்தாகும்.

• مِنْ مَعَاصِي الْبَدَنِ: مُحَاكَاةُ الْمُؤْمِنِ اسْتِهْزَاءً بِهِ، إِنْ كَانَ ذَلِكَ بِالْقَوْلِ أَوِ الْفِعْلِ أَوِ الْإِشَارَةِ

**قَالَ تَعَالَى: ﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ لَا يَسۡخَرۡ قَوۡمٞ مِّن قَوۡمٍ ﴿١١﴾﴾**

( سورة الحجرات )

ஒரு மு·மினை அற்பமாக கருதும் விதத்தில் அவர் செய்வதைப் போன்று செய்வது அல்லது அவர் பேசுவதைப் போன்று பேசுவது அல்லது அவர் சைக்கினை செய்வது போன்று சைக்கினை

செய்வது அதாவது பலித்துக் காட்டுவது உடலினால் ஏற்படக்கூடிய பாவத்தைச் சார்ந்ததாகும்.

**அழ்ழாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறியுள்ளான்:**

**விளக்கம்:**

**“செல்வமுடைய யாரும் எழைகளை அற்பமாக கருத வேண்டாம். தன் குறைகள் வெளிவராத யாரும் குறை வெளிப்பட்டோரை அற்பமாக கருத வேண்டாம். அந்தஸ்துடைய யாரும் அந்தஸ்து குறைவடைந்தோரை அற்பமாக கருத வேண்டாம். ஒரு வேளை அற்பமாக கருதப்படும் இவர்களெல்லாம் அழ்ழாஹ்விடத்தில் சிறந்தவர்களாக இருக்கலாம்.”**

**(அத்தியாயம் : ஹுஜராத்)**

وَقَدْ تَكُوْنُ الْمُحَاكَاةُ بِالضّحِكِ عَلَى كَلَامِهِ إِذَا تَخَبّطَ فِيْهِ أَوْ غَلِطَ، أَوْ عَلَى صِنْعَتِهِ وَقُبْحِ صُوْرَتِهِ. فَيَنْبَغِي عَلَى الْمُؤْمِنِ أَنْ يُحِبّ أَخَاهُ الْمُؤْمِنَ وَأَنْ يَعْطِفَ عَلَيْهِ وَيُعِيْنَهُ.

ஒருவர் பேசும் பொழுது தடுமாற்றம் அடைந்தால் அல்லது பேச்சில் பிழையேதும் ஏற்பட்டால் அவரை பார்த்து சிரிப்பதும் அல்லது அவருடைய ஒரு செயலுக்காக அல்லது அவர் அசிங்கமான தோற்றமுடையவர் என்பதற்காக சிரிப்பதும் அவரை பரிகசிப்பதாக ஆகிவிடும். எனவே ஒரு மு..மின் தனது மு..மினான சகோதரனை நேசிப்பது, அவர் மீது இரக்கம் காட்டுவது, அவருக்கு உதவுவது போன்றன அவசியமாகும்.

قَالَ النّبِيّ صَلّى اللهُ عَلَيْهِ وَسَلّمَ ( **مَثَلُ الْمُؤْمِنِينَ فِي تَوَادّهِمْ وَتَرَاحُمِهِمْ وَتَعَاطُفِهِمْ مَثَلُ الْجَسَدِ إِذَا اشْتَكَى مِنْهُ عُضْوٌ تَدَاعَى لَهُ سَائِرُ الْجَسَدِ بِالسّهَرِ وَالْحُمّى** ) - رَوَاهُ الْبُخَارِيّ وَمُسْلِمٌ -

**அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்:**

**“மு.ஃ.மின்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாகவும், அன்பாகவும் இரக்கம் காட்டிக் கொள்பவர்களாகவும் இருப்பதற்கு உதாரணம் ஒரு உடலைப் போல், அதில் ஒரு உறுப்பு நோயுற்றால் ஏனைய உறுப்புகள் விழித்திருந்தும் காய்ச்சல் போன்றதைக் கொண்டும் வருந்தும்.”**

**(அறிவித்தவர்கள்: இமாம் புஹாரீ, இமாம் முஸ்லிம் றஹிமஹுமல்லாஹ்)**

**أسئلة**

1- ما هو أعظم حق من حقوق الله على الإنسان؟

2- اذكر بعض معاصي القلب.

3- اذكر بعض معاصي العين.

4- اذكر بعض معاصي اللسان.

5- اذكر بعض معاصي اليدين.

6- اذكر بعض معاصي الرجلين.

7- اذكر بعض معاصي البدن.

8- اذكر حديثا في الحثّ على معاملة المؤمنين بالإحسان.

# உள்ளடக்கம்

## இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| முதலாம் பாடம் | தூய கொள்கை | 05 |
| இரண்டாம் பாடம் | “முகல்லப்f” என்பவர் யார்? | 10 |
| மூன்றாம் பாடம் | உலகத்தைப் படைத்தவன் அழ்ழாஹ் | 14 |
| நான்காம் பாடம் | அழ்ழாஹ் இணையின்றித் தனித்தவன் என்று நம்பிக்கை கொள்ளுதல் | 20 |
| ஐந்தாம் பாடம் | அழ்ழாஹ்வின் தன்மைகள் | 27 |
| ஆறாம் பாடம் | அழ்ழாஹ்வின் முதல் படைப்பு தண்ணீர் படைப்புக்களில் முதன்மையானதாகும் | 31 |
| ஏழாம் பாடம் | நீர் மற்றும் அர்ஷிற்கு பின்னர் படைப்புகளின் ஒழுங்கு | 37 |
| எட்டாம் பாடம் | மு.்.ஜிஸத் மற்றும் கராமத் | 42 |
| ஒன்பதாம் பாடம் | அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளைநம்பிக்கை கொள்ளுதல் ( 1 ) கப்ரின் வேதனை, கப்ரின் இன்பம், இரு மலக்குமார்களின் கேள்வி கணக்கு | 47 |
| பத்தாம் பாடம் | அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 2 ) இறுதி நாள், எழுப்பப்படுதல், ஒன்று சேர்க்கப்படுதல் | 53 |

| | | |
|---|---|---|
| பதினொன்ராம் பாடம் | அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 3 ) (ஸிறாத், நீர்த் தடாகம், ஷபாஅத்) | 57 |
| பன்னிரெண்டாம் பாடம் | அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலம் வந்தவைகளை நம்பிக்கை கொள்ளுதல் ( 4 ) (சுவனம், நரகம்) | 61 |
| பதின்மூன்றாம் பாடம் | குப்ரின் வாயில்களும் காபிர்களின் வகைகளும் | 66 |
| பதின்நான்காம் பாடம் | நடைபெறும் நலவுகள், கெடுதிகள் யாவும் அழ்ழாஹ்வின் ஏற்பாட்டின் பிரகாரமே நிகழ்கின்றன என்பதை ஈமான் கொள்ளுதல் | 75 |


## வணக்க வழிபாடுகள் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| முதாலம் பாடம் | புத்தியுள்ள, பருவத்தை அடைந்த முஸ்லிம்களின் செயற்களுடன் சம்பந்தப்படும் மார்க்க சட்டதிட்டங்கள் | 80 |
| இரண்டாம் பாடம் | அசுத்தங்களிலிருந்து சுத்தமாகுதல் | 85 |
| மூன்றாம் பாடம் | வுழூவின் பர்ளுகளும் ஸுன்னத்களும் | 88 |
| நான்காம் பாடம் | வுழூவை முறிக்கக்கூடிய விடயங்கள் | 95 |
| ஐந்தாம் பாடம் | மலசலம் கழித்து சுத்தம் செய்தல் | 98 |
| ஆறாம் பாடம் | தொடக்கும் கடமையான குளிப்பும் | 102 |
| ஏழாம் பாடம் | தொழுகையின் நேரங்கள் | 108 |
| எட்டாம் பாடம் | தொழுகையுடைய ருகுன்(கடமை)களும், அதன் ஸுன்னத்துக்களும் | 113 |
| ஒன்பதாம் பாடம் | தொழுகை நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் | 121 |
| பத்தாம் பாடம் | தொழுகையை முறிக்கக்கூடியவைகள் | 124 |
| பதினொன்றாம் பாடம் | ஜமாஅஹ் தொழுகை | 128 |
| பன்னிரெண்டாம் பாடம் | ஜும்அஹ் தொழுகை | 134 |
| பதின்மூன்றாம் பாடம் | நோன்பு | 141 |
| பதிநான்காம் பாடம் | ஸகாத் | 149 |

| | | |
|---|---|---|
| பதினைந்தாம் பாடம் | அல்-ஹஜ் | 157 |


## இஸ்லாம் கூறும் நற்குணங்கள் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| முதலாம் பாடம் | அழ்ழாஹ்வின் பொருத்தத்தை நாடி அமல் செய்தலும் மற்றும் முகஸ்துதி கொள்வதும், தற்பெருமை அடிப்பதும் | 167 |
| இரண்டாம் பாடம் | பொறுமை கொள்வதும், அழ்ழாஹ்விற்கு முழுமையாக கட்டுப்படுதலும் | 172 |
| மூன்றாம் பாடம் | அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்தல். | 177 |
| நான்காம் பாடம் | பெருமையடித்தலும், வஞ்சகம், பொறாமை கொள்ளலும் | 182 |
| ஐந்தாம் பாடம் | புறம் பேசுதலும், இட்டுக்கட்டுதலும், கோள் சொல்லுதலும் | 186 |
| ஆறாம் பாடம் | பொய் சொல்லுதல் | 191 |
| ஏழாம் பாடம் | மார்க்க கல்வியின் சிறப்பும், அதை செயற்படுத்துவதின் சிறப்பும் | 196 |
| எட்டாம் பாடம் | ஹறாமான விளையாட்டுக்கள் | 202 |
| ஒன்பதாம் பாடம் | பெற்றோரைத் துன்புறுத்தல் | 206 |
| பத்தாம் பாடம் | குடல்வாய் பந்தங்களைத் துண்டித்து வாழ்தல் | 113 |
| பதினொன்றாம் பாடம் | ஒரு மு∴மினை மரியாதை செய்தல் | 218 |
| உள்ளடக்கம் | | 224 |

سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ

وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ للهِ رَبِّ الْعَالَمِيْنَ

والله أَعْلَمُ وأَحْكَمُ